மலைமேலிருந்து போதனைகள், 1

டேவிட் ரோப்பர்

பாக்கியங்கள்

1. ஆவியில் கைவிடப்படுதல் (மத்தேயு 5:3)
2. துருத்தியில் கண்ணீர் (மத்தேயு 5:4)
3. கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பலம் (மத்தேயு 5:5)
4. இருதய பசி (மத்தேயு 5:6)
5. ஒரு வேதாகம பூமராங் (மத்தேயு 5:7)
6. இருதயத்தில் “வசந்தகால சுத்தம் செய்தல்” (மத்தேயு 5:8)
7. “தந்தையைப் போல மகன்:? (மத்தேயு 5:9)
8. புறக்கணிக்கப்படுதல், ஆனால் களிகூருதல் (மத்தேயு 5:10-12)
9. உயிரோடிருந்து வேண்டுதல் செய்கிறவர் (எபிரெயர் 7:25)

மலைப்பிரசங்கம்,1

1. பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள்! (மத்தேயு 5:1-12)
2. “பரலோகத்திலிருந்த உங்கள் பிதாவை….
   மகிமைப்படுத்துங்கள்” (மத்தேயு 5:13-16)
3. இயேசு, பழைய ஏற்பாடு மற்றும் நீங்கள் (மத்தேயு 5:17-20)
4. கோபமான சிந்தனைகள், வெறுப்பு நிறைந்த வார்த்தைகள் மற்றும்
   கொலை (மத்தேயு 5:21-26)
5. விபசாரத்தைத் தவிர்ப்பது எப்படி (மத்தேயு 5:27-32)

1

ஆவியில் கைவிடப்படுதல்

(மத்தேயு 5:3)

ஒரு வேளை உங்கள் கையில் ஒரு துண்டுத்தாள் கொடுக்கப்பட்டு, உண்மையில் இந்த வாழ்வில் நீங்கள் விரும்புவது என்ன என்று எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் எதை எழுதுவீர்கள்? பல திரளான விஷயங்கள் பட்டியலிடப் படலாம்; ஆனால் பலருக்கு, மகிழ்ச்சி என்பதே மிகவும் விரும்பத் தக்க விஷயமாக உள்ளது.

உலகமானது, மகிழ்ச்சியைக் கண்டறிவதற்காக மாபெரும் கடை எல்லைகளுக்குச் சென்றுள்ளது. சாலொமோன் அரசரைக் காட்டிலும் அதிகமாக, எக்காலத்திலும் வேறு எவரும் மகிழ்ச்சியாக இருக்க அதிகமான வழிகளை முயற்சி செய்திருக்கவில்லை. அவர் உலக ஞானத்தின் மூலம் மகிழ்ச்சியாயிருக்க நாடினார். அவரது முடிவு என்னவாக இருந்தது?

> *இதோ, நான் பெரியவனாயிருந்து எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன். ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோகம்பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன். அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன் (பிரசங்கி 1:16-18).*

சாலொமோன், திராட்சரசம், பெண்கள் மற்றும் பாடல் உட்பட, கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு பொழுதுபோக்கைக் கொண்டும் பரிசோதனை செய்தார் (பிரசங்கி 2:1, 8). அவர், "... வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை" (1 இராஜாக்கள் 10:21) என்னுமளவுக்கு மிகவும் செல்வந்தராக இருந்தார். அவர், காளைகள், ஆடுகள், மான்கள், கலைமான்கள், வெளிமான்கள் மற்றும் கொழுக்க வைக்கப்பட்ட பறவைகள் ஆகியவற்றைக் கொண்டு சமைத்த உணவுகளை உண்ண அமர்ந்தார் (1 இராஜாக்கள் 4:22, 23). அவர் தமக்கு மகிழ்ச்சியைத் தரலாம் என்று நினைத்த எந்த விஷயத்தையும் தமக்கு மறுக்கவில்லை (பிரசங்கி 2:10). இவை எல்லாவற்றில் இருந்தும் அவர் அறிந்துகொண்டது என்ன? "இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" (பிரசங்கி 2:11ஆ). மகிழ்ச்சி என்பது, தவறான சாலையில் பயணம் செல்பவர்களால் கண்டறியப்பட முடியாது. விலையைச் செலுத்த மனவிருப்பம் இல்லாதவர்களுக்கு அது தலைமறைவானதாகவே நிலைத்திருக்கும்.

நாம், மத்தேயு 5:3-12ஐப் பற்றிய ஒரு படிப்பைத் தொடங்குகிறோம். இந்த வசனப்பகுதியில்[1] நாம், உண்மையான மகிழ்ச்சிக்கான தேவனுடைய

இரகசியங்களைக் காணுகிறோம் - இதை ஹியூகோ மெக்கார்டு என்பவர் “உத்தரவாதப்படுத்தப்பட்ட மகிழ்ச்சி” என்று அழைத்தார்.[2] இவ்வசனங்கள், ‘‘பாக்கியங்கள்’’ என்று அறியப்பட்டுள்ளன. ‘‘பாக்கியம்’’ என்பது “ஆசீர்வதிக்கப்படுதல்” அல்லது “மகிழ்ச்சி” என்று அர்த்தப்படுகிற *beatus* என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகிறது.[3] அதிகமான பொதுவான மொழிபெயர்ப்புகளில், ஒவ்வொரு வசனமும் “blessed” என்ற வார்த்தையைக் கொண்டு தொடங்குகிறது (தமிழ் வேதாகமத்தில் இது, “பாக்கியவான்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

‘‘பாக்கியவான்கள்’’ என்பது “ஆசீர்வதிக்கப்படுதல், மகிழ்ச்சி” என்று அடிப்படை அர்த்தம் கொண்டுள்ள *makarios* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[4] இங்கு பிலிப்ஸ் என்பவரின் பின்வரும் மொழிபெயர்ப்பைப்போல் ‘‘பாக்கியவான்கள்’’ என்பதற்குப் பதில் “மகிழ்ச்சியானவர்கள்” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டால், அது தவறான மொழிபெயர்ப்பாக இருக்காது:

> *“ஆவியில் எளிமையுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது!*
>
> *‘‘துயரப்படுகிறவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்!*
>
> *“சாந்தகுணமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்!*
>
> *“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்!*
>
> *“இரக்கமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்!*
>
> *“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்!*
>
> *‘‘சமாதானம்பண்ணுகிறவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்!*
>
> *‘‘நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது!”*

இருப்பினும் நாம், “மகிழ்ச்சி’’ மற்றும் “மகிழ்ச்சியாயிருத்தல்’’ என்ற வார்த்தைகளை இந்த உலகம் விளக்குகிற பிரகாரம் விளக்கப்படுத்தாமல் இருக்கும்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். “மகிழ்ச்சி’’ மற்றும் “மகிழ்ச்சியாயிருத்தல்” என்பவை, “ஒரு நிகழ்வு” என்பதைக் குறிக்கிற ‘‘hap’’ என்ற பழைய ஆங்கில வார்த்தையில் இருந்து வருகின்றன.[5] இவ்வகையான “மகிழ்ச்சியாயிருத்தல்’’ என்பது ஒருவர் தாம் இருப்பதாகக் கண்டறியும் சூழ்நிலைகளினால் பாதிக்கப்படுகிறது. இருப்பினும் புதிய ஏற்பாட்டில் *makarios* என்பது பொதுவாக “தெய்வீக இராஜ்யத்தில் பங்கேற்பதன் மூலமாக வருகிற *தனிச்சிறப்பான* சந்தோஷத்தை” குறிக்கிறது.[6] AB வேதாகமம், 3ம் வசனத்தின் முதல் பாகத்தைப் பின்வருமாறு விரிவாக்குகிறது: “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் (மகிழ்ச்சியானவர்கள், பிறர் பார்த்து பொறாமை கொள்ளப்படக் கூடியவர்கள் மற்றும் ஆவிக்குரிய வகையில் வளமுடையவர்கள்

- தங்கள் புறத்தோற்ற நிலைகள் எவ்வாறு இருப்பினும், தேவனுடைய தயவு மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றினால் வாழ்வில் மகிழ்வும் திருப்தியும் பெற்றிருப்பவர்கள்).” *Makarios* என்பது *உண்மையான* மகிழ்ச்சி, *ஆழமான* மகிழ்ச்சி, *நீடித்திருக்கும்* மகிழ்ச்சி ஆகியவற்றை விவரிக்கும் வார்த்தையாக உள்ளது. இது புறச்சூழ்நிலைகளினால் பாதிக்கப்படுவதில்லை என்று நான் மீண்டும் கூறட்டும்; இது உள்ளே இருப்பதிலிருந்து வருவதாக இருக்கிறது. இதை நான் “*கூடுதல்* மகிழ்ச்சி” என்ற வகையில் சிந்திக்க விரும்புகிறேன்.

நீங்கள் மகிழ்ச்சியை விரும்புகிறீர்களா? அப்படியென்றால், ‘‘கூடுதல் மகிழ்ச்சியை’’ கொண்டிருப்பதற்கு இயேசு கொடுத்த, தேவைப்படும் எட்டு[7] விஷயங்களைப் படிக்கையில் எங்களுடன் தரித்திருங்கள். இந்தப் பாடம் அவற்றில் முதல் விஷயத்தின் மீதானதாக உள்ளது.

“ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் ...”

நம்மில் பலர், மலைப்பிரசங்கத்தை முதலில் கேள்விப்பட்டவர்கள் மீது அது விளைவித்திருக்க வேண்டிய செயல்தாக்கத்தைப் பற்றி அறியாதவர்களாக இருக்கும் அளவுக்கு மலைப்பிரசங்கத்திற்கு மிகவும் பழக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். இயேசு, ஒவ்வொரு கூற்றிற்குப் பிறகும் தமது உரையைத் தொடருவதற்கு முன் கும்பலானது அமைதியாகும் வரையில் காத்திருக்க வேண்டியது அவசியமாக இருந்து இருக்கலாம். கிறிஸ்துவின் போதனைகளில் ஏறக்குறைய ஒவ்வொன்றுமே, உலகஞானம் மற்றும் யூதத்துவச் சிந்தனை ஆகியவற்றிற்கு நேரெதிராகச் சென்றது. முதல் பாக்கியம் இதற்கு உதாரணமாக உள்ளது: “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் (மகிழ்ச்சியானவர்கள்); பரலோகராஜ்யம் அவர்களுடையது.’’ உலக ஞானத்தைப் பொறுத்த மட்டில், இந்த நேர்மாறுகள், “முன்னேறியவர்களாக” மற்றும் “மதிக்கப்படக் கூடியவர்களாக” இருப்பதற்கு அவசியமானவை என்று கருதப்படுபவை பற்றியதாக இருக்கிறது. யூதத்துவச் சிந்தனையைப் பொறுத்த மட்டில், இது பாரம்பரியத்திற்கு நேர்மாறானதாக இருந்தது, யூதர்கள் பெருமை பாராட்டும் மக்களாக இருந்தனர், அவர்கள் பெருமை பாராட்டுவதாக இருத்தலைப் பற்றி(யும்) பெருமை பாராட்டினர். அவர்கள் எல்லோருக்கும் - மற்றும் நமக்கும் - இயேசு, “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்” என்று கூறினார்.

“ஆவியில் எளிமை” என்பது எதை அர்த்தப்படுத்துவது இல்லை

‘‘ஆவியில் எளிமை’’ என்ற சொற்றொடர் மூலம் இயேசு அர்த்தப்படுத்தியது என்ன? இயேசு, ‘‘தங்கள் வரவுப் புத்தகத்தில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்’’ என்று *கூறவில்லை* என்பதை நாம் முதலில் கவனிக்க வேண்டும். பொருளாதார விஷயங்களில் ஏழைகளாக இருப்பவர்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருக்க அதிக சாத்தியக்கூறு உள்ளது என்பது உண்மையே (1 கொரிந்தியர் 1:26-29 மற்றும் 1 தீமோத்தேயு 6:9 ஆகிய வசனங்களை ஆழ்ந்து சிந்திக்கவும்), ஆனால் வறுமை நிலையில் இருந்து கொண்டும் மேட்டிமையும் விரோதமுமான ஆவியைக் கொண்டிருக்கவும்

சாத்தியக்கூறு உள்ளது. அப்படி என்றால், நிதிநிலையில் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பவர்கள் தாழ்மையும் தேவன்மீது சார்ந்திருக்கக் கூடிய பண்பும் கொண்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.[8] பணம் என்பது தீர்மானிக்கும் காரணியாக இருப்பதில்லை. தேவன் தாமே வளமையைக் கண்டனம் பண்ணுவதோ அல்லது வறுமையை ஆசீர்வதிப்பதோ இல்லை.

இயேசு, "எளிய ஆவியை உடையவர்கள் பாக்கியவான்கள்"[9] என்று கூறவும் *இல்லை* என்பதையும் நாம் கூட்டிக் கொள்ளலாம். சிலர் தாங்கள் தங்களையே நேசிக்காதபடியால், ஆவியில் எளிமை உள்ளவர்களாக இருப்பதாக நினைக்கின்றனர்; உண்மையில் அவர்கள் தங்களைப் பழித்துக் கொள்கின்றனர். அது இராஜாவின் பிள்ளையாக இருப்பவருக்குப் பொருத்தமான எண்ணப்போக்காக இருப்பதில்லை. தேவனுடைய பார்வையில் ஒவ்வொரு ஆத்துமாவும் மதிப்புள்ளதாக இருக்கிறது என்று வேதாகமம் போதிக்கிறது (காண்க மத்தேயு 16:26).

"ஆவியில் எளிமை" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது

அப்படியென்றால், "ஆவியில் எளிமை" என்ற சொற்றொடர் எதை அர்த்தப்படுத்துகிறது? "எளிமை" என்பதற்கு இயேசு, ptochos என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். Ptochos என்பது வறுமை நிலையை மாத்திரம் அர்த்தப்படுத்துவது இல்லை; இது கைவிடப்பட்டிருத்தல், ஏழ்மையால் வருத்தப்பட்டிருத்தல் என்பதைப் பற்றியதாக உள்ளது. இது "பயத்தினால் ஒருவர் தம்மை ஒடுக்குதல் அல்லது ஒளிந்து கொள்ளுதல்" என்று அர்த்தப்படும் வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டது.[10] இது, "மக்களைப் பிச்சையெடுக்கும் அளவுக்குக் குறைத்துப் போடும் முற்றிலுமான வறுமை நிலை" என்பதைக் குறிக்கிறது.[11] பிச்சைக்காரரான லாசருவைக் குறிப்பதற்கு இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது: "லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு *தரித்திரனும்* இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்" (லூக்கா 16:20, 21அ; வலியுறுத்தம் என்னுடையது). மூன்று வகையான மக்கள் அமெரிக்க நாட்டில் நன்கு அறியப்பட்டவர்களாக உள்ளனர்: செல்வந்தர்கள், ஏழைகள் மற்றும் பெருமளவிலான "நடுத்தரவசதி உள்ளவர்கள்," எங்களில் பலர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறோம். வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், இருவகைப்பட்ட மக்கள் மாத்திரமே இருந்தனர்: செல்வர்கள் மற்றும் ஏழைகள், அதாவது "இருப்பவர்கள்" மற்றும் "இல்லாதவர்கள்."[12]

நமது வேதவசனப்பகுதியில், ptochos என்பது *கொஞ்சம்* பொருள் கொண்டிருப்பவர்களைக் குறிப்பது இல்லை; இது *ஒன்றும் இல்லாதவர்களையே* குறிக்கிறது. இது சாலையோரத்தில் படுத்துக் கிடக்கும் ஒரு பிச்சைக்காரரின் உருவத்தை எழுப்புகிறது - இவர், மற்றவர்களின் கருணையை முற்றிலும் சார்ந்திருக்கும் பிச்சைக்காரர், ஒன்றும் இல்லாதவராக இருந்து தமக்கு எவரும் இரக்கம் காண்பிக்கவில்லை என்றால் இறந்துபோகக் கூடிய பிச்சைக்காரராக இருக்கிறார்! நீங்களும் நானும் பரலோக ராஜ்யத்தைக் காண வேண்டும் என்றால், ஆவிக்குரிய வகையில் பிச்சைக்காரர்கள் ஆக வேண்டும். நாம் ஆவிக்குரிய நிலையில் கைவிடப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தறிய வேண்டும்.

செயல்விளைவில் இயேசு, "தங்கள் ஒழுக்கரீதியான மற்றும் மார்க்கரீதியான திறமைகளில் பிச்சைக்காரர்களாக இருப்பதாகத் தங்கள் சுயமதிப்பில் உணர்ந்து தங்கள் ஆவிக்குரிய நம்பிக்கையற்ற நிலையை அறிந்திருப்பவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். குட்ஸ்பீடு என்பவரின் மொழிபெயர்ப்பில், "தங்கள் ஆவிக்குரிய தேவைகளை உணர்ந்திருப்பவர்கள் பாக்கியவான்கள் ..." என்றுள்ளது.

தங்கள் ஆவிக்குரிய தேவையை உணர்ந்தவர்களைத் தேவன் எப்போதுமே விரும்பி மற்றும் பாராட்டி இருக்கிறார். தாவீது, "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே,நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" என்று எழுதினார் (சங்கீதம் 51:17). அந்த வசனத்தை நாம் வாசிக்கையில், "ஆனால் பழைய ஏற்பாட்டில் தேவன் மிருக பலிகளைக் கட்டளையிட்டிருந்தாரே" என்று கேட்கலாம். சாலொமோன் தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்கையில் 120,000 ஆடுகளும் 22,000 காளைகளும் அத்துடன் கூடுதலாக "எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான" (1 இராஜாக்கள் 8:5; காண்க வசனம் 63) பிற மிருகங்களும் பலியிடப்பட்டன. தேவன் இதற்கு, தேவாலயத்தை நிரப்பும்படி மகிமையின் மேகம் ஒன்றை அனுப்பியதன் மூலம் பதில் செய்கை செய்தார் (வசனம் 10). பின்பு ஏன் தாவீது, "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்" என்று கூறினார்? ஏனென்றால், மிருக பலிகள் நொறுங்குண்ட மற்றும் நருங்குண்ட இருதயங்களைக் கொண்ட ஆராதிப்பவர்களிடம் இருந்து வந்தால் மட்டுமே அவற்றைக் கர்த்தர் ஏற்றுக்கொள்வார்.

தேவன் விரும்புகிற வகையிலான ஆவியை ஏசாயா செயல்விளக்கப் படுத்தினார். உன்னதமும் பரிசுத்தமுமானவரை அவர் (ஏசாயா) கண்டபோது, தன்னை ஒன்றுமில்லாதவனாக அவர் கண்டார். "ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்" (ஏசாயா 6:5) என்று கூறினார். பிற்பாடு அவர், "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது" என்று கூறினார் (64:6). குற்றமில்லாதவரான எனது கர்த்தருக்கு நான் எதைச் செலுத்த வேண்டியுள்ளது என்று நான் ஆழ்ந்து சிந்திக்கையில், ஏசாயாவைப் போன்றே நானும், "ஐயோ! அதமானேன்" என்றே கூற வேண்டும்.

"ஆவியில் எளிமை" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதற்கான நல்ல உதாரணம் ஒன்று பரிசேயன் மற்றும் ஆயக்காரன் ஆகியோரைப் பற்றிய உவமையில் காணப்படுகிறது (லூக்கா 18:9-14). ஒரு புறத்தில் பரிசேயன் சுயநீதி உடையவனாக இருந்தான். அவன் தனக்குள் ஆவிக்குரிய தவறுகள் எதையும் உணர்ந்தறியவில்லை மற்றும் தெய்வீக உதவி தேவை என்று அவன் உணரவில்லை. இன்னொரு புறத்தில் ஆயக்காரன், ஆவியில் எளிமையுள்ளவனாக இருந்தான். அவன் தான் ஒரு பாவியாக இருப்பதையும் தேவனுடைய இரக்கம் தேவைப்பட்ட பரிதாபகரமான நிலையில் இருப்பதையும் உணர்ந்து அறிந்தான். அவன், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்தான் (வசனம் 13). முடிவில் இயேசு, "அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்" என்று கூறினார் (வசனம் 14அ). பரிசேயன் ஒழுக்கநெறிகள் பற்றிய தனது பட்டியலில் சரியற்றவனாக இருந்தான் என்பதற்கான எந்த வித அறிகுறியும் இல்லை, ஆனால்

அவனது மேட்டிமை நிறைந்த எண்ணப்போக்கு அவனைக் கண்டனம் செய்தது. ஒரு மனிதர் ஒழுக்கத்தில் சுத்தமானவராக, வியாபாரத்தில் நேர்மையானவராக மற்றும் கொடுத்தலில் பெருந்தன்மை உடையவராக இருக்க முடியும், இருப்பினும் அவர் "ஆவியில் எளிமை" உள்ளவராக இராவிட்டால், இன்னமும் அவர் தேவனால் அலட்சியப்படுத்தப்பட்டவராகவே இருப்பார்.

"... பரலோகராஜ்யம் அவர்களுடையது"

''ஆவியில் எளிமையுள்ளவர்களாக'' இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நாம், "இவ்வகையான ஆவியானது உண்மையான மற்றும் நிலையான மகிழ்ச்சிக்கு என்ன செய்வதாக உள்ளது?" என்று கேட்கிறோம். ஆவியில் எளிமையாயிருத்தல் என்பது மாத்திரம் ஒருவர் மகிழ்ச்சியைக் கண்டடைய உதவ முடியும். பலர் தங்கள் சொந்த எதிர் பார்ப்பின்படி வாழாததால் பரிதாபமான நிலையில் உள்ளனர். ஆவியில் எளிமையுள்ள ஒருவர் தம்மைத் தாமே நேர்மையாகக் கண்ணோக்குகிறார், இதன் விளைவாக அவர் தமது நம்பிக்கையைத் தம்மீது வைப்பதற்குப் பதிலாகக் கர்த்தர் மீது வைக்கிறார் - அவரைக் கர்த்தர் கைவிடுவதில்லை. இருப்பினும், நமது வசனப்பகுதியின்படி, ஆவியில் எளிமையுள்ளவர்கள் விசேஷித்த வாக்குத்தத்தம் ஒன்றைக் கொண்டிருத்தல் என்பதே அவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க முடிவதற்கு முதன்மைக் காரணமாக உள்ளது: ''பரலோகராஜ்யம் அவர்களுடையது.'' வாழ்வானது எதைக் கொண்டு வந்தாலும், இந்த வாக்குத்தத்தம் அவர்களை நிலைநிறுத்துகிறது.

"பரலோகராஜ்யம்" என்றால் என்ன?

அது நம்மை, ''பரலோகராஜ்யம்'' என்றால் என்ன மற்றும் அதைப் பெற்றுக்கொள்வதற்கு "'ஆவியில் எளிமையுள்ளவர்களாக' இருத்தல் என்பது எவ்வாறு நமக்கு உதவுகிறது?" என்று கேட்கும்படி வழிநடத்துகிறது. இந்தக் கேள்வியின் முதல் பாகத்துடன் நாம் தொடங்குவோமாக: "பரலோகராஜ்யம் என்றால் என்ன?"

பாக்கியங்களின் சில வாக்குத்தத்தங்கள் இந்த வாழ்வை மையமாகக் கொண்டிருப்பதாகத் தோன்றுகையில், மற்றவைகள் இனி வரவிருக்கும் வாழ்வைப் பற்றி முதன்மையான அக்கறை கொண்டிருப்பவையாகக் காணப்படுகின்றன. இந்த வாக்குத்தத்தங்கள் யாவையும் இவ்வுலகில் *ஒரு பகுதி* நிறைவேற்றமாகவும் இனிவரும் உலகில் *முழுமையான* நிறைவேற்றமாகவும் உள்ளன என்று நான் முடிவு செய்திருக்கிறேன். இது பொதுவில் மகிழ்ச்சி என்பதற்கு சீர்பொருத்தமற்றதாக இருப்பதில்லை. தேவனுடைய பிள்ளையாக இருக்கிற ஒருவர், இப்போது அடிப்படை மகிழ்ச்சியை அறியமுடியும். ஆனால் இந்த வாழ்வில் மகிழ்ச்சி என்பது எப்போதுமே, பாவத்தினால் மோசம்போக்கப்பட்ட உலகத்தில் வாழுதலின் வருத்தங்களுடன் கலந்துதான் இருக்கும். இனிவரவிருக்கும் உலகத்தில்தான், கலப்படமற்ற, நீற்றப்படாத மகிழ்ச்சி நம்முடையதாக இருக்கும். "(தேவனுடைய) ராஜ்யம் அவர்களுடையது" என்ற வாக்குத்தத்தத்தைப் பொறுத்தமட்டில், இந்த நிறைவேற்றம் இங்கும் இனிவர இருக்கும் வாழ்விலும் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

"இராஜ்யம்" என்று என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (*basileia*)

"இராஜரீகம், ராஜரீக வல்லமை, ஆளுகை" என்பதைக் குறிக்கிறது. பேச்சு உருவகம் என்ற வகையில் இது, "ஒரு அரசர் ஆளுகிற எல்லை அல்லது மக்கள்" என்பதைக் குறிக்கிறது.[13] தேவனுடைய இராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் நாம், "இராஜ்யம்" என்ற சொற்றொடரின் இரு முதன்மைப் பயன்பாட்டைக் காணுகிறோம். முதலாவது, தேவனும் கிறிஸ்துவும் இந்த பூமியின்மீது ஆளுகை செய்கிற மக்கள் கூட்டம் என்பதாக உள்ளது; இவர்கள் சபை என்று அறியப்பட்டுள்ளனர். மத்தேயு 16:18, 19ல் இயேசு, "இராஜ்யம்" மற்றும் "சபை" என்ற சொற்றொடர்களை ஒன்றிற்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தினார். நாம் நமது கடந்தகாலப் பாவங்களில் இருந்து மீட்கப்பட்டு இருக்கும்போது, தேவன் தமது சபையில் நம்மைச் சேர்த்துக்கொள்கிறார் (நடபடிகள் 2:47)[14] - இது தேவன் நம்மை "தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு" உட்படுத்துகிறார் (கொலோசெயர் 1:13) என்று கூறுவதன் இன்னொரு வழியாக உள்ளது. ஃபிரெடரிக் நீட்சே என்பவருடைய கூற்றின்படி, அந்த வேளையில், "நீங்கள் யாராக *இருக்கிறீர்களோ* அந்த நிலையை *அடைதல்*"[15] என்பதே இலக்காக உள்ளது. நாம் ஏற்கனவே தேவனுடைய இராஜ்யத்தில் குடியுரிமையை மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருந்தாலும், நமது இருதயங்களில் கர்த்தர் ஆளுகை செய்வதற்கு நாம் இன்னும் அதிகம் அதிகமாக அனுமதிக்க வேண்டும்.

தேவனும் கிறிஸ்துவும் ஆளுகை செய்யும் பரலோக வட்டாரம் என்பது, புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தையின் இரண்டாவது முதன்மைப் பயன்பாடாக உள்ளது (காண்க 2 தீமோத்தேயு 4:18) - இந்த வட்டாரத்தை நாம், பொதுவாக "பரலோகம்" என்று மட்டும் அழைக்கிறோம்.[16] "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" சபையின் உறுப்பினர்களாகத் தகுதியுள்ளவர்களாக இருக்கின்றனர் மற்றும் "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" மாத்திரமே பரலோகத்தின் நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும் என்று நமது வேதவசனப் பகுதி போதிக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். தேவனுடைய சபையின் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களும் பரலோகத்தில் காணப்படும் ஆசீர்வாதங்களின் முன்னெதிர்பார்ப்பும், ஒருவரின் மகிழ்ச்சிக்கு நிச்சயமாகவே பங்களிப்பதாக இருக்க வேண்டும்.

"ஆவியில் எளிமையுள்ளவர்களாக" இருத்தல் என்பது பரலோக இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு எவ்வாறு உதவுகிறது?

இப்போது நாம், நமது கேள்வியின் இரண்டாம் பகுதிக்குக் கடந்து செல்கிறோம்: "'ஆவியில் எளிமையுள்ளவர்களாக' இருத்தல் என்பது பரலோக இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதில் நமக்கு எவ்வாறு உதவுகிறது?" "இராஜ்யம்" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; இது தேவனுடைய ஆளுகையைப் பற்றியதாக உள்ளது. எந்த ஒரு மனிதரும் தம்மைத் தாமே முடிதுறக்கச் செய்யாத வரையிலும் தமது இருதயத்தில் தேவனுக்கு முடிசூட்டத் தயாராக இருப்பதில்லை.

பின்பு, புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தையின் இரு முதன்மைப் பயன்பாடுகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: இது சபையையும் பரலோகத்தையும் குறிக்கிறது. *முதலாவது நாம், ஆவியில் எளிமையுடன்*

இருத்தல் என்பது சபையின் உறுப்பினர் ஆவதற்கு அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது எவ்வாறு என்பதை நாம் காண்போம். சபை என்பது கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட மக்கள் கூட்டமாக உள்ளது (காண்க எபேசியர் 5:23, 25). இரத்தத்தினால் மீட்கப்படுவதற்கு நாம் செய்ய வேண்டியவை என்ன என்பது பற்றிப் பிள்ளைகளுக்கு எளிமையான "ஐந்து - விரல் பயிற்சி" ஒன்று போதிக்கப்படுகிறது: நாம் கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்.[17]

ஒருவர், தாம் ஆவிக்குரிய வகையில் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை உணர்ந்து அறியாத வரையில் அவர் சுவிசேஷத்தைக் *கேள்விப்படத்* தயாராக இருப்பதில்லை (காண்க ரோமர் 10:17). ஒரு நபர், தாம் ஆவிக்குரிய வகையில் நல்ல நிலையில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் வரையில், இரட்சிப்பிற்குத் தீவிரமான விருப்பம் எதுவும் அவரிடத்தில் இராது. பின்பு அவர் தமது சொந்த நற்தன்மைகளில் நம்பிக்கை வைத்துள்ள வரையிலும் அவர் இயேசுவை *விசுவாசித்து* தமது நம்பிக்கை வைத்தலை *அறிக்கையிட* இயலாது (காண்க யோவான் 3:16; ரோமர் 10:9, 10). *மனந்திரும்புதலைப் பற்றிய* விஷயம் என்ன? சுயநிறைவு கொண்டுள்ளதாக உணருகிற தனிநபர், எவற்றைக் குறித்தும் மனத்திரும்ப வேண்டியது அவசியம் என்று நினைக்கச் சாத்தியம் இல்லை.

மற்றும் ஒருவர், தாம் இரட்சிக்கப்படுவதற்குத் தேவனுடைய இரக்கத்தின் மீது தாம் முற்றிலுமாகச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ள இயலாத வரையிலும், அவர் *ஞானஸ்நானம் பெறத்* தயாராக இருப்பதில்லை (நடபடிகள் 2:38, 41, 47). மற்றவர்கள் பெற்றுக்கொள்கின்றனர் என்பதற்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் தனிநபர், அல்லது மற்றவர்கள் அவரிடமிருந்து அதை எதிர்பார்க்கிறார்கள் என்பதால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் தனி நபர் வசனரீதியாக ஞானஸ்நானம் பெற்றவராக இருப்பதில்லை. சில நல்ல மனிதர்களைப் பற்றி, "அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியது மாத்திரம் எஞ்சியிருக்கிறது" என்று அவ்வப்போது கூறப்படுவதுண்டு. இல்லை, அவர் தமது நற்தன்மை யாவும் கொண்டிருந்தாலும், தாம் ஆவிக்குரிய வகையில் ஒன்றுமில்லை என்றும் தேவனுக்கு அளிக்கத் தம்மிடத்தில் ஒன்றுமில்லை என்றும் ஆழ்ந்தறிவுள்ள கருத்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். அப்போது தான், அப்போது மாத்திரமே, அவர் தாழ்மையான கீழ்ப்படிதலில் கர்த்தரிடத்திற்கு வரத் தயாராக இருக்கிறார்.

கடைசியாக நாம், புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்பதன் இரண்டாவது முதன்மை அர்த்தம் என்ன என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக: பரலோகம். இயேசு, "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்று கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10இ). எவரொருவரும் ஆவியில் எளிமையுள்ளவர்கள் ஆகும் வரையிலும் விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வை வாழத்தயாராக இருப்பதில்லை. லவோதிக்கேயாவில் இருந்த சபையை இயேசு ஆய்வுசெய்த போது, அவர்களுக்கு அவர், "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்" என்று கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 3:17). அவர்களுக்கு உண்மையில் எல்லாம் தேவைப்பட்டிருந்த நிலையில், அவர்கள்

தங்களுக்கு எதுவும் தேவையில்லை என்று நினைத்தனர்.

முடிவுரை

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." "பாக்கியவான்களாக" இருத்தல் என்பது தேவனுடைய ஆசீர்வாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவித்தல் மற்றும் அதன் விளைவாக, புறம்பான சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், உண்மையில் ஆழமான மகிழ்ச்சியைக் கொண்டிருத்தல் என்பதாக உள்ளது. "ஆவியில் எளிமை" கொண்டிருத்தல் என்பது, ஒருவர் தாம், ஆவிக்குரிய வகையில் கைவிடப்பட்ட நிலையில் இருத்தலை, தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் முற்றிலுமாகச் சார்ந்துள்ள ஒரு ஆவிக்குரிய வகையிலான பிச்சைக்காரராக இருத்தலை உணர்ந்து அறிதலாக உள்ளது. "பரலோக இராஜ்யம்" என்பது - சபையிலும் பரலோகத்திலும் - தேவனுடைய ஆளுகையைக் குறிக்கிது. நாம் அடையக்கூடிய ஒரே முடிவு என்ன? நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களை இப்போதும் என்றென்றைக்கும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டும் என்றால், "நாம் ஆவியில் எளிமையுள்ளவர்களாக" *இருக்க வேண்டும்*. நமது எண்ணப் போக்கானது, "Rock of Ages" [இது தமிழில் "பிளவுண்ட மலையே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்ற கீர்த்தனையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எண்ணப்போக்காக இருக்க வேண்டும்:

> நான் ஒன்றும் கொண்டு வரவில்லை:
> உமது சிலுவையைப் பற்றிக்கொள்கிறேன்;
> நிர்வாணியாக உடைக்காக உம்மிடம்வருகிறேன்:
> உதவியற்ற நிலையில் உம் கிருபையை நாடுகிறேன்;
> பாய்ந்தோடும் ஊற்றை நோக்கி வருகிறேன்:
> மீட்பரே எம்மைக் கழுவும், இல்லையேல் நான் மரிப்பேன்.[18]

"*நான்* ஆவியில் எளிமையுள்ளவனாக *இருக்கிறேனா?*" என்பதே நாம் ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வியாக உள்ளது. "ஐசுவரியவனாக இருத்தல்" என்பது ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருத்தல் என்பதற்கு எதிரானதாக உள்ளது: (நாம் கூறுகிறபடி) "ஒருவர் தம்மில் நிறைவுள்ளவராக" இருத்தல், சுயநிறைவு உள்ளவராகவும் சுயதிருப்தி உள்ளவராகவும் உணருதல். இந்த பாக்கியத்தைப் பற்றிய இன்னொரு பதிப்பை லூக்கா 6ல் இயேசு கொடுத்தார், அதில் நேர்மறையும் எதிர் மறையும் ஆகிய இரண்டுமே அடங்கியுள்ளன: "தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது"; "ஐசுவரிவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது" (வசனங்கள் 20, 24). இயேசு தாம், நிதிநிலை சார்ந்த வகையில் ஏழைகளாக இருந்தவர்களால் மிக அதிகமாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தார் என்ற உண்மையைப் பற்றிய சில குறிப்பை ஏற்படுத்தி இருக்கலாம் (காண்க மாற்கு 12:37), ஆனால் அவரது வார்த்தைகளின் மிகப்பரந்த பயன்பாடு, மத்தேயுவில் உள்ள பாக்கியங்களுக்கு இணையானதாக உள்ளது. சிலர் தங்கள் சுய மதிப்பீட்டிலேயே ஆவிக்குரிய வகையில் "எளியவர்களாக" இருக்கும் வேளையில், பலர் "செல்வந்தர்களாக" இருக்கின்றனர். ஆவியில் செல்வந்தர்களாக இருப்பவர்கள் ஏற்கனவே

இந்த வாழ்வில் "முழுமையான ஆறுதலை" பெற்றுவிட்டனர் மற்றும் நித்தியத்தில் அவர்கள் ஏதொன்றையும் எதிர்நோக்க இயலாது. இது எவ்வளவு கவலைக்குரியது!

நம்மில் சிலர், நமக்கு நாமே எல்லாவற்றையும் செய்துகொள்ள இயலாது, நமக்கு உதவி தேவைப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை. எனது மனமானது, எனது இளமைப் பருவத்தில் நேர்ந்த பேரழிவான நிகழ்வுகளை நோக்கித் திரும்பிச் செல்கிறது - செய்யும்படி எனக்குக் கூறப்பட்டதை எவ்வாறு செய்வது என்று எனக்குத் தெரியவில்லை என்பதை ஒப்புக் கொள்ளும் சங்கடம் நேர்ந்தது, அதனால் நான் உதவி எதையும் கேட்டிராததால் ஏற்பட்ட பேரழிவுகள். தேவனுடைய உதவியின்றி, அவருடைய கிருபையும் இரக்கமும் இன்றி நீங்கள் இரட்சிக்கப்பட இயலாது என்பதை ஒப்புக்கொள்ளக் கூடாத அளவு மிகவும் மனமேட்டிமையாக இருப்பதால் இழந்து போகப்பட்டு விடாதீர்கள் என்று நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். ஆவிக்குரிய வகையில் உங்களின் கைவிடப்பட்ட நிலையை ஒப்புக் கொண்டு, கர்த்தரிடம் தாழ்மையுடன் வாருங்கள். நீங்கள் தேவனுடைய அன்பு தேவைப்படும் நிலையில் இருந்தால், அவரிடத்திற்கு இன்றைக்கே வரும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

குறிப்புகள்

[1]பிரசங்கத்திற்கு முன்னதாக, கூடியுள்ளவர்களில் ஒருவர் மத்தேயு 5:1-12ஐ உரக்க வாசிக்கும்படி நான் கேட்டுக் கொள்வேன். இந்த வேளையில் நான், "சற்று முன் வாசிக்கப்பட்ட வசனப் பகுதியில் …" என்று கூறுவேன். [2]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956). [3]Ken Palmer, "Beatitudes" (http://www.lifeofchrist.com/teaching/sermons/mount/beatitudes.asp; Internet; accessed 10 April 2008); James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 6. [4]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 386. [5]*The American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. "happy." [6]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 548. (Emphasis mine.) [7]சிலர் ஏழு விஷயங்கள் (பாக்கியங்கள்) உள்ளன என்று நினைக்க, மற்றவர்கள் ஒன்பது பாக்கியங்கள் உள்ளன என்று நினைக்கின்றனர். [8]ஆபிரகாம் வேதாகம ரீதியான உதாரணமாக இருக்கிறார். [9]"ஆவியில் எளிமை" என்பதையும் "எளிய ஆவியை" கொண்டிருத்தல் என்பதையும் வித்தியாசப்படுத்துவது சுலபம் அல்ல. பிந்தியதைப் பற்றித் தரப்பட்ட சில மேற்கோள்கள், ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் தங்களைப் பற்றி ஒன்றுமற்றவர்கள் என்று கருதியதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. பரிசுத்த தேவனுடன் ஒப்பிடப்படும்போது, நாம் தகுதியற்றவர்களாக இருக்கிறோம், ஆனால் அன்புகூரும் தேவனுடைய கண்களில் நாம் மாபெரும் மதிப்பு உடையவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். [10]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 56.

[11]Bromiley, 969. [12]உலகத்தின் பல பகுதிகளில் இது இன்றைக்கும் உண்மை நிலையாக உள்ளது. [13]Vine, 344. [14]KJV வேதாகமம், நடபடிகள் 2:47ல் "சபை" என்ற

வார்த்தையைப் பயன்படுத்துகிறது. மற்ற மொழிபெயர்ப்புகள் இவ்வார்த்தையைப் பயன்படுத்துவது இல்லை, ஆனால் லூக்கா தமது சிந்தையில் சபை என்பதையே கொண்டிருந்தார் என்பதைச் சந்தர்ப்பப் பொருள் சுட்டிக்காண்பிக்கிறது. [15]இந்தச் சொற்றொடர், ஜெர்மானியத் தத்துவஞானியான ஃபிரடரிக் நீட்சே என்பவரால் பிரபலப்படுத்தப்பட்டது, இது அனேகமாக முதன்முதலாக, கிரேக்க கவிஞரான பிந்தர் என்பவரால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (Tony Hale: "Become Who You Are: The Freedom to Create" [http://www.anonymityone.com/Faq97.htm]; Internet; accessed 24 April 2008). [16]"தேவனுடைய இராஜ்யம்" என்பது சபையைக் குறிப்பதாக இருக்கையில் "பரலோக இராஜ்யம்" என்பது பரலோகத்தைக் குறிப்பதாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் இவ்விரு சொற்றொடர்களும் புதிய ஏற்பாட்டில் ஒன்றுக்கும் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (உதாரணமாக, மத்தேயு 19:23, 24ஐக் காணவும்). எழுத்தாளர் தமது சிந்தையில் "பூமிக்குரிய" இராஜ்யத்தைக் கொண்டுள்ளாரா அல்லது "வானத்திற்குரிய" இராஜ்யத்தைக் கொண்டிருக்கிறாரா என்பதை சந்தர்ப்பப்பொருள்தான் தீர்மானிக்கிறது. [17]நான் பிள்ளைகளிடத்தில் ஒரு எளிய விரல் பயிற்சியைப் பயன்படுத்துவது உண்டு. நான் எனது சுட்டு விரல்களை ஒரு சிலுவையைப் போன்று அமைத்து வைத்துக் கொண்டு, "இயேசு நமக்காகச் சிலுவையில் மரித்தார்" என்று கூறுவேன். பின்பு நான் ஒரு கையில் உள்ள விரல்களை ஒவ்வொன்றாகத் தட்டிக் காண்பித்து, "இப்போது நாம் கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும்" என்று கூறுவேன். பின்பு நான் எனது கைகளை ஒன்றாக்கி அவற்றைத் தூரமாகப் பிரித்துப் பரப்பி, "பின்பு நாம் வளர வேண்டும்" என்று கூறிமுடிப்பேன். இதை நான் பல முறை செய்து, பிள்ளைகளை என்னுடன் சேர்ந்து அந்தச் செயலைச் செய்யும்படி கேட்டுக் கொள்வேன். [18]A. M. Toplady, "Rock of Ages," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

மத்தேயு 5:3-12ல் உள்ள பாக்கியங்கள் ஏழா, எட்டா அல்லது ஒன்பதா?

"ஏழு" என்பது தனிச்சிறந்த வகையில் வேதாகம எண்ணாக இருப்பதால் சிலர், பாக்கியங்கள் *ஏழு* என்ற கருத்தைக் காத்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். 10ம் வசனமானது 3ம் வசனத்தின் விரிவாக்கமாக உள்ளது, ஏனெனில் அவை இரண்டுமே ஒரே வாக்குத்தத்தைக் கொண்டு முடிகின்றன என்று கூறுவதன் மூலம் இவ்வாறு செய்யப்படுகிறது. மற்றவர்கள், "பாக்கியவான்கள்" என்ற வார்த்தை நமது வேதவசனப் பகுதியில் *ஒன்பது* முறைகள் காணப்படுகிறது என்று குறிப்பிடுகின்றனர். அவர்கள், 11மற்றும் 12ம் வசனங்கள் 10ம் வசனத்தில் இருந்து மாறுபட்டுள்ள பாக்கியம் என்றும், எனவே ஒன்பது பாக்கியங்கள் என்று எண்ணப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் பெரும்பான்மையான எழுத்தாளர்கள், *எட்டு* பாக்கியங்கள் என்ற வழக்கமான பட்டியலைக் கொண்டுள்ளனர் - மற்றும் அதையே நாம் இந்தப் படிப்பிலும் பின்பற்ற இருக்கிறோம். பாக்கியங்களின் மிகச்சரியான எண்ணிக்கையல்ல, ஆனால் அதன் பொருள்தான் முக்கியமானதாக உள்ளது.

2

துருத்தியில் கண்ணீர்

(மத்தேயு 5:4)

மத்தேயு 5ம் அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு பாக்கியத்திலும், "blessed," என்ற வார்த்தை காணப்படுகிறது, இது "மகிழ்ச்சியானவர்கள்" என்ற வார்த்தையை இந்த உலகம் விளக்குகிறபடி நாம் விளக்கப்படுத்தாத வரையிலும், "மகிழ்ச்சியானவர்கள்" என்று மொழிபெயர்க்கப்படமுடியும். [தமிழ் வேதாகமத்தில் இது "பாக்கியவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] மத்தேயு 5:3-12ன் எட்டுக் கூற்றுக்களிலும், புறம்பான சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் உண்மையான மகிழ்ச்சிக்குத் தேவன் பரிந்துரைக்கும் குறிப்பை நாம் கொண்டிருக்கிறோம். "கூடுதல் மகிழ்ச்சி" என்பது இதற்கான எனது சொற்றொடராக உள்ளது.

ஒவ்வொரு பாக்கியமும், இந்த உலகம் நம்பும் விஷயத்தின் எதிர்ப்பொருளாக உள்ளது என்று நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். பவுல், "தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 1:25). உலகசிந்தை கொண்டவர்களுக்குப் பைத்தியமாகக் காணப்படும் - பாக்கியங்கள் போன்ற - விஷயம், உண்மையில் தெய்வீக ஞானத்தின் சுருக்கப் பொழிப்புரையாக உள்ளது. பாக்கியங்களையும் அதில் அடங்கியுள்ள யாவற்றையும் தழுவிக்கொண்டவர்கள், கூடுதல் மகிழ்ச்சி விளைவைக் கொண்டுள்ளதாகச் சாட்சியம் கூற முடியும்.

இந்தப் பாடத்தில் நாம், இரண்டாவது பாக்கியத்தைப் பற்றிப் படிப்போம்: "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்" (மத்தேயு 5:4). இந்த பாக்கியம், மனித ஞானத்திற்கு எதிராகச் செல்கிறது என்பது தெளிவு. உண்மையில் நாம், "பாக்கியவான்கள்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "மகிழ்ச்சியானவர்கள்" என்ற வார்த்தையை இங்கு இடுவோம் என்றால், அது முரண்பாடு கொண்டதாகத் தோன்றுகிறது: "துயரப்படுகிறவர்கள் மகிழ்ச்சியானவர்கள்." மனித ஞானமானது, துயரத்திலும் கவலையிலும் கொஞ்சம் மதிப்பையே காணுகிறது. வெகு சிலரே அழுவதை விரும்புகின்றனர். நம்மைச் சிரிக்க வைக்கும் நகைச்சுவை நடிகர்களுக்கு நாம் கட்டணம் செலுத்துகிறோம். எல்லா வீலர் வில்காக்ஸ் என்பவரால் விளக்கப்படுத்தப்பட்ட பின்வரும் உணர்வுக்கருத்தைப் பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர்:

> *சிரியுங்கள், அப்போது உலகம் உங்களுடன் சிரிக்கும்;*
> *அழுங்கள், அப்போது நீங்கள் தனிமையில் அழுவீர்கள்,*
> *ஏனெனில் கவலை மிகுந்த பழமையான இந்த பூமி*
> *தனது களிப்பைக் கடன் பெறவேண்டும்,*
> *ஆனால் அது தனக்குச் சொந்தமான துன்பங்களைப்*
> *போதுமான அளவில் கொண்டுள்ளது.[1]*

இருந்தபோதிலும் இயேசு, "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். "துயரப்படுகிறவர்கள்"[2] என்பது, "துயரமடைய, புலம்ப"[3] என்று அர்த்தப்படுகிற (*pentheo*) என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இது "பழங்காலக் கிரேக்க மொழியில், மிகத்தீவிரமான துக்கத்தின் வகையைச் சித்தரிப்பதில் புலம்புதலுக்கான மிகவும் செயல்தாக்கம் கொண்ட வார்த்தைகளில் ஒன்றாக" உள்ளது.[4] இது, "மரணம் அடைந்தவர்களுக்காகத் துக்கித்தலுக்குப் பொதுவாகப் பயன்படுத்தப்" பட்டது.[5] பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (the LXX), யோசேப்பு மரித்துப் போனதாக யாக்கோபு நினைத்தபோது, அவர் புலம்பியதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது (காண்க ஆதியாகமம் 37:34). இது தாவீதின் மகன் அப்சலோம் இறந்தபோது, தாவீதின் புலம்பலை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது (காண்க 2 சாமுவேல் 19:2).[6]

வலிவார்ந்த துயரப்படுதல் என்பது உண்மையான மகிழ்ச்சியுடன் எவ்வாறு தொடர்புபடுத்தப்பட்டிருக்க முடியும்? இந்தப் பாடம் முடிவதற்குள் நீங்கள், இயேசுவின் கூற்றில் உள்ள பரத்துக்கேற்ற ஞானத்தையும், இதில் அடங்கியுள்ள கொள்கைகள் உங்கள் சொந்த மகிழ்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்றும் நீங்கள் காண்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ..."

ஆறுதல் அடையாத துயரப்படுகிறவர்கள்

முந்திய பாடத்தில் போன்று நாம், எதிர்மறையைக் கொண்டு தொடங்குவோமாக: இயேசு எதைக் *கூறவில்லை*? முதலாவதாக இயேசு, மக்கள் அழுவதன் காரணமாக மாத்திரம் அவர்கள்மீது ஆசீர்வாதம் உரைக்கப்படும் என்று கூற நோக்கங் கொண்டிருக்கவில்லை. அழுதல் என்ற செயலில் சிறப்பான ஒழுக்கநெறி எதுவும் இல்லை. தேவன், தமது மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புவதாக வேதாகமம் அடிக்கடி வலியுறுத்துகிறது. நீதிமொழிகள் 17:22ல் நாம், "மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்" என்று வாசிக்கிறோம். பவுல், "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:4).

மேலும் வேதாகமம், துயரப்படுகிற சிலர் ஆறுதல் *பெறமாட்டார்கள்* என்று திட்டவட்டமாகப் போதிக்கிறது.[7] எடுத்துக்காட்டாக, "லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" என்று பவுல் கூறினார் (2 கொரிந்தியர் 7:10ஆ). இது ஒருவரின் செயல்பாடுகளின் *விளைவின்* காரணமாக ஏற்பட்ட துக்கமாகும், இதில் செயலுக்கான துக்கம் சிறிதளவோ அல்லது துக்கமற்ற நிலையோ இருக்கிறது. இந்தக் கருத்து பின்வரும் விவரிப்பைக் கொண்டு விளக்கப்படலாம்: ஒரு மாணவன் தான் படிக்காததால் மோசமான மதிப்பெண்களைப் பெற்றபோது அவன் கவலையாக இருக்கிறான். சோம்பேறியாக இருந்து அதனால் தேர்வில் தோல்வியடையும் மாணவர்கள் "துயரப்படுகையில்" அவர்கள் பாக்கியவான்கள் மற்றும் அவர்கள் ஆறுதல் அடைவார்கள் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்யவில்லை.

பாவம் குறித்து லௌகிக துக்கத்திற்கான உதாரணங்கள் ஏராளமாக உள்ளன. தனது தலைவலி மற்றும் தனது வேலை மற்றும் குடும்பத்தை இழத்தல்

பற்றித் துயரம் கொண்ட குடிகாரர் ஒருவர் தனது வாழ்வு நடையை அப்போதும் மாற்றாது இருத்தல் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அதன்பின்பு "மனஸ்தாபப்பட்டான்" (மத்தேயு 27:3); ஆனால் அவன் மனந்திரும்பி கர்த்தரிடம் திரும்பி வரவில்லை. அவனைப் பற்றி இயேசு, "அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்று கூறினார் (26:24). இரண்டாம் வருகையில், மனம்திரும்பாதவர்கள், பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி "நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்" என்று கதறுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 6:16). இருப்பினும், கர்த்தர் மறுபடியும் வரும்போது, ஆறுதலை தேடுதல் என்பது மிகவும் தாமதமான செயலாக இருக்கும்.

புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வெளிப்படுத்துதலை ஏற்றுக்கொள்ள மனவிருப்பம் இல்லாத, மார்க்கரீதியான துயரப்படுபவர்கள் என்போர், துயரப்படுபவர்களில் இன்னொரு வகையினராக உள்ளனர். "அழுகைச் சுவர்"[8] என்று அறியப்பட்டுள்ள, எருசலேம் நகரின் மேற்கு மதில் சுவர் அருகில் கூடுகிற யூதர்கள் இதற்கான உதாரணமாக உள்ளனர். விசேஷித்த நிகழ்ச்சிகளின்போது, பின்வரும் பதில்பாடல் அங்கு உச்சரிக்கப்படும்:

நடத்துனர்: கைவிடப்பட்டிருக்கும் அரண்மனைக்காக:
பதிலுரை: நாங்கள் தனிமையில் அமர்ந்து புலம்புகிறோம்.
நடத்துனர்: அழிக்கப்பட்ட அரண்மனைக்காக:
பதிலுரை: நாங்கள் தனிமையில் அமர்ந்து புலம்புகிறோம்.
நடத்துனர்: இடித்து நொறுக்கப்பட்ட மதில்களுக்காக:
பதிலுரை: நாங்கள் தனிமையில் அமர்ந்து புலம்புகிறோம்.
நடத்துனர்: விலகிப்போன எங்கள் மாட்சிமைக்காக:
பதிலுரை: நாங்கள் தனிமையில் அமர்ந்து புலம்புகிறோம்.
நடத்துனர்: மரித்துக் கிடக்கும் எங்கள் மாபெரும் மனிதர்களுக்காக:
பதிலுரை: நாங்கள் தனிமையில் அமர்ந்து புலம்புகிறோம்.
நடத்துனர்: எரிக்கப்பட்ட விலையேறப்பெற்ற கற்களுக்காக:
பதிலுரை: நாங்கள் தனிமையில் அமர்ந்து புலம்புகிறோம்.[9]

யூதர்கள், இஸ்ரவேலின் இழந்து போகப்பட்ட மகிமையின் காரணமாக அழுகின்றனர், அவர்கள் மேசியாவும் அவரது இராஜ்யமும் வரவேண்டும் என்று ஜெபிக்கின்றனர், ஆனால் அவர்கள் இயேசுவை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். அவர்களின் புலம்புதல் ஆசீர்வதிக்கப்படாது.

தேவனுடைய வழியை ஏற்றுக்கொள்ளாமலேயே துக்கப்படுபவர்கள் பற்றி, நான் எனது சிறுவயதுக் காலத்தில் இருந்த "துயரப்படுபவர்களின் நீண்ட இருக்கை"[10] பற்றியும், நவீன காலத்தில் அதற்கு இணையாக உள்ள "பாவியின் ஜெபம்" பற்றியும் நினைக்கிறேன். அந்தப் பழைய நீண்ட இருக்கையில் மாபெரும் புலம்புதல்கள் நடைபெற்றன, மற்றும் திரளான கண்ணீர் சிந்தப்பட்டது; ஆனால் அது, நாம் கர்த்தரிடத்தில் வருவதற்கான வழி என்று அவர் கூறியதல்ல.

பவுல் தமது பாவங்கள் நிமித்தம் துயரப்பட்டு ஜெபித்துக் கொண்டிருந்தபோது, அவரிடத்தில் அனனியா "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறினார் (நடபடிகள் 22:16).

ஆசீர்வதிக்கப்படாத வகையில் உள்ள கடைசி வகையினராக உள்ள புலம்புபவர்களைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம், இவர்கள் ஏற்கனவே பட்டியலிடப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருக்கின்றனர்: தங்கள் பாவங்களினிமித்தம் புலம்பி, ஆனால் அவற்றைக் குறித்து ஒன்றும் செய்யாது இருப்பவர்கள்.

> செயின்ட் லூயிஸ் என்ற இடத்திற்குத் தெற்குப்பகுதியில், வழிப்பறிக் கொள்ளைக்காரர் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு வாதநோயினால் பாதிக்கப்பட்டார், அவர் திடீரென்று மிகவும் பயபக்தி உடையவரானார். அவர் ஜெபித்து வேதம் வாசித்து பிரசங்கியார்களை அழைத்தார். (அவர் தேவனுடன் சமாதானமாக வேண்டும் என்று விரும்பினால், விலையுயர்ந்த ஒரு வைரம் சபைக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவரிடத்தில் ஒரு பிரசங்கியார் கூறினார்; அதைப் பிரசங்கியார் தம்முடன் எடுத்துச் சென்றார்.) அந்த மனிதர் சுகமானார், மற்றும் விரைவிலேயே அவர் தமது சட்டவிரோதமான தொழிலைத் திரும்பவும் தொடங்கினார்.[11]

உண்மையற்ற வகையில் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கிடைக்காது. இயேசு, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று கூறினார் (மத்தேயு 7:21). மீண்டுமாக இயேசு, "குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்று கூறினார் (யோவான் 3:36ஆ; NASB).

ஆறுதல் அடையும் துயரப்படுகிறவர்கள்

நாம் நேர்மறைக்குக் கடந்து செல்வோமாக. ஆறுதல் அடையும் துயரப்படுபவர்கள் *யார்?* இதை இவ்வசனப்பகுதி கூறுவதில்லை, ஆனால் *ஆவிக்குரிய* துயரம், *ஆவிக்குரிய* அக்கறை ஆகியவற்றை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சந்தர்ப்பப்பொருள் நமக்குச் சுட்டிக்காண்பிக்கிறது. 3ம் வசனத்தின் ஆவிக்குரிய வகையில் கைவிடப்பட்ட நிலையின் மீதான துயரப்படுதலே மத்தேயு 5:4ன் முதன்மைக் கவனக்குவிப்பாக உள்ளது.

> நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்க்க நடத்துனரான ஜான் கிறிஸோஸ்தம் என்பவர், தமது எழுத்துக்களில் ஒன்றில், "தங்கச் சங்கிலி ஒன்றில் உள்ள இணைவுகளைப் போன்று" ஒன்று மற்றொன்றுடன் அடுத்தடுத்து வரும் பாக்கியங்களைக் கொண்டு, இயேசு மலைப்பிரசங்கத்தைத் தொடங்கினார் என்று கூறுகிறார். ... இயேசு பாக்கியங்களை ஏனோதானோ என்று வகைப்படுத்தவில்லை; அவற்றை அவர் தெய்வீகரீதியில் தர்க்கவகையிலான வரிசையில் அமைத்தார். அவர் ஒவ்வொன்றும் அதற்கு முன்னதாக உள்ளதன் மீது கட்டி

எழுப்பப்படுகிறது.[12]

ஜேம்ஸ் டோல் என்பவர் மத்தேயு 5:4ன் துயரப்படுதலை, "ஆவியில் எளிமையுள்ளவர்களின் உணர்வுப் பெருக்கத்தின் வெளிப்பாடு" என்று அழைத்தார்.[13] இந்த உணர்வுப் பெருக்கத்தின் வெளிப்பாட்டிற்கு நாம், ரோமர் 7ல் பவுலின் வார்த்தைகளின் உதாரணம் ஒன்றைக் கொண்டிருக்கிறோம்: "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (வசனம் 24). இவ்வகையான துயரத்திற்கும், 2 கொரிந்தியர் 7ல் உள்ள "தேவனுக்கேற்ற துக்கம்" என்பதற்கும் இடையில் உறவு உள்ளது. KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில், "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" என்றுள்ளது (வசனம் 10). NASB வேதாகமத்தில், "தேவனுடைய சித்தத்திற்கேற்ற துக்கம் (பிற்பாடு) மனம் வருத்தம் கொள்ளத் தேவையற்ற வகையிலான மனம்திரும்புதலை உண்டாக்கி, இரட்சிப்புக்கு வழிநடத்துகிறது ..." என்றுள்ளது.

நமது சொந்தப் பாவங்களைப் பற்றித் துயரப்படுதல் என்பது, நாம் பொதுவாகப் பாவத்தைக் குறித்துத் துயரப்படுவதற்கும் காரணமாக வேண்டும்: உலகத்தில் பாவத்தின் செயல்விளைவின் நிமித்தம் துயரப்படுதல்,[14] மற்றவர்களின் வாழ்வில் அவர்களை நரகத்திற்கு அனுப்பும் வகையிலான பாவங்கள் இருத்தல் குறித்துத் துயரப்படுதல். "நீதிமானாகிய லோத்து" "அக்கிரமக்காரருடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டார்" (2 பேதுரு 2:7, 8). இயேசு, எருசலேம் நகரத்தைப் பார்த்து, "எருசலேமே, ...! கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்று கூறினார் (லூக்கா 13:34). எதிர்த்து நின்ற நகரத்தை அவர் கண்ணேறிட்டுப் பார்க்கையில், அவர் "அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்" (19:41). பவுல், இழந்துபோகப்பட்டிருந்த தமது யூத சகோதரர்களைப் பற்றி நினைத்தபோது, "எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; ... மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே" என்று கூறினார் (ரோமர் 9:1, 3). இழந்துபோகப் பட்டுள்ளவர்களுக்காக நாம் இவ்வகையிலான வலிவார்ந்த துயரம் கொண்டிருக்கும் போது, அது நாம் சுவிசேஷத்தைக் கொண்டு அவர்களை அடையக் காரணமாகும் (காண்க ரோமர் 1:14, 16).

சமவெளிப்பிரசங்கத்தில் இயேசு, இந்த பாக்கியத்தின் நேர்மறையை முதலில் உரைத்தார்: "இப்போழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்" (லூக்கா 6:21ஆ). பின்பு அவர் எதிர்மறையைக் கொடுத்தார்: "இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்" (லூக்கா 6:25ஆ). 25ம் வசனத்தில் இயேசு, பொதுவாக நகைத்தல் பற்றிப் பேசவில்லை, ஆனால் நம்மைப் பரவசப்படுத்துகிற, விசேஷமாக பாவம் நிறைந்ததாக உள்ள நகைத்தலைப் பற்றிப் பேசினார். பாவத்தைப் பற்றி நகைப்பிற்கிடமானது எதுவும் இல்லை!

"... அவர்கள் ஆறுதலடைவார்கள்."

வெளிப்படையான முரண்பாடு

ஆறுதல் அடைதலின் ஆசீர்வாதத்தைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்முன், இந்த பாக்கியத்தின் வெளிப்படையான முரண்பாட்டை எடுத்துரைக்கச் சற்று நேரத்தை எடுத்துக் கொள்வோம்: "*துயரப்படுகிறவர்கள்* பாக்கியவான்கள் (*மகிழ்ச்சியுள்ளவர்கள்*) அவர்கள் ஆறுதலடைவார்கள்." இதை முதல்முதலாகக் கேள்விப்படுகிறபோது, இது நமக்கு வினோதமானதாக ஒலிக்கிறது, ஆனால் மகிழ்ச்சிக்கான எந்த ஒரு சூத்திரமும், மகிழ்ச்சியற்ற நாட்கள் இருக்கும் என்ற உண்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வாழ்வு என்பது எப்போதுமே பசுமையான புல்வெளிகளில் (வளமான நிலையில்) நம்மை நடத்துவதில்லை; நாம் அடிக்கடி பள்ளத்தாக்குகளையும் நிழல்களையும் எதிர்கொள்கிறோம். இந்த சத்தியத்தை உணர்ந்தறியத் தவறுகிறபோது, மகிழ்ச்சி பற்றிய எந்தக் கலந்துரையாடலும் உண்மைக்கு மாறானதாக உள்ளது, எனவே அது கொஞ்சமே மதிப்புடையதாக உள்ளது.

ஆவிக்குரிய வகையிலான துக்கம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றிற்கு இடையில் இருக்கக் கூடிய உறவு என்ன? ஒருசில முதன்மைக் கருத்துரைகள் இங்கு முறையானவைகளாக உள்ளன: *(1) இந்த எண்ணப்போக்கு தன்னிலேயே மகிழ்ச்சியைப் பங்களிக்க முடியும்.* பாக்கியங்களின் வளர்நிலை இயல்பைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நாம் நமது ஆவிக்குரிய வகையிலான கைவிடப்பட்ட நிலையை உணர்ந்தறியும்போது (முதல் பாக்கியம்), நமது ஆவிக்குரிய தேவைகளின் மீது துயரப்படுதல் (இரண்டாவது பாக்கியம்) என்பது இயல்பான விளைவாகிறது. முதல் பாக்கியம் நாம் நம்மீதல்ல ஆனால் தேவன் மீது சார்ந்திருக்க வேண்டும் என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறது, அதே வேளையில் இரண்டாவது பாக்கியம் தேவனை நோக்கி எடுத்து வைக்கும் முதல் அடிவைப்பாக உள்ளது. பாவங்களுக்காகத் துயரப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்கு வழிநடத்தும் மனம்வருந்துகிற இருதயத்தையும் மன்னிப்பையும் உண்டாக்குகிறது. 2 கொரிந்தியர் 7:10ஐ மீண்டும் கவனியுங்கள்: "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் *இரட்சிப்புக்கேதுவான* மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" (வசனம் 10அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). கர்த்தரிடத்தில் நாம் எவ்வளவுக்கு நெருக்கமாகிறோமோ, அவ்வளவுக்கு நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

(2) ஆவிக்குரிய வகையில் துயரப்படுதலுக்கு, மதிப்புகள் பற்றிய தகுதியான உணர்வறிவு தேவைப்படுகிறது. நமது முன்னுரிமைகள் சரியானவைகளாக இருந்தால், உண்மையில் முக்கியமற்ற விஷயங்கள் பற்றி நாம் அவ்வளவு மகிழ்ச்சியற்று இருக்க மாட்டோம். *(3) இந்த பாக்கியத்தில் வலியுறுத்தப்படும் விஷயம் உண்மையானது மற்றும் என்றென்றைக்குமான மகிழ்ச்சி என்பது பாக்கியத்தின் வாக்குத்தத்தத்தில் இருந்து வருகிறது என்பதைச் சிந்தையில் காத்துக்கொள்ளுங்கள்: தேவன் நமக்கு ஆறுதலை வாக்குத்தத்தம் செய்திருப்பதால், நாம் துயரப்படுகிறபோது நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.*

நமது தேவன் ஆறுதலின் தேவனாக இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது: "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம் ... எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்'' (2 கொரிந்தியர் 1:3, 4ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).[15] ஏசாயாவின் புத்தகத்தில், மேசியா மற்றவர்களை ஆறுதல்படுத்துகிறவராக இருப்பார் என்று நாம் வாசிக்கிறோம்:

> கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; ...
>
> சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; (ஏசாயா 61:1-3; காண்க லூக்கா 4:16-21).

சங்கீதம் 56:8ல் நாம், நமது பாடத்தின் தலைப்பை ஏவுகிற தனிச்சிறப்பான சொற்றொடர் ஒன்றைக் காணுகிறோம். தேவனிடத்தில் தாவீது, "என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்" என்று கூறினார். புட்டிகள் அல்லது துருத்திகள் என்பவை தாவீதின் நாட்களில் சாதாரணமானவையாக இருக்கவில்லை. அவைகள் மதிப்பு மிகுந்தவையாக இருந்தன, எனவே அவற்றில் - விலையுயர்ந்த வாசனைத் தைலங்கள், அரிய வகையிலான திராட்சரசம் அல்லது வெளிநாட்டுத் தைலம் போன்ற - மதிப்பு மிக்க பொருட்கள் மாத்திரமே வைக்கப்பட்டன. தாவீது தமது கண்ணீரை, தேவன் தமது துருத்தியில் வைக்குமளவுக்கு முக்கியமானதாகக் கருதும்படி, அதை ஒருக்காலும் மறந்துவிடாதிருக்கும்படி கேட்டுக்கொண்டார். (ரோமாபுரியை ஆண்ட) இராயர் சிலவேளைகளில் தங்கள் கண்ணீரைப் பிடித்து அதைத் துருத்திகளில் வைப்பார்கள் என்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். அந்தத் துருத்திகள் பெயரிடப்பட்டு காட்சிக்கு வைக்கப்படும். அவைகள், ரோமக்குடிமக்களைப் பாதித்த கவலைக்குரிய நிகழ்ச்சிகளைப் பற்றி ரோமப்பேரரசர்களின் பரிதவிப்புக்குச் சாட்சியங்களாக நிற்கும்.[16] நீங்களும் நானும், நமது கண்ணீர்கள் தேவனுக்கு விலையேறப் பெற்றவையாக உள்ளன என்று உறுதியாகக் கூறமுடியும், அவ்வாறே அவை அவரது நினைவு என்ற "துருத்தியில்" துளித்துளியாகச் சேர்த்து வைக்கப்படுகின்றன. அவர் அவற்றை மறக்க மாட்டார். அவர் நம்மைப் பற்றிக் கவலையுள்ளவராக *இருக்கிறார்*. அவர் நம்மை ஆறுதல்*படுத்துவார்*.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆறுதல்

அது நம்மை, "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆறுதல் என்ன?" என்று கேட்கும்படி வழிநடத்துகிறது. "ஆறுதல் அடைவார்கள்" என்பது, "ஒருவரைத் தம் அருகில் அழைத்தல்" என்பதைக் குறிக்கிற (*parakaleo* என்ற) வார்த்தையில் இருந்து வருகிறது (*para* ["உடன் பக்கமாக"] கூட்டல் *kaleo* ["அழைக்க"]).

இவ்வார்த்தை, புத்திகூற, அறிவுறுத்த அல்லது ஊக்குவிக்க என்று அர்த்தப்பட முடியும் (காண்க லூக்கா 3:18; 1 கொரிந்தியர் 1:10; எபிரெயர் 10:25). நமது வேதவசனப் பகுதியில் இது, நம்மை *ஆறுதல்படுத்துவதற்காகக்* கர்த்தர் "நமது பக்கமாக வருதலை" குறிக்கிறது. இந்தப் பாட வரிசையின் தொடக்கப் பாடத்தில், பாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும், நிகழ்கால வாழ்வில் ஒருபகுதி நிறைவேற்றமும், எதிர்காலத்தில் பரலோகத்தில் நிறைவான நிறைவேற்றமும் கொண்டுள்ளது என்று நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் என்ற இயேசுவின் வாக்குத்தத்தம் குறித்து, அதுவே உண்மையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

(1) இந்த வாழ்வில் ஆறுதல். இந்த வாழ்வில் ஆறுதல் பற்றி, ஆவிக்குரிய வகையில் துயரப்படுகிறவர், ஆறுதலுக்குக் குறைந்தபட்சம் இரண்டு ஆதாரமூலங்களைக் கொண்டுள்ளார். *முதலாவது, தேவனுடைய வசனத்தில் காணப்படுகிற வாக்குத்தத்தங்களில் இருந்து வருகிற ஆறுதல்.* எடுத்துக்காட்டாக, ஒருவர் தமது ஆவிக்குரிய நிலை பற்றி வருத்தப்படுதல், மனந்திரும்புதலை விளைவிக்கும் என்றும், அது கர்த்தருக்குக் கீழ்ப்படிதலை விளைவிக்கும், மற்றும் அது கடந்தகாலப் பாவங்களில் இருந்து மன்னிக்கப்பட்டு இருத்தலை விளைவிக்கும் என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளேன். கிறிஸ்தவரல்லாதவர்களுக்குப் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் *பாவமன்னிப்புக்கென்று* இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:38; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பாவம் செய்கிற கிறிஸ்தவரைப் பொறுத்தமட்டில், யோவான் "அவர் ஒளியிலிக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; *அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்*" என்று எழுதினார் (1 யோவான் 1:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நமது பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டன என்று அறிவதில் மாபெரும் ஆறுதல் உள்ளது. எத்தி யோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்ற பின்பு (நடபடிகள் 8:26-39), அவர் "சந்தோஷத்தோடே தன் வழியே போனார்" (வசனம் 39).

மேலும் நான், மத்தேயு 5:4ன் துயரப்படுதல் என்பது பொதுவாகப் பாவம் மற்றும் அதன் விளைவுகள் குறித்துக் துயரப்படுதலை உள்ளடக்குகிறது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளேன். அவ்வகையான துயரப்படுதல் நம்மைச் செயல்படும்படி தூண்டும். விஷயம் அப்படி இருக்கும்போது, நாம் மீண்டும் வசனத்தில் இருந்து ஆறுதலின் உறுதிப்பாட்டைப் பெறுகிறோம். சங்கீதம் 126ல் நாம், "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்" என்று வாசிக்கிறோம் (வசனங்கள் 5, 6). இவ்வசனப்பகுதி, இஸ்ரவேல் நாட்டில் மீளக்கட்டுவிக்கப் பட்டவர்களைத் தேவன் ஆசீர்வதிப்பார் என்பதில் எழுத்தாளர் கொண்டுள்ள நம்பிக்கையைப் பற்றிப் பேசுகிறது, ஆனால் இது இன்றைய நாட்களில், நம்மில் வசனமாகிய விதையை விதைப்பவர்களைப் பற்றியும் நமக்கு நினைவூட்டுகிறது. விசுவாசம் நிறைந்த ஆத்தும ஆதாயம் செய்பவர்கள், உணர்வுப்பூர்வமான பெற்றோர்கள், வேதாகம வகுப்பு ஆசிரியர்கள், சபை

நடத்துனர்கள் மற்றும் போதிக்கும் பிறர் ஆகியோரைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள், தாங்கள் (சுவிசேஷத்தைக் கொண்டு) அடைய முயற்சி செய்பவர்களுக்கு விதையைக் கண்ணீரைக் கொண்டு தண்ணீர் வார்த்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று புரிந்து கொண்டுள்ளனர். நீங்கள், இவர்களில் ஒருவராக இருந்து உங்கள் பணிப்பொறுப்பில் உண்மையுடன் நிலைத்திருந்தால், நிறைவாகத் தேவன் விளைச்சலைக் கொடுப்பார் என்பதை அறிந்து கொள்ளுங்கள் (1 கொரிந்தியர் 3:6). நீங்கள் "சந்தோஷ சத்தத்துடன் அறுவடை செய்வீர்கள்"; நீங்கள் அறுவடையை உங்களுடன் கொண்டு வரும்போது, "மீண்டும் சந்தோஷத்தின் சத்தத்துடன் வருவீர்கள்."

இந்த வாழ்வில் ஆறுதல் என்பது பற்றி, தேவனுடைய அருளிரக்கமுள்ள பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்பது ஆவிக்குரிய வகையில் துயரப்படுகிறவர்களுக்குப் பலத்தின் இன்னொரு ஆதாரமூலமாக உள்ளது.[17] பவுல், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று எழுதினார் (ரோமர் 8:28). எபிரெயர் 13ல், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" என்று நாம் வாசிக்கிறோம் (வசனம் 5). இயேசு, "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று கூறினார் (மத்தேயு 28:20).

(2) *இனி வரும் வாழ்வில் ஆறுதல்.*[18] மீண்டுமாக நான், இனிவரும் வாழ்விலேயே ஆறுதலின் வாக்குத்தத்தத்தினுடைய முற்றான மற்றும் நிறைவான நிறைவேற்றம் வரும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். நீண்ட காலத்திற்கு முன்னர் தாவீது, "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" என்று எழுதினார் (சங்கீதம் 30:5). என்னிடத்தில் உள்ள KJV வேதாகமப் பிரதியில், "களிப்பு" என்பதற்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: "எபிரெய(ர்களின்) *பாடுதல்.*" அழுகை என்பது ஒரு நிரந்தரமான பார்வையாளர் அல்ல; அது ஒரு இரவு இங்கிருந்துவிட்டு, பின்பு சென்று விடுகிறது, மற்றும் பாடுதலானது தங்கியிருக்கும்படி வருகிறது. இந்த வாழ்வில், அழுகை, பின்பு சந்தோஷம், பின்பு அழுகை, பின்பு பாடுதல் என்று தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கும். பரலோகத்தில் மாத்திரமே அந்த சந்தோஷமானது நமது இருதயங்களில் நிரந்தரமாகக் குடிகொள்ளும்.

லூக்கா 16ல் நாம், ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரின் வரலாற்றைக் காணுகிறோம். லாசரு இந்த வாழ்வில் சிறிதளவே ஆறுதல் பெற்றிருந்தான் (வசனங்கள் 20, 21, 25); ஆனால் அவன் மரித்தபோது, தூதர்களால் ஆபிரகாமின் மடிக்கு எடுத்துச் செல்லப்பட்டான் (வசனம் 22). அப்போது அவனைக் குறித்து ஆபிரகாம், "*இப்பொழுது* அவன் தேற்றப்படுகிறான்" என்று கூற முடிந்தது (வசனம் 25; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பரலோகத்தில் தேவன், "கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை வருத்தமுமில்லை, ..." (வெளிப்படுத்தின விசேஷம் 21:4).

முடிவுரை

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்."

இந்த பாக்கியத்தின் துயரப்படுதல் என்பது, முதலாவது 3ம் வசனத்தில் சித்தரிக்கப்பட்டதான, தனிப்பட்ட விதத்தில் ஆவிக்குரிய வகையில் கைவிடப்பட்டிருத்தலைக் குறித்ததாகவும், இரண்டாவது, மனிதகுலத்தின் மீது பொதுவாகப் பாவம் மற்றும் அதன் விளைவு பற்றியதாகவும் உள்ளது. ஆவிக்குரிய வகையிலான இந்தத் துயரப்படுதலுக்கு நாம், இந்த வாழ்வில் ஆறுதல் அடைவோம்; ஆனால் விசேஷமாக இனிவரும் வாழ்வில் ஆறுதல் நமக்கு உண்டு என்று வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டுள்ளது.

பாவம் மற்றும் அதன் விளைவு பற்றித் தேவன் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார். நீங்களும் நானும் கவலைப்படுகிறோமா இல்லையா என்பதே கேள்வியாக உள்ளது. எபேசியர் 4:19ல் நாம், "உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிற" தால் சுரணையற்றுப் போயிருப்பவர்களைப் பற்றி வாசிக்கிறோம். அவர்களைப் பற்றி KJV வேதாகமம், "கடந்த கால உணர்வுகளினால் அவர்கள் அதிகம் காமவெறிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ளனர்" என்று கூறுகிறது. என்ன ஒரு பரிதாபம்! நீங்கள் உங்கள் ஆவிக்குரிய தேவைகளைப் பொறுத்த மட்டில், "கடந்தகால உணர்வை" கொண்டு, சுரணையற்றுப் போக உங்களை அனுமதிக்காதீர்கள் என்று நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தேவன் அக்கறை கொள்கிறார். நீங்கள் அவ்வாறு இருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் ஆவிக்குரிய தேவைகள் குறித்துப் புலம்பியிருந்தீர்கள் என்றால், நீங்கள் கர்த்தரிடம் வருவதற்கு இதுவே ஏற்ற வேளையாக உள்ளது.

குறிப்புகள்

[1]Ella Wheeler Wilcox, "Solitude," in *The Home Book of Verse*, 7th ed. (New York: Henry Holt and Co., 1945), 2929. [2]இவ்விடத்தில் கிரேக்க வசனம், "புலம்புகிறவர்கள்" என்றுள்ளது. [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 418. [4]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 28. [5]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 825. [6]John Risse, "The Mourners," Sermon on the Mount series, sermon preached at Southern Hills church of Christ, Abilene, Texas, 1990, cassette. [7]தேவன் ஆறுதல்படுத்தாத துயரப்படுபவர்களின் பட்டியலில் எழுத்தாளர்கள் வேறுபடுகின்றனர். சிலர், தீர்மானமான தன்னம்பிக்கையற்றவர்களை, தங்கள் துயரத்தைக் காட்சிப்படுத்துகிறவர்களை (வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில், தங்கள் உடைகளை கிழித்துக் கொண்டு தங்கள் தலைகள் மீது சாம்பலைப் போட்டுக்கொண்டவர்கள்), மற்றும் நரகத்தில் துயரப்படுபவர்களை (மத்தேயு 13:42) உள்ளடக்குகின்றனர். [8]எருசலேமில் பழைய நகரின் மத்தியில், தேவாலயத்தின் மேடையைத் தாங்கியிருந்த மேற்குப் பகுதியில் மேற்கு மதில் உள்ளது, இது கி.பி. 70ல் தேவாலயம் முழுவதும் அழிக்கப்பட்ட போதிலும், கட்டுக்குலையாமல் இன்னும் இருக்கிறது. இது தேவாலயத்தின் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்கு மிகவும் அண்மையில் இருப்பதால், யூதத்துவத்திற்கு மிகவும் பரிசுத்தமான இடமாயிற்று. இது தேவாலயத்தின் அழிவிற்காகப் புலம்பும் மையமாகவும் இஸ்ரவேலின் முந்தின மகிமையை

மீளக்கட்டுவிக்கும்படி ஜெபிப்பதற்குமான இடமாகவும் உள்ளது. ("The Western Wall" [http://mosaic.lk.net/g-wall.html; Internet; accessed 24 April 2008].) [9]"Jerusalem" (http://www.lifeintheholyland.com/wailing_wall_1800s.htm; Internet; accessed 24 April 2008). [10]*இது ஒரு நாமகரணக் கூட்டத்தார் கூடிய ஒரு கட்டிடத்தின் முன்புறத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு எளிய நீண்ட இருக்கையாகும். அங்கு பாவிகள் முழங்கால் படியிட்டு, தங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி தேவனிடத்தில் ஜெபித்தனர். அந்த புலம்புதல் உரத்த சப்தமாகவும் நீண்டதாகவும் இருந்தது.*

[11]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 20. [12]Joe Schubert, "Happy Mourners," *Resources* 2 (1981): 8. [13]Tolle, 30. [14]*"அழும் தீர்க்கதரிசி" என்று அறியப்பட்டுள்ள எரேமியா இன்னொரு உதாரணமாக இருக்கிறார். அவர் தமது நாட்டின் பாவத்தினுடைய செயல்விளைவின் நிமித்தம் அழுதார் (காண்க எரேமியா 9:1, 18; 13:17; 14:17). புலம்பல் என்ற புத்தகத்தில் அவர், இஸ்ரவேலின் பாவத்தின் நிமித்தம் எருசலேம் அழிக்கப்பட்டதால் அழுதார்.* [15]*தேவன் தமது பிள்ளைகளை ஆறுதல்படுத்தும் விஷயத்தின் ஒரு உதாரணத்திற்கு, 2 இராஜாக்கள் 20:5, 6ஐ வாசியுங்கள்.* [16]*நான் இதைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, என் மனம், க்யோ வாடிஸ் என்ற பழைய திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியை நோக்கிச் சென்றது, அதில் பீட்டர் உஸ்டினோவ் என்ற நடிகர் நீரோவின் பாத்திரத்தில் நடித்தார். நீரோ தமது நண்பன் ஒருவரைக் கொலை செய்யும்படி இரகசியமாகக் கட்டளையிட்டார், ஆனால் அந்த மரணத்தினால் தாம் கவலை அடைந்ததாகப் பொதுமக்கள் நம்ப வேண்டும் என்று அவர் விரும்பினார். உஸ்டினோவ் ஒரு புட்டியைக் கையில் பிடித்து, ஒரு கண்ணுக்கு அருகில் தமது கன்னத்தின் மீது அதை முரட்டுத்தனமாகத் தள்ளி, அந்தப் புட்டியில் ஒரு துளிக் கண்ணீரைப் பிழிந்தெடுத்து வைக்க முயற்சிக்கும் காட்சி காண்பிக்கப்பட்டது.* (*Quo Vadis,* prod. Sam Zimbalist, dir. Mervyn LeRoy and Anthony Mann, Metro-Goldwyn-Mayer [MGM], 1951.) [17]*தேவன் தமது மக்கள் மீது அக்கறை செலுத்துவதில் அவரது அருளிரக்கம் பற்றி அதிகமாகக் கூற நீங்கள் விரும்பலாம்.* [18]*இது நீங்கள் விரித்துரைக்க விரும்பும் இன்னொரு பகுதியாக உள்ளது.*

3

கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பலம்

[மத்தேயு 5:5]

நீங்கள் பொறுமையற்றவர்களாக, சகிப்புத்தன்மை இல்லாதவர்களாக அல்லது காட்டமான உணர்வு கொண்டவர்களாக இருக்கிறீர்களா? அப்படியென்றால், கூடுதல் மகிழ்ச்சிக்கு மூன்றாவது அவசியமான விஷயத்தை இயேசு தருகையில் அதைக் கவனியுங்கள்: "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (மத்தேயு 5:5). மக்களில் பலர் KJV *வேதாகமம வார்த்தைக்குப் பழக்கமானவர்களாக உள்ளனர்:* "Blessed are the meek: for they shall inherit the earth."[1]

உலகமானது மென்மையாகவும் சாந்தமாகவும் இருப்பதற்கு சிறிதளவே மதிப்பை இணைக்கிறது. உலகத்தின் பாக்கியங்கள் பெரும்பாலும் பின்வருவது போன்று இருக்கின்றன: "தங்களைத் தாங்களே உறுதிப்படுத்துகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தங்கள் வழியைப் பெற்றிருப்பார்கள்"; "தங்களைத் தாங்களே முன்னேற்றிக் கொள்பவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் கவனிக்கப்படுவார்கள்"; "உக்கிரமானவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் வெற்றியடைவார்கள்." இருந்த போதிலும், இயேசு "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்று சொன்னார்.

அந்த வாக்குத்தத்தத்தின் - "அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" என்ற - கடைசிப்பகுதியானது, கற்பனைகளுக்கு எரிபொருளைக் கொடுத்து கணிசமான அளவுக்கு நேரெதிர்க் கருத்துக்களை உண்டாக்கியுள்ளது. மென்மையும் சாந்தமும் உள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று இயேசு கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? மற்றும், மென்மையும் சாந்தமும் நமது மகிழ்ச்சியான நிலைக்கு என்ன செய்வதாக உள்ளன? நாம் இந்தக் கேள்விகளை இந்தப் பாடத்தில் ஆழ்ந்து சிந்திப்போம்.

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..."

விளக்கம்

முதலில் நாம், NASB வேதாகமத்தில் "gentle" என்றும் KJV வேதாகமத்தில் "meek" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் வேதாகமரீதியான அர்த்தத்தைத் தீர்மானித்தல் அவசியமாக உள்ளது. இந்தப் பாடத்தொடரில் முந்திய எடுத்துரைப்புக்களைப் போலின்றி, நாம் இதை நேர்மறையைக் கொண்டு தொடங்கி பின்பு எதிர்மறைக்குச் செல்வோம்: முதலில் நாம், கிரேக்க வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது என்று காண்போம், பின்பு நாம் அது எதை அர்த்தப்படுத்துவது இல்லை என்பதைச் சிந்திப்போம்.

"மென்மையான தன்மை/சாந்த குணம்" என்றால் என்ன? *Praus* என்பதே "gentle," "meek" அல்லது சாந்தகுணம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையாக உள்ளது. ஜோசப் ஹென்றி தாயெர் என்பவரின் அகராதி, *praus* என்பதை "மென்மையான, இதமான, சாந்தமான" என்று விளக்கப்படுத்துகிறது.[2] அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322) என்ற கிரேக்கத் தத்துவஞானி, *praus* என்பது "மோசமான மனநிலை" மற்றும் "முதுகெலும்பற்ற திறமையின்மை" ஆகியவற்றிற்குச் சரியாக மத்தியில் உள்ளது - "உச்சக் கட்ட கோபம் மற்றும் விருப்பு வெறுப்பற்ற தன்மை" ஆகியவற்றிற்கு இடைப்பட்ட களம் - ஆகும் என்று கூறினார்.[3] ஹியூகோ மெக்கார்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> *Praus* என்ற வார்த்தை மிருகங்களுக்குப் பயன்படுத்தப் பட்டபோது கிரேக்கர்கள், பழக்கப்படுத்துதல் என்ற அர்த்தத்தைக் கொண்டிருந்தனர். இந்த வார்த்தையை அவர்கள் ஒலிக்குப் பயன்படுத்தியபோது, அது மென்மை யானதாகவும் மிருதுவானதாகவும் இருந்தது என்று அர்த்தப்படுத்தினர். இதை அவர்கள் நபர்களுக்குப் பயன்படுத்தியபோது, மக்கள் சாந்தமாகவும் மென்மையாகவும் இருந்தனர் என்று அவர்கள் அர்த்தப்படுத்தினர்.[4]

Praus பற்றிய நமது கலந்துரையாடலை, மென்மையாக இருத்தலுக்கான அவசியத்தைக் குறிப்பிடுதலைக் கொண்டு நாம் தொடங்குவோமாக. கிறிஸ்தவர்கள் "உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், *சாந்தத்தையும்*, நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு" இருக்க வேண்டும் (கொலோசெயர் 3:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நாம் சுவிசேஷத்தைப் போதித்து, இழந்து போகப்பட்டிருப்பவர்களை மீட்க முயற்சி செய்கையில், அதை நாம் "சாந்தமுள்ள ஆவியோடே" செய்யவேண்டும் (கலாத்தியர் 6:1; காண்க 2 தீமோத்தேயு 2:25; 1 பேதுரு 3:15). "மென்மைத்தன்மை" என்பது *praus* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டில் நாங்கள், பெரும்பாலும் இதன் தோற்றக்கால அர்த்தத்தை இழந்துபோன வார்த்தை ஒன்றைக் கொண்டுள்ளோம்: "gentleman." இன்றைய நாட்களில் இவ்வார்த்தையானது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறிக்கவே முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் ஒருகாலத்தில் இது பிறருடன் பழகுவதில் உண்மையிலேயே மென்மையாக இருந்த மனிதரைக் குறித்தது. நாம் யாவரும் மென்மையான ஆண்களாக[5] மற்றும் மென்மையான பெண்களாக இருக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது.

சாந்தகுணம் என்பது *praus* என்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்கும் இடமாக உள்ளது, ஆனால் இது முடிவாக இருப்பதில்லை. பழைய ஏற்பாட்டில் மேசியாவைக் குறித்துப் பின்வரும் தீர்க்கதரிசனம் தரப்பட்டது:

> சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் *தாழ்மையுள்ளவரும்,* கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார் (சகரியா 9:9; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இவ்வசனப் பகுதி, எருசலேமிற்குள் இயேசுவின் வெற்றிப் பிரவேசத்தில் நிறைவேற்றப்பட்டது. மத்தேயு தமது சுவிசேஷத்தில், இந்தத் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காண்பித்தார், ஆனால் அவர் "தாழ்மை" என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தியுள்ள வார்த்தையைக் கவனியுங்கள்:

> இதோ, உன் ராஜா *சாந்தகுணமுள்ளவராய்* (*praus* என்பதிலிருந்து வந்த வார்த்தை), கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் (மத்தேயு 21:4; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

சகரியா "தாழ்மையுள்ளவரும்" என்ற வார்த்தையைப் பயன்படுத்திய இடத்தில், மத்தேயு "சாந்தகுணமுள்ளவராய்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். சாந்தகுணம்/எளிமை என்பது தாழ்மையின் பகுதிக்கூறாக இருந்துள்ளது. யாக்கோபு 1:21ல் NASB வேதாகமம், *praus* என்பதன் பெயர்ச்சொல் வடிவத்தை "சாந்தமாய்" என்று மொழிபெயர்க்கிறது: "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்." W. E. வைன் என்பவர், "தாழ்மையான இருதயமே எளிமையுள்ளதாகவும் சாந்தமுள்ளதாகவும் இருக்கிறது"[6] என்று குறிப்பிட்டார். சகரியா 9:9ல் "தாழ்மையுள்ளவரும்" என்பதற்குப் பதிலாக KJV வேதாகமத்தில் "lowly" என்றுள்ளது, எனவே எளிமையை மெக்கார்டு என்பவர், "மென்மையான தாழ்மை" என்று விவரித்தார்.[7]

Praus என்ற வார்த்தையைப் பற்றி, இயேசு தமது சிந்தையில் மென்மைத்தன்மை மற்றும் தாழ்மை ஆகியவற்றைக் கொண்டிருந்தார் - ஆனால் நமது புரிந்துகொள்ளுதல் இன்னும் முழுமையாவதில்லை. *Praus* என்ற வார்த்தையில் ஒப்புக்கொள்ளத் தக்கவகையில் இருத்தல், இணங்குதல் மற்றும் இசைந்து போகுதல் என்ற பண்பும் உள்ளது. இப்படிப்பட்ட ஆவியைக் கொண்ட ஒரு நபர், கர்த்தருக்கு இணங்க மனவிருப்பமாக இருக்கிறார். வைன் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> [*Praus* என்பதன் சொல்விளக்கங்கள்] முதலாவதாகவும் முதன்மையாகவும் *தேவனை* நோக்கியவையாக உள்ளன. இது, நம்முடன் தேவனுடைய செயல்பாடுகள் நல்லவை என்பதால் அதைக்குறித்து வழக்காடாமல் அல்லது அதை எதிர்த்து நிற்காமல் நாம் ஏற்றுக்கொள்ளும் ஆவியின் உணர்வாக உள்ளது; அது … தேவனுக்கு எதிராகப் போரிடுவதில்லை மற்றும் … போராடி அவருடன் மனநிறைவு கொண்டுள்ளது.[8]

கிரேக்க அகராதி ஒன்று, "[மத்தேயு] 5:5ல், சுதந்திரம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள சாந்தகுணமுள்ளவர்கள், தேவனுடைய மாபெரும் மற்றும் கிருபையுள்ள சித்தத்தை ஒப்புக்கொள்பவர்களாக உள்ளனர்" என்று கூறுகிறது.[9]

இந்தப் பாடத்தொடரில் நாம், பாக்கியங்களின் தர்க்கரீதியான வளர்நிலையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஒருவர் தம்மை ஒன்றுமில்லை என்று காண்கிறார் (முதல் பாக்கியம்) மற்றும் ஒவ்வொன்றிலும்

தேவனை எல்லாமுமாகக் காண்கிறார். அவர் தமது ஆவிக்குரிய நிலைபற்றி புலம்புகிறார் (இரண்டாவது பாக்கியம்), அது அவர் மனம்திரும்பி தேவனை நோக்கித் திரும்பக் காரணமாகிறது. பின்பு அவரது ஆவிக்குரிய எளிமையும் ஆழ்ந்த வருத்தமும், மென்மையான, சாந்தகுணமுள்ள, இணக்கமுள்ள ஆவியை விளைவிக்கிறது (மூன்றாவது பாக்கியம்), இது தேவனுடைய சித்தத்தைக் கேள்வியின்றி ஏற்றுக்கொள்கிறது.

தேவனிடத்தில் இணக்கமுள்ள ஆவியைக் கொண்டிருத்தல் என்பது மற்றவர்களுடன் நமது உறவுகளுக்கும் பயன் அளிக்கிறது. கிறிஸ்தவர்கள் "ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் *சாந்தகுணத்தைக்* (*praus* என்பதன் ஒரு வடிவம்) காண்பிக்கவும்" அவர்களுக்கு நினைப்பூட்டும்படி தீத்துவுக்குப் பவுல் கூறினார் (தீத்து 3:1, 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மென்மையான/சாந்தகுணமுள்ள கிறிஸ்தவர் தமது சொந்த வழியைக் கொண்டு இருத்தலை வலியுறுத்திக் கொண்டிருக்கமாட்டார். அவர், மற்றவர்களின் தேவைகளையும் உணர்வுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்.

அப்படியென்றால், மத்தேயு 5:5ன் மென்மைத்தன்மை அல்லது சாந்தகுணம் என்பதை நாம் எவ்வாறு விளக்கப்படுத்தலாம்? அது தேவனுடைய சித்தத்திற்கு இணைக்கமாக உள்ளதும் மற்றவர்களிடம் இரக்கத்துடன் நடந்து கொள்கிறதுமான தாழ்மையான ஆவியாக உள்ளது.

"மென்மைத்தன்மை/சாந்தகுணம்" என்பது என்னவாக இருப்பதில்லை. *Praus* என்றால் என்ன என்று கலந்துரையாடியுள்ள நிலையில் நாம், *praus* என்பது என்னவாக இருப்பதில்லை என்பதைப் பற்றிய பல முடிவுகளை அடையத் தயாராக இருக்கிறோம். முதலாவது, *praus* என்பது ஒரு *பலவீனமான* குணம் அல்ல என்பது இப்போது தெளிவாகி இருக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு, பெரும்பான்மையான மக்கள் KJV வேதாகமத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தபோது, அதில் உள்ள "meek" (சாந்தகுணம்) என்ற வார்த்தை குறித்துச் சிலர் வியப்படைந்தனர். அவர்களைப் பொறுத்த மட்டில், சாந்தமாக இருத்தல் என்பது, ஒரு நபர் கூச்சசுபாவம் உள்ளவராக இருந்து தமக்காக எழுந்து நிற்க அச்சப்படுபவராக, தம்மை மக்கள் தவறாக நடத்தவும் தம்மிடமிருந்து அனுகூலம் பெற்றுக்கொள்ளவும் அனுமதிப்பவராக இருத்தல் என்பதை அர்த்தப்படுத்திற்று. நவீன மொழிபெயர்ப்புகள் - NASB வேதாகமத்தில் உள்ள "gentle" என்பதைப் போன்று - மற்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றன, ஆனால் பெரும்பான்மையானவர்கள், மென்மையான குணம் கொண்ட ஒரு நபரை, பலமான நபருக்கு எதிர்நிலையில் இருப்பவராகக் கண்ணோக்குவர்.

கிரேக்கர்கள் *praus* என்ற வார்த்தையை, மிருகங்களைப் *பழக்கப்படுத்துவதற்குப்* பயன்படுத்தினர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மிருகங்களைப் பழக்கப்படுத்துதல் பற்றி நான் நினைக்கும்போது, காட்டுக்குதிரையை சவாரி செய்ய ஏற்றதாக்குதல் பற்றி நினைத்துப் பார்க்கிறேன். ஒரு குதிரை சவாரி செய்ய ஏற்றதாக்கப்படும்போது, அதனுடைய பலம் எதுவும் அழிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, அந்தக் குதிரையின் பலமானது *கட்டுப்படுத்தப்படுகிறது*. மத்தேயு 5:5ன் மென்மைத்தன்மை/சாந்தகுணம் என்பது "கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பலம்" என்பதாக நினைக்கப்பட முடியும்.[10] கர்த்தருடனான நமது உறவைப் பொறுத்தமட்டில், *praus* என்பது

"பயபக்தியினால் பழக்கப்படுத்தப்பட்ட பலம்" என்று விளக்கப்பட முடியும்.

இரண்டாவதாக, *praus* என்பது, தவறானதும் ஒழுக்கவீனதுமாக இருந்தாலும், எந்த விஷயத்தையும் மற்றும் எல்லா விஷயத்தையும், சகித்துக்கொள்ளுகிற மன எண்ணப்போக்காக இருப்பதில்லை. மக்களில் சிலர், எவரொருவருடனும் ஒருக்காலும் கருத்து வேறுபடாதிருப்பதால், அவர்கள் சாந்த குணம் அல்லது மென்மைத்தன்மை கொண்டவர்கள் என்று நினைக்கப்படுகின்றனர். எவ்வகையான சந்தோஷமற்ற தன்மையையும் தவிர்ப்பதற்கு அவர்கள் மாபெரும் தூரம் செல்கின்றனர். மத்தேயு 5:5ன் மென்மைத்தன்மை/சாந்தகுணம் என்பது சமாதானத்தை நாடுகிற தனிநபரை மறைமுகமாக உணர்த்துகிறது என்பது உண்மையே (காண்க வசனம் 9), ஆனால் இது அவர் பொல்லாங்கிற்குச் செல்லம் கொடுக்கிறார் என்று அர்த்தப்படுவதில்லை. பாவம் மற்றும் தவறு ஆகியவற்றிற்கு எதிர்த்து நிற்கத் தவறுதல் என்பது மென்மையான குணம்/சாந்த குணம் அல்ல. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் என்பவரின் கூற்றுப்படி, அது "நெகிழ்ந்ததன்மை" என்பதாக மாத்திரம் உள்ளது.[11]

மூன்றாவதாக, *praus* என்பது மனதின் "இயல்பான" நிலைப்பாடு அல்ல. தனிநபர்கள் சிலர், சாந்தகுணம் மற்றும் மென்மைத்தன்மையின் சில பண்புகளைக் காட்சிப்படுத்துகின்றனர் என்பது உண்மையே. இந்தத் தனிநபர்கள் சிலவேளைகளில் "மென்மையான - நடத்தைப் பாங்குடையவர்கள்" என்று குறிப்பிடப்படுகின்றனர். *Praus* என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்தியபோது அவர் இதைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. அவர்/அவள் அதற்கு "இயல்பாகவே மனப்பற்று" கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய அந்த குணத்தை இயேசு பரிந்துரைத்தார். மேம்படுத்திக் கொள்வதற்குத் தெய்வீக உதவி தேவைப்பட்ட ஒரு பண்பைப் பற்றி அவர் பேசினார். கலாத்தியர் 5:22, 23ல் பவுல், "ஆவியின் கனிகள்" பற்றிப் பேசினார். பவுலின் இந்தப் பட்டியலில் "மென்மையான குணம்" அல்லது "சாந்தகுணம்" என்பது உள்ளடங்கி இருக்கிறது (வசனம் 23). நாம் கர்த்தருக்கு நம்மை இணங்கச் செய்து நமது வாழ்வில் அவரது ஆவியானவர் கிரியை செய்ய அனுமதிக்கும்போதுதான் நாம் வேதாகமரீதியாக மென்மையான குணம்/சாந்த குணம் கொண்டவர்கள் ஆகிறோம்.

உதாரணங்கள்

இப்போது நீங்கள் *praus* என்பது ஒரு சிக்கலான வார்த்தையாக உள்ளதைக் காண முடியும். ஒருவேளை, இந்த வார்த்தையின் வேதாகமரீதியான உதாரணங்களை நாம் கண்டால், அது நமக்கு இந்த வார்த்தையைப் பற்றிப் புரிந்துகொள்வதில் உதவும். வேதவசனங்களில் பல உதாரணங்கள் காணப்பட முடியும்,[12] ஆனால் நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து ஒன்றும் புதிய ஏற்பாட்டில் இருந்து ஒன்றுமாக இரு உதாரனங்களுடன் நமது விளக்கங்களை மட்டுப்படுத்திக் கொள்வோம்.[13]

பழைய ஏற்பாட்டில் எண்ணாகமம் 12:3ல் நாம், "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் (very humble) என்று வாசிக்கிறோம். KJV வேதாகமத்தில் இது, "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் (*very meek*) என்றுள்ளது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில்,

இவ்வசனத்தில் மோசேயைப் பற்றி விவரிக்க *praus* என்ற வார்த்தையின் ஒரு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மோசேயைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளதைப் பற்றி நினைத்துப்பாருங்கள். அவர் உயிருள்ள மனிதர்களிலேயே மிகவும் சாந்தகுணமுள்ளவராக இருந்தார், ஆனால் அவர் பலவீனமானவராக இருந்தாரா? பலவீனமான ஒரு மனிதர், எகிப்தில் இருந்து முப்பது இலட்சம் மக்களை வழிநடத்தி இருக்க முடியுமா? மோசே மென்மையும் சாந்தகுணமும் கொண்டிருந்தார், ஆனால் அவரது உணர்வு பற்றி எரிந்த சந்தர்ப்பங்களை நான் நினைத்துப் பார்க்கிறேன்.[14] சாந்தகுணம் என்பது அவரது *இயல்பான நிலைப்பாடாக* இருந்தது என்பது பற்றி நான் சந்தேகப்படுகிறேன். இருந்தபோதிலும் அவர், நாம் கலந்துரையாடியுள்ள பண்புகளைக் கொண்டிருந்தார். தமது ஆவியைத் தேவனுடைய ஆவியுடன் இணங்க செய்திருந்தார், மற்றும் அது அவர் மற்றவர்களை நடத்திய விதத்தின்மீது செயல்விளைவை ஏற்படுத்தியிருந்தது. தேவனுக்குக் கீழ்ப்படியாமை என்பதை எதிர்த்து நின்றபோது, அவர் மென்மையாகவோ அல்லது சாந்தமாகவோ இருக்கவில்லை, ஆனால் இன்னமும் அவர் சாந்த குணம் என்ற பண்பைக் கொண்டிருந்தவராக விளக்கி உரைக்கப்பட்டார்.

மோசேயின் வாழ்வில் இருந்து இரு நிகழ்ச்சிகள் போதுமானவையாக இருக்கும். எண்ணாகமம் 11ல், பாளையத்தில் இரு மனிதர்கள் தீர்க்கதரிசனம் கூறிக்கொண்டிருப்பதை அறிக்கும்படி மோசேயிடம் ஒரு இளைஞன் ஓடிவந்தான் (வசனங்கள் 26, 27). மேட்டிமையுள்ள ஒரு நடத்துனர், "அவர்களுக்கு அனுமதி கொடுத்தது யார்?" என்று மறுப்புரை கூறியிருப்பார். யோசுவா, "என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும்" (வசனம் 28) என்று கூறினார். மோசே தாழ்மையுடன், "நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே" என்று பதில் அளித்தார் (வசனம் 29).

(மோசேயின் தாழ்மை/எளிமை பற்றி நாம் வாசிக்கும் அதிகாரமான) 12ம் அதிகாரத்தில், மிரியாம் மற்றும் ஆரோன் ஆகியோர் தங்கள் சகோதரர் (மோசேயை) பற்றிக் கடுமையாகப் பேசினர் (வசனங்கள் 1, 2). அவ்விருவரையும் கர்த்தர் கடிந்துகொண்டார் (வசனங்கள் 4-9) மற்றும் விமர்சனத்தின் தலைவியாக இருந்தாள்[15] என்று தெளிவாகத் தெரிந்த மிரியாமை அவர் தண்டித்தார் (வசனம் 10). நான் மோசேயாக இருந்திருந்தால், "அது அவளுக்கு தரப்பட வேண்டியதற்கு அதிகமானதல்ல" என்று கூறி இருப்பேன். அதற்குப் பதிலாக அவர் தமது சகோதரிக்காக ஜெபித்தார்: "என் தேவனே, அவளைக் குணமாக்கும்" (வசனம் 13). மோசே அவ்வளவு பெரிய நடத்துனராக இருந்ததில் வியப்பு எதுவும் இல்லை.

புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பும்போது நாம், எந்த இடத்திலும், எல்லாக் காலத்திலும் மென்மைத்தன்மை/எளிமைத்தன்மை ஆகியவற்றிற்கான மாபெரும் உதாரணத்தைக் கண்டறிகிறோம்: இயேசு கிறிஸ்து. முன்னதாக நாம், மேசியா "சாந்தகுணமுள்ளவர்" (*praus*) என்று குறிப்பிடுகிற மத்தேயு 21:4ஐ வாசித்தோம். 2 கொரிந்தியர் 10:1ல் பவுல், "கிறிஸ்துவின் சாந்தத்தையும் (*praus* என்பதில் இருந்து வருகிறது) தயவையும்" பற்றிக் குறிப்பிட்டார். இயேசு தாமே, "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று சொன்னார் (மத்தேயு 11:29).

இயேசு பலவீனமானவராக இருந்தாரா? அவருக்கு முன்னால் இராதபடிக்கு, தேவாலயத்தில் இருந்த காசுக்கடைக்காரர்கள் சிதறடிக்கப்பட்டதைக் பற்றி நினைத்துப் பாருங்கள் (யோவான் 2:13-17). இயேசு பொல்லாங்கைச் சகித்துக் கொண்டிருந்தாரா? அவர் பிரியமற்றிருந்தவைகளை எப்படியாகிலும் தவிர்ப்பதற்கு முயன்றாரா? மத்தேயு 23ல் பரிசேயர்களுக்கு அவர் கொடுத்த கடுமையான பழிப்புரையை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

இயேசு "சாந்தமானவர்" அல்லது "எளிமையானவர்" என்று விவரிக்கப்பட்டது ஏன்? அவர் தமது சித்தத்தைப் பிதாவின் சித்தத்திற்கு முற்றிலுமாக இணங்கச் செய்தார் (யோவான் 6:38; காண்க மத்தேயு 26:39). அவர், தமது தெய்வீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் எல்லாவற்றிலும் இருந்து தம்மையே வெறுமையாக்கி தேவனுக்கும் மனிதகுலத்திற்கும் ஊழியக்காரர் ஆனார் (பிலிப்பியர் 2:5-8). அவர் தம்மைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை, ஆனால் மற்றவர்களைக் குறித்து அக்கறை கொண்டார் (காண்க மத்தேயு 20:28). ஆகவே அவர் இழந்து போகப்பட்டவர்களைக் கையாள்வதில் மென்மையாக இருந்தார். அவர் "பாவிகளுக்கு சிநேகிதன்" என்று அறியப்பட்டிருந்தார்! (மத்தேயு 11:19).

யோவான் 8:1-11ல், இயேசுவின் எளிமைத்தன்மை மற்றும் மென்மைத்தன்மைக்கு, தனிச்சிறப்பான ஒரு உதாரணம் காணப்படுகிறது.[16] வேதபாரகரும் பரிசேயர்களும், இயேசுவை அகப்படுத்தும்படிக்கு, விபசாரம் செய்த ஒரு பெண்ணை அவரிடத்தில் கொண்டு வந்தனர்.[17] அவர்களின் வலையில் இருந்து தப்பிய பின்பு, அந்தப் பெண்ணைக் குற்றம் சாட்டியவர்கள் கலைந்து சென்றனர், அதன்பின்பு அவர் அவளிடத்தில், "ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா?" என்று கேட்டார். அவள் "இல்லை, ஆண்டவரே" என்று கூறினாள். பின்பு இயேசு மென்மையாக, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்று கூறினார் (வசனங்கள் 10, 11). இயேசு பலம் வாய்ந்தவராக இருந்தார், ஆனால் அவரது பலம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அது, தேவன்மீதான பயபக்தி மற்றும் மக்கள் மீதான அன்பு ஆகியவற்றினால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. அதுவே மத்தேயு 5:5ல் கூறப்படும் சாந்தகுணம்/எளிமைத்துவம் பற்றிய யாவுமாக உள்ளது.

"... அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்"

இந்தப் பண்பைக் கொண்டுள்ளவர்கள் ''பாக்கியவான்கள்'' என்று இயேசு கூறினார். அவர்கள் கூடுதல் மகிழ்ச்சியைக் கொண்டுள்ளனர். மென்மைத்தன்மை/எளிமைத்தன்மை என்பது மகிழ்ச்சிக்கு என்ன செய்வதாக உள்ளது? முந்திய பாக்கியங்களைப் பொறுத்தமட்டில் உண்மையாக இருந்தது போன்றே, உண்மையில் மகிழ்ச்சியாக இருத்தலுக்கு, எண்ணப்போக்கானது தன்னிலேயே சாதகமானதாக உள்ளது - ஏனென்றால் மென்மையான/எளிமையான நபர், தமது சொந்தத் தேவைகளைக் காட்டிலும் மற்றவர்களின் தேவைகளைப் பற்றி அதிகமாக நினைக்கிறார். ஆகவே, உலகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களைப் போலின்றி, அவர் தமது தேவைகளைச் சந்திப்பதற்கு மற்றவர்களின் தோல்வியின் மீது மனதிருப்தியின்மையால் நிறைந்திருப்பதில்லை. இருப்பினும் நமது வேதவசனப் பகுதியில் வாக்குத்தத்தத்தின் விளைவாக உண்டாகும் மகிழ்ச்சியின் மீதே

வலியுறுத்தம் உள்ளது.

மத்தேயு 5:5ன் வாக்குத்தத்தம், கவனத்தை ஈர்க்கக்கூடியதாக உள்ளது: ''சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ... அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.'' இது அர்த்தப்படுத்துவது என்ன? மென்மையானவர்கள்/எளிமையானவர்கள் எந்தக் கருத்தில் "பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்"?

இந்த வாக்குத்தத்தம் எதை அர்த்தப்படுத்துவதில்லை

இந்த வாக்குத்தத்தம், மென்மையாகவும் எளிமையாகவும் உள்ளவர்கள் சட்டப்பூர்வமான வகையில் இந்த பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று அர்த்தப்படுத்து*வதில்லை.* மென்மைத்தன்மை/எளிமைத்தன்மை பற்றி நாம் கலந்துரையாடிய இரு உதாரணங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: மோசே மற்றும் இயேசு. மெக்கார்டு என்பவர் பின்பருமாறு எழுதினார்:

> இந்த பூமியையே இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று யாரேனும் ஒருவர் நினைக்க வேண்டி இருந்தது என்றால், பூமியில் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் எளியகுணம் கொண்டவராக இருந்த ஒரு மனிதர் இந்த வாக்குத்தத்தத்தைப் பெறத் தவறி விட்டார். மோசே இல்லம் எதுவுமின்றி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டைச் சுதந்தரித்துக் கொள்ளும் நம்பிக்கையுடன் நாற்பது ஆண்டுகள் அளவாக வனாந்தரத்தில் சுற்றித்திரிந்தார், ஆனால் அவர் அதைக் கண்ணால் பார்க்க மாத்திரமே முடிந்தது [உபாகமம் 34:1-5]. இயேசு ஒரு எளிமையான மனிதராக இருந்தார் என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது, இருப்பினும் அவர் பூமியை நேரடியாக சுதந்தரித்துக் கொள்வதிலிருந்து தூரத்தில் இருந்தார். (இயேசு) "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று கூறினார் (காண்க லூக்கா 9:58).[18]

இருந்தபோதிலும் எனது கோப்புக்களில், கிறிஸ்தவர்கள் ஒருநாளில் இந்த பௌதீகரீதியான பூமிக்குரிய சட்டப்பூர்வமான உரிமைப்பெயரைச் சொந்தம்கொள்வார்கள் என்பதில் மக்கள் மனநிறைவு அடையும் கடிதங்களையும் கட்டுரைகளையும் கொண்டுள்ளேன். மத்தேயு 5:5 அவர்களுக்குப் பிரியமான வசனப்பகுதியாக உள்ளது: ''சாந்தகுணமுள்ளவர்கள் (அல்லது எளிமையானவர்கள்) பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.'' எடுத்துக்காட்டாக, தங்கள் முடிவுக்காலக் காட்சியின் பகுதியாக இதை ஏற்படுத்துகிற ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்கள் உள்ளனர். இயேசு இந்த பூமிக்குத் திரும்பி வந்து ஆயிரம் ஆண்டுகள் பௌதீகரீதியான வகையில் ஆளுகை செய்வார் என்று அவர்கள் கூறுகின்றனர். அந்த காலகட்டத்தில் தேவனுடைய பிள்ளைகள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதைத் தவிர, 144,000 பேர் மாத்திரமே பரலோகம் செல்ல, தேவனுடைய மக்களில் எஞ்சி இருப்பவர்கள் இந்த பூமியில் என்றென்றைக்கும் வாழ்வார்கள் என்று போதிப்பவர்கள் உள்ளனர். இந்த நம்பிக்கையைக் கொண்ட இருவர் ஒருநாள் என் கதவண்டைக்கு வந்தனர். அவர்கள், பாவம் மற்றும்

துன்மார்க்கம் ஆகியவற்றிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பூமியைப் பற்றி, மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டிருக்கும் பூமியைப் பற்றி விவரித்தனர். "அது மன எழுச்சியுள்ளதாக இராதா?" என்று அவர்கள் கேட்டனர். அதற்கு நான், "உண்மையில் அது ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கும், நான் புதிய வானங்களையும் புதிய பூமியையும் முன்னெதிர் நோக்கிக் கொண்டிருந்துள்ளேன் (2 பேதுரு 3:13; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:1), ஆனால் நீங்கள் எனக்கு, ஒட்டுப்போடப்பட்ட, மறுவடிவாக்கப்பட்ட பூமியை அல்லவா வாக்குறுதி அளிக்கிறீர்கள். புதிய உடைக்கும் ஒட்டுப்போடப்பட்ட உடைக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரு சிறுகுழந்தைகூட அறியுமே" என்று பதில் அளித்தேன்.

மென்மையும் எளிமையும் உள்ளவர்கள் பூமியை இப்போது சட்டரீதியாக உரிமை கொள்வார்கள் என்று வேதாகமம் போதிப்பதில்லை; அல்லது அந்தக் கருத்தில் அவர்கள் அதை எதிர்காலத்தில் உரிமைகொள்வார்கள் என்றும் அது கூறுவதில்லை. பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." என்று எழுதினார் (2 பேதுரு 3:10; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இந்த வாக்குத்தத்தம் எதை அர்த்தப்படுத்துகிறது

அப்படியென்றால் இந்த வாக்குத்தத்தம் எதை அர்த்தப்படுத்துகிறது? எளிமையும் மென்மையுமாக உள்ளவர்கள் எந்தக் கருத்தில் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்? ஏற்கனவே படித்துள்ள வாக்குத்தத்தத்தின் விஷயம் போன்றே, இந்த வாக்குத்தத்தமும் பூமிக்குரிய இயல்பையல்ல ஆனால் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டுள்ளது. மேசியா பூமியை வெற்றிகொண்டு தங்களுக்கு அதைக் கொடுக்கும் ஒரு இராணுவத் தலைவராக இருப்பார் என்று இயேசுவின் சீஷர்கள் நம்பியிருந்தனர். இயேசு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கூறியபோது (யோவான் 18:36) அந்த நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்தார்.

இருப்பினும், இந்த வாக்குத்தத்தம் ஆவிக்குரிய இயல்புடையது என்று நாம் ஒப்புக்கொண்டாலும், நமது வேதவசனப் பகுதியில் உள்ள "பூமி" என்பது இந்த வாழ்க்கையைக் குறித்ததா அல்லது இனிவரும் வாழ்க்கையைக் குறித்ததா என்ற ஐயத்தை இன்னமும் கொண்டுள்ளது. சிலர் இந்த வாக்குத்தத்தம் இந்த வாழ்விற்கு மாத்திரம் குறிப்புக் கொண்டுள்ளது என்று வலியுறுத்துகின்றனர். மற்றவர்கள் இந்த வாக்குத்தத்தம் இந்த வாழ்வைக் குறிப்பதாக இருக்க முடியாது, எனவே இது இனிவரும் வாழ்வைக் குறிப்பதாக இருக்க வேண்டும் என்று மிகவும் பலமாக வலியுறுத்துகின்றனர். இந்த வாக்குத்தத்தம் இருமடங்கு நிறைவேற்றம் கொண்டிருக்கும் என்று நான் மீண்டும் கருத்துக் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்: இந்த வாழ்வில் ஒருபகுதி நிறைவேற்றமும் இனிவரும் வாழ்வில் முழுமையான நிறைவேற்றமும் கொண்டதாக இருக்கும்.

இந்த வாழ்வில். பழைய ஏற்பாட்டில் தாவீது "சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்" (சங்கீதம் 37:11) என்று கூறியபோது, மத்தேயு 5:5ல் இயேசு பயன்படுத்திய இதே மொழிநடையை அவர் அடிப்படியாகப் பயன்படுத்தினார். KJV வேதாகமத்தில், அவ்வசனத்தின் முதல் பகுதி, மூன்றாவது பாக்கியத்துடன் கொண்டுள்ள ஒற்றுமை இன்னும் அதிகம் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது: "சாந்தகுணமுள்ளவர்கள்

பூமியைச் சுதந்தரித்து.” சங்கீதம் 37ல், கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து (வசனம் 3), துன்மார்க்கரை அவர் தண்டிப்பதற்காகப் பொறுமையாகக் காத்திருப்பவர்கள் (வசனங்கள் 7-9) தாழ்மை/எளிமை உடையவர்களாக உள்ளனர். இருப்பினும் (“தேசம்”) [NASB] அல்லது “பூமி” [KJV] என்ற வார்த்தையே நமது மாபெரும் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. சங்கீதத்தில் தேசம்/பூமி என்பது கானானின் தேசம் என்று அறியப்பட்ட புவியியல் பகுதியைக் குறிக்கிறது. தாழ்மையும் எளிமையுமானவர்கள் மாத்திரமே அந்த தேசத்தின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிப்பார்கள் என்று தாவீது வலியுறுத்தினார். அது போலவே, மென்மையும் எளிமையுமானவர்கள் மாத்திரமே இந்த நிகழ்கால பூமியின் ஆசீர்வாதங்களை அதன் முழு விரிவாக்கத்திலும் மகிழ்வுடன் அனுபவிக்கும் திறன் கொண்டுள்ளனர் என்று நான் நம்புகிறேன்.

மென்மையும் எளிமையுமான கிறிஸ்தவர், “இந்த பூமி தரக்கூடிய மிகவும் வளமையான, மிகவும் முழுநிறைவான மற்றும் மிகவும் திருப்திகரமான வாழ்வைச் சுதந்தரிக்கும் அர்த்தத்தில்” இந்த பூமியைச் சுதந்தரிப்பவர்களாக இருக்கின்றனர்.[19] பவுல் தம்மைப் பற்றி, ‘‘ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும்’’ (2 கொரிந்தியர் 6:10) என்று குறிப்பிட்டபோது, அவர் இவ்வகையான வாழ்வைப் பற்றியே பேசினார். கொரிந்தியர்களுக்கு அவர் பின்வரும் உறுதிப்பாட்டைக் கொடுத்தார்:

> ... *எல்லாம் உங்களுடையதே;* பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், *உலகமாகிலும்* ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், *எல்லாம் உங்களுடையது;* நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் (1 கொரிந்தியர் 3:21-23; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

“இந்த உலகத்தின் மதிப்புடைய பொருட்கள் யாவும் சாந்தகுணமுடையவர்களின் உடைமையாக உள்ளன. அவர்கள் சட்டப்பூர்வமாகிலும், ஒரு சதுர அங்குல நிலத்தைக் கூடச் சொந்தமாகக் கொண்டிராது இருக்கலாம், ஆனால் பூமி முழுவதும் யெகோவாவினுடையதாகவும் அதன் வனப்பும் மாட்சியும் மகிழ்வுடன் அனுபவிப்பதற்கென்று தங்களுடையதாகவும் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து அறிந்துள்ளனர்.”[20]

பாக்கியங்கள் பற்றி நான் முதன்முறையாகப் பிரசங்கித்ததற்குச் சற்றுமுன்னால், ஆக்லஹாமாவின் கொமான்ச்சி என்ற இடத்தில் உள்ள சபையின் உறுப்பினர் ஒருவருடைய சவ அடக்க ஆராதனையில் கலந்துகொண்டேன்: அவரது பெயர் ஜுவெல் தாமஸ் என்பதாகும். அவர் ஒரு தாழ்மையான மனிதராக, ஒரு விவசாயியாக இருந்தார். அவரது சவ அடக்கமானது பரந்த இடம் கொண்டு உயர்நிலைப்பள்ளிக் கலையரங்கத்தில் நடைபெற்றது. எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தன, மக்கள் சுவர்களின் அருகாமையில் நின்றுகொண்டும் இருந்தனர். அந்த ஆராதனையில் வாசிக்கப்பட்ட வசனப்பகுதிகளில் ஒன்றாக மத்தேயு 5:5ம் இருந்தது: “சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.” அப்போது முதன் முறையாக இவ்வசனப்பகுதி எனக்கு விசேஷித்த அர்த்தம் உடையதாகிற்று. சகோதரர் தாமஸ் ஒரு பணக்கார மனிதராக இருக்கவில்லை; ஆனால் அவர், முழுசமுதாயத்தின் மதிப்பு உட்பட, இந்த வாழ்வின் உண்மையான ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்திருந்தார். ஜார்ஜ்

மேக்டொனால்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> *உலகத்தில் மிகுந்த உடைமையைக் கொண்டிருப்பவர் யார் - ஆயிரம் வீடுகளை உடையவரா அல்லது தமது சொந்தம் என்று கூற ஒரு வீடுகூட இல்லாமல், அவர் கதவைத் தட்டினால் உடனடியாக மகிழ்வை எழுப்பும் வகையில் பத்து வீடுகளைக் கொண்டுள்ளவரா? மிகவும் செல்வந்தர் யார் - திரளான தமது பணத்தைச் செலவழித்து, புகலிடம் இன்றி இருப்பவரா; அல்லது தமது தேவைக்காக ஒரு நூறுபேர் தங்கள் வசதிகளைத் தியாகம் செய்யும் பாக்கியத்தைக் கொண்டிருப்பவரா?*[21]

மாபெரும் செல்வங்களைக் கொண்டிருந்தும் பரிதபிக்கப்படத் தக்கநிலையில் உள்ள தனிநபர்களையும், கொஞ்சமே பொருள் கொண்டிருந்து சந்தோஷமாக இருப்பவர்களையும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் அறிந்திருக்கிறோம். உடைமைகள் ஏராளமாக இருத்தல் என்பதல்ல, ஆனால் வாழ்வைக்குறித்த நமது எண்ணப்போக்குதான் நம்மைச் சந்தோஷமாக்குகிறது. டாண் ஹம்ப்ரே என்பவர், "பூமிக்குரிய விஷயங்களை இலேசாகப் பற்றிக்கொண்டு, அவற்றை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் காட்டிலும் தாழ்ந்தவையாக மதிப்பிடுபவர்களுக்கே ஆசீர்வாதங்களின் உண்மையான மகிழ்வு அனுபவம் உள்ளது" என்று குறிப்பிட்டார். சாந்தகுணமுள்ள ஒரு நபர், தமது உடைமைகளினால் பாரப்படுவதில்லை மற்றும் அந்த உடைமைகளை இழந்து போகுதலின் பயத்தினால் பட்சிக்கப்படுவதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.[22]

இனிவரும் வாழ்வில். *இந்த பூமி அளிக்கக்கூடிய மிகச்சிறந்தவற்றை, மென்மையும் எளிமையும் உள்ளவர்கள் சுதந்தரித்துக் கொள்ளுதலைப் பற்றி இன்னும் அதிகமாகக் கூறமுடியும், ஆனால் நாம் இனிவரும் வாழ்வை நோக்கி நமது கவனத்தைத் திருப்புவோமாக. மற்ற எல்லா பாக்கியங்களிலும் உள்ளது போன்றே, இந்த வாக்குத்தத்தத்தின் முற்றான நிறைவேற்றம் பரலோகத்தில் இருக்கும். விசுவாச வீரர்கள் பற்றி, எபிரெயர் 11ல் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:*

> *இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள் ... அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே (வசனங்கள் 13-16).*

இரு அதிகாரங்களுக்குப் பின்னர் இந்த எழுத்தாளர், "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே (அதாவது பரலோகத்தில் உள்ளதையே) நாடித் தேடுகிறோம்" என்று கூறினார் (13:14; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:2, 10).

ரோமர் 8ல் பவுல் நமது ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பற்றி எழுதினார். நாம், "... தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" என்று அவர் கூறினார் (வசனம் 17). இந்த வாழ்வில் நமது

ஆசீர்வாதங்கள் எப்போதுமே உபத்திரவத்துடன் கலந்ததாக இருக்கும் என்பதை அவர் உணர்ந்து இருந்தார், எனவே அவர் இனிவரும் வாழ்வை முன்னெதிர் நோக்கினார். அவர், "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" என்று கூறினார் (வசனம் 18). அவர் தமது வாழ்வின் முடிவை நெருங்குகையில், "கர்த்தர் எல்லாத் தீமையினின்று என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று எழுதினார் (2 தீமோத்தேயு 4:18).

"பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுதல்" என்ற வாக்குத்தத்தத்தின் நிறைவான நிறைவேற்றம் "*புதிய* வானம் மற்றும் *புதிய* பூமியில்" - இது பரலோகத்தில் தேவனுடைய இருப்பிடமாகவே உள்ளது - வரும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க 2 பேதுரு 3:13). நாம் எவ்வாறாக இருக்க வேண்டும் என்று பிரயாசப்படுவதற்கு இதைக் காட்டிலும் பெரிய ஊக்குவிப்பு இருக்க முடியாது.

முடிவுரை

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (மத்தேயு 5:5). நீங்கள் பூமியை "சுதந்தரித்துக்கொள்ள" - இந்த பூமி அளிப்பவற்றில் மிகச்சிறந்தவற்றை மகிழ்வுடன் அனுபவிக்க *மற்றும்* "புதிய பூமியை" முன்னெதிர்நோக்க - விரும்புகிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் மென்மையும் எளிமையுமாக (சாந்தகுணம் உள்ளவர்களாக) இருக்க வேண்டும்.

மென்மையும் எளிமையுமாக இருத்தல் என்பது மென்மையாகப் பேசுதல் மற்றும் பிறரிடத்தில் இரக்கமாயிருத்தல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் வையுங்கள். இந்த பாக்கியமானது தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகிறது என்பதால், இது பாக்கியங்களிலேயே மிகவும் கடினமான பாக்கியம் என்று சிலர் கருதுகின்றனர். மேட்டிமையுள்ள நபர், தேவனிடத்தில் "எனக்கு நீர் தேவையில்லை, உமது வழியும் தேவையில்லை" என்று கூறுகிறார். மென்மையான/எளிமையான நபர், "தேவனே, நான் எனது பலவீனங்களை உணர்ந்து அறிகிறேன் மற்றும் உமக்கு அளிப்பதற்கு என்னிடத்தில் மதிப்புள்ள எதுவும் இல்லை என்பதையும் உணர்ந்திருக்கிறேன்; ஆனால் நீர் என்மீது அன்புகூர்ந்து, எனக்காக உமது குமாரனை மரிக்கக் கொடுத்து இரட்சிப்பின் வழியைத் தெளிவாக்கினீர், அதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இப்போது நான் உமது சித்தத்திற்கு என்னைத் தாழ்மையுடன் ஒப்புக்கொடுக்கிறேன்." என்று கூறுகிறார். நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இராவிட்டால், அல்லது நீங்கள் விசுவாசத்தில் இருந்து விலகிப்போயிருந்தால், இன்றே கர்த்தரிடம் வருவதன் மூலமாக உங்கள் தாழ்மையைக் காண்பியுங்கள்.

குறிப்புகள்

[1]NASB வேதாகமம், "gentle/meek" என்பதற்கான கிரேக்க வார்த்தையை "gentle"

என்றே வழக்கமாக மொழிபெயர்க்கிறது, ஆனால் இந்தப் பதிப்பு அவ்வப்போது இந்த வார்த்தையை "meekness" *என்று தரவழைக்கிறது (காண்க 2 கொரிந்தியர் 10:1).* [2]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 534. [3]Adapted from Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 930. [4]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 23. [5]"Gentle men" *என்பதைப் பற்றி நான் நினைக்கையில், எனது மனமானது மென்மையான கிறிஸ்தவரான ஹியூகோ மெக்கார்டு பற்றி நினைவுக்குச் செல்கிறது.* [6]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 401. [7]McCord, 23-24. [8]Vine, 401 (emphasis mine). [9]Bromiley, 930. [10]*வில்லியம் பார்க்லே என்பவரின் The Gospel of Matthew,* vol. 1, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1958), 91-92. *என்ற புத்தகத்தில் இதைப் போன்றதொரு விளக்கம் தரப்பட்டுள்ளது.*

[11]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 67. [12]*எரேமியா, தாவீது, பேதுரு, ஸ்தேவான் மற்றும் பவுல் ஆகியோர், எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ள பிற உதாரணங்களில் உள்ளடங்குகின்றனர்.* [13]*சாந்தகுணம் மீதான பல பிரசங்கங்கள், மோசே, கிறிஸ்து மற்றும் பிறர் என்பது போன்ற வேதாகமரீதியான உதாரணங்கள் மீது தங்களின் பெரும்பான்மையான நேரத்தைக் செலவிடுகின்றன. நீங்கள் இந்தப் பகுதியை விரித்துரைக்க விரும்பலாம்.* [14]*மோசே, எகிப்தில் கண்காணியைக் கொலை செய்தார், கற்பலகையின் முதல் ஜோடியை உடைத்தார், கன்மலையிடம் பேசுவதற்குப் பதிலாக அதை அடித்தார்.* [15]*எண்ணாகமம் 12:1ல் மிரியாம் முதலில் குறிப்பிடப்பட்டதை கவனியுங்கள். ஆரோன் பொதுவாக, ஒரு பின்பற்றாளராகவே இருந்தார்.* [16]*இவ்வசனப் பகுதி, மிகப்பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் காணப்படுவதில்லை. ஆகவே வேதாகம மொழிபெயர்ப்பாளர்களால் இது அடைப்புக் குறிகளுக்குள் இடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டபடியே நடந்திருக்கலாம் என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.* [17]*இந்த வரலாற்றை முழுமையாக கூறுவதற்கு நேரம் எடுத்துக்கொள்ள நீங்கள் விரும்பலாம்.* [18]McCord, 26. [19]Joe Schubert, "The Meek," *Resources* 2 (1981): 13. [20]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 42.

[21]Quoted in Tolle, 43. [22]Adapted from Don Humphrey, *The Beatitudes* (Burlington, Mass.: Eternity Press, 1969), 31.

4

இருதய–பசி

(மத்தேயு 5:6)

சிக்மன்ட் பிராய்டு[1] என்ற மனோதத்துவ நிபுணரின் கூற்றுப்படி, சந்தோஷத்திற்கான விருப்பமே மனிதர்களில் மேலாதிக்கம் செலுத்தும் விருப்பமாக உள்ளது - ஆனால் பிராய்டு தவறாகக் கூறியவராக இருந்தார். மக்கள் இன்னும் அதிக அடிப்படையான மற்றும் அதிக வலிமை நிறைந்த தேவைகளைக் கொண்டுள்ளனர். இவற்றில் உணவிற்கான தேவையும் அடங்கி உள்ளது.

பசியின் தூண்டுதல் எவ்வளவு பலமானது என்பதற்கு வேதாகமம் பல உதாரணங்களைக் கொண்டுள்ளது. ஏசா "ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போடும்" அளவுக்கு மிகவும் பசியுள்ளவர் ஆனார் (எபிரெயர் 12:16; காண்க ஆதியாகமம் 25:27-34). வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள், எகிப்தில் தாங்கள் உட்கொண்டிருந்த "... மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும்" நினைத்துக் கதறி அழுததால் கர்த்தரைக் கோபப்படுத்தினார்கள் (எண்ணாகமம் 11:5; காண்க வசனம் 10).[2] ஆகூர் தாம் வறுமையடைந்தால், திருடி தமது தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கு, தமக்கு கர்த்தர் வறுமையைக் கொடுத்து விடாதிருக்கும்படி ஜெபித்தார் (நீதிமொழிகள் 30:8, 9). பசியாக இருந்தவர் உணவிற்காகத் திருடுதல் என்பது வறுமையின் ஒரு சோதனையாக இருக்கும்.[3] பசியையும் தாகத்தையும் இயேசு புரிந்து கொண்டிருந்தார். வனாந்தரத்தில், "அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று" (மத்தேயு 4:2). பிற்பாடு சிலுவையின் மீது அவர், "தாகமாயிருக்கிறேன்" என்று கூறினார் (யோவான் 19:28).

நாம், மத்தேயு 5ன் பாக்கியங்களைப் படித்துக் கொண்டிருக்கிறோம். இவற்றில் முதல் மூன்று பாக்கியங்களை நாம் கண்ணோக்கியிருக்கிறோம்:

> *"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.*
>
> *"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.*
>
> *"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (வசனங்கள் 3-5).*

பசி மற்றும் தாகம் ஆகியவற்றைப் பற்றிப் பேசும் நான்காவது பாக்கியத்தை ஆராய்ந்து பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்: "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" (வசனம் 6). இந்தப் பாடம், "இருதய - பசி"க்கான தேவையை வலியுறுத்தும்.

“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ...”

“நீதி” என்பதன் அர்த்தம்

“பசி மற்றும் தாகம்” என்ற வார்த்தைகளைப் பற்றி நாம் கலந்துரையாடுவதற்கு முன்னர், “நீதி” என்றால் என்ன என்பதை நாம் நிலைநாட்ட வேண்டியுள்ளது, ஏனெனில் அதற்காகவே நாம் ஏங்குகிறவர்களாய் இருக்கிறோம். “நீதி” என்பது *dikaiosune* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. கிரேக்கம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும், “சரி” என்பதே இவ்வார்த்தையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது.[4] *Dikaiosune* என்பது பல்வகை அர்த்தங்களைக் கொண்டுள்ளது. தேவனுக்கு இதைப் பயன்படுத்தும்போது, இவ்வார்த்தை “சரியானவராக - இருத்தல்” என்று அர்த்தப்படுகிறது. இது *முற்றான சரியான தன்மையாக* உள்ளது. தேவன் ஒருவரே எல்லா அம்சங்களிலும் சரியானவராக இருக்கிறார். *Dikaiosune* என்ற வார்த்தையை மக்களுக்குப் பயன்படுத்தும் போது, இது இரண்டு அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும். முதலாவது, “சரியாக - வாழுதல்” (காண்க 1 யோவான் 2:29; 3:7, 10). நம்மில் எவரும் மிகச்சரியாக வாழ இயலாது, எனவே இது *சார்பளவிலான நீதியாக* உள்ளது. *Dikaiosune* என்ற வார்த்தையை மக்களுக்குப் பயன்படுத்தும்போது, “சரியாக - நிலைநிற்குதல்” - கர்த்தருடன் சரியாக நிலைநிற்குதல் - என்பது இதன் இரண்டாவது அர்த்தமாக உள்ளது. இது *பொறுப்புச் சுமத்திய நீதியாக* உள்ளது. நாம் உண்மையில் நீதிமான்களாக இருப்பதில்லை (காண்க ரோமர் 3:10), ஆனால் நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு தேவனுடைய சித்தத்தைச் செய்கிறபோது, தேவன் நம்மை நீதிமான்களாக எண்ணுகிறார் (காண்க ரோமர் 4:3, 5).[5] நாம் - தனிப்பட்ட தகுதியின் அடிப்படையில் அல்ல, ஆனால் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே - தேவனுடன் சரியாக - நிலைநிற்குதலைக் கொண்டிருக்க முடியும்.

நமது வசனப்பகுதியில் *dikaiosune* என்பதன் எந்த விளக்கத்தை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது பற்றி எழுத்தாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். இம்மூன்று கருத்துக்களில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டிய நிலையில் நான் இருந்தால், “சரியாக நிலைநிற்குதல்” என்பதையே நான் தேர்ந்துகொள்வேன். நம்மை உண்டாக்கினவருடன் சரியாக - நிலைநிற்குதலுக்கு நாம் ஆழமான ஏக்கம் கொண்டிருக்க வேண்டும், இருப்பினும் நாம் ஒரு தெரிவை ஏற்படுத்துவது தேவையா என்று நான் அறிவதில்லை.[6] சரியாக - இருத்தல் மற்றும் சரியாக வாழுதல் ஆகியவற்றிற்காகப் பிரயாசப்படும் கிறிஸ்தவர் தேவனுடன் நல்ல நிலைநிற்குதலில் இருப்பார்.

நாம் தேவனுக்காகவே - நம்மீது அன்புகூர்ந்து நம்மைப் பராமரிக்கிற அவருடன் ஒரு வலிவார்ந்த உறவைக் கொண்டிருக்கும் விருப்பம் என்ற - பசிதாகம் உள்ளவர்களாக இருத்தல் அவசியமாகும். தாவீது, “மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது” என்று எழுதினார் (சங்கீதம் 42:1, 2; காண்க 63:1; 143:6). தேவனுடைய சித்தத்திற்கான நமது இருதய - பசியானது “ஜீவ அப்பமான”

(காண்க யோவான் 6:48-51) இயேசுவிற்கான பசியையும் உள்ளடக்கும். நாம் தேவனுக்காகவும் இயேசுவுக்காகவும் ஏங்கினால், அவர்களுடன் சரியாக - நிலைநிற்குதலுக்காகவும் நாம் ஏங்க மாட்டோமா? நாம் இந்தப் பசிகளைக் கொண்டிருந்தால், நாம் சரியானவற்றைச் செய்ய, நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று தேவனும் இயேசுவும் விரும்புகிறார்களோ அவ்வாறாக வாழ, மிகுந்த விருப்பம் கொண்டிருக்க மாட்டோமா?

வில்லியம் பார்க்ளே என்பவர், நான்காவது பாக்கியத்தின் கிரேக்க வசனத்தின்மீது பின்வரும் உற்றுநோக்குதலை ஏற்படுத்தினார்:

> பசி மற்றும் தாகம் ஆகியவற்றிற்கான வினைச் சொற்களுக்குப் பின்பு ("அப்பத்தின்" அல்லது "தண்ணீரின்" என்பது ஒரு பெரிய ரொட்டித்துண்டின் பகுதி அல்லது தொட்டியிலிருந்து ஒரு முறை குடித்தல் என்பது போன்று) ஆறாம் வேற்றுமைத் தொகை வரவேண்டும் என்பது கிரேக்க இலக்கணத்தின் விதியாக உள்ளது ... ஆனால் இந்த பாக்கியத்தில் மிகவும் வழக்கத்திற்கு மாறாக, *நீதி* என்பது சாதாரண ஆறாம் வேற்றுமைத் தொகையில் இன்றி, நேரடி இரண்டாம் வேற்றுமைத் தொகையில் உள்ளது. இப்போது, கிரேக்க மொழியில் பசி மற்றும் தாகம் என்பவற்றின் வினைச்சொற்கள், ஆறாம் வேற்றுமைத் தொகைக்குப்பதிலாக இரண்டாம் வேற்றுமைத் தொகையில் இருத்தல் என்பது பசி மற்றும் தாகம் என்பது *முழு விஷயத்திற்குமானது* என்று அர்த்தப்படுகிறது ... ஆகவே இதன் சரியான மொழிபெயர்ப்பு பின்வருமாறு:
>
>> முழுமையான நீதியின்மேல், முற்றான நீதியின் மேல், நிறைவான நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.[7]

கிரேக்க மொழிபற்றிய எதையேனும் அறிந்து கொள்ளுதலோ அல்லது "ஆறாம் வேற்றுமை" மற்றும் "இரண்டாம் வேற்றுமை" ஆகியவற்றின் விஷயம் என்ன என்று புரிந்து கொள்ளுதலோ நமக்கு ஒரு முக்கியமான விஷயமல்ல. பின்வரும் சிந்தனையை உங்கள் மனதில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: இயேசு "முழுமையான விஷயத்தின்மேல்" - *முழுமையான* நீதியின்மேல் - பசி தாகமாக இருத்தல் பற்றிப் பேசினார்.

நீதிக்கான விருப்பத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைக்கு இன்னும் ஒரு கருத்து அவசியமானதாக உள்ளது. கலந்துரையாடப்பட்ட இம்மூன்று விளக்கங்களும் தேவனுடைய வசனத்துடன் நெருங்கிய வகையில் தொடர்பு கொண்டுள்ளன. நமது நீதியுள்ள தேவன் தமது வசனத்தில் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார்.[8] நாம் அவரது வசனத்தைப் படிப்பதன் மூலமாக, நம்முடைய தேவனுடன் நாம் சரியாக - நிலைநிற்க முடியும் என்பதைக் கண்டுபிடிக்கிறோம். வசனத்திலிருந்து நாம் சரியான வழியில் வாழ்வதற்குக் கற்றுக்கொள்கிறோம். ஆகவே தேவனிடத்தில் சங்கீதக்காரர், "உமது *கற்பனைகளெல்லாம்* நீதியுள்ளவைகள்; ஆதலால், என் நாவு உம்முடைய *வசனத்தை* விவரித்துச்சொல்லும்" (சங்கீதம் 119:172; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறியது பற்றி நாம் வியப்படையக் கூடாது. மத்தேயு 5:6 பற்றிய நமது படிப்பில் நாம் "நீதி" என்பதற்கு எந்த விளக்கத்தைப்

பயன்படுத்தினாலும், நாம் "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக" இருந்தால் இது வேதவசனங்களைப் பற்றிய ஆழமான அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றின் மீதான பசிதாகத்தையும் உள்ளடக்கும்.[9]

தேவனுடைய வசனம் ஆத்துமாவிற்கு உணவு அளிக்கிறது என்று பல வசனப்பகுதிகள் போதிக்கின்றன. இயேசு, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று கூறினார் (மத்தேயு 4:4). பவுல் கொரிந்தியருக்குப் போதிந்திருந்ததைப் பற்றி அவர் குறிப்பிட்டபோது, "உங்களுக்கு ... பாலைக் குடிக்கக்கொடுத்தேன்" என்று அவர் கூறினார் (1 கொரிந்தியர் 3:2அ). பேதுரு தமது வாசகர்களுக்கு, "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" என்று கூறினார் (1 பேதுரு 2:2). எபிரேயருக்கு நிருபத்தை எழுதியவர், தேவனுடைய வசனமானது பக்குவமற்ற கிறிஸ்தவர்களுக்கு "பாலையும்" பக்குவம் அடைந்தவர்களுக்கு "பலமான ஆகாரத்தையும்" கொண்டுள்ளது என்று கூறினார்:

> காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியதக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடைவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் (எபிரெயர் 5:12-14).

இருப்பினும், ஆத்துமா போஷிக்கப்படுவதற்கு வசனத்தை வாசித்தலும் படித்தலும் மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை; அது கூறுவதன்படி நாம் *செய்யவும்* வேண்டும். இயேசு, "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி *செய்து* அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்று கூறினார் (யோவான் 4:34; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

"பசி" மற்றும் "தாகம்" ஆகியவற்றின் தனிச்சிறப்பான அர்த்தம்

நாம் ஏக்கம் கொள்ள வேண்டிய நீதியின் பரப்பெல்லை பற்றிய கருத்தைக் கொண்டுள்ள நிலையில் நாம் இப்போது, "பசி" மற்றும் "தாகம்" என்ற வார்த்தைகளின் மீது நமது கவனத்தைக் திருப்புவோமாக. "நீதியின்மேல் *பசிதாகமுள்ளவர்கள்* பாக்கியவான்கள் ... ; அவர்கள் திருப்தியடைவார்கள்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

பசியாயிருத்தல் மற்றும் தாகமாயிருத்தல் ஆகியவற்றைப் பற்றி இயேசு பேசியபோது, அவரின் வார்த்தைகள் நம்மில் சிலருக்கு அர்த்தப்படுவதைக் காட்டிலும் அதிகமாக முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு அர்த்தப்பட்டன. நம்மில் பலர், நாம் மிக அதிகமான பசி மற்றும் தாகத்தை அனுபவித்தது இல்லை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது,

பள்ளியில் இருந்து வந்த உடனே, "நான் பட்டினியாயிருக்கிறேன்" என்பதே அடிக்கடி எனது முதல் வார்த்தைகளாக இருந்தன - ஆனால் உண்மையில் நான் பட்டினியாயிருந்ததில்லை. பருத்தி வயல்களிலும் அல்லது கோதுமை வயல்களிலும் நான் வேலை செய்தபோது, உணவு வேளைகளில் நான் அதிகம் உண்பவனாக இருந்தேன்; ஆனால் நான் பட்டினியாயிருந்ததில்லை. நான் விளையாட்டுகளை விளையாண்டபோது, நான் மிக அதிகமாகத் தாகம் அடைந்தேன், ஆனால் தாகத்தினால் மரிக்கும் நிலைக்கு நான் வெகுதொலைவில் இருந்தேன்.

உணவின்றி நான் நீண்ட காலம் இருந்த நிலை என்பது கல்லுரியில் நான் முதலாம் ஆண்டு படிக்கும்போது நிகழ்ந்தது. பல மாணவர்களுக்கு மதிய உணவு தயாரித்துக் கொடுத்து வந்த ஒரு பெண்மணியின் வீட்டில் நான் வசித்துக் கொண்டிருந்தேன். உணவு தயாரிக்கவும், உணவு உண்டபின் பாத்திரங்களைக் கழுவவும் நான் உதவி செய்தேன். இதற்காக எனக்கு காலை உணவாக ஒரு கோப்பை தானியஉணவும், மதிய உணவாக பரிமாறப்பட்டது எதுவோ அதுவும் மற்றும் இரவு உணவாக சாண்விட்ச்சும் தரப்பட்டது. ஒரு வாரக்கடைசியில் எனது விடுதிச்சீமாட்டி யாரோ ஒருவரைக் காண நகரை விட்டுச் சென்றிருந்தார். என்னிடத்தில் பணம் இல்லாதிருந்தது, எனவே நான் வெள்ளி முதல் திங்கள் வரையிலும் உணவின்றி இருந்தேன்.

இருப்பினும் நான் அனுபவித்த எதையும், வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களில் பலருடைய வழியுடன் ஒப்பிட இயலாது. உழைப்பாளிகள் தங்கள் குடும்பங்களுக்கு உணவளிக்கப் போதுமானவற்றையே மிக அரிதாகவே சம்பாதித்தனர். அவர்கள் புண்பட்டு அல்லது வியாதிப்பட்டு உழைக்க முடியாது போனபோது, அவர்களுக்கு ஊதியமே கிடைக்கவில்லை. அவர்கள் இரவு வேளைகளில் பசியினால் தங்கள் குழந்தைகள் கதறி அழுவதைக் கவனிக்க வேண்டியதாயிற்று. மேலும் நான் எனது கல்லுரி ஆண்டுகளில் அனுபவித்த எதையும், இன்றைய நாட்களில் வாழும் பலரது வழியுடன் ஒப்பிடவும் இயலாது. இந்தப் பாடங்களைப் பெற்றுக்கொள்பவர்களில் ஒருசிலர், "பசி" மற்றும் "தாகம்" என்ற வார்த்தைகளின் மறைவான கருத்துக்களைப் பற்றி நான் எப்போதும் புரிந்து கொள்வதைக் காட்டிலும் அதிகமாகப் புரிந்து கொள்வார்கள் என்று அறிந்திருக்கிறேன்.

"பசி" என்பது "பசித்திருக்க, பசியுடன் இருத்தல் ... தேவையினால் துன்புறுதல் ... தேவையுடன் இருத்தல்" என்று அர்த்தப்படுகிற *peinao* என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இதை உருவக நடையில் பயன்படுத்தும்போது, இது "தீவிரமாக விரும்புதல், ஆவலுள்ள விருப்பத்துடன் நாடுதல்" என்று அர்த்தப்படுகிறது.[10] "தாகம்" என்பது "தாகத்தினால் துன்புறுதல்; தாகத்தில் இருந்து துன்புறுதல்" என்று அர்த்தப்படுகிற *dipsao* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது. உருவக நடையில் பயன்படுத்தும்போது இது, "தங்கள் குறைகளை வேதனைநிறைந்த வகையில் உணருகிறவர், மற்றும் ஆத்துமாவுக்குப் புத்துணர்வு அளிக்கக் கூடிய, ஆதரிக்கக் கூடிய பலப்படுத்தக் கூடிய விஷயங்களுக்காகப் பேராவலுடன் ஏங்குபவர்" என்பதைக் குறிக்கிறது.[11]

நம்மில் சிலர், மிகவும் பசியாயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை மதித்து உணருவதில்லை என்று குறிப்பிட்டிருந்தேன். நம்மில் பலர், உண்மையிலேயே, உண்மையிலேயே தாகமாயிருத்தல் என்றால் என்ன

என்பதைப் புரிந்து கொள்வதில்லை. நாம் ஒரு குமிழைத் திருப்புகிறோம், உடனே தண்ணீர் வெளியே வருகிறது. வேதாகம வரலாறு நடைபெற்ற நாடுகளில் இது உண்மையாக இருக்கவில்லை. அவர்களுக்குத் தண்ணீர் கிணறுகள் மற்றும் நீரோடைகளில் இருந்து வந்தது, ஆனால் கிணறுகளும் நீரோடைகளும் வறண்டுபோகக் கூடியவை. மேலும், மக்கள் மத்திய கிழக்கு நாடுகளின் வறண்ட பகுதிகளின் குறுக்கே பயணம் செய்தபோது (காண்க சங்கீதம் 63:1), அவர்கள் தண்ணீர் கிடைக்காத நிலையிலேயே நீண்ட தூரங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. தாகம் என்றால் என்ன என்பதை, நான் எப்போதும் புரிந்து கொள்வதைக் காட்டிலும் அதிகமாகவே அவர்கள் புரிந்து கொண்டிருந்தனர்.

நமது வேதவசனப் பகுதியில் உள்ள கிரேக்க வார்த்தைகளினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விருப்பத்தின் வலிவார்ந்த தன்மையானது, வரலாற்றில் இரண்டு துன்ப நிகழ்வுகளினால் விவரிக்கப்படுகிறது. அவற்றில் ஒன்று, கி.பி. 70ல் தீத்து என்பவரால் எருசலேம் முற்றுகையிடப்பட்ட நிகழ்வு ஆகும். யோசிப்பஸ் என்ற வரலாற்றாளர், இந்த முற்றுகை ஒரு பஞ்சத்தைக் கொண்டுவந்தது, அந்தப் பஞ்சம் “மற்ற எல்லாப் பாடுகளைக் காட்டிலும் மிகவும் கடினமாக இருந்தது ... பிள்ளைகள் தங்கள் தந்தையர்கள் உண்டு கொண்டிருந்த உணவுக் கவளத்தை அவர்கள் வாயிலிருந்து பிடுங்கினர், மற்றும் தாய்மார்கள் தங்கள் பச்சிளம் குழந்தைகளுக்கும் இதையே செய்தனர் என்பதுதான் மிகவும் பரிதபிக்கப் படத்தக்கதாக இருந்தது” என்று அறிக்கை செய்தார்.[12]

2 இராஜாக்கள் 6ம் அதிகாரத்தில் ஒரு முந்திய பஞ்சம் விவரிக்கப்பட்டுள்ளது. அந்த பயங்கரமான பஞ்சத்தின்போது, ஒரு கழுதையின் தலை எண்பது வெள்ளி சேக்கல்களுக்கு விற்கப்பட்டது.[13]அதைப்போன்ற வேறு சில பொருட்கள், வெவ்வேறு சூழ்நிலைகளின்கீழ் மனிதப் பயன்பாட்டிற்கான உணவு என்று எண்ணப்படக் கூடாதவைகள் மனிதர் உண்பதற்காக விற்கப்பட்டன (வசனம் 25). இருப்பினும் பஞ்சத்தின் மிகப் பரிதாபமான விளைவு 29ம் வசனத்தில் காணப்படுகிறது, அங்கு ஒரு தாய் “அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்” என்று கூறினாள்.[14] ஒரு தாயின் அன்பு பலமாக உள்ளது என்றாலும், அந்தத் தாயின் பசி உணர்வு மிகவும் பலமாக இருந்தது.

இந்த விவரிப்புகள் பரிதாபமானவையாகவும் அருவருப்பானவையாகவும் இருக்கும் அதே வேளையில், இவைகள் ஒருவேளை, முதல் நூற்றாண்டில் இயேசுவின் உரையைக் கேட்டவர்களுக்கு, “பசி” மற்றும் “தாகம்” என்ற சொற்றொடர்களின் தனிச்சிறப்பான அர்த்தத்தை விளக்கியிருக்கலாம். பசி மற்றும் தாகம் ஆகியவற்றைப் பற்றி இயேசு பேசியபோது, ஒரு உணவுத் துணுக்கிற்காக எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கும் அளவுக்கு, பட்டினியாயிருக்கும் ஒரு நபரின் வலிமை நிறைந்த தூண்டுதலை அல்லது ஒரு வாய் குடிநீருக்காக எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தாயாரயிருக்கும் அளவுக்கு, ஒரு நபரின் மரண தாகத்தை அவர் (இயேசு) குறிப்பிட்டார்.[15] “தேவனுக்காக, அவரது வழிக்காக மற்றும் அவரது சித்தத்திற்காக, நான் அந்த அளவு வலிவான பசியும் தாகமும் கொண்டிருக்கிறேனா?” என்பதே நாம் ஒவ்வொருவரும் கேட்க வேண்டிய கேள்வியாக உள்ளது. நீங்கள் நீதிக்காக உண்மையிலேயே பசிதாகமுள்ளவர்களாக இருக்கிறீர்களா இல்லையா என்பதைத் தீர்மானிக்க உதவக்கூடிய சில தேர்வுகள் கீழே தரப்படுகின்றன.[16]

நீங்கள் உலகப்பிரகாரமான விஷயங்கள் அல்லது ஆவிக்குரிய விஷயங்கள்

இவற்றில் எதைப் பற்றி அதிக அக்கறையாக இருக்கிறீர்கள்? உடைமைகளைத் தேடிப்பெறுதலைக் காட்டிலும் தேவனுடன் நெருங்கி இருப்பது உங்களுக்கு அதிக முக்கியமானதாக உள்ளதா? மக்களிடத்தில் பிரபலமாயிருத்தலைக் காட்டிலும் தேவனுடன் சரியாக நிலைநிற்குதல் உங்களுக்கு மாபெரும் அக்கறைக்குரிய விஷயமாக உள்ளதா? வெற்றிநிறைந்தவர்களாக இருத்தலைக் காட்டிலும் தேவபக்தியுள்ள வாழ்வை வாழுதல் குறித்து நீங்கள் அதிக தீவிரமாக இருக்கிறீர்களா? உங்கள் முன்னுரிமைகள் யாவை? சிலர் பொழுதுபோக்கிற்காக மணிக்கணக்கில் அமர்ந்து இருப்பதில் சிறிதளவே இடர்ப்பாட்டைக் கொண்டிருக்கும் அதே வேளையில் ஒரு பிரசங்கத்திற்காக அமர்ந்து இருப்பதைக் கடினமானதாகக் காண்கின்றனர்.

ஆவிக்குரிய வகையில் "உணவு பெறக்" கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும், தேவனைப் பற்றியும் அவரது வழியைப் பற்றியும் கற்றுக்கொள்ளக் கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும் நீங்கள் பலன் பெறும் வகையில் பயன்படுத்திக் கொள்கிறீர்களா? முதிய விவசாயி ஒருவர், ஒரு பிரசங்கியாரிடத்தில் "நீங்கள் மக்களை வேதாகம வகுப்புகளுக்கும் ஆராதனைக்கும் வரும்படி வேண்டிக்கொள்வதற்கு அதிக நேரத்தை செலவிடுவதாகக் காணப்படுகிறது. நான் எனது மாடுகளைத் தீவனத் தொட்டிக்கு வரும்படி ஒருக்காலும் வேண்டிக் கேட்டுக்கொண்டதில்லை" என்று கூறினார். பட்டினியாயிருக்கும் ஒரு நபரை, உணவு கிடைக்கும் இடத்திற்குச் செல்லும்படி கெஞ்சிக்கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆவிக்குரிய "உணவுகளுக்கு" நீங்கள் காலம் தாழ்த்தாமல் வருகிறீர்களா அல்லது அதற்கு நீங்கள் தாமதமாக வருகிறீர்களா? உண்மையிலேயே பசியாயிருக்கும் ஒரு நபர், உணவு வேளை நெருங்கும்போது, உணவு மேஜையின் அருகில் காத்துக்கொண்டிருக்கிறார்.

உங்கள் ஆவிக்குரிய பசியானது வளர்ந்து பக்குவப்படுகிறதா? நீங்கள் "பலமான ஆகாரத்தை"யா அல்லது "பால்" உணவையா, எதை மகிழ்வுடன் அனுபவிக்கத் தொடங்குகிறீர்கள் (காண்க எபிரெயர் 5:12-14; 1 கொரிந்தியர் 3:2)?

ஒரு நேர்மையான பரிசோதனையானது, நாம் நீதியின்மேல் கொண்டிருக்க வேண்டிய அளவுக்குப் பசிதாகம் கொண்டிருப்பதில்லை என்று வெளிப்படுத்தினால் விஷயம் என்னவாக இருக்கும்? நாம் பசியுள்ள இருதயங்களைக் கொண்டிருக்க உதவும்படிக்கு என்ன செய்யப்பட முடியும்? முதல் மூன்று பாக்கியங்களினூடே நமது வழியில் நன்கு செயல்படுதல் என்பது பயன்நிறைந்த ஒரு திட்டமாக உள்ளது. நாம் நமது ஆழ்ந்த ஆவிக்குரிய தேவையை உணர்ந்து அறிந்தால் (முதல் பாக்கியம்), நாம் ஆழ்ந்தறிவுள்ள துயரத்தினால் நிறைந்திருப்போம் (இரண்டாவது பாக்கியம்), மற்றும் நாம் தேவனுக்கும் அவரது சித்தத்திற்கும் நம்மை, இணங்கச் செய்ய தயாராகவும் ஆர்வமாகவும் இருப்போம் (மூன்றாவது பாக்கியம்). இது நம்மை "தேவனே, எனது வாழ்வில் உம்மை நான் விரும்புகிறேன். தயவுசெய்து எனது வாழ்வை ஆசீர்வதியும். நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறும், அதை நான் செய்வேன்!" என்று கதறச் செய்யும் என்பது நிச்சயம். இதுவே நீதியின்மேல் பசிதாகமாயிருத்தலாக உள்ளது (நான்காவது பாக்கியம்).

இந்தப் பாடத்தைக் கூடிய மட்டிலும் நடைமுறைக்கு உரியதாகச்

செய்வதற்கு, ஆவிக்குரிய பசியை, விசேஷமாக தேவனுடைய வசனத்தைக் கற்றுக்கொள்வதற்கான பசியை மேம்படுத்த என்ன செய்யலாம் என்பதன் மீது ஒருசில ஆலோசனைகளைக் கூடுதலாகக் கூற என்னை அனுமதியுங்கள். முதலாவது, தேவனுடைய வசனத்தைப் போதித்து பிரசங்கிக்கிற மக்களுக்கு ஒருசில வார்த்தைகள் கூற என்னை அனுமதியுங்கள். நாம் நமது "உணவுகளை" சாத்தியமான அளவுக்குப் பசியைத் தூண்டுபவையாக ஆக்க வேண்டும். மேரி ஓலெர் என்பவர் பெண்கள் வேதாகம வகுப்பு ஆசிரியர்களிடம் பேசியபோது பயன்படுத்திய காட்சி உதவிப் பொருள்பற்றி என் மனைவி என்னிடத்தில் கூறினார். சகோதரி ஓலெர் ஒரு துண்டு ரொட்டியை ஒரு தட்டில் வைத்து ரொட்டியின் சத்துக்கள் பற்றிப் பேசினார். பின்பு அவர், "இந்த ரொட்டியைச் சாப்பிட விரும்புபவர்கள் எத்தனை பேர்?" என்று கேட்டார். பெரும்பான்மையான பெண்களின் கைகள் மேலே எழும்பின. பின்பு அந்த சகோதரி, அந்த ரொட்டித்துண்டை தனது கைகளில் எடுத்துச் சுருட்டி, அதைத் தரையில் போட்டு, அதை மிதித்தார். பின்பு அவர், "அந்த ரொட்டித் துண்டு இன்னமும் தன்னில் எல்லாச் சத்துக்களையும் கொண்டுள்ளது. இப்போது அதைச் சாப்பிட விரும்புவர்கள் எத்தனைபேர்?" என்று கேட்டார். எந்தக் கையும் உயர்த்தப்படவில்லை. அந்த சகோதரியின் கருத்து எளிமையானதாக இருந்தது: தேவனுடைய வசனத்தைப் போதித்தல் மாத்திரம் போதாது. நாம் நமது பாடங்களை - நமது மாணவர்களின் கவனத்தைக் கவரும் வகையிலும் அவர்களின் ஆர்வத்தைப் பற்றும் வகையிலும் - ஈர்க்கும் வழியில் முன்வைக்க வேண்டும். நம்மில் பலர், உலர்ந்துபோன மற்றும் "ருசியற்ற" பாடங்களை நடத்திய மார்க்கரீதியான அல்லது உலகப்பிரகாரமான ஆசிரியர்களை நினைவுக்குக் கொண்டுவர முடியும், அதே வேளையில் கற்பதைச் சந்தோஷமான அனுபவமாக்கிய மற்றவர்களையும் நாம் நினைவு கூர முடியும். நம்மில் போதித்து பிரசங்கிப்பவர்கள் எப்போதுமே இந்த இலக்கை அடைவது இல்லை, ஆனால் நாம் நமது "உணவுகளை" இயன்ற வரையிலும் பசியைத் தூண்டுபவையாக்க முயற்சி செய்வோமாக.[17]

அதைக் கூறியுள்ள நிலையில், தேவனுடைய வசனத்திற்கான பசி குறைவுபடும் இடத்தில், பேசுபவரிடம் அல்ல ஆனால் கேட்பவரிடத்திலேயே முதன்மைத் தவறு உள்ளது என்பதை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள். ஆண்டுகளினூடே நான், பிரசங்கங்கள் மற்றும் பாடங்கள் தேவனுடைய வசனத்தை எளிமையாகப் போதித்த பிரசங்கங்கள் மற்றும் பாடங்கள் - பற்றிய விமர்சனங்களை அவ்வப்போது கேள்விப்பட்டிருக்கிறேன். விமர்சனமானது, உரையைக் கேட்பவர்கள் ஆவிக்குரிய வகையில் பசிதாகமாயிருக்கிறார்களா இல்லையா என்று என்னை வியப்படையச் செய்துள்ளது. பல்வேறு வகைப்பட்ட போதகர்கள் மற்றும் பிரசங்கியார்களின் - ஒரு சில மாபெரும் உரைகள், பல நல்ல உரைகள், சில அவ்வளவு நல்லதாயிராத உரைகள், மற்றும் சிறிதளவு உண்மையிலேயே மோசமான உரைகள்[18] ஆகியவற்றை - நான் அமர்ந்து கேட்டிருக்கிறேன், ஆனால் நான் ஏதேனும் ஆதாயப்படுத்திக் கொள்ளாதிருந்த ஒரு பாடம் அல்லது பிரசங்கம் என்பதை என்னால் நினைவுபடுத்த இயலவில்லை (அதாவது, நான் கேள்விப்பட்ட எல்லா பிரசங்கங்கள் மற்றும் பாடங்களிலுமிருந்து ஏதேனும் சில கருத்துக்களைப் பெற்றுப் பயனடைந்துள்ளேன்).

நாம் ஆரோக்கியமான ஆவிக்குரிய பசியுடையவர்களாக இராவிட்டால்,

நாம் என்ன செய்ய முடியும்? மீண்டுமாக, முதல் மூன்று பாக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள பண்புகளை - தேவனுடைய உதவியுடன் - மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது கிறிஸ்தவர்களுக்கான முக்கியமான இலக்காக உள்ளது. இதைச் செய்வதற்கு நாம், உடல்ரீதியான பசியை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்தப்படுபவை போன்ற நுட்பங்களையே நாம் பயன்படுத்த முடியும்.

(1) ஆவிக்குரிய போஷாக்கின் அவசியத்தை உணர்ந்து அறியுங்கள். சமமான ஒரு இடத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தில் இயேசு, "இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; திருப்தியடைவீர்கள்" என்று கூறினார் (லூக்கா 6:21அ). பின்பு அவர், "திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியாயிருப்பீர்கள்" என்றும் கூடுதலாகக் கூறினார் (வசனம் 25அ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "ஆவிக்குரிய பசியை உணராதிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஏனெனில் நீங்கள் தேவனுக்கு முன்பாக ஆவிக்குரிய வகையில் பட்டினியாயிருப்பவர்களாக நிற்பீர்கள்!" என்றாகிறது. "எனக்கு ஒரு குறைவுமில்லையென்று" கூறிய லவோதிக்கேயர்களைப் போன்று ஆகிவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 3:17).

(2) ஆவிக்குரிய போஷாக்கை மதித்தலை மேம்படுத்திக் கொள்ளுங்கள். முதல்முறை உண்ட போது மகிழ்வுடன் அனுபவிக்காமல், ஆனால் இப்போது உண்டால் மகிழ்வுடன் அனுபவிக்கும் உடல்ரீதியான உணவு ஏதேனும் உள்ளதா? ஒருவேளை அதை உண்ணும்படி உங்கள் பெற்றோர் வற்புறுத்தி இருக்கலாம், எனவே நீங்கள் படிப்படியாக அதை விரும்பக் கற்றுக்கொண்டிருப்பீர்கள். ஒருவேளை வயது வந்தவர் என்ற நிலையில் நீங்கள், குறிப்பிட்ட சில உணவுகள் நல்ல உடல்நலத்திற்கு அவசியமானவை என்று கண்டறிந்திருப்பீர்கள் மற்றும் அவற்றை இப்போது நீங்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் நிலை வரையிலும் விடாது உண்டிருப்பீர்கள். உடல்ரீதியான உணவை மதித்தலை நாம் மேம்படுத்திக்கொள்ள முடிவது போன்றே, ஆவிக்குரிய உணவை மதித்தலையும் நாம் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

(3) ஆவிக்குரிய பயிற்சியைக் கொண்டு உங்கள் ஆவிக்குரிய பசியை மேம்படுத்துங்கள். கடினமான உடல் உழைப்பின் நாளைப் போன்று உணவை ருசியாக்குவது வேறு எதுவும் இல்லை. அதுபோன்றே, ஆவிக்குரிய பயிற்சியானது நம்மை, ஆவிக்குரிய உணவின்மீது பெருவிருப்பம் உடையவர்களாக்கும். KJV வேதாகமத்தின்படி, தீமோத்தேயுவிடம் பவுல், "தேவ பக்திக்கேதுவாக அப்பியாசம்பண்ணு" என்று கூறினார் (1 தீமோத்தேயு 4:7ஆ; காண்க வசனம் 8). NASB வேதாகமத்தில் நாம், "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நாம் ஒவ்வொருவரும் அதின்படி பயிற்சி செய்ய வேண்டும்" என்று வாசிக்கிறோம் (ரோமர் 12:6அ). ஆவிக்குரிய பயிற்சியானது ஆவிக்குரிய பசியைத் தூண்ட எவ்வாறு உதவ முடியும் என்பதற்கு ஒரு விவரிப்பு என்ற வகையில், வேதாகமத்தை - ஒரு வகுப்பிலோ அல்லது ஒரு நண்பருக்கோ - போதித்தலைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். போதித்தலைப் பற்றி நீங்கள் உணர்வு கொண்டவர்களாக இருந்தால், தேவனுக்குப் பிரியமான மற்றும் தேவனை மகிமைப்படுத்துகிற வகையில் அப்பணியைச் செய்ய நீங்கள் விரும்புவீர்கள். ஆகையால், நீங்கள் ஒவ்வொரு பாடத்திற்காகவும் ஊக்கமாகப்

படிக்கும்படி தூண்டப்படுவீர்கள், பின்பு கேட்கப்படவிருக்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கக் கூடியவர்களாவதற்கு இன்னும் சற்று அதிகமாகப் படிப்பீர்கள்.

(4) முறையாக "உண்பதால்" உங்கள் ஆவிக்குரிய பசியை மேம்படுத்திக் கொள்ளுங்கள். ஒழுங்கு முறையான உணவு வேளைகள் இல்லாத ஒரு நபர், தமது பசி உணர்வை இழந்துபோவார் அல்லது ஆரோக்கியமான உணவிற்கான தமது பசியை அழிக்கும் "நொறுக்குத் தீனி"[19] என்பவற்றால் தமது வயிற்றை நிரப்பிக்கொள்வார். ஆவிக்குரிய வகையில் நாம் ஒழுங்குமுறையான "உணவு வேளைகளை" கொண்டிருத்தல் அவசியமாகிறது. பெரோயா என்ற நகரத்தில் இருந்தவர்கள், "மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு," ... "தினந்தோறும்" "வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால்" லூக்காவினால் பாராட்டப்பட்டனர் (நடபடிகள் 17:11). சபைக்குழுமத்தின் "உணவுவேளைகளில் நாம் அங்கிருப்பது அவசியமாகிறது[20], மற்றும் தனிப்பட்ட வகையில் படிப்பு மற்றும் ஜெபத்திற்கும் தினந்தோறும் நமக்கு நேரங்கள் அவசியமாகிறது. ஒழுங்குமுறையான படிப்பானது நம்மை, வசனத்தை மிகச்சரியாகக் கையாளக் கூடியவர்களாக்கும் (2 தீமோத்தேயு 2:15).

(5) பசியை அழிக்கும் விஷயங்கள் பற்றி எச்சரிக்கையாயிருங்கள். உடல்ரீதியான வகையில் நொறுக்குத்தீனிகள் என்பவை, ஆரோக்கியமான உணவிற்கான பசியை அழித்துப்போடுவது போன்றே, மனரீதியான நொறுக்குத்தீனியும் தேவனுடைய வசனத்தின் மீதான நமது ஆர்வத்தைக் குறைத்துபோட முடியும். நாம் நமது மனங்களை உலகப்பிரகாரமான விஷயங்கள் மற்றும் உலகப்பிரகாரமான பொழுதுபோக்குகள்[21] ஆகியவற்றினால் நிரப்பும்போது, ஆவிக்குரிய உணவின்மீதான நமது பிரியம் குறைந்து விடுகிறது. மக்களில் சிலர் தங்கள் ஆத்துமாவைத் திருப்திப்படுத்தாத இந்த உலகப்பிரகாரமான விஷயங்கள் மீது பெரும் விருப்பம் கொண்டுள்ளனர் (காண்க ஏசாயா 55:2).

(6) இங்கு இன்னும் ஒரு ஆலோசனை தரப்படுகிறது: உங்கள் "உணவை" பகிர்ந்து கொள்ள இது உதவக்கூடும். விதவைகளும் மனைவியை இழந்தவர்களும், தங்கள் துணைவர்/துணைவி மரித்தபின்பு, தக்க உணவைத் தயாரிக்கும் ஊக்கத்தைத் தாங்கள் இழந்து போனதாக என்னிடத்தில் கூறுகின்றனர். அவர்கள் தனிமையாக உண்ண வேண்டியிருக்கையில் தங்கள் பசி உணர்வை இழந்து போகின்றனர். உங்கள் ஆவிக்குரிய பசி உணர்வைத் தூண்டுவதில் உங்களுக்குப் பிரச்சனை உள்ளது என்றால், உங்கள் ஆவிக்குரிய உணவைப் பகிர்ந்து கொள்ளுதல் உங்களுக்கு உதவக் கூடும். கணவர்களும் மனைவிகளும் ஒன்றாக (வேதாகமத்தை) படிக்கலாம். குடும்பத்தில் குடும்ப தியான வேளைகளைக் கொண்டிருக்கலாம். ஒரு நண்பருடன் அமர்ந்து வேதாகமத்தைப் பற்றிப் பேசுங்கள். ஒருவேளை ஒரு நண்பர்களின் குழுவானது வேதாகமத்தைப் படித்தல் மற்றும் ஜெபித்தல் ஆகியவற்றிற்கு ஒன்றுகூட நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

"... அவர்கள் திருப்தியடைவார்கள்"

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் [மகிழ்ச்சியானவர்கள்] ..." நீதியின்மேல் பசிதாகம் கொண்டிருத்தல் என்பது எப்படி மகிழ்ச்சியுள்ளதாகிறது? மற்ற பாக்கியங்களைப் பற்றிய படிப்புகளில்

குறிப்பிட்டது போன்று, எண்ணப்போக்கே நமது மகிழ்ச்சிக்குப் பங்களிக்க முடியும். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் சரியான முன்னுரிமைகளைக் கொண்டுள்ளனர், எனவே அவர்கள் உலகப்பிரகாரமான மகிழ்ச்சியற்ற நிலையின் பங்களிப்பான சிறு எரிச்சல்களினால் குறைவாகவே தொந்தரவு அடைகின்றனர். இருப்பினும் மீண்டுமாக, பாக்கியத்தின் முடிவில் தேவனால் தரப்பட்ட வாக்குத்தத்தத்தின்மீதே வலியுறுத்தம் உள்ளது. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் கூடுதல் மகிழ்ச்சி கொண்டிருப்பார்கள், "அவர்கள் திருப்தியடைவார்கள்."

"திருப்தியடைவார்கள்" என்பது *chortazo* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது. KJV வேதாகமத்தில் "shall be filled" என்றுள்ளது. மிருகங்கள் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, *chortazo* என்பது "இலைகள், புல் வகைகள், வைக்கோல் ஆகியவற்றை உணவாக அளித்தல், உணவினால் நிரப்புதல் அல்லது திருப்திப்படுத்துதல், கொழுக்கவைத்தல்" என்று அர்த்தப்படுகிறது.[22] "மனிதர்களைப் பொறுத்தமட்டில் இது, ஒரு நபரை நிரப்புதல் மற்றும் முழுதிருப்தி செய்தல் என்ற நிலை வரையிலும் நிரப்புதலை விவரிக்கிறது."[23] இது, இயேசு ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்ததை விவரிக்கப்பயன்படுத்திய வார்த்தையாக உள்ளது: "எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்" (மத்தேயு 14:20). மனநிறைவான உணவிற்குப் பின்னர் ஒரு மனிதர் தமது நாற்காலியில் பரப்பலாக அமர்ந்திருப்பதை நான் என் மனதில் காணுகிறேன். அவரது உதடுகளில் இருந்து திருப்தியடைந்ததின் பெருமூச்சு வெளிப்படுகிறது. பின்பு அவர் தமது மனைவியிடம், "முழுநிறைவு, என் அன்பே, முழுநிறைவு" என்று கூறுகிறார். அவர், "நிரம்பிய" மற்றும் "திருப்தியான" மனிதராக இருக்கிறார்.

விவசாயிகள் தங்கள் மிருகங்களை நிரப்புகின்றனர், மனைவிகள் தங்கள் கணவர்களின் பசியைத் திருப்தி செய்கின்றனர், மற்றும் கர்த்தர் தமது பிள்ளைகளை நிரப்பி திருப்தியாக்குகிறார். 107ம் சங்கீதத்தை எழுதியவர், வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களைத் தேவன் திருப்தியாக்கியதைப் பற்றிப் பேசுகிறார். அவர் பின்வருமாறு எழுதினார்:

> தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று, அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக (வசனங்கள் 8, 9).

தேவன், வனாந்தரத்தில் உடல்ரீதியான பசியையும் தாகத்தையும் திருப்தியாக்கியது போன்றே, அவர் இன்றைய நாட்களில் ஆவிக்குரிய பசியையும் தாகத்தையும் திருப்தியாக்குகிறார்.

இந்த வாழ்வானது திருப்தியின்மை மற்றும் மனநிறைவின்மை ஆகியவற்றினால் நிரப்பப்பட்டு உள்ளதால், மத்தேயு 5:6ன் வாக்குத்தத்தம் இனிவரும் வாழ்விற்கு மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். மீண்டும் ஒருமுறை நான், மத்தேயு 5:6ன் வாக்குத்தத்தம் இப்போதும் மற்றும் நித்தியத்திற்கும் ஆனது என்று நான் நம்புகிறேன். இயேசு, "ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று கூறினார் (யோவான் 6:35). இயேசு கொடுத்த உறுதிப்பாட்டில் "கடைசி

நாளின்" ஆசீர்வாதங்களும் உள்ளடங்குகின்றன (வசனங்கள் 39, 40, 54) ஆனால் இது இன்றைய நாட்களுக்கான ஆசீர்வாதங்களை விலக்குவதில்லை (காண்க வசனங்கள் 56, 57).

இந்த வாழ்வில்

தேவனை அறிய நீங்கள் பசியாயிருக்கிறீர்களா? எரேமியா 31:34ல் புதிய உடன்படிக்கை குறித்துப் பின்வரும் வாக்குத்தத்தம் தரப்பட்டது: "...ர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள்,' என்று கர்த்தர் சொல்லுகிறார்" (காண்க எபிரெயர் 8:11). நீங்கள் "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட" முடியும் (எபேசியர் 3:19). தேவனுடன் சரியாக நிலைநிற்குதலை நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் கர்த்தருடைய சித்தத்தை விசுவாசித்து (காண்க ரோமர் 4) அதைச் செய்யும்போது (ரோமர் 1:5; 16:26) இது உங்களுடையதாக இருக்க முடியும். நீங்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழ பெருவிருப்பம் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் "ஆவியின்படி நடக்கிற" போது மற்றும் "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழிக்க" தேவனுடைய ஆவியானவர் உங்களுக்கு உதவுகிறபோது, நீங்கள் அதை வாழ முடியும் (ரோமர் 8:4, 13).

தேவன், அவரது வழி மற்றும் அவரது சித்தம் பற்றிய தெளிவான புரிந்துகொள்ளுதலுக்கு நீங்கள் ஏங்குகிறீர்களா? இயேசு, "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 8:32). நீங்கள் "உண்மையும் நன்மையுமான இருதயத்தை" கொண்டிருந்தால் (லூக்கா 8:15), நீங்கள் "எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட" முடியும் (கொலோசெயர் 1:9). தேவனுடைய சித்தத்தை அறிய நேர்மையான இருதயங்களைக் கொண்டிருந்து அதை அவர்கள் கண்டறிய தேவன் உதவி செய்த மக்கள் பற்றிய பல உதாரணங்கள் வேதாகமத்தில் உள்ளன.[24] சத்தியத்தை அறிய ஏக்கம் கொண்ட மக்களை நான் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறேன், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றிய புரிந்துகொள்ளுதலுக்கு அருளிரக்கத்தின் உதவி பெற்றனர் என்று நான் நம்புகிறேன்.[25]

இந்த உலகமானது, உலகப்பிரகாரமான தவிட்டைக் கொண்டு தங்கள் உள்ளான பசியைத் திருப்தி செய்ய முயற்சிக்கும் மனதிருப்தியற்ற மனிதர்களால் நிறைந்துள்ளது.[26] நமது ஆத்துமாக்கள் தேவனுடைய பிரசன்னத்தில் மாத்திரமே மனநிறைவும் திருப்தியும் அடைய முடியும்.

இனி வரும் வாழ்வில்

நீதியின்மேல் நாம் கொண்டுள்ள பசியும் தாகமும் இந்த வாழ்வில் ஒருபகுதி மாத்திரமே திருப்திப்படுத்தப்படும். நமது வசனப்பகுதியில் இயேசு நிகழ்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தினார், இது "நீதியின்மேல் தொடர்ந்து பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். ஜேம்ஸ் டோல் என்பவர், "ஆவிக்குரிய பசிதாகத்தின் விளைவாகக் கிறிஸ்தவர் பெறுகிற நீதியானது தன்னிலேயே மிக உயர்வான பசி மற்றும் தாகத்தை உண்டாக்கக் கூடியது என்பது முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையாக உள்ளது" என்று எழுதினார்.[27] தேவன் இந்த வாழ்வில் நம்மை ஆவிக்குரிய

வகையில் நிறைவு செய்து திருப்தியாக்குவார், ஆனால் நாம் பரலோகத்தில் கர்த்தருடன் இருக்கும்போது மாத்திரமே முழுமையாகத் திருப்தியாக்கப் படக்கூடிய வளரும் பசிதாகம் இன்னும் இருக்கும்.

கர்த்தருக்கான நமது இருதய - பசியானது நிறைவாக, அவரது பிரகாசமான பிரசன்னத்தில் நாம் இருக்கும் போது முற்றிலும் திருப்தியாக்கப்படும் (வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5). சரியான வாழ்விற்கான நமது இருதய - பசி, பரலோகத்தில் நாம் அவரை சேவிக்கும்போது திருப்தியாக்கப்படும் (வசனம் 3). சரியாக நிலைநிற்குதலுக்கான நமது இருதயபசி, நாம் "அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருக்கும் போது நிறைவாகும்" (1 யோவான் 3:2). தேவனுடைய மக்கள் தங்கள் பரலோக வாசஸ்தலத்தில், "... இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை ... ஆட்டுக்குட்டியானவரே இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்" என்று யோவான் எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 7:16, 17).

முடிவுரை

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ... ; அவர்கள் திருப்தியடைவார்கள்." நீங்கள் "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக" இருக்கிறீர்களா? யாரோ ஒருவர், "*நீங்கள்* பசித்திராவிட்டால், ஒன்று தூங்குவீர்கள், அல்லது உணவளிக்கப் பட்டிருப்பீர்கள் அல்லது இறந்து போயிருப்பீர்கள்" என்று கூறினார்.[28] பெரும்பான்மையான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் பசியின்றி இருக்கும்போது, கவலை அடைகின்றனர்; பசியை இழத்தல் என்பது உடல் சுகவீனத்தின் அறிகுறியாக இருக்கக்கூடும். இது உடல்ரீதியான விஷயத்தில் மதிப்புமிகுந்த அக்கறைக்குறிய விஷயமாக உள்ளது, ஆனால் இது ஆவிக்குரிய வகையில் அதைக்காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நீதியின்மேல் கொட்ட பசியை இழத்தல் என்பது, தவிர்க்க இயலாத வகையில் ஆவிக்குரிய மரணத்தை உச்சப்படுத்துகிறது.[29]

நீங்கள் நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக இருந்தால், உங்கள் விருப்பம் எவ்வளவு வலிவார்ந்தது என்று காண்பிக்க நீங்கள் வாய்ப்பைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இயேசுவின் மீதான உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடக் கூடும் (ரோமர் 10:9, 10) மற்றும் அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெறக்கூடும் (கலாத்தியர் 3:26, 27). நீதியை விரும்புவதில் ஞானஸ்நானம் செய்யக்கூடியது என்ன? யோவானிடத்தில் இயேசு தமக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டபோது, அவர் (இயேசு) "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 3:15).

டேல் ஹார்ட்மேன் என்பவர் தாம் அறிந்திருந்த, நல்ல வேலை கொண்டிருந்த, அன்பான மனைவியும் நேர்த்தியான பிள்ளைகளும் உடைய ஒரு இளம் மனிதரைப் பற்றிக்கூறினார். இவையாவும் இருந்தும் அந்த மனிதர், நாளின் முடிவில் வேலையில் இருந்து இல்லத்திற்குத் திரும்பும்போது, அவரது மனதில் அடிக்கடி ஒரு சிந்தனை வலிவாக நுழைந்தது: அது "வாழ்வு என்பது இதைவிட அதிகமானதாக இருக்க வேண்டும்" என்பதே. இயேசுவையும் அவரது வழியையும் பற்றி அவர் அறிந்தபோது, அவர் அந்த "அதிகமானதை"

கண்டறிந்தார்.[30] *கர்த்தரை அல்லால் உண்மையான மனதிருப்தி எதுவும் இருக்க இயலாது. இன்றே நீங்கள் அவரிடம் வரும்படி நான் ஜெபிக்கிறேன். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:17).*

குறிப்புகள்

[1]*சிக்மன்ட் பிராய்டு (1856-1939) என்பவர் "மனோத்துவ ஆராய்ச்சியின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார். அவர் இருபதாம் நூற்றாண்டில் அதிக செல்வாக்குடைய சிந்தனையாளர்களில்/எழுத்தாளர்களில் ஒருவராக இருந்தார், ஆனால் கிறிஸ்தவ மதிப்புகளில் அவர் குறைவு பட்டிருந்தார்.* [2]*இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருக்கையில் அனேகமாக, அவர்கள் (இவ்வேளையில்) நினைத்துப் பார்க்க அந்த உணவுகளை அதிகமாகக் கொண்டிருக்க மாட்டார்கள். நாம் "பழைய நல்ல நாட்களுக்காக" ஏங்கும் போது, அந்த நாட்களில் இருந்த மோசமான விஷயங்களை அடிக்கடி மறந்து விடுகிறோம்.* [3]*காண்க நீதிமொழிகள் 6:30, 31.* [4]*கிரேக்க மொழியில் "சரி" என்பதன் கருத்து dikaios என்பதில் இருந்து வருகிறது.* [5]*4ம் அதிகாரம் விசுவாசத்தை மாத்திரம் குறிப்பிடுகையில், ரோமருக்கு எழுதிய நிருபம், இது இயேசுவில் கொண்டுள்ள விசுவாசம் (காண்க 3:22) என்றும் இது கீழ்ப்படிதல் உள்ள விசுவாசம் (காண்க 1:5; 16:26) என்றும் வலியுறுத்துகிறது.* [6]*ஒரு வார்த்தைக்குச் சாத்தியமான பல அர்த்தங்கள் இருக்கும்போது, எந்த அர்த்தம் தேர்ந்துகொள்ளப்பட வேண்டும் என்பதைப் பெரும்பாலும், சந்தர்ப்பப்பொருளே நமக்கு அறியச் செய்கிறது. இந்த இடத்தில், சந்தர்ப்பப்பொருளானது ஒரு விளக்கத்தை விட இன்னொரு விளக்கத்தை அதிகம் ஆதரிப்பதாகக் காணப்படுவதில்லை.* [7]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1958), 96. [8]*நாம் தேவனைப் பற்றி சில விஷயங்களை இயற்கையில் இருந்து அறிய முடியும் (காண்க ரோமர் 1:20), ஆனால் தேவனைப் பற்றிய முழுமையான வெளிப்பாடு என்பது அவரது வசனத்திலேயே உள்ளது.* [9]*இந்தப் பாடம், வசனத்தில் காணப்பட வேண்டிய ஆவிக்குரிய போஷாக்கை வலியுறுத்தும். நமது ஆத்துமாக்கள் ஜெபத்தில் தேவனுடன் நேரத்தைச் செலவிடுவதாலும் இயேசுவுக்கு நெருங்கிச் சேர்வதாலும் கூடப் போஷிக்கப்படுகின்றன (காண்க யோவான் 6:35); மற்றும் அவை, கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளுடன் ஆராதிக்கும்போது இணைவு கொண்டிருக்கையிலும் போஷிக்கப்படுகின்றன. நீங்கள் இந்தப் பாடத்தை எடுத்துரைக்கும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மிகவும் அவசியமாக உள்ள தேவையின் மீது வலியுறுத்தம் வையுங்கள்.* [10]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 498.

[11]Ibid., 153. [12]*இந்தப் பத்தியும் இதைத் தொடர்ந்து வரும் பத்தியும்* Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 30-31; Josephus *Wars of the Jews* 5.10. *புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டன.* [13]*இது சுமார் தொள்ளாயிரம் கிராம் வெள்ளியாக இருந்தது. உங்களுக்கு வெள்ளியின் தற்போதய விலை தெரிந்திருந்தால், நீங்கள் "எண்பது வெள்ளிச் சேக்கல்கள்" என்ற சொற்றொடரை, புழக்கத்தில் இருக்கும் நாணயத்தில் அதன் மதிப்பாக மாற்றிக் கொள்ளலாம்.* [14]*நான் இவ்வசனத்தை மேற்கோள் காண்பிக்கும்போது, "அவளது வார்த்தைகளை நான் மிகவும் கஷ்டத்துடனே தான்*

திரும்பக் கூற முடிகிறது" என்று கூறினேன். குழந்தை ஏற்கனவே ஊட்டச்சத்துக் குறைவினால் இறந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது; ஆனால் அப்படி இருந்தாலும்கூட இது ஒரு பரிதாபமான கதையாகவே உள்ளது. [15]தாகத்தைப் பொறுத்த மட்டில், பாதாளத்தில் வேதனைப் பட்டுக்கொண்டு தனது நாவைக் குளிரப்பண்ண ஒரு சில துளிகள் தண்ணீருக்காகக் கெஞ்சிய செல்வந்தனைப் பற்றிய விவரிப்பை நீங்கள் பயன்படுத்த முடியும் (லூக்கா 16:24). [16]இதை நீங்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்யும் இடத்தின் சூழ்நிலைக்குப் பொருத்தமாகத் தேவைப்படுமளவுக்குத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [17]இதை எவ்வாறு செய்வது என்பது இன்னொரு தலைப்பாக உள்ளது. இந்தத் தலைப்பு உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கும் அவர்களின் வாழ்வுக்கும் எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறது என்பதை அவர்களுக்குக் காண்பியுங்கள். விவரிப்புகள் மற்றும் காட்சி உதவிப் பொருட்கள், ஆர்வத்தைப் பற்றி இழுக்க உதவி செய்யக் கூடும். ஒரு வகுப்பு அமைவில், கேள்விகள் சிந்தனையைத் தூண்டக்கூடும். [18]"மோசமான" என்பது இவ்விடத்தில் பொருளடக்கத்தை அல்ல ஆனால் அதை முன்வைக்கும் விதம் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கள்ளப்போதகர்கள் என்று நான் அர்த்தப்படுத்தவில்லை. [19]"நொறுக்குத் தீனி"என்பது உயர்ந்த கலோரிகளும் தாழ்ந்த சத்துக்களும் கொண்ட உணவாகும். டோநட்ஸ் என்பவை இதற்கு நல்ல உதாரணங்களாக உள்ளன. வரையறைக்கு உட்பட்ட அளவுகளில் எடுத்துக்கொள்ளப்படும்போது, "junk food" *"நொறுக்குத் தீனி" என்பவை ஊறு விளைவிப்பதில்லை; ஆனால் இப்படிப்பட்டவை உணவின் முதன்மை ஆகாரம் ஆகிறபோது, உடலானது தேவைப்படும் சத்துக்களில் குறைவுபடுகிறது. [20]கிறிஸ்தவர்களுக்கான ஆவிக்குரிய "உணவு வேளைகளில்" வேதாகம வகுப்புகள், ஆராதனை ஊழியங்கள், சுவிசேஷ ஊழியக் கூட்டங்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன.*

[21]இந்தப் பகுதியை நீங்கள் வாழும் இடத்திற்கு தக்க வகையில் விரிவாக்கிக் கொள்ளுங்கள். அமெரிக்க நாட்டில் நான், அனேகமாக திரைப்படங்கள், தொலைக்காட்சி மற்றும் உலகப்பிரகாரமான வெளியீடுகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுவதுண்டு. எல்லாத் திரைப்படங்களும், எல்லாத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் மற்றும் எல்லா உலகப்பிரகாரமான வெளியீடுகளும் மோசமானவை அல்ல; ஆனால் அவைகள் முதன்மையான மன "உணவு" என்று ஆகிறபோது, ஆத்துமாவானது தேவைப்படும் போஷாக்கில் குறைவுபடுகிறது. [22]Thayer, 670. [23]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 48. *[24]இதற்கான உதாரணங்களில் எத்தியோப்பிய மந்திரி (நடபடிகள் 8) மற்றும் கொர்நேலியு (நடபடிகள் 10; 11) ஆகியோர் உள்ளடங்குவர். [25]உங்கள் சொந்த அனுபவத்தில் இருந்து ஓரிரு உதாரணங்களை உட்செருக நீங்கள் விரும்பலாம். [26]இந்தச் சொற்றொடர் லூக்கா 15:16ல் இருந்து கடன் பெறப்பட்டுள்ளது.* [27]Tolle, 48. [28]*பெயர் அறியப்படாத வானொலிப் பிரசங்கியார்,* quoted by Ricky Bugher, auditorium adult class, Eastside church of Christ, Midwest City, Oklahoma, March 26, 2006. [29]*1 தீமோத்தேயு 5:6 ஆவிக்குரிய மரணத்தைப் பற்றிப் பேசுகிறது.* [30]Dale Hartman, sermon preached at the Eastside church of Christ, Midwest City, Oklahoma, August 20, 2006.

5

ஒரு வேதாகம பூமராங்

[மத்தேயு 5:7]

ஆஸ்திரேலியாவின் ஆதிகுடிகளால்[1] கண்டுபிடிக்கப்பட்ட, பூமராங்[2] என்ற - அதிசயமான வளைந்த கோல்போன்ற - கருவியைப் பற்றி நம்மில் பலர் கேள்விப்பட்டிருக்கிறோம், இது காற்றில் சுலபமாகப் பறந்துசென்று அதை எறிந்தவரிடத்திற்கே திரும்பி வருகிறது.[3]

அதாவது, பூமராங் என்பது சரியாக எறியப்படும்போது, அதை எறிபவரிடத்திற்கே அது திரும்பி வருகிறது. எனது குடும்பத்தினருடன் நான் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தபோது நான், பல பூமராங்குகளை வாங்கி அவற்றை எறிய முயற்சி செய்தேன். அவைகள் சரியாக என்னை நோக்கி வரவில்லை என்றாலும், எனது திசையில் திரும்பி வந்தன. மோசமாக எறியப்பட்ட பூமராங்குகளைத் திரும்பி மீட்டு எடுப்பதற்கு நான் ஒரு சில மரங்களின் மீது ஏற வேண்டியிருந்தது.

வேதாகமத்தில் ஆவிக்குரிய பல "பூமராங்குகள்" உள்ளன. சரியாக எறியப்படாத எனது பூமராங்குகளைப் போலின்றி, இவைகள் *எப்போதுமே* இவற்றை "வெளியே எறிந்தவரிடம்" மிகச் சரியாகத் திரும்பி வருகின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்:

> *... மனுஷன் எதை விதைக்கிறானோ [பூமராங் சுழன்று கொண்டே போகிறது] அதையே அறுப்பான் [இங்கு அதை எறிபவரிடம் அது திரும்பி வருகிறது] (கலாத்தியர் 6:7).*

> *உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் [வெளியேபோகிறது] போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் [திரும்பி வருகிறது] (பிரசங்கி 11:1).*

> *"ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே [வெளியேறுதல்] நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் [திரும்பி வருதல்]" (மத்தேயு 7:2).[4]*

> *"கொடுங்கள் [வெளியேறுதல்], அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள் [திரும்பி வருதல்]; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ [வெளியேறுதல்] அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் [திரும்பி வருதல்] என்றார்" (லூக்கா 6:38).*

நாம் இப்போது பாக்கியங்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறோம். இவற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியில் நாம்,

வேதாகமத்தின் இந்த பூமராங்கைக் காணுகிறோம்: “இரக்கமுள்ளவர்கள் [வெளியேறுதல்] பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் [திரும்பி வருதல்]” (மத்தேயு 5:7). பெரும்பாலும் இரக்கமற்றதாக இருக்கும் இந்த உலகத்தில், இரக்கம் நிறைந்தவர்களாக உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் மிகவும் தேவைப்படுகின்றனர். இந்த பாக்கியத்துடன் வலியுறுத்தத்தில் ஒரு மாற்றம் உள்ளது என்று பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர். D. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> … முதல் மூன்று பாக்கியங்கள் … - ஆவியில் எளிமை, பாவத்தன்மையால் துயரப்படுதல், சுயத்தின் இயல்பை உண்மையாகப் புரிந்துகொள்ளுதலின் விளைவாக ஏற்படும் சாந்தகுணம் போன்ற - தேவைகளைப் பற்றிய நமது உணர்வைக் குறித்தவையாக உள்ளன … பின்பு தேவையின் திருப்தி பற்றிய மாபெரும் கூற்று வருகிறது “நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவான்கள்”; அங்கிருந்து நாம் அந்த திருப்தியின் விளைவை எதிர்நோக்குகிறோம். … நாம் இரக்கம் நிறைந்தவர்களாக, இருதயத்தில் சுத்தம் உள்ளவர்களாக, சமாதானம் பண்ணுகிறவர்களாக ஆகிறோம்.[5]

“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் …”

இரக்கம் என்பதன் அர்த்தம்

எனது மேஜையில் உள்ள அகராதியில், “இரக்கம்” என்பதை, “பரிவிரக்கமாக நடத்துதல், குறிப்பாக ஒருவர் தம் அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களை அவ்வாறு நடத்துதல் … இரக்கம் மற்றும் மன்னித்தலின் நிலைப்பாடு” என்று விளக்கப்படுத்துகிறது.[6] “இரக்கம்” என்று மொழிபெயர்க்கப்படும் பொதுவான கிரேக்க வார்த்தை (*eleos*) “பரிதாபமான மற்றும் துன்பப்படுகிறவர் மீது இரக்கம் அல்லது நல்ல சித்தமும், அவர்களை விடுவிக்கும் விருப்பமும் கொண்டிருத்தல்” என்று அர்த்தப்படுகிறது.[7] இரக்கம் என்பது எதிர்மறையாகவும் விளக்கப்படுத்தப் படக்கூடும். எதிர்த்துக் தாக்குதல் என்பது நமது பலத்தில் உள்ளபோது, நம்மைத் தவறாக நடத்திய ஒருவருக்கு அவர் பெறத் தகுதியுள்ள வகையில் நடத்தாமல் இருத்தல், அவருக்கு இரக்கம் காண்பித்தல், இரக்கத்தையும் மன்னிப்பையும் அவருக்கு நீட்டித்தல் என்று அர்த்தப்படுகிறது. நேர்மறையாகக் கண்ணோக்குகையில் இரக்கம் என்பது பல அத்தியாவசியமான அம்சங்களைக் கொண்டுள்ளது. இது தேவையில் இருப்போரின் துன்பநிலையினால் அசைக்கப்படுகிற மனதின் நிலைப்பாடாக உள்ளது. இது தேவையில் இருப்போருக்கு உதவுவதற்கான விருப்பத்தைத் தூண்டுகிறது மற்றும் உதவுவதற்கு ஒருவர் உண்மையில் செய்யக்கூடியவற்றினால் விளக்கப்படுத்தப்படுகிறது. இரக்கம் என்பது *இருதயம்* மற்றும் *கரங்கள்* ஆகிய இரண்டின் செயல் களையும் உள்ளடக்குகிறது என்று யாரோ ஒருவர் கூறியிருக்கிறார். இருதயம் அசைக்கப்படாத வரையிலும் மற்றும் உதவுவதற்குக் கரங்கள் சென்று அடையாத வரையிலும் அது இரக்கமாக இருப்பதில்லை.

நல்ல சமாரியன் உவமையில் இரக்கத்தின் பல்வேறு அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளன (லூக்கா 10). சாலையோரத்தில் ஒரு மனிதன்

அடிக்கப்பட்டுக் குற்றுயுராகக் கிடந்தான் (வசனம் 30). பல மக்கள் அவ்வழியே சென்றனர் (வசனங்கள் 31, 32). அந்த மனிதனை அப்படிப் பரிதாபமான நிலையில் கண்டது பற்றி அவர்கள் நிச்சயமாகவே வருத்தப்பட்டனர், ஆனால் அவர்கள் எதையேனும் செய்வதற்குத் தூண்டப்படவில்லை. பின்பு ஒரு சமாரியன் அவ்வழியே கடந்து சென்றான். அவன் அந்த மனிதனைக் கண்டபோது, "மனதுருகினான்" (வசனம் 33) மற்றும் அவனுக்கு உதவுவதற்குத் தன்னால் இயன்றதைச் செய்தான். அவன் அந்த மனிதனின் காயங்களுக்குச் சிகிச்சை செய்து அவற்றைக் கட்டினான். அவனை ஒரு சத்திரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் காயமடைந்த அம்மனிதனுக்குத் தொடர்ந்து பராமரிப்பு அளிக்கச் செய்தான் (வசனங்கள் 34, 35). இந்தக் காரணத்தினால் அந்த சமாரியன், அம்மனிதனிடத்தில் *"இரக்கஞ் செய்தவன்"* என்று விவரிக்கப்பட்டான் (வசனம் 37).

மற்ற விவரிப்புகள் தரப்படலாம்,[8] ஆனால் இரக்கத்தின் பண்பு தேவனைக் கண்ணோக்குவதால் மிகச்சிறந்த வகையில் விவரிக்கப்படுகிறது. பிசாசானவன் "பொய்யுக்குப் பிதாவாக" இருக்கையில் (யோவான் 8:44), தேவன் "இரக்கங்களின் பிதாவாக" இருக்கிறார் (2 கொரிந்தியர் 1:3).[9] "கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறார்" என்பதால் (யாக்கோபு 5:11), அவர் "இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராக" இருக்கிறார் (எபேசியர் 2:4) என்பதால் நாம் எவ்வளவு நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்! தேவன் நீதியின் தேவனாக மாத்திரம் இருந்திருந்தால், மனிதகுலத்திற்கு நம்பிக்கை எதுவும் இருந்திருக்காது, ஏனெனில் "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி" னோம் (ரோமர் 3:23). இருப்பினும் அவர் அன்பின் தேவனாகவும் இருக்கிறார். அவர் "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங்கீதம் 103:14). அன்புகூரும் தேவன் என்ற வகையில் அவர் நம்மீது தமது இரக்கங்களைப் பொழிந்தார்: அவர் தமது குமாரனை நமது பாவங்களுக்காக மரிக்கும்படி அனுப்பினார்.

> ... சிலுவையின் மீது "இரக்கமும்[10] சத்தியமும் ஒன்றாகச் சந்தித்தன, நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்தன" (சங்கீதம் 85:10). மனிதனின் பாவம் அவனைத் தேவனுடைய நகரத்தில் இருந்து தடைசெய்கிறது என்று சத்தியம் கூறுகிறது; மனிதனின் குறைவுகளைக் கிறிஸ்துவின் இரத்தம் மூடட்டும் என்று இரக்கம் கூறுகிறது! பாவி பரலோகத்தின் கோட்டை மதில்களைக் கடந்து செல்லுதல் நீதியல்ல/சரியல்ல என்று நீதி கூறுகிறது; மனிதனுக்கும் அவனை உண்டாக்கினவருக்கும் இடையில் ஒப்புரவு ஏற்படும்படி கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கட்டும் என்று சமாதானம் கூறுகிறது![11]

தேவனுடைய இரக்கத்தை முற்றிலுமாகப் புரிந்துகொள்வதற்கு, இயேசுவின் வாழ்வில் அந்தப் பண்பு வெளிப்படுத்தப்படுவதைக் காணுதல் உதவுகிறது (காண்க யோவான் 14:9). இரக்கமே இயேசு இந்தப் பூமிக்கு வருவதற்குக் காரணமாயிற்று. இரக்கமே அவர் வியாதிப்பட்டவர்கள் மற்றும் துன்புற்றவர்கள் மத்தியில் உலாவக் காரணமாயிற்று. அவரது இரக்கம் துன்புற்ற மற்றும் வறிய மக்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் மேட்டிமையான பரிசேயர்கள் மற்றும் உறைந்த இருதயம் உள்ள சதுசேயர்கள் ஆகியோருக்கும் காண்பிக்கப்பட்டது

- மற்றும், ஆம், அது சுயதிருப்தி கொண்டிருந்த மற்றும் அவிசுவாசம் கொண்ட எருசலேம் மீதும் கூட காண்பிக்கப்பட்டது. அவரது இரக்கம் மனித துன்பங்களுக்குப் போலவே மனித பாவத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. அவரது இரக்கம் கடைசியில் அவரை சிலுவைக்கு இட்டுச் சென்றது, மற்றும் இப்போது அவர் பரலோகத்தில் நமது "இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராக" (எபிரெயர் 2:17) தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

இரக்கத்திற்கான தேவை

"தேவனுடைய இரக்கங்களை" (ரோமர் 12:1) நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், இயேசுவிடம் இருந்து பின்வரும் அறைகூவல் நமக்கு வருகிறது: "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" (லூக்கா 6:36). கர்த்தர் இரக்கமுள்ளவராயிருக்கிறது போல இரக்கமுள்ளவர்களாக இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? முதலாவதாக இது, நமது இருதயங்கள் *மற்றவர்களின் தேவைகளினால் தொடப்பட வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. மக்கள் இயேசுவினிடத்தில், "எங்களுக்கு இரங்கும்" என்று கெஞ்சினர் (காண்க மத்தேயு 9:27), மற்றும் அவர் அதைக் காண்பித்தார். அவர் "மனதுருகினார்" என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது (காண்க மத்தேயு 9:36; 14:14; 20:34; மாற்கு 1:41; 6:34). அதுபோன்றே நீங்களும் நானும் "... உருக்கமான இரக்கத்தை ... தரித்துக்கொண்டு" இருக்க வேண்டும் என்று கட்டளை இடப்பட்டுள்ளோம் (கொலோசெயர் 3:12).*

மோசமான காலங்களை அனுபவித்த ஒரு மனிதரைப் பற்றிய கதையானது ரால்ஃப் பம்ப்பஸ்[12] என்பவருக்குப் பிரியமான கதைகளில் ஒன்றாக உள்ளது. உண்மையில் பணம் தேவைப்படும் எவர் ஒருவருக்கும் கடன் கொடுக்கத் தமது வெறுப்புணர்வைக் காண்பிப்பதில் பிரபலமாயிருந்த ஒரு வங்கியாளரிடத்தில் இம்மனிதர் கடனுக்கு விண்ணப்பித்திருந்தார். இம்மனிதரின் கவலைமிகுந்த கதையைக் கேட்ட வங்கியாளர், "நான் ஒரு நல்ல மனிதன், எனவே உங்களிடம் ஒரு முன்மொழிதலை ஏற்படுத்த என்னை அனுமதியுங்கள். ஒரு செயற்கைக் கண்ணை எனக்குப் பொருத்துவதற்காக நான் இப்போதுதான் மிகப்பெரிய தொகையைச் செலவிட்டேன்." அது எனது உண்மையான கண்ணைப் போன்றே காணப்படுகிறது. இதோ எனது முன்மொழிதல்: எனது கண்களில் எந்தக் கண் செயற்கைக் கண் என்று நீங்கள் கூறமுடியும் என்றால், நான் உங்களுக்குப் பணம் கடனாகக் கொடுப்பேன். "உடனே அம்மனிதர் அந்த வங்கியாளரின் கண்களைச் சற்றுநேரம் உற்றுப்பார்த்தார். கடைசியாக அவர், இடது கண்தான் செயற்கைக் கண்" என்று கூறினார். வங்கியாளர் திகைத்துப்போனார். "நீங்கள் கூறியது சரியே, ஆனால் இடது கண் தான் செயற்கையானது என்று உங்களால் எப்படிக் கூற முடிந்தது?" என்று அவர் கேட்டார். அதற்கு அம்மனிதர், "ஏனென்றால் உங்கள் இடது கண்ணில் பரிவிரக்கத்தின் சிறு சுடர் ஒன்றை நான் கண்டேன்" என்று பதில் அளித்தார்.

மக்கள் நமது கண்களுக்குள் பார்க்கும்போது, அவர்கள் உண்மையான பரிவிரக்கத்தைக் காண முடியுமா? இயேசுவைப் போன்று நாமும் மற்றவர்களின் பலவீனங்களைக் காணுகையில் பரிவிரக்கம் கொள்வது அவசியமாக உள்ளது (காண்க எபிரெயர் 4:15). நமக்கு, மற்றவர்களின் தேவைகளால் தொடப்படும் இருதயங்கள் தேவையாயிருக்கின்றன.

உதவுவதற்குச் சென்றடையும் *கரங்களும்* நமக்குத் தேவை. இருதயமும் கரங்களும் ஈடுபடாத வரையிலும் அது உண்மையான இரக்கமாக இருப்பதில்லை என்பதை நினைவில் வையுங்கள். நாம், "உடுக்கவும் அன்றாட உணவும் இல்லாத" சகோதர சகோதரிகளைக் கண்டால், அவர்களுக்காக வருத்தப்பட்டால் மாத்திரம் போதாது. நாம் "அவர்களுடைய சரீரத்திற்குத் தேவையானவற்றை கொடுப்பது" அவசியம் (யாக்கோபு 2:15, 16). இயேசுவைப் பற்றிப் பயன்படுத்தப்பட்ட பின்வரும் சொல்விளக்கத்தை நான் விரும்புகிறேன்: அவர் *"மனதுருகினார்"* (காண்க மத்தேயு 20:34; மாற்கு 1:41; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசு பரிவிரக்கத்தை உணர்ந்தபோது, அவர் உள்ளாக மனதுருகினார், பின்பு ஏதேனும் சிலவற்றைச் *செய்ய* அசைக்கப்பட்டார்; அவரது இரக்கம் வெளிப்படுத்தப்பட்டது (காண்க மாற்கு 5:19). அதுபோலவே, நீங்களும் நானும் "தன்தன் சகோதரனுக்குத் தயவும் ["mercy;" KJV] இரக்கமும் செய்ய" வேண்டும் (சகரியா 7:9).[13]

மீண்டுமாக, பாக்கியங்களின் இயல்பான வளர்நிலையை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள். தமது ஆவிக்குரிய தேவையை உணர்ந்து அறிகிற (பாக்கியம் எண் ஒன்று) மற்றும் அதன் காரணமாகத் துக்கம் அடைகிற நபர் (பாக்கியம் எண் இரண்டு) சாந்தமும் தாழ்மையும் உடையவராவார் (பாக்கியம் எண் மூன்று) மற்றும் அவர் ஆவிக்குரிய போஷாக்கின் மீது விருப்பம் கொண்டவராவார் (பாக்கியம் எண் நான்கு). தமது புரிந்து கொள்ளுதலில் இவ்வளவு தூரம் வந்துள்ள ஒருவர், தாம் கொண்டுள்ள அதே ஆவிக்குரிய தேவைகளையும் அதே ஆவிக்குரிய குறைபாடுகளையும் மற்றவர்களும் கொண்டுள்ளனர் என்பதைப் உணர்ந்து அறிவார். இது அவர்களை நடத்தும்போது உருக்கம், அனுதாபம், இரக்கம் மற்றும் அன்பு நிறைந்தவராய் இருக்கும்படித் தூண்டவேண்டும்.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் நம்மையே மதிப்பீடு செய்தல் என்பது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! நம்மை நாமே, "நான் இரக்கம் நிறைந்தவனாக இருக்கிறேனா? அல்லது மற்றவர்களைக் குறித்து கவலைப்படாத அளவுக்கு, நான் எனது சொந்தத் தேவைகள் மற்றும் பிரச்சனைகளிலேயே கவனம் குவித்திருக்கிறேனா?" என்று கேட்டுக்கொள்வோமாக. ஓசியா 6:6ல் கர்த்தர், "பலியை அல்ல இரக்கத்தையும், ... விரும்புகிறேன்" என்று கூறினார். இவ்வசனத்தில், LXX வேதாகமத்தில் வழக்கமாக *eleos* ("mercy") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை NASB வேதாகமத்தில் "loyalty" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (தமிழில் இது "இரக்கம்" என்றே உள்ளது). KJV வேதாகமத்தில், "For I desired mercy, and not sacrifice" என்றுள்ளது. இயேசு புதிய ஏற்பாட்டில், ஓசியா 6:6ஐ இருமுறை மேற்கோள் காண்பித்தார், மற்றும் அந்த ஒவ்வொரு முறையிலும் அவர் தமது உரையைக் கேட்பவர்களிடத்தில், அவ்வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்தின என்று கற்றுக் கொள்ளும்படி அறைகூவல் விடுத்தார் (மத்தேயு 9:13; 12:7). தேவன் பலியை விரும்புகிறாரா?[14] ஆம், ஆனால் இரக்கமில்லாத பலி மதிப்பில்லாததாக இருக்கிறது. தவறாகப் புரிந்துகொள்ளப்படும் என்ற இடர்ப்பாட்டில் நான் ஒன்று கூற விரும்புகிறேன் - ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்குதல் ஆகியவை முக்கியமானவையாக உள்ளன, அத்தியாவசியமாகக் கூட உள்ளன - ஆனால் நமது இருதயங்களில் பரிவிரக்கமோ அல்லது இரக்கமோ இல்லை என்றால், தேவனுடைய சித்தத்துடன் ஒன்றிப்போகுதல் என்ற வகையில்

நமது புறம்பான செயல்கள், வெற்றுச் சைகைகள் என்பதைவிடச் சற்றே அதிகமானதாக மாத்திரமே இருக்கும் (1 கொரிந்தியர் 13:1-3 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

நமது வேதவசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடரைக் கவனிக்கவும்: "*இரக்கமுள்ளவர்கள்* பாக்கியவான்கள்." "இரக்கமுள்ளவர்கள்" என்பதற்கான ஆங்கிலச் சொல்லான "merciful" என்பது "இரக்கத்தினால் நிறைந்திருத்தல்" என்று அர்த்தப்படுகிறது.[15] வயது முதிர்ந்த மனிதர் ஒருவரிடத்தில், அவர் ஒரு கிறிஸ்தவரா என்று கேட்கப்பட்டது. அவர், "[குறிப்பிட்ட சில] இடங்களில் [நான் கிறிஸ்தவன்]" என்று பதில் அளித்தார்.[16] நாம் "[குறிப்பிட்ட சில] இடங்களில்" மாத்திரம் கிறிஸ்தவர்களாக இருப்பது கூடாது. "இரக்கமுள்ளவர்களாக" இருத்தல் என்பது இரக்கத்தின் அவ்வப்போதான, தனிப்படுத்தப்பட்ட செயல்பாட்டைக் குறிப்பதில்லை. மாறாக இது, அக்கறை செலுத்துதல் மற்றும் உதவிசெய்தல் ஆகியவற்றைக் கொண்ட வாழ்வுநடையைக் குறிக்கிறது. நாம் சுய - மையம் கொண்டவர்களாக அல்ல, ஆனால் மற்றவர்கள் மீது "இரக்கம் நிறைந்தவர்களாக" இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக.

"... அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."

நமக்கு இரக்கம் தேவைப்படுகிறதா? எனது பாட்டியார் தமது கண்களைச் சுழற்றி, தமது கரங்களை ஆகாயத்தை நோக்கித் தூக்கி, "ஓ, ஆம்!" என்று வியப்படைந்திருப்பார்கள். கடந்த காலத்தைக் கண்ணோக்குங்கள். இரக்கம் இல்லாதிருந்தால் இது வரையிலும் நாம் எவ்வாறு உயிர் பிழைத்திருக்க முடிந்திருக்கும்? நிகழ்காலத்தைக் கண்ணோக்குங்கள். இன்றைய நாளில் நமக்குத் தேவனுடைய இரக்கம் எவ்வளவாகத் தேவைப்படுகிறது! எதிர்காலத்தைக் கண்ணோக்குங்கள். அது இன்றி நாம் எவ்வாறு தொடர்ந்து செல்ல முடியும்? இருப்பினும் அந்த இரக்கமானது, இரக்கமுள்ளவர்களுக்கே வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நமது வேதவசனப் பகுதியில் உள்ள "அவர்கள்" என்பது அழுத்தமூட்டப் பட்டதாக உள்ளது:[17] "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; *அவர்கள்* இரக்கம் பெறுவார்கள்." பூமாராங் சுற்றிச் சுழன்று வெளியே சென்றதை நாம் கண்டிருக்கிறோம்; இப்போது அது பின்னோக்கிப் பறந்து வருவதைக் கவனிப்போமாக.

இந்த வாழ்வில் இரக்கம்

இயேசு கூறியபடி, "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (நடபடிகள் 20:35) என்பதால், இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்களாக உள்ளனர். ஞானி, "தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 14:21). வில்லியம் ஷேக்ஸ்பியருடைய பாத்திரப் படைப்புக்களில் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இரக்கத்தின் பண்பு ... வானத்தில் இருந்து வரும் மெல்லிய மழைத்தூறல் போன்று சொட்டுகிறது
> அது கீழான இடங்களின் மீது பொழிகிறது: அது இருமுறை ஆசீர்வதிக்கிறது:

அது கொடுக்கிறவரை ஆசீர்வதிக்கிறது, மற்றும் பெறுகிறவரையும் ஆசீர்வதிக்கிறது.[18]

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ஏனெனில் அவர்கள் தங்களைச் சுற்றிலும் உள்ளவர்கள் இடமிருந்து இரக்கம் பெற்றுக்கொள்ள அதிகம் வாய்ப்பு உள்ளது. இது ஒரு பொதுவான உண்மையாக உள்ளது, ஆனால் இது முற்றான உண்மையாக இருப்பதில்லை - ஆனால் விதிப்படி, நாம் மற்றவர்களை எவ்வாறு நடத்துகிறோமோ அவ்வாறே அவர்களும் நம்மை நடத்துகின்றனர்.[19] நீங்கள் மற்றவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தீர்கள் என்றால், வழக்கமாக அவர்கள் உங்களைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பார்கள். நீங்கள் மற்றவர்களுக்கு "ஹலோ" கூறினால், அவர்கள் உங்களுக்கு "ஹலோ" கூற வாய்ப்பு உள்ளது. மற்றவர்கள் வியாதிப்பட்டு இருக்கும்போது நீங்கள் அவர்களுக்கு உதவினால், நீங்கள் வியாதிப்பட்டு இருக்கும்போது அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். இந்த சத்தியத்தின் எதிர்மறை உண்மையைப் பேதுரு பின்வருமாறு கொடுத்தார்: "நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?" (1 பேதுரு 3:13; காண்க நீதிமொழிகள் 16:7). இதை நாம், பொன்விதியின் (மத்தேயு 7:12) மறுதலை என்ற வகையில் நினைக்கலாம்: மற்றவர்களுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்களோ, அதையே அவர்கள் (வழக்கமாக) உங்களுக்குச் செய்வார்கள்.

இரக்கம் நிறைந்தவர்களுக்குத் தேவன் இரக்கம் நிறைந்தவராக இருப்பதால் அவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர் என்பது மிகவும் முக்கியமானதாகும். நாம் ஏழைகள்மீது இரக்கம் நிறைந்தவர்களாக இருந்தால், தேவன் நம்மை விடுவிப்பதாகக் கூறியுள்ளார். "சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 41:1). மற்றவர்களை மன்னிப்பதில் நாம் இரக்கம் நிறைந்தவர்களாக இருந்தால், அவர் நம்மை மன்னிப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார். "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத்தேயு 6:14).

இது, இரக்கம் நிறைந்தவர்களாகவும் மன்னிப்பவர்களாகவும் இருத்தல் என்பதுதான் தேவன் விரும்புகிற மற்றும் கேட்டுக்கொள்கிற யாவுமாக உள்ளது என்று அர்த்தப்படுவதில்லை. "நாம் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற *ஒவ்வொரு* வார்த்தையின்" படியும் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 4:4; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இருப்பினும் இது, [மக்களிடத்தில்] மற்ற எல்லா விஷயங்களும் சமமாக இருக்கையில், இரக்கம் நிறைந்த மனிதரே ஆசீர்வதிக்கப்படுவார் என்று அர்த்தப்படுகிறது. நீங்கள் இதை எவ்விதமாகக் கண்ணோக்கினாலும், "தயையுள்ள மனுஷன் தன் ஆத்துமாவுக்கு நன்மை செய்துகொள்ளுகிறான்" (நீதிமொழிகள் 11:17).

இனிவரும் வாழ்வில் இரக்கம்

நமக்கு இப்போது இரக்கம் தேவைப்படுகிறது, ஆனால் நியாயத்தீர்ப்பில் நாம் தேவனுடைய அரியணைக்கு முன்பாக வரும்போது, இது நமக்கு இன்னும் அதிகமாகத் தேவைப்படும். அந்த வேளையில் நம்மீது அவரது இரக்கம் ஓரளவுக்கு, நாம் இரக்கம் நிறைந்தவர்களாக இருந்ததைச் சார்ந்ததாக இருக்கும்.

பவுல் பின்வருமாறு எழுதினார்:

> *ஒநேசிப்போருவின் வீட்டாருக்குத் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை; அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான். அந்நாளிலே [நியாயத்தீர்ப்பின் நாளிலே] அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ்செய்வாராக (2 தீமோத்தேயு 1:16-18அ).*

இந்த வாழ்வில் நாம் இரக்கம் இல்லாதவர்களாக இருந்தால் என்னவாகும்? அப்போது நாம் இரக்கம் பெறமாட்டோம். மத்தேயு 18:23-35ல் இரக்கம் இல்லாத வேலைக்காரன் பற்றிய உவமையை இயேசு கூறினார். அந்த வேலைக்காரனின் எஜமானர் அவனுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் கடனை மன்னித்திருந்தார்,[20] ஆனால் அவன் தன்னிடத்தில் தனது சக வேலைக்காரன் பட்டிருந்த ஒரு சில ரூபாய் கடனை மன்னிக்காதிருந்தான். அவனது எஜமானர் அவனிடத்தில், "நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ" என்று கூறினார் (வசனம் 33). பின்பு அவனது எஜமானர், "கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்" (வசனம் 34). இயேசு பின்வரும் தெளிந்த அறிவுள்ள வார்த்தைகளுடன் இந்த உவமையை முடித்தார்: "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" (வசனம் 35).

யாக்கோபு 2:13ல் நாம், வேதாகமத்தில் உள்ளவற்றிலேயே மிகவும் கடுமையான வார்த்தைகளில் சிலவற்றைக் காணுகிறோம்: "ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்." இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பைக் கொண்டிருத்தல் என்பது நம்பிக்கையற்ற நிலையில் இருத்தலாகும், ஏனெனில் நாம் யாவரும் பாவிகளாக இருக்கிறோம் மற்றும் பாவத்தின் சம்பளம் மரணமாக (ரோமர் 3:23;6:23) ஆவிக்குரிய மற்றும் நித்திய மரணமாக உள்ளது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:8). நியாயத்தீர்ப்பு நாளில் எனக்கு இரக்கம் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நீங்கள் அவ்வாறு விரும்புவது இல்லையா? அப்படியென்றால் நீங்களும் நானும் இப்போது இரக்கம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

முடிவுரை

*வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் மீது இயேசு தமது "ஐயோக்களை" உரைத்தபோது, அவர்களிடத்தில் அவர், "நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் **இரக்கத்தையும்** விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 23:23; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இரக்கம் நிறைந்தவர்களாக இருத்தலைப் புறக்கணிக்காதிருப்பதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக. இயேசு சென்ற இடங்களில் எல்லாம் மக்கள், "இரங்கும்" என்று கதறினர் (காண்க மத்தேயு 9:27;*

15:22; 17:15; 20:30, 31). அதுபோன்றே உலகமானது இன்றைய நாட்களிலும் "இரங்கும்!" என்று கதறுகிறது. கர்த்தருடைய சீஷர்கள் என்ற வகையில், நாம் அந்தக் கதறுதலுக்குப் பதில் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவைப் போன்றே நாமும், உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் துன்புறும் எல்லார் மீதும் பரிவிரக்கம் கொண்டிருப்போமாக. இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."

உங்கள் இருதயங்களைப் பரிசோதித்துப் பார்த்து, அதில் மற்றவர்கள் மீது இரக்கம் உள்ளதா என்று காணும்படி நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான், நீங்கள் உங்கள் சொந்த ஆவிக்குரிய தேவைகளைப் பற்றி அக்கறை கொண்டிருக்கிறீர்களா இல்லையா என்பதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்படியும் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தேவனுடன் சரியான நிலையில் இல்லையென்றால், உங்களால் மற்றவர்களுக்கு உதவ இயலாது. நீங்கள் உங்களைத் தேவனுடைய இரக்கத்திற்கு விட்டிருக்கிறீர்களா? இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? மற்றும் நீங்கள் கீழ்ப்படிதலில் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி இருக்கிறீர்களா (யோவான் 8:24; 14:15)? நீங்கள் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற வேண்டியுள்ளதா (நடபடிகள் 8:36-38)? நீங்கள் கர்த்தருக்கு உங்கள் வாழ்வை மறுபடியும் ஒப்புவிக்க வேண்டியுள்ளதா (காண்க யாக்கோபு 5:19, 20)? நீண்ட காலத்திற்கு முன்பே, "உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்; நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை" என்று எழுதப்பட்டுள்ளது (2 நாளாகமம் 30:9). நீங்கள் அவ்வாறு செய்வது அவசியம் என்றால் நீங்கள் இன்றைக்கே அவரிடம் திரும்ப வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன்.

குறிப்புகள்

[1]இந்தப் பாடத்தின் தலைப்பு, ஹியூகோ மெக்கார்டு என்பவர் எழுதிய "A\ Boomerang," *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 37 என்ற தலைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. [2]"ஆதிகுடிகள்" என்பது ஆங்கிலத்தில் "Aborigines" என்று கூறப்படுகிறது, இது "தோற்றகாலக் குடிகள்" என்று அர்த்தப்படுகிறது (*The American Heritage Dictionary*, 4th ed. [2001], s.v. "aborigine"). ஆஸ்திரேலியாவில் இது அந்தக் கண்டத்திற்கு ஐரோப்பியக் குடிகள் வருவதற்கு முன்பே வாழ்ந்திருந்த மக்களைக் குறிக்கிறது. [3]திரும்பி வராத பூமராங் ஒன்றும் உள்ளது, இது பெரியதாகவும் கனமானதாகவும் உள்ளது, இது வேட்டையாடப் பயன்படுகிறது. இருப்பினும் பூமராங் என்பது திரும்பி வரும் கோல் என்றே பெரும்பான்மையானவர்கள் நினைப்பதால் இவ்விடத்தில் இதை விளக்கப்படுத்த அவசியமில்லை. [4]இந்தக் கொள்கைக்கான ஒரு உதாரணம் நியாயாதிபதிகள் 1:7ல் காணப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 18:6, 7ல் மகாபாபிலோனுக்கு விதிக்கப்பட்ட உறையவைக்கும் தண்டனை இன்னொரு உதாரணமாக உள்ளது. [5]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount*, vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 107. [6]*The American Heritage Dictionary*, 4th ed. (2001), s.v. "mercy." [7]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T.

Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 203. [8]எடுத்துக்காட்டாக, ஊதாரி மகன் உவமையில், மகன் திரும்பி வந்தபோது அவன் மீது தந்தை இரக்கம் காண்பித்தார். [9]"இரக்கங்கள்" என்பது *eleos: oiktirmos,* என்பதன் ஒருபொருள் சொல்லாக உள்ளது, இது "கருணை, மற்றவர்களின் துன்பங்களுக்காகப் பரிவிக்கம் கொள்ளுதல்" என்பதைக் குறிக்கிறது (W. E. Vine, Merrill F. Unger, and Willam White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testment Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 404). [10]இந்த மேற்கோள் KJV வேதாகமத்தில் இருந்து வருகிறது. NASB வேதாகமத்தில் "mercy" என்பதற்குப் பதிலாக "lovingkindness" என்றுள்ளது. "Lovingkindness" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை [*hesed* or *chesed*] LXX (அல்லது செப்துவஜிந்த் எனப்படும் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில்) எப்போதுமே "mercy" [*eleos*] என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (Ibid., 142.)

[11]McCord, *38.* [12]பல ஆண்டுகளுக்கு முன்னர், ரால்ஃப் பம்ப்பஸ் என்பவர் பல பகுதிகளில் வேதாகமப் பள்ளிப் பணிமனைகளில் மிகச்சிறந்த பேச்சாளராக இருந்தார். பல சந்தர்ப்பங்களில் அவர் இந்தக் கதையைக் கூறியதை நான் கேட்டிருக்கிறேன். [13]இது உங்கள் உரையைக் கேட்பவர்களின் குறிப்பிட்ட சில தேவைகளைப் பற்றி நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்த உகந்த இடமாக இருக்கும்: மன்னிப்பவர்களாக இருக்க வேண்டிய தேவை, இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டிய தேவை, மற்றவர்களுக்கு உதவ வேண்டிய தேவை, முதலியன. இந்தப் பாடம் ஒரு வகுப்பில் பயன்படுத்தப்பட்டால், மாணவர்கள் இரக்கத்தை வெளிப்படுத்தக் கூடிய வழியை அவர்களே பட்டியல் இடும்படி கேட்டுக்கொள்ளலாம். [14]பழைய ஏற்பாட்டில், மிருக பலிகள் செலுத்தும்படி கேட்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் நமது வாழ்வே பலியாக இருக்க வேண்டியுள்ளது (காண்க ரோமர் 12:1, 2). [15]"Merciful" என்பதற்கான *eleemon* என்ற கிரேக்கச் சொல், *eleos* என்பதன் பெயர் உரிச்சொல் வடிவமாகும். இது "பரிவிரக்கத்தில் செயல்முனைப்புடன்" இருத்தல் என்பதைக் குறிக்கிறது (Vine, 404). [16]Don Humphrey, *The Beatitudes* (Burlington, Mass.: Eternity Press, 1969), 44. [17]"அவர்கள்" என்பது "அவர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு முன்னால் "அவர்கள்" என்ற வார்த்தையை உள்ளடக்குகிற வினைச்சொல் வடிவம் ஒன்றை இணைத்து தரப்படுவதால் வலியுறுத்தப்பட்டுள்ளது. [18]William Shakespeare, *The Merchant of Venice* 4.1.184. [19]சமீபத்தில் நான் ஒரு வகுப்பில் இந்தக் பாடத்தைப் போதித்தபோது, இரக்கம் நிறைந்தவர்களுக்கு இரக்கம் திரும்பி வருதல் பற்றிய உதாரணங்களைக் கேட்டேன், அப்போது வகுப்பில் இருந்தவர்கள் உதாரணங்களைப் பற்றிச் சிந்திக்கப் போராடினர். நாம் யாரேனும் ஒருவரைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கும்போது, அவர் திரும்பப் புன்முறுவல் பூக்கிறார், அதைப்பற்றி நாம் சிறிதளவே நினைக்கிறோம். நாம் அதை எதிர் பார்க்கிறோம். நாம் யாரேனும் ஒருவரைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கும்போது, அவர் திரும்பப் புன்முறுவல் பூக்காதிருந்தால், அல்லது நாம் யாரேனும் ஒருவருக்கு நன்மை செய்திருந்து அவர் நமக்குத் திரும்பத் தயவைக் காண்பிக்காது இருந்தால், அதை நாம் நினைவில் வைத்துக் கொள்கிறோம். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் விதியை அல்ல, ஆனால் விதிவிலக்கையே நினைவில் வைத்துக் கொள்கிறோம். [20]இந்த வேலக்காரன் பட்டிருந்த கடனை நவீனகாலச் சொற்றொடர்களில் விளக்கப்படுத்துதல் கடினமாக உள்ளது; ஆனால் அது திரும்பிச் செலுத்த இயலாத கடனாக இருந்தது. வேலைக்காரன் தனது எஜமானரின் இரக்கத்தையே முற்றிலும் சார்ந்திருந்தான்.

6

இருதயத்தில் "வசந்தகால சுத்தம் செய்தல்"

(மத்தேயு 5:8)

நாம் ஆறாவது பாக்கியத்திற்கு வந்திருக்கிறோம்: "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத்தேயு 5:8). இந்த பாக்கியம், "பரிசுத்த வேதவசனங்களின் வட்டாரம் எங்கிலும் காணப்பட்டிருக்கும் மாபெரும் கூற்றுக்களில் ஒன்று" என்று அழைக்கப்பட்டுள்ளது.[1] இது வேதவசனங்களில் மிகவும் அறைகூவல் விடுக்கும் கூற்றுக்களில் ஒன்று என்பது நிச்சயம். இந்தப் பாடங்களை நான் தயாரிக்கையில், ஒவ்வொரு பாக்கியமும், நான் இருக்க வேண்டிய வகையில் எவ்வளவாகக் குறைவுபடுகிறேன் என்று என்னை அறியச் செய்தன. இருப்பினும் இவற்றில் எதுவும் இந்த பாக்கியத்தின் அளவுக்கு அதைச் சுட்டிக்காண்பிக்கவில்லை: "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..." எனது மிகக் கசப்பான யுத்தங்கள் என் இருதயத்தில் போராடப்பட்டன. இந்தப் பாக்கியத்தை நாம் படிக்கையில், ஒரு வேளை இது நீங்களும் மனம் வருந்தி மண்டியிட்டு விழக் காரணமாகலாம்.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..."

"இருதயம்" எவ்வளவு முக்கியமானதாக உள்ளது?

மத்தேயு 5:8ல் நாம் கிறிஸ்தவத்தின் சாராம்சத்தைக் காண்பதாகக் கூறப்பட்டுள்ளது, ஏனெனில் கிறிஸ்தவம் என்பது முதன்மையாக மற்றும் முக்கியமாக இருதயத்தின் மார்க்கமாக உள்ளது. நாம் தேவனை நமது முழு இருதயத்தோடு அன்புகூர வேண்டும் (மத்தேயு 22:37), நாம் மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும் (18:35) மற்றும் வசனத்தை நாம் "உண்மையும் நன்மையுமான இருதயத்திலே" ஏற்றுக்கொள்ள வேண்டும் (லூக்கா 8:15) என்று இயேசு கூறினார். பவுல், முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது "உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் *மனப்பூர்வமாய்க்* கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று எழுதினார் (ரோமர் 6:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "இருதயத்தில் இருந்து வருகிற"/"மனப்பூர்வமான வகையில் உள்ள" மார்க்கத்தின் முக்கியத்துவம் அதிகமாக வலியுறுத்தப்பட இயலாது. சாமுவேலிடத்தில் தேவன், "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்று கூறினார் (1 சாமுவேல் 16:7;

காண்க நீதிமொழிகள் 21:2). சாலொமோன் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 4:23).

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருத்தல் பற்றி இயேசு பேசியபோது, அவர் உண்மையான மார்க்கத்தையும் யூதத்துவத்தில் மார்க்கம் என்று நடைமுறைப்படுத்தப் பட்டுக்கொண்டு இருந்ததையும் நேரெதிராக ஒப்பிட்டார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். பரிசேயர்கள் புறம்பான சடங்குகளையும் சடங்காச்சாரத் தூய்மையையும் வலியுறுத்திய அதே வேளையில் இருதயத்தைப் புறக்கணித்திருந்தனர். இவர்களுக்கு இயேசு, "மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது ... என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்" என்று கூறினார் (மத்தேயு 15:7-9; காண்க ஏசாயா 29:13). மீண்டுமாகக் கர்த்தர் பின்வருமாறு கூறினார்:

> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது ...
>
> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் (மத்தேயு 23:25-28).

இருப்பினும் நாம், பரிசேயர்கள் மாத்திரமே புறம்பான தோற்றத்திற்குக் கவனம் கொடுத்த அதே வேளையில் இருதயத்தைப் புறக்கணித்த குற்றம் செய்தனர் என்று நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் சரீரத்தில் உறுப்புக்கள் என்ற வகையில் நாமும்கூட, மார்க்கத்தின் புறம்பான வெளிப்பாடுகளை வலியுறுத்தும் அதே வேளையில் இருதயத்தைப் புறக்கணிக்கும் குற்றம் செய்தவர்களாக இருக்கக் கூடும். புறம்பான வெளிப்பாடுகள் மிகவும் முக்கியமானவையாக இருக்கும் அதே வேளையில், அவைகள் "இருதயத்தில் இருந்து" வரவில்லை என்றால் அவைகள் ஒன்றுமில்லை என்றே எண்ணப்படும்.

"இருதயம் என்றால் என்ன?

சுத்தமுள்ளவர்களாக இருப்பதற்கு உண்மையிலேயே தேவைப்படுவது என்ன என்பதை நிலைநாட்ட நாம் சற்று நேரத்தை எடுத்துக்கொள்வது ஒருவேளை அவசியமாக இருக்கலாம். "இருதயம்" என்றால் என்ன? மத்தேயு 5:8ல் "இருதயம்" என்ற வார்த்தை, நாம் "cardiac" என்ற வார்த்தையைப் பெறுகிற *kardia* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இது "இருதயத்தின் அல்லது இருதயத்திற்கு அருகில்" என்று அர்த்தப்படுகிறது.[2] உடல்ரீதியான இருதயம்

என்பது உடல்ரீதியான வாழ்வின் முதன்மை உறுப்பாக உள்ளது (காண்க லேவியராகமம் 17:11). "ஒரு சுலபமான மாறுதலின் மூலம் இவ்வார்த்தை மனிதனின் முற்றான மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான நடவடிக்கையாக, அதாவது பகுத்தறிகிற மற்றும் உணர்வுப்பூர்வமான என்ற இரு கூறுகளாக நிலைநிற்க வந்தது."[3]

இருதயம் என்பது, உணர்வின் மையம் என்றே பொதுவாக நாம் நினைக்கிறோம், அது அவ்வாறே உள்ளது. நாம் நமது இருதயங்களில் தேவன்மீது அன்புகூருகிறோம் (லூக்கா 10:27), மற்றும் நாம் "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூர" வேண்டியவர்களாக இருக்கிறோம் (1 பேதுரு 1:22). இருப்பினும் "இருதயம்" என்பதன் வேதாகமப் பயன்பாடு, உணர்வுகள் என்பதோடு இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. சிலவேளைகளில் இந்தச் சொற்றொடர், புத்திக்கூர்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. தங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் *சிந்தித்தவர்களைப்* பற்றி இயேசு பேசினார் (மத்தேயு 9:4). மீண்டுமாக "இருதயம்" என்ற வார்த்தை, மனதின் முடிவு - செய்யும் பகுதியான மனவிருப்பம் என்பதுடன் இணைவு கொண்டுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரெயர் 4:12 "இருதயத்தின் நினைவுகளையும் *யோசனைகளையும்*" பற்றிக் குறிப்பிடுகிறது (என்னால் வலியுறுத்தப்படுகிறது). வேதாகமத்தில் "இருதயம்" என்பது மனிதனின் உணர்ச்சிகள், அவனுடைய சிந்தனைகள், மற்றும் அவனுடைய தூண்டுதல்கள் ஆகியவற்றின் இருப்பிடமாக உள்ளது. நமது வேதபாடப்பகுதியில், "இருதயம்" என்ற வார்த்தை ஒரு தனிநபருக்குள்ளாக இருக்கிற *யாவற்றையும்* குறிக்கிறது. அது ஒரு நபரின் மையமாக - அவரது இருப்பு மற்றும் ஆளுமைத்துவத்தின் மையமாக உள்ளது.

"தூய்மையாக" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?

நாம் நமது இருப்பின் மையத்தில் *தூய்மையாக* இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார். "தூய்மை" என்பது *katharos* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Katharos* என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஏழு முறைகள் காணப்படுகிறது[4] மற்றும் இது பொதுவாக "தூய்மை" அல்லது "சுத்தம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[5] இவ்வார்த்தை, உடல்ரீதியான அல்லது சடங்காச்சாரமான சுத்தம் பற்றிக் குறிப்பிடப் பயன்படுத்தப்படக்கூடும் (காண்க மத்தேயு 23:25), ஆனால் இயேசு, உள்ளான சுத்தத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார். *Katharos* என்பது ஒன்றின்மீது ஒன்று கவிந்ததான குறைந்த பட்சம் மூன்று கருத்துக்களை உள்ளடக்குகிறது, அவற்றில் இரண்டு ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன.[6]

(1) "சுத்தம்." *Katharos* என்ற வார்த்தை, அழுக்காயிருந்து சுத்தமாகத் துவைக்கப்பட்ட உடைக்குப் பயன்படுத்தப்பட்டது. தூய்மையான இருதயம் என்பது சுத்தமான இருதயமாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று கூறினார் (எபிரெயர் 12:14).

(2) "தூய்மை." *Katharos* என்ற வார்த்தை, உமி பறக்கடிக்கப்படும்படி தூற்றபட்ட தானியத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. தூய்மையான இருதயங்கள்

அசுத்தம் நீக்கப்பட்டவையாக உள்ளன. தாவீது, "... சுத்திகரியும், அப்போது நான் சுத்தமாவேன்"; என்று ஜெபித்தார் (சங்கீதம் 51:7அ). *Katharos* என்பது சுத்தம் மற்றும் தூய்மை என்ற இரு கருத்துக்களையும் உள்ளடக்குகிறது. ஆனால் இன்னும் ஒரு காரணி இருக்கிறது.

(3) "ஒருமையாயிருக்கும் தன்மை." தூய்மையான பால் என்பதே முழுப்பாலாக உள்ளது; அதில் தண்ணீர் எதுவும் சேர்க்கப்பட்டு இருப்பதில்லை. தூய்மையான தங்கமே முழுத்தங்கமாக உள்ளது; அதில் உள்ள வேறு எந்தத் தாழ்ந்த உலோகமும் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. தூய்மையான இருதயம் என்பது கலப்படமான நோக்கங்களினால் நிரப்பப்பட்டு இருப்பதில்லை. கலப்படமான நோக்கங்கள் கொண்டுள்ளவர்களை விவரிக்க வேதாகமத்தில் "இருமனதாய்" மற்றும் "இருமனமுள்ளவர்கள்" என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்கீதம் "இருமனதாக" இருப்பவர்களைப் பற்றிப் பேசுகிறது (சங்கீதம் 12:2). யாக்கோபு "இருமனமுள்ளவர்" பற்றி எழுதினார் (யாக்கோபு 4:8). தாவீது, "நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை *ஒருமுகப்படுத்தும்*" என்று ஜெபித்தார் (சங்கீதம் 86:11இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நான், இருதய பரிசோதனைகளில் "சுத்தம்" மற்றும் "தூய்மை" ஆகியவற்றில் உயர்ந்த மதிப்பெண் பெறவில்லை. அசுத்தமான சிந்தனைகளில் இருந்து இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல் என்பது கடினமானதாக உள்ளது. இருப்பினும், "ஒருமைத்தன்மை" பரிசோதனையில்தான் நான் உண்மையில் தோல்வியடைகிறேன், ஏனெனில் இது நமது முன்னுரிமைகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பானவையாக உள்ளது. வில்லியம் பார்க்களே என்பவர், "ஒருவர் தமது சொந்த நோக்கங்களைப் பரிசீலனை செய்தல் என்பது அச்சுறுத்தும் மற்றும் வெட்கத்திற்குரிய விஷயமாக உள்ளது, ஏனெனில் நம்மில் மிகச்சிறந்தவர்கள் கூட முற்றிலும் கலப்படமற்ற நோக்கங்களுடன் செய்யக்கூடிய ஒருசில விஷயங்கள் இந்த உலகத்தில் உள்ளன" என்று எழுதினார்.[7] நீங்கள் கலப்படமற்ற நோக்கங்கள் பற்றி உங்களைப் பரிசோதிக்க விரும்புகிறீர்களா? அப்படியென்றால், பின்வருவன போன்ற கேள்விகளை நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். "கர்த்தருக்காக ஊழியம் செய்கிறபோது நான் அங்கீகரிக்கப் படாதிருந்தால் என்னவாகும்?"; "நான் பெறத்தகுதியான மதிப்பை மற்றவர்கள் பெற்றால் என்னவாகும்?"; "சரியானதைச் செய்ய முயற்சி செய்தலுக்காக நான் விமர்சிக்கப்பட்டால் என்னவாகும்?" இப்படிப்பட்ட நிகழ்வுகள் நமக்கு நடைபெறும்போது, நாம் வெளியேறிவிடும் படி சோதிக்கப்படுகிறோமா?

நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது இருதயங்கள் இருக்க வேண்டிய அளவுக்குத் தூய்மையாக இருப்பதில்லை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். நாம் எவ்வாறு தூய்மையான இருதயங்களைக் கொண்டிருக்க முடியும்? ஒருவேளை நமக்கு "ஒரு நல்ல வசந்தகால சுத்தம் செய்தல்" என்று அழைக்கப்படும் விஷயம் தேவையாக இருக்கலாம். குளிர்காலத்தின் முடிவில், வசந்தகாலம் கடைசியாக வந்து சேரும்போது, ஜன்னல்கள் விரியத் திறந்து வைக்கப்பட்டன. தரைவிரிப்புக்கள் அடித்துச் சுத்தம் செய்யப்படுவதற்காக வெளியே எடுத்துச் செல்லப்பட்டன. படுக்கையானது வெளியே காற்றாட எடுத்துச் செல்லப்பட்டது. வீடானது மேலிருந்து கீழ்வரை சுத்தம்

செய்யப்பட்டது. நமது இருதயங்களுக்கு அந்த வகையான முழு சுத்தம் செய்தல் தேவைப்படலாம்.

தேவைக்கு மிகுதியாகக் கூறுதல் என்ற இடர்ப்பாட்டில் நான், முந்திய பாக்கியங்களில் காணப்படும் பண்புகளை மேம்படுத்துதலே தொடக்க இடமாக உள்ளது என்று மீண்டும் குறிப்பிட என்னை அனுமதியுங்கள். நாம் நமது ஆவிக்குரிய தேவைகளை உணர்ந்து அறிந்துகொண்டால் (முதல் பாக்கியம்), ஆவிக்குரிய வகையில் நமது கைவிடப்பட்ட நிலையைக் குறித்துக் துயரப்பட்டால் (இரண்டாவது), சாந்தமும் கீழ்ப்படிதலுமுள்ள ஆவியை மேம்படுத்திக் கொண்டால் (மூன்றாவது), மற்றும் தேவனுடைய நீதியின்மீது பசியாக இருந்தால் (நான்காவது), இது நம்மை இரக்கம் நிறைந்தவர்களாகவும் (ஐந்தாவது), இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாகவும் (ஆறாவது) ஆக்குமளவுக்குச் செல்லும். இத்துடன் கூடுதலாக, நான் ஒருசில ஆலோசனைகளைக் கூற அனுமதியுங்கள். மற்ற எல்லாப் பாக்கியங்களிலும் உள்ளதைப் போலவே, நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும் தேவன் மாத்திரம் செய்யக்கூடிய விஷயமும் இதிலும் உள்ளன.

நாம் என்ன செய்ய முடியும் என்பதைக் கொண்டு தொடங்க என்னை அனுமதியுங்கள். ஏற்கனவே குறிப்பிட்டபடி, சாலொமோன் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 4:23). யாக்கோபு தமது வாசகர்களுக்கு, "உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" என்று கட்டளையிட்டார் (யாக்கோபு 4:8). இவ்விரு எழுத்தாளர்களுமே, கிறிஸ்தவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட இருதயங்களைக் கொண்டிருப்பதற்குத் *தங்களால்* முடிந்தவற்றைச் செய்யும்படி அறைகூவல் விடுத்தனர். *நீங்களும் நானும்* நமது இருதயங்களைப் பரிசுத்தமாக்குவதற்கு என்ன செய்ய முடியும்? முதலாவது, நமது தேவையை ஒப்புக்கொண்டு நமது இருதயங்களைச் சுத்தமாகக் காத்துக்கொள்ள நாம் மிகச்சிறந்த வகையில் செயல்பட வேண்டும்.

அடுத்தபடியாக, நாம் தேவனுடைய வசனத்தினால் நமது மனங்களை நிரப்ப வேண்டும். சங்கீதக்காரர், "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே" என்று எழுதினார் (சங்கீதம் 119:9). இயேசு தமது சீஷர்களிடத்தில், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் (யோவான் 15:3). நாம் வசனத்தை வாசித்தல், வசனத்தைப் படித்தல், வசனத்தைத் தியானித்தல் மற்றும் வசனத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகியவை அவசியமாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களிடத்தில், "கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால்" என்று கூறினார் (1 பேதுரு 1:22அ).

நமது இருதயங்களை வசனத்தினால் நிறைத்தலுடன் கூடுதலாக நாம் நமது மனங்களைப் பொதுவாக நல்ல சிந்தனைகளினால் நிரப்புவதும் அவசியமாக உள்ளது. நாம் எதைப் பார்க்கிறோம் மற்றும் எதைக் கேட்கிறோம் என்பதைப் பற்றி நாம் கவனம் எடுத்துக்கொள்வது அவசியமாகிறது.[8] பவுல், "... கற்புள்ளவைகளெவைகளோ, ... அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:8). எவரொருவரும் அசுத்தமான சிந்தனைகள் தங்கள் மனதில் நுழைவதைத் தடுக்க இயலாது, ஆனால் அவற்றிலேயே அவர்

நிலைத்திருக்கத் தேவையில்லை. "உங்கள் தலைக்குமேல் ஒரு பறவை பறப்பதை உங்களால் தடுக்க இயலாது, ஆனால் அது உங்கள் தலைமுடியில் ஒரு கூடு கட்டுவதை உங்களால் தடுக்க முடியும்" என்று கூறப்பட்டுள்ளது.

இவையாவும் உதவும், ஆனால் நம்மால் முடிந்த அளவு மிகவும் சிறப்பாகச் செய்தபின்பும்கூட, நமது இருதயம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். எரேமியா தீர்க்கதரிசி, "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" என்று எழுதினார் (எரேமியா 17:9அ). முடிவில் நாம் நம்மைத் தேவனுடைய இரக்கத்தின்கீழ் வைத்து, "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்" என்று ஜெபிக்க வேண்டும் (சங்கீதம் 51:10அ). இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தனத்தில் இருந்தபோது, அவர்களை ஊக்குவிக்க முயற்சி செய்த எசேக்கியேல், தேவன் அளித்த பின்வரும் வாக்குத்தத்தத்தைப் பகிர்ந்துகொண்டார்: "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு ..." (எசேக்கியல் 36:26அ). நாம் இயேசுவில் நம்பிக்கை வைக்க வரும்போது மற்றும் கிருபைக்கான நமது தேவையை ஒப்புக்கொள்ளும்போது, விசுவாசத்தினால் தேவன் நமது இருதயங்களைச் சுத்திகரிக்கிறார் (காண்க நடபடிகள் 15:9).

"... அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் [மகிழ்ச்சியானவர்கள்] ..." இருதயத்தில் சுத்தம் என்பது மகிழ்ச்சிக்கு என்ன செய்வதாக இருக்கிறது? நமது இருதயங்கள் பொறாமை மற்றும் பகைமை ஆகியவற்றை நீக்கியிருந்தன என்றால், நமது இருதயங்கள் மனநிறைவு உடையவையாக இருக்கும். நமது இருதயங்கள் வெறுப்புணர்வை நீக்கியிருந்தன என்றால், நாம் எந்த மனிதரையும் நமது விரோதியாக எண்ண மாட்டோம். ஜேம்ஸ் ஹேஸ்டிங்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> [இருதயத்தில் சுத்தம் என்பது] நம்மை வேதனையின் ஆயிரம் ஆதாரமூலங்கள், இருதயத்தின் உள்ளான கலகம் ... , மனச்சாட்சியின் கண்டனம்பண்ணும் குரல், உலகப்பிரகாரமான பெரும் ஏக்கம் நிறைந்த கவலை மற்றும் சலிப்பு, கசப்புணர்வு ... கோபம், விரோதம் [மற்றும்] ... மனநிறைவு இல்லாமை ஆகியவற்றில் இருந்து விடுவிக்கிறது.[9]

குறிப்பாக நமது தற்போதய வேதவசனப் பகுதியில், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மை, "அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்ற வாக்குத்தத்தத்துடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இதைக் காட்டிலும் அதிக மன எழுச்சி தரும் வாக்குத்தத்தம் வேறு எதுவும் இருக்க முடியாது. பழங்கால சமூகங்களின் பழக்கவழக்கங்களின்படி, ஒரு அரசரின் சமூகத்தில் வந்து அவரது முகத்தைக் காணுதல் என்பது கீர்த்திகளிலேயே மிக உயர்வான கீர்த்தியாக இருந்தது.[10] வேதாகமத்தின்படி, இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தேவனுடைய சமூகத்திற்குள் வரத் தகுதியானவர்களாக உள்ளனர். தாவீது, "யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில்

மாசில்லாதவனுமாயிருந்து ..." என்று எழுதினார் (சங்கீதம் 24:3, 4).

உடல்ரீதியாகக் காணும் திறனைப் பொறுத்த மட்டில், எல்லாரும் ஒரேவிதமான திறனைக் கொண்டிருப்பதில்லை. எனது சகோதரர் காய், அவரது பார்வையைப் பாதித்த குளுகோமா[11] என்ற நோயின் மிக அரிதான வகையைக் கொண்டுள்ளார். அவரால் காண முடியாதவை அதிகம் உள்ளன. அது கவலைக்குரியது, ஆனால் அது, அசுத்தமான இருதயங்களைக் கொண்டிருத்தலின் விளைவாக ஆவிக்குரிய பார்க்கும் திறன் பாதிக்கப்பட்டவர்களின் நிலையைப் போன்று அவ்வளவு பரிதாபமானது அல்ல. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தேவனைக் காண்பார்கள்.

இந்த வாழ்வில் தேவனைத் தரிசித்தல்

மீண்டுமாக நான், இவ்வாக்குத்தத்தம் இங்கும் இனிவரும் வாழ்விலும் நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது என்று கருத்துக் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். இங்கு - மற்றும் - இப்போது தேவனைத் தரிசித்தல் பற்றி, நாம் நமது உடல்ரீதியான கண்களால் அவரைத் தரிசிக்க இயலாது என்பதைப் புரிந்துகொள்ளுகிறோம். அவர் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24) மற்றும் "அதரிசனமானவராக" இருக்கிறார் (கொலோசெயர் 1:15). மோசேக்கு அவர், "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" என்று கூறினார் (யாத்திராகமம் 33:20). யோவான் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என்று கூறினார் (யோவான் 1:18அ).

இருப்பினும் நாம், விசுவாசக் கண்களைக் கொண்டு தேவனைக்காண/தரிசிக்க முடியும். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின் கூற்றுப்படி, "விசுவாசமானது ... காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11:1). அதே எழுத்தாளர், மோசே விசுவாசத்தினால் "அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தார்" என்று குறிப்பிட்டார் (வசனம் 27). பவுல், "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 4:17, 18).

- விசுவாசத்தினால் நாம், இயற்கையில் தேவனைக் காணுகிறோம் (காண்க சங்கீதம் 19:1).
- விசுவாசத்தினால் நாம், வரலாற்றில் தேவன் தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதைக் காணுகிறோம்.
- விசுவாசத்தினால் நாம், தேவன் நம்மீது பொழிந்துள்ள ஆசீர்வாதங்களில் அவரைக் காணுகிறோம். ஒரு எளிய உணவை அளிப்பதில், நமது வாழ்வை ஆசீர்வதிக்கும்படி நமக்குக் குடும்பங்களை அளிப்பதில், மற்றும் புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையின் முகத்தில் நாம் அவரைக் காணுகிறோம் (காண்க யாக்கோபு 1:17அ).
- விசுவாசத்தினால் நாம், தேவனுடைய மக்களின் வாழ்வில் அவரைக் காணுகிறோம்.
- விசுவாசத்தினால் நாம், நமது சொந்த வாழ்வில் இடர்ப்பாடுகள் நம்மை மூழ்கடிப்பதாக அச்சுறுத்துகிறபோதும்கூட, அவர் செயல்படுதலில்

அவரைக் காணுகிறோம் (காண்க ரோமர் 8:28).

- எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் இயேசுவுக்கு மிக நெருக்கமாக வருகையில், அவரை இன்னும் சிறப்பாக அறிந்துகொள்ள வருகையில், நாம் விசுவாசத்தினால் தேவனைக் காணுகிறோம்.

நம்மில் பெரும்பான்மையானவர்கள், நாம் எவற்றைக் காணத்தயாராக இருக்கிறோமோ, அவற்றைக் காணுகிறோம். எனது மகள் டெபீ, ஒரு பழைய, புறக்கணிக்கப்பட்ட வீட்டைக் காணுகிறாள், அவள் அந்த வீட்டிற்கு உள்ள திறன்வலிவைக் காணுகிறாள் - அது மீளக்கட்டுவிக்கப் பட்டபின்பு, எவ்வாறு இருக்கமுடியும் என்பதை அவள் காண்கிறாள். நான் ஒரு பழைய வீட்டைக் காணும்போது ... , நான் அதை ஒரு பழைய வீடாக மாத்திரமே காணுகிறேன். என்னால் காண முடியாத சிலவற்றை டெபீ காணுகிறாள்.[12] அதுபோலவே, இந்த வாழ்வில் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், சுத்தமற்றவர்களால் காண இயலாத சிலவற்றைக் காணுகின்றனர். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரமே தேவனைத் தரிசிக்கத் தயாராக உள்ளனர்.

இனிவரும் வாழ்வில் தேவனை தரிசித்தல்

ஒரு கருத்தில், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் இந்த வாழ்வில் தேவனைத் தரிசிக்கின்றனர், ஆனால் இந்த வாழ்விற்குப் பின்புதான் மத்தேயு 5:8ல் உள்ள வாக்குத்தத்தம் முழுமையான நிறைவைக் காணுகிறது. யோவான், “பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே *நாம் அவரைத் தரிசிப்பதினால்,* அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்” என்று எழுதினார் (1 யோவான் 3:2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பரலோகத்தில் நாம், இராஜாவின் பிரசன்னத்திற்குள் இட்டுச்செல்லப்பட்டு, அவரது முகத்தைத் தரிசிப்போம். அந்தப் பரலோக இராஜ்யத்தில், “இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, *அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்*” (வெளிப்படுத்தின விசேஷம் 22:3, 4அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

என்ன ஒரு ஆச்சரியமான வாக்குத்தத்தம்! இயேசுவின் இரத்தத்தினால் சுத்தமாக்கப்பட்ட இருதயத்தைக் கொண்டுள்ளவர்கள் - ஆம் நாமும்கூட, நமது குறைகள் மற்றும் தவறுகளுடன் கூட - தேவனைத் தரிசிக்கும் நாள் வருகிறது! கடைசியாகப் பரதீசு மீளக்கட்டுவிக்கப்படும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:7), மற்றும் முதல் பரதீசில் ஆதாமும் ஏவாளும் தேவனுடன் கொண்டிருந்த ஐக்கியத்தைப் போல நாமும் கொண்டிருப்போம்!

முடிவுரை

“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ...” தீமோத்தேயுவுக்குப் பவுல், “கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே” என்று கூறினார் (1 தீமோத்தேயு 1:5). இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

ஏனெனில், "அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." இந்த வாழ்வில் நாம் விசுவாசத்தின் கண்களைக் கொண்டு தேவனைத் தரிசிக்கிறோம்; ஆனால் இனிவரும் வாழ்வில் நாம் அவரை முகமுகமாய்த் தரிசிப்போம். இந்த வாழ்வில் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், இராஜாவுடன் பேச/அவரைக்காண, மன எழுச்சியுடன் ஒரு வெளியறையில் காத்திருக்கின்றனர்!

நீங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறீர்களா? இருதயத்திலும் வாழ்விலும் சுத்தமற்றவர்கள் தேவனைத் தரிசிக்க முடியாது என்பதை யோவான் தெளிவாக்கினார்: "பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை" (1 யோவான் 3:6ஆ; காண்க 3 யோவான் 11). அன்பின் கீழ்ப்படிதல் மூலமாக புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு நீங்கள் தேவனுடைய பிள்ளையாகி இருக்கிறீர்களா (ரோமர் 6:3-6, 17, 18)? ஒருவேளை கடந்த காலத்தில் உங்கள் இருதயம் தேவனால் சுத்தமாக்கப்பட்டிருக்கலாம், ஆனால் தேவனைப் பற்றிய உங்கள் தரிசனம் மங்கலானதாக மற்றும் புகைமூட்டமானதாக ஆகியிருக்கலாம். அப்படியென்றால், நீங்கள் கர்த்தரிடமாய் மீளக்கட்டுவிக்கப் படுதலுக்கு இதுவே வேளையாக உள்ளது (காண்க கலாத்தியர் 6:1). தேவனைக் காண்பதற்கான உங்கள் தேடுதலில் நாங்கள் உங்களுக்கு உதவக்கூடுமென்றால், அதைச் செய்யத் தயவுசெய்து எங்களை அனுமதியுங்கள்.

குறிப்புகள்

[1]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 106. [2]*The American Heritage Dictionary*, 4th ed. (2001), s.v. "cardiac." [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 297. [4]இந்தக் கணக்கீடு Accordance®, © 2003, Oak Tree Software, Inc. என்பதன் அடிப்படையிலானது. [5]Robert Young, *Young's Analytical Concordance to the Bible* (Peabody, Mass.: Hendrickson Publishers, n.d.), 785. [6]பின்வரும் கலந்துரையாடலில் சிலபகுதிகள் William Barclay, *The Gospel of Matthew*, vol. 1, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1958), 101. என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டுள்ளன. [7]Ibid, 102. [8]இதை நீங்கள் வாழும் சமூகத்திற்கு ஏற்றாற்போல் பயன்படுத்துங்கள். அமெரிக்காவில் ஆபாசமான புத்தகங்கள், பாங்கற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள், மற்றும் அசுத்தமான பேச்சுப் பேசுபவர்களுடன் வேண்டுமென்றே தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றைக் குறித்த நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட முடியும். [9]James Hastings; quoted in James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 67. [10]Tolle, 64.

[11]குளூகோமா என்பது, கண்விழிக்குள் அசாதாரணமான உயர் அழுத்தத்தினால் ஏற்படும் கண் குறைபாடு ஆகும். காய் தமது பிள்ளைப் பிராயத்தில் பட்ட காயத்தின் விளைவாக இந்நிலையை அடைந்திருக்கலாம். [12]விண்மீன்களைக் கண்ணோக்குதல் என்பது இன்னொரு விவரிப்பாக இருக்கலாம். மினுக்கிடும் சிறு வெளிச்சிப் புள்ளிகளைக் கண்டு நாம் வெறுமனே பாராட்டுவதைப் பார்க்கிலும், ஒரு வானவியலாளர் அல்லது ஒரு மாலுமி வித்தியாசமான சிலவிஷயங்களைக் காணுகிறார்.

7

"தந்தையைப் போல மகன்"?

(மத்தேயு 5:9)

வேதாகமத்தின் புத்துணர்வுத் தன்மையும் உயிர்த்துடிப்பும், அது எப்போதுமே காலத்திற்கு ஏற்றதாக உள்ளது என்பதும் மற்றும் அது எந்தக் காலத்திற்கும் நடைமுறைப்படக் கூடியதாக உள்ளது என்ற உண்மையும், அதன் தனிச்சிறப்பான பண்புகளில் ஒன்றாக உள்ளது. பின்வரும் பாக்கியத்தைக் காட்டிலும் நமது காலத்திற்கு மிகவும் தேவையான வேறு வசனப்பகுதி ஏதாவது உள்ளதா: "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9)? இந்த வசனப்பகுதி படிக்கப்படும் காலம் எதுவாக இருப்பினும்,[1] அந்த வேளையில் அந்நியர்கள் அந்நியர்களைக் கொலை செய்து கொண்டிருப்பார்கள், சகோதரர்கள் சகோதரர்களைக் கொலைசெய்து கொண்டிருப்பார்கள், மதரீதியான பிரிவினைக் குழுக்கள் ஒன்றை ஒன்று அழிக்க முயற்சி செய்துகொண்டிருக்கும் மற்றும் மக்களினங்கள் மற்ற மக்களினங்களை அழித்துப்போட முயற்சி செய்து கொண்டிருக்கும்.[2] வெறுப்புணர்வு மற்றும் விரோதம் ஆகியவற்றின் மத்தியில் இந்த பாக்கியம் புத்துணர்வூட்டும் தென்றலாக வருகிறது: "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்."

பாக்கியங்களில் சில, மகிழ்ச்சியுடன் எவ்வாறு தொடர்புடையவையாக உள்ளன என்பது எப்போதுமே தானாகத் தெளிவாகிறதில்லை, ஆனால் இந்த பாக்கியத்தில் நாம் [அதை அறிவதில்] சிறிதளவே இடர்ப்பாடு கொண்டிருக்கிறோம். விரோதம் மற்றும் கலகம் ஆகியவற்றின் மத்தியில் மகிழ்ச்சியாக இருத்தல் என்பது கடினமாக உள்ளது. ஆனால் சமாதானத்தை மேம்படுத்தும் பணியில் உள்ளவர்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். இதைப் பற்றி நினைத்துப்பாருங்கள். மகிழ்ச்சியான மக்கள் எரிச்சல் கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனரா, அவர்கள் எப்போதுமே குற்றப்படுத்துதலைச் செய்யத் தயாராக இருக்கின்றனரா அல்லது விரோதம் மூட்ட ஆவல் கொண்டுள்ளனரா? இப்படிப்பட்ட மக்கள் பரிதபிக்கப்படத் தக்கவர்களாக உள்ளனர், மற்றும் இவர்கள் மற்றவர்களையும் பரிதபிக்கப்படத் தக்கவர்கள் ஆக்குதல் தான் இவர்களின் ஒரே "மகிழ்வான அனுபவமாக" உள்ளது. சாந்தமான, இரக்கமான, பிரியம் கொண்ட, சமாதானத்தை விரும்புகிற மற்றும் தங்கள் இல்லங்கள், சபை மற்றும் தங்கள் அயலகத்தவர்கள் மற்றும் நண்பவர்கள் மத்தியில் சமாதானத்தை மேம்படுத்தத் தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்பவர்களைப் பற்றிய விஷயம் என்ன? எந்தக் குழு மிகவும் மகிழ்ச்சியானதாக உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆவியின் கனிகளில், சந்தோஷமும் சமாதானமும் ஒன்றாக இணைந்துள்ளன - மற்றும் இவ்விரண்டிற்கும் முன்னதாக அன்பு வருகிறது (கலாத்தியர் 5:22).

நமது வேதவசனப் பகுதியைப் பற்றிய பல கேள்விகள் பதில் அளிக்கப்பட

வேண்டியது அவசியமாக உள்ளது. சமாதானம் பண்ணுகிறவர்களாக இருத்தலில் அடங்கியுள்ளது என்ன மற்றும் “தேவனுடைய புத்திரர்” என்ற சொற்றொடர் மறைமுகமாக உணர்த்துவது என்ன? ஏழாவது பாக்கியம் பற்றிய நமது படிப்பில், நாம் இவ்வசனப்பகுதியை, முந்திய பாக்கியங்களில் இருந்து சிறிது மாறுபட்ட வகையில் அணுகுவோம். முதலில் நாம் இவ்வசனத்தின் முடிவுப் பகுதியை (வாக்குத்தத்தத்தை) பற்றிப் பேசுவோம்: “அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.” பின்பு நாம் இவ்வசனத்தின் தொடக்கத்தை (நிபந்தனையை)ப் பற்றிக் கலந்துரையாடுவோம்: “சமாதானம்பண்ணுகிறவர்கள்.” இது நம்மை, மத்தேயு 5:9ன் நமது காலத்திற்கான பயன்பாட்டுடன் முடிக்க நம்மை அனுமதிக்கும்.

“... அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.”

மற்ற எல்லாப் பாக்கியங்களில் உள்ளது போன்றே, சமாதானம் பண்ணுகிறவர்களின் பாக்கியம் அல்லது மகிழ்ச்சி என்பது வாக்குத்தத்தத்தில் காணப்படுகிறது: “அவர்கள் தேவனுடைய புத்திரர் (sons) என்னப்படுவார்கள்.” KJV வேதாகமத்தில் ‘‘அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் (children) என்னப்படுவார்கள்’’ என்றுள்ளது, ஆனால் “children” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது “*son*” என்பதற்கான (*huios* என்ற) கிரேக்க வார்த்தையின் பன்மைச்சொல்லாக உள்ளது. இங்கு பயன்படுத்தப்பட்ட சொற்றொடர், ஆண்கள் மற்றும் பெண்கள், தேவனுடைய மகன்கள் மற்றும் மகள்கள் ஆகிய இருபாலரையும் குறிக்கும் பொதுப்பால் கருத்தில் உள்ளது.[3] இது என்ன ஒரு ஆச்சரியம் நிறைந்த வாக்குத்தத்தமாக உள்ளது: தேவனுடைய மகன்கள் மற்றும் மகள்கள் என்று அழைக்கப்பட்டிருத்தல், அரசரின் மகன்கள் மற்றும் மகள்களாக இருத்தல், அண்டத்தைப் படைத்தவரின் மகன்கள் மற்றும் மகள்களாக இருத்தல்!

இந்த வாக்குத்தத்தம் மனஎழுச்சியூட்டக் கூடியதாக உள்ளது, ஆனால் “தேவனுடைய புத்திரர்” என்ற சொற்றொடரின் மறைகருத்துக்களை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. “உடைய புத்திரர்” என்பது “இயல்பில் பங்கேற்றல்” என்ற அர்த்தத்தின் எபிரெயச் சொல்விளக்கமாக இருந்தது. பர்னபா என்பவர், “ஆறுதலின் மகன்” என்று அழைக்கப்பட்டார் (நடபடிகள் 4:36), ஏனென்றால் மற்றவர்களை ஊக்கமூட்டுதல் என்பது அவரின் இயல்பாக இருந்தது. “தேவனுடைய புத்திரர்” என்பது தேவனுடைய இயல்பில் பங்கேற்பவர்கள் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. நாம் பின்வரும் சொல் விளக்கத்தைக் கொண்டுள்ளோம்: “தந்தையைப் போல மகன்.” [இது தமிழில் “அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளது” என்ற பழமொழியாக வழங்கப்படுகிறது.] தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நமக்கு அதுவே அறைகூவலாக உள்ளது (காண்க மத்தேயு 5:48). நமது வசனப்பகுதியில் “தேவனுடைய புத்திரர்” என்ற சொற்றொடர், சமாதானம் பண்ணுகிறவர்களாக இருத்தலுக்குத் தேவனுடைய இயல்பில் பங்கேற்பவரைத் திட்டவட்டமாகக் குறிக்கிறது.

தெய்வீக சமாதானம் பண்ணுகிறவர்கள்

நீதிமொழிகள் 6:16-19ன்படி, “ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார்,

ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள்." "சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்ணுபண்ணுதல்'' என்பது ஏழாவதாக உள்ளது. தேவன் விரோதத்தை வெறுக்கிறார் மற்றும் சமாதானத்தை நேசிக்கிறார். அவர், "சமாதானத்தின் தேவன்" என்று அழைக்கப்பட்டுள்ளார் (ரோமர் 15:33). பாவமானது இசைவிணக்கம் இல்லாமையையும் மரணத்தையும் கொண்டுவருவதற்கு முன்புவரையிலும், சமாதானத்தில் நிரப்பப் பட்டிருந்த ஒரு உலகத்தை அவர் உண்டாக்கினார். சமாதானத்தை மீளக்கட்டுவதற்காக, பாவ நோய்வாய்ப்பட்ட, கலகம் நிறைந்த இந்த உலகத்திற்குள் அவர் தமது குமாரனை, "தம்முடைய ஒரேபேறான குமாரனை" அனுப்பினார் (காண்க யோவான் 3:16).

தேவன் சமாதானத்தை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை மதித்து உணருவதற்கு நாம், அவரது குமாரனாகிய இயேசுவை மாத்திரமே உற்றுநோக்குவது அவசியமாக உள்ளது (காண்க யோவான் 14:9). கிறிஸ்து "சமாதானப்பிரபு"வாக இருப்பார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (ஏசாயா 9:6). அவரது பிறப்பு "பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்ற சொற்றொடருடன் அறிவிக்கப்பட்டது (லூக்கா 2:14). அவர் மரிப்பதற்குச் சற்று முன்னர் தமது சீஷர்களிடத்தில், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறினார் (யோவான் 14:27அ). அவர் தமது மரணத்தின் மூலமாக, (சமீபமாயிருந்த) யூதர்களுக்கும் (தூரமாயிருந்த) புறஜாதியாருக்கும் சமாதானத்தைக் கொண்டுவந்தார் (எபேசியர் 2:16, 17; காண்க கொலோசெயர் 1:20).

நமது பிதாவைப் போலிருத்தல்

நீங்கள் நானும் தேவனைப் போல மற்றும் இயேசுவைப் போல இருக்கும்படி அறைகூவல் விடப்பட்டுள்ளோம். ''யாவரோடும் சமாதானமாயிருக்கவும், ... நாடுங்கள்" (எபிரெயர் 12:14; காண்க 2 தீமோத்தேயு 2:22); "... சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19).

நாம் சமாதானத்தை நாடினால், நாம் "தேவனுடைய புத்திரர்" என்று அழைக்கப்படுவோம். ஹியூகோ மெக்கார்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> படைப்பினால் எல்லா மனிதர்களுமே ''தேவனுடைய புத்திரர்களாக'' இருந்தனர் (ஆதியாகமம் 6:2; லூக்கா 3:38). ஆனால் சாத்தானால் விரிக்கப்பட்ட வலையில் சிக்கியபின்பு மனிதர்கள் "ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல்'' போன சில தூதர்களைப் போலாகினர் (யூதா 6) மற்றும் இப்போது பிசாசின் பிள்ளைகள் என்று ஏற்புடைய வகையிலும் தெய்வீகத்திலும் பெயரிடப்பட்டுள்ளனர் (யோவான் 8:44; நடபடிகள் 13:10).[4]

இருப்பினும் நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருந்தால், நாம் "தேவனுடைய புத்திரர்" என்று அழைக்கப்படுவோம்.

யார் நம்மைச் தேவனுடைய புத்திரர் என்று அழைப்பார்கள்? சில வேளைகளில் மற்றவர்கள் இப்படி அழைப்பார்கள். இரண்டு சகோதரர்கள்

ஒப்புரவு ஆகுதலுக்கு நாம் உதவுகிறபோது அல்லது ஒரு இல்லத்தில் சமாதானத்தை மீளக்கட்டுவிக்க நாம் உதவும்போது, அதில் இருப்பவர்கள் அடிக்கடி நன்றிநிறைந்தவர்களாக உள்ளனர். இருப்பினும் இப்படிப்பட்டதே எப்போதும் நடப்பதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சமாதானத்தை மீளக்கட்டுவிக்கச் செய்யப்படும் முயற்சிகள் சிலவேளைகளில் பாராட்டப்படுவதில்லை. இல்லம் சார்ந்த வழக்குகளே அன்றாடம் கையாள்வதில் மிகவும் அபாயமான சூழ்நிலைகளாக உள்ளன என்று காவல்துறை அலுவலர்கள் அடிக்கடி கூறுகின்றனர். உதாரணமாக, ஒரு மனிதர் தமது மனைவியை அடிப்பதைக் காவல்துறை தடைசெய்ய முயற்சித்தால், கணவர் மற்றும் மனைவி ஆகிய இருவருமே அலுவலர்களுக்கு எதிராகத் திரும்பலாம். அதே வேளையில், சமாதானத்தை உண்டாக்கும் நம்முடைய நல்ல எண்ணமானது தலையிடுதலாக கண்ணோக்கப்படக்கூடும். மற்றும் வழக்கில் நாம் ஒருதலைப் பட்சமாக இருக்க மறுத்தால், இருபக்கங்களிலும் உள்ள மக்கள் நம்மைத் தாக்கத் தொடங்கலாம். அதனால்தான், நாம் சமாதானம் செய்கிறவர்களாக இருந்தால், மக்கள் - எப்போதுமல்ல ஆனால் - அவ்வப்போதுதான் நம்மை "தேவனுடைய புத்திரர்" என்று அழைப்பார்கள் என்று நான் கூறுகிறேன். அப்படியென்றால், சமாதானம் பண்ணுகிறவர்களை "தேவனுடைய புத்திரர்" என்று யார் அழைப்பார்? *தேவன்* அவ்வாறு அழைப்பார். அவர் சமாதானத்தை மேம்படுத்துகிறவர்களைத் தமது பிள்ளைகள் என்று ஒப்புக்கொள்வார்.

தேவன் தமது பிள்ளை என்று குறிப்பிடுவதற்கு, சமாதானம் பண்ணுகிறவராக இருத்தல் என்பது மாத்திரமே அவர் கேட்டுக்கொள்ளும் விஷயமாக இருப்பதில்லை. இந்த உலகத்தில் நாம் இசைவிணக்கத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கு கடினமாக உழைத்தால், நாம் தாமாகவே தேவனுடைய பிள்ளைகள் ஆகிவிடுகிறோம் என்று இயேசு கூறவில்லை. தேவனுடைய குடும்பத்தில் இல்லாமல் நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆக இயலாது, மற்றும் அந்தக் குடும்பத்தில் இருப்பதற்கு நாம் அதற்குள் "பிறக்க" வேண்டும்: நாம் "சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்த" நமது நிலையில் (காண்க 1 பேதுரு 1:22), "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல்" (காண்க யோவான் 3:3, 5). இந்த கீழ்ப்படிதல் இயேசுவில் விசுவாசம் மற்றும் நம்பிக்கை வைத்தல் ஆகியவற்றையும் ஞானஸ்நானத்தையும் உள்ளடக்குகிறது. பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் *விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.* ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக *ஞானஸ்நானம் பெற்றவர்கள்* எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று எழுதினார் (கலாத்தியர் 3:26, 27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நாம் தாழ்மையான கீழ்ப்படிதலில் கர்த்தரிடம் வரும்போது, தேவன் நம்மை அவரது சபையில் சேர்த்துக் கொள்கிறார் (நடபடிகள் 2:47), அது அவரது "வீடாக" உள்ளது (காண்க 1 தீமோத்தேயு 3:15; "குடும்பம்"; McCord) கிறிஸ்தவர்கள் ஆவதற்கு செய்யும்படி தேவன் கூறியுள்ளவற்றைச் செய்யாமல் நாம் அவரது மகன்களாகவும் மகள்களாகவும் முடியாது. நாம் மறுபடியும் பிறந்து தேவனுடைய பிள்ளைகளாக இருந்தும், நாம் அவரது இயல்பில் பங்குகொண்டு சமாதானம் பண்ணுகிறவர்களாக ஆகாத வரையில், நாம் "தேவனுடைய பிள்ளைகளாக" நடந்துகொள்வதில்லை.

சமாதானம் பண்ணுகிறவர்கள் *எப்போது* "தேவனுடைய புத்திரர்கள்"

என்னப்படுவார்கள்? இதில் ஒருபகுதி நிறைவேற்றம் இந்த வாழ்விலும் முழுநிறைவேற்றம் இனிவரும் வாழ்விலும் உள்ளது என்று நாம் மீண்டும் ஒருமுறை கருத்துக்கூற என்னை அனுமதியுங்கள். இந்த வாழ்வைப் பொறுத்த மட்டில் கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "மேலும் நீங்கள் *புத்திரராயிருக்கிறபடியினால்*, அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" என்று கூறினார் (கலாத்தியர் 4:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது).[5] ஒரு கருத்தில் ஏற்கனவே நாம் தேவனுடைய புத்திரர்களாக இருக்கிறோம் - ஆனார் "புத்திரர்கள் என்று அழைக்கப்படுதலின்" செயல்முறையானது, நமது பிதாவுடன் பரலோகத்தில் நாம் இருக்கும் நாள் வரும் வரையிலும் முழுமையடைந்திருக்காது. பவுல், "இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமை" மற்றும் "நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருத்தல்" ஆகியவற்றைப் பற்றி எழுதினார் (ரோமர் 8:18, 23; மேலும் காண்க வசனம் 19).[6] பரலோகத்தில் தேவனுடைய பிள்ளைகளின் நிலையைப் பற்றி இயேசு கூறுகையில், அவர்கள் "அவர்கள் ... தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பதால்" அவர்கள் இனி மரிக்கவும் மாட்டார்கள் என்று அவர் கூறினார் (லூக்கா 20:36). நாம் இந்த வாழ்வைப் பற்றியோ அல்லது இனிவரும் வாழ்வைப் பற்றியோ, எதைப்பற்றிப் பேசினாலும், இதைவிட அதிகமாக மன எழுச்சியூட்டும் ஒரு வாக்குத்தத்தத்தைக் கற்பனை செய்தல் கடினமாக உள்ளது: தேவன் நம்மைத் தமது புத்திரர்கள் என்று, தமது மகன்கள் மற்றும் மகள்கள் என்று ஒப்புக்கொள்கிறார்!

"சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் ..."

வாக்குத்தத்தத்தைக் கண்ணோக்கியுள்ள நிலையில் நாம், சமாதானம் பண்ணுகிறவர்களாக இருத்தல் என்ற நிபந்தனையை நிறைவேற்ற இன்னும் அதிக விருப்பம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்களாக இருத்தல் என்பதில் அடங்கியுள்ளது என்ன? "சமாதானம் பண்ணுகிறவர்கள்" என்ற வார்த்தை, சமாதானம் என்பதற்கான (*eirene* என்ற) வார்த்தையை "பண்ணுதல்" என்பதற்கான (*poieo* என்ற) வார்த்தையுடன் இணைத்துப் பெற்ற (*eirenopoios* என்ற) வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ஒன்றிணைவு புதிய ஏற்பாட்டில் மிக அரிதாகவே காணப்படுகிறது,[7] ஆனால் "சமாதானம்" என்பதற்கான (*eirene* என்ற) வார்த்தை எண்பது முறைகளுக்கு மேல் காணப்படுகிறது.[8] *Eirene* என்பது "இசைவிணக்கமான உறவுகள்" மற்றும் அதன் விளைவாக வருகிற "ஓய்வு மற்றும் மனதிருப்தியின் கருத்து" என்பதைக் குறிக்கிறது. *Shalom* என்பது இதற்கு இணையான எபிரெய வார்த்தையாக உள்ளது.[9] *Shalom* என்ற வார்த்தையைப் பற்றி வில்லியம் பார்க்ளே பின்வருமாறு எழுதினார்:

> எபிரெய மொழியில் *சமாதானம்* என்பது எதிர்மறை நிலையில் மாத்திரம் ஒருக்காலும் இருப்பதில்லை; இது கலகம் இல்லாமை என்பதை மாத்திரம் ஒருக்காலும் குறிப்பதில்லை; எபிரெய மொழியில் *சமாதானம்* என்பது *எப்போதுமே, ஒரு மனிதரின் மிக உயர்வான நற்தன்மையை உண்டாக்கும் ஒவ்வொன்றையும் அர்த்தப்படுத்துகிறது*. கிழக்கு நாடுகளில் ஒரு மனிதர் இன்னொருவருக்கு *Salaam* என்று - இதே வார்த்தையை - கூறும்போது,

> அவர் மற்ற மனிதரிடம் பொல்லாத விஷயங்கள் இல்லாது இருப்பதை மாத்திரம் அர்த்தப்படுத்துவதில்லை; அவர் எல்லா நல்ல விஷயங்களும் அந்த மனிதரிடம் இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறார்.[10]

"சமாதானம்" என்ற வார்த்தை "சமாதானம் பண்ணுகிறவர்கள்" என்ற சொற்றொடரில் இன்றியமையாததாக உள்ளது, ஆனால் "பண்ணுகிறவர்கள்" என்ற வார்த்தையைப் புறக்கணித்து விட வேண்டாம். ஏழாவது பாக்கியம் தனிச்சிறப்பானதாக உள்ளது. பெரும்பான்மையான பாக்கியங்கள் எண்ணப்போக்கின் மீது வலியுறுத்தம் தருகிற அதேவேளையில், ஒரு சில பாக்கியங்கள் எண்ணப்போக்குடன் செயல்மீதும் வலியுறுத்தம் தருகின்றன. ஆனால் இந்த பாக்கியம் *செயல்மீது* கவனம் குவிக்கிறது. சரியான எண்ணப்போக்கு யூகிக்கப்படுகிறது, ஆனால் நமது வேத வசனப்பகுதியில், சமாதானத்தை செயல்துடிப்புடன் நாடுபவர்களுக்கு மாத்திரம் தேவனுடைய வாக்குத்தத்தம் உரியதாக உள்ளது. சமாதானத்தை *நேசிப்பவர்களை* (இப்படிப்பட்டது பாராட்டத்தக்கதே) அல்லது சமாதானம் பற்றிப் *பேசுபவர்களை* (இது சிலவேளைகளில் தேவைப்படுகிறது) அல்ல, ஆனால் சமாதானம் *பண்ணுகிறவர்களையே* ஆசீர்வதிப்பதாகக் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்தார்.

தேவன் "எந்த விலை கொடுத்தாகிலும் சமாதானம்" என்பதை விசுவாசிப்பவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் *செய்திருக்கவில்லை.* சிலர் எந்த விலைகளைக் கொடுத்தாகிலும் இடர்ப்பாட்டைத் தவிர்ப்பவர்களாகக் இருக்கும் காரணத்தினால், சமாதானம் நிறைந்தவர்களாக, அல்லது சமாதானத்தை விரும்புகிறவர்களாகக் கருதப்படுகின்றனர். வலிவார்ந்த இடர்ப்பாட்டை எதிர்கொண்டு அதைக் கையாளுவதற்குப் பதிலாக, அவர்கள் அதை [இடர்ப்பாட்டை] புறக்கணித்துவிட்டு அது தனது சொந்த வழியில் புறம்பே சென்றுவிடும் என்று நம்பியிருக்கின்றனர். வழக்கமாக அது இவ்வாறு இருப்பதில்லை, மற்றும் அவை தொடங்கியதைக் காட்டிலும் பெரிய பிரச்சனையில் முடிகின்றன. இதைப் பற்றித் தேவன், தமக்கும் தமது வசனத்திற்கும் உண்மை நிறைந்தவர்களாக இருப்பதைக் காட்டிலும் சமாதானத்திற்கு உயர்ந்த முன்னுரிமை கொடுப்பவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்யவில்லை என்பது நிச்சயம். யாக்கோபு, "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், *பின்பு* சமாதான ... முள்ளதாயுமிருக்கிறது" என்று எழுதினார் (யாக்கோபு 3:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

சமாதானத்திற்காகப் பணிசெய்வதில் நாம், நீண்ட காலத்திற்கு அது நிலைத்திருத்தலின் அவசியம் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். எங்களது மகள் சின்டி ஒரு சிறு பெண்ணாக இருந்தபோது, அவளுக்கு உடல்நலப் பிரச்சனைகள் பல இருந்தன, அவள் ஏராளமான மருந்துகளை உட்கொள்ள வேண்டி இருந்தது. ஓ, அவள் அந்த மருந்துகள் யாவற்றையும் வெறுத்தாள்! நாங்கள் அவளது சிறிய உடலை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு அவளுடைய வாய்க்குள் மருந்தைத் திணித்துப் புகட்டியதை (வழக்கமாக அதில் பாதி வெளியே சிந்தி விடும்) நினைத்துப் பார்த்தல் என்பது இன்னமும் வேதனை நிறைந்ததாக உள்ளது. "எந்த விலைகொடுத்தும் சமாதானம்" என்பது, அவளுக்கு நாங்கள் மருந்துகள் கொடுக்காது இருக்கவேண்டும் என்று கட்டளையிடுவதாக இருக்கும்

- ஏனென்றால் மருந்துகள் கொடுக்கும் வேளையில் எங்கள் வீட்டில் சமாதானம் இருந்ததில்லை. இருப்பினும், அவள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பியதால், நீண்ட காலக் கண்ணோட்டத்தை நாங்கள் மேற்கொண்டோம்.[11] அதுபோலவே, கர்த்தர் கனப்படுத்தும் சமாதானத்திற்கு நாம் எதிர்காலத்தின் மீது கவனம் குவிக்க வேண்டும்.

நாம் பிரச்சனைகளை எதிர்கொண்டு அவற்றைக் கையாளுதல் நமக்கு மகிழ்ச்சியற்றதாக இருக்கும் வேளையிலும்கூட நாம் அவற்றைக் கையாள வேண்டும். எனது சகோதரர் காய், சமாதானம் பண்ணுகிறவர் ''தேவைப்பட்டால் போராட்டத்தில் ஈடுபடுவார்,'' ஆனால் அதில் மகிழ்ந்திருக்க மாட்டார் என்று விமர்சனம் செய்தார்.[12] தவறை கடிந்துகொள்ளுதலில் கூட சமாதானம்பண்ணுகிறவரின் அன்பு எல்லாருக்கும் தெளிவாக விளங்கும் (காண்க எபேசியர் 4:15).

> கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:24-26).

அது நமக்கு, ''சமாதானம் பண்ணுகிறவர்'' என்ற வார்த்தையினால் *அர்த்தப்படுத்தாதவற்றைப்* பற்றிய கருத்துக்கள் சிலவற்றை நமக்குத் தருவதாக இருக்க வேண்டும், ஆனால் அது *அர்த்தப்படுத்துவது* என்ன? நாம் இந்தச் சொற்றொடரைக் கேள்விப்படும்போது, பலவிதமான காட்சிகள் மனதிற்கு வரலாம்:[13] பிள்ளைகளுக்கு மத்தியிலான விவாதம் ஒன்றைத் தாயானவள் தீர்த்துவைத்தல், பள்ளி மைதானத்தில் அமளி ஒன்றை ஒரு ஆசிரியர் கலைத்துப் போடுதல், உலகளாவிய சமாதான மாநாட்டில் ஒரு மேஜையைச் சுற்றி ஆண்களும் பெண்களும் அமர்ந்திருத்தல். இவையாவும் முக்கியமானவைகளே, ஆனால் நான், சமாதானம்பண்ணுதலின் நேர்மறைப் பகுதி பற்றிய நமது கலந்துரையாடலை இன்னும் சற்று அடிப்படையான விஷயத்தைக் கொண்டு தொடங்க விரும்புகிறேன்.

தேவனுடன் சமாதானம்

இந்த உலகத்தில் சமாதானம் என்பது இருதயத்தில் சமாதானத்துடன் தொடங்க வேண்டும், மற்றும் இருதயத்தில் சமாதானம் என்பது தேவனுடனான சமாதானத்துடன் தொடங்க வேண்டும். ஏசாயா, “துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்” என்று எழுதினார் (ஏசாயா 57:21). தேவனுடன் சமாதானம் கொண்டிருப்பதற்கு நாம் நமது சித்தத்தை அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படுத்த வேண்டும் (காண்க 2 நாளாகமம் 30:8). நம்மீதே நாம் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, நாம் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து அவரது சித்தத்தைச் செய்ய வேண்டும். பவுல், “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்'' என்று கூறினார் (ரோமர் 5:1). அப்போழுது, மற்றும் அப்பொழுது மாத்திரமே எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் நமது இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும் (காண்க பிலிப்பியர் 4:7).

அடுத்ததாக, சமாதானம்பண்ணுகிறவர்களாக இருப்பதற்கு நாம், தேவனுடன் தனிப்பட்ட வகையில் சமாதானமாக இருத்தலைக் காட்டிலும் அதிகமானவற்றின் மீது அக்கறையாக இருக்க வேண்டும்; மற்றவர்கள் தேவனுடன் சமாதானமாக இருத்தலுக்கும் நாம் உதவிசெய்ய வேண்டும் (காண்க 2 கொரிந்தியர் 5:18, 20). சமாதானம் கொண்டுவருதலுக்கான பெரும்பான்மையான முயற்சிகளைப் பற்றி எனக்கு மறுப்பு ஒன்றுமில்லை, ஆனால் இருதயங்களை மாற்றாத அப்படிப்பட்ட முயற்சி எதுவும், நிலையான விளைவுகளை உண்டாக்காது. அது ஒரு பெரிய, பிளவுபட்ட காயத்திற்கு ஒரு சிறு புண்கட்டும் துணியை இடுதலைப் போன்றதாக உள்ளது.[14] சமாதானம் கொண்டிராமலேயே வெறுப்புணர்வுகளை விட்டொழித்தல் என்பது சாத்தியமாகவே உள்ளது. ஒரு கணவரும் மனைவியும் தங்கள் வாய்மொழித் தாக்குதலை நிறுத்தியிருக்கலாம், ஆனால் விரோதமான சூழ்நிலை இல்லத்தில் நிலைத்திருந்தால், அங்கு உண்மையான சமாதானம் இருப்பதில்லை. புறம்பான சமாதானத்தைக் கொண்டிருத்தலுக்கு, முதலில் உள்ளான சமாதானம் இருக்க வேண்டும்.

உள்ளாகவும் புறம்பாகவும் நிலையான சமாதானம் கொண்டிருப்பதற்கு மக்கள், தங்கள் இருதயங்களையும் தங்கள் வாழ்வையும் தேவனுக்கு ஒப்புவிக்க வேண்டும். தனிநபர்கள் கர்த்தரிடம் நெருங்கிச் சேருகையில், அவர்கள் ஒருவர் மற்றவருடனும் நெருங்கிச் சேருவார்கள்.[15] பழங்கால உலகத்தில், யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இடையில் மாபெரும் பிளவு ஒன்று இருந்தது, அது இயேசு மூலமாக மாத்திரமே இணைக்கப்படக் கூடியதாக இருந்தது. எபேசியர் 2ல் இருந்து வரும் பின்வரும் வசனப் பகுதியை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> முன்னே தூரமாயிருந்த நீங்கள் [புறஜாதிகள்] இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் [யூதரையும் புறஜாதியாரையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் [மோசேயின் நியாயப்பிரமாணத்தை] தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் [மோசேயின் நியாயப்பிரமாணத்தை] தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் [யூதரையும் புறஜாதியாரையும்] தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தரையும் [யூதரையும் புறஜாதியாரையும்] ஒரே சரீரமாகத் [சபையாக, எபேசியர் 1:22, 23] தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் [புறஜாதியாருக்கும்], சமீபமாயிருந்த அவர்களுக்கும் [யூதருக்கும்], சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார் (வசனங்கள் 13-17).

யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையில் இருந்த பிரிவினையை நீக்கி அவர்களை இயேசு இணைத்தது போலவே, அவர் இன்றைய நாட்களில் போராடும் பிரிவினைக் குழுக்கள் - அவரிடம் வந்து அவருடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும்போது - அவற்றிற்கு இடையிலான பிளவை நீக்கி அவற்றை ஒன்றிணைக்க அவரால் முடியும். மற்றவர்கள் கர்த்தரிடம் வந்து சேர்வதற்கு உதவி செய்தல் என்பது சமாதானம்பண்ணுகிறவருக்கு முக்கியமான விஷயமாக உள்ளது.

மற்றவர்களுடன் சமாதானம்

தனிப்பட்ட வகையில் தேவனுடன் சமாதானம் கொண்டிருத்தல் மற்றும் தேவனுடன் சமாதானம் கொண்டிருக்கும்படிப் பிறரை ஊக்குவித்தல் ஆகியவை முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இருப்பினும் சமாதானம் பண்ணுகிறவருடைய பணியில் இவைமாத்திரமே உள்ளடங்கி இருப்பதில்லை. தேவனுடன் சமாதானமாயிருத்தல் என்பது நம்மைப் பிறருடன் சமாதானமாக இருக்க நம்மால் முடிந்த வகையில் சிறப்பாகச் செயல்படச் செய்வதாக இருக்க வேண்டும். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, "ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள்" என்று கூறினார் (மாற்கு 9:50). பவுல், "கடைசியாக, சகோதரரே ... சமாதானமாயிருங்கள், அப்போழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 13:11).

என் மனம் கவர்ந்த ஒரு சொற்றொடரை ரோமர் 14:19ல் பவுல் பயன்படுத்தினார்: ''ஆனபடியால் *சமாதானத்துக்கடுத்தவைகளையும்*, ... நாடக்கடவோம்'' (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "சமாதானத்துக்கடுத்தவைகள்" என்பதன் மூலம் பவுல் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை அவர் விளக்கிக்கூறவில்லை; அவர் தம் சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பதைத் தமது வாசகர்கள் அறிந்திருக்கும்படி எதிர்பார்த்தார். நீங்கள் "*சமாதானத்துக்கடுத்தவைகள்*" மற்றும் சமாதானத்தை *முறிப்பவைகள்* பற்றி ஒரு பட்டியலைத் தயார் செய்தால், உங்கள் பட்டியலில் எதை உள்ளடக்குவீர்கள்?[16] உங்கள் பட்டியல் பின்வருபவை போன்றவற்றை உள்ளடக்கி இருக்கலாம்:[17]

- பிறர் மீது அன்புகூருதல் என்பது சமாதானத்தை உண்டாக்குகிறது, அதே வேளையில் அக்கறையற்ற எண்ணப்போக்கு சமாதானத்தை முறிக்கிறது.
- பிறர்மீது இரக்கமாக இருத்தல் என்பது சமாதானத்தை உண்டாக்குகிறது, அதே வேளையில் கடுமையாயிருத்தல் சமாதானத்தை முறிக்கிறது.
- பிறருக்கு உதவிசெய்தல் என்பது சமாதானத்தை உண்டாக்குகிறது, அதே வேளையில் பிறரின் தேவைகளைப் புறக்கணித்தல் சமாதானத்தை முறிக்கிறது.
- பொன்விதியை (மத்தேயு 7:12) பின்பற்றுதல் என்பது சமாதானத்தை உண்டாக்குகிறது, அதே வேளையில் புறரை நாம் நடத்தும் வகைபற்றிக் கொஞ்சமே சிந்தித்தல் சமாதானத்தை முறிக்கிறது.
- இசைவிணக்கத்தின்மீது பலத்த விருப்பம் கொண்டிருத்தல் என்பது சமாதானத்தை உண்டாக்குகிறது, அதே வேளையில் சண்டையிடும்

மனப்பாங்கைக் கொண்டிருத்தல் சமாதானத்தை முறிக்கிறது.

- அன்புகூரப்படக்கூடியவராக மற்றும் அணுகப்படக்கூடியவராக இருத்தல் என்பது சமாதானத்தை உண்டாக்குகிறது, அதேவேளையில் மற்றவர்களை ஏற்றுக்கொள்ளக் கூடாதவராக இருத்தல் சமாதானத்தை முறிக்கிறது.
- நாம் [பிறர்மீது] மனவருத்தம் கொண்டிருக்கையில் அல்லது [பிறரால்] மனவருத்தம் ஏற்படுத்தப்பட்டு இருக்கையில் (காண்க மத்தேயு 5:23, 24; 18:15) அந்தப் பிறரிடம் செல்வதற்குத் தைரியம் கொண்டிருத்தல் சமாதானத்தை உண்டாக்குகிறது, அதேவேளையில் அவ்வாறு செய்வதற்குத் தவறுதல் அந்நியப்படுதலை ஊக்குவிக்கிறது.
- தீமைக்குப் பதில் நன்மை செய்தல் என்பது (காண்க ரோமர் 12:20, 21) சமாதானத்தை உண்டாக்குகிறது, அதேவேளையில் பழிக்குப்பழி வாங்க நாடுதல் சமாதானத்திற்கான எல்லா நம்பிக்கையையும் அழித்துப்போடுகிறது. நமது எதிராளிகளிடத்தில்கூட நாம் நண்பர்களாக இருக்கப் பிரயாசப்பட வேண்டும் (காண்க மத்தேயு 5:25; நீதிமொழிகள் 16:7).[18]

நாம் நமது பட்டியல்களைத் தயாரிக்கையில், அதன் உச்சியில் ஒருவேளை, நம்மைக் காட்டிலும் பிறர் பற்றி அதிக அக்கறையாக இருத்தலின் பண்பு இருக்க வேண்டும். இயேசு கூறிய மிகக்கடினமான சில விஷயங்களில் பின்வருவது ஒன்றாகும்: "ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால், *அவன் தன்னைத் தான் வெறுத்து,* தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் பின்வருமாறு எழுதினார்:

> மனிதரீதியான இச்சை, பேராசை, சுயநலம், சுயத்தை மையங்கொண்டிருத்தல் என்பவையே நமது எல்லா இடர்ப்பாடுகளுக்கும் விளக்கமாக உள்ளது ... நாம் ஒவ்வொரு விஷயமும் நம்மைப் பாதிக்கும் வகையிலேயே அவற்றைக் கண்ணோக்குகிறோம் ... "இது என்னை எவ்வாறு பாதிக்கிறது? இது எனக்கு என்ன செய்கிறது?" இந்த ஆவியானது சண்டைகள், தவறான புரிந்துகொள்ளுதல் மற்றும் வழக்குகள் ஆகியவற்றிற்கே எப்போதும் வழிநடத்துகிறது, மற்றும் இது சமாதானம் பண்ணுகிறவராக இருத்தலுக்கு மறுப்புநிலையாக உள்ளது.[19]

சமாதானம் நொறுக்கப்படும்போது மற்றும் பிரிவினை உண்டாகிறபோது, பிரச்சனையினுடைய இருதயம் போன்ற மையப்பகுதியை உங்களால் கண்டறிய முடிகிறது என்றால், ஒன்று அல்லது அதிகமான தனிநபர்கள் தங்களைக் குறித்து அக்கறையுடையவர்களாக இருத்தலை நீங்கள் எவ்வித மாறுபாடும் இன்றி கண்டறிவீர்கள். ஒருவேளை அவர்கள் தங்களுக்குத் தகுதியானவற்றைத் தாங்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்று நினைக்கலாம் அல்லது ஒருவேளை அவர்கள் தங்கள் சுயவழியில் செல்லத் தீர்மானித்து இருக்கலாம்.

சமாதானம்பண்ணுகிறவர்களாக இருத்தலில் சுயநலமற்றவர்களாக இருத்தலின் முக்கியத்துவம் பற்றிய வேதாகமரீதியான பல விவரிப்புகள் உள்ளன. உதாரணமாக ஆபிரகாம் தமது சகோதரனின் மகனான லோத்துவினிடத்தில்,

"எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்" என்று கூறினார் (ஆதியாகமம் 13:8). பின்பு அவர், நிலத்தைத் தேர்ந்துகொள்வதில் முதல் வாய்ப்புக்குத் தாம் உரிமை பெற்றவராக இருந்தபோதிலும், லோத்துவுக்கு அவரது தெரிவு வாய்ப்பைக் கொடுத்தார் (வசனங்கள் 9-12). மற்ற உதாரணங்களும் தரப்பட முடியும்: "சொத்துக்களைக் காட்டிலும் சமாதானத்தை அதிகமாய் நேசித்த"[20] ஈசாக்கு (காண்க ஆதியாகமம் 26:17-22), தாவீதிற்கும் தனது தகப்பன் சவுலுக்கும் இடையில் சமாதானம்பண்ண சுயநலமற்ற வகையில் முயற்சிசெய்த யோனத்தான் (காண்க 1 சாமுவேல் 18:1; 19:2-6; 20:30-33). இருப்பினும் சுயநலம் இல்லாத வகையில் சமாதானம் பண்ணுகிறவர் என்பதன் திட்டவட்டமான உதாரணமாக இருப்பவர் இயேசுவே. இயேசு "சிலுவையில் சிந்தின இரத்தத்திலே சமாதானத்தை உண்டாக்கினார்" என்று கொலோசெயர் 1:20ல் பவுல் குறிப்பிட்டார். "சமாதானத்தை உண்டாக்கினார்" என்பது "சமாதானம் பண்ணுகிறவர்" என்ற வார்த்தைக்கான வினைச் சொல் வடிவத்தில் இருந்து வருகிறது. இந்தக் கூற்றில், இயேசு சமாதானம் பண்ணுகிறவராயிருந்தார் என்று பவுல் உறுதிப்படுத்தினார். சமாதானம் பண்ணுகிறவர் என்ற வகையில் அவர் தமது உரிமைகளை வலியுறுத்துவதற்கு மாறாக, பூமிக்கு வருவதற்காகவும் (காண்க பிலிப்பியர் 2:5-8), தேவனுக்கும் மனிதருக்கும் இடையிலும் மனிதருக்கும் மனிதருக்கும் இடையிலும் சமாதானத்தைக் கொண்டுவரவும், அந்த உரிமைகளை அவர் விட்டுக் கொடுத்தார்.[21] சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக இயேசு ஒரு சிலுவையில் தாம் ஆணியடிக்கப்படுவதற்கும்கூட மனவிருப்பம் கொண்டிருந்தார். அவர் நிறைவான சமாதானம் பண்ணுகிறவராக, சுயநலமற்ற வகையில் சமாதானம் பண்ணுகிறவராக இருக்கிறார்.

இங்கு கலந்துரையாடப்பட்ட பண்புகள் யாவும் நம்மிடத்தில் இருந்தாலும் மற்றும் பிறருடன் சமாதானமாக வாழ்வதற்கு நம்மால் இயன்ற வகையில் மிகச்சிறப்பானவற்றைச் செய்தாலும், சிலர் நம்முடன் சமாதானமாக இருப்பதற்கு இன்னும் மறுத்து விடுவார்கள். ரோமர் 12:18ல் நாம், "கூடுமானால் உங்களாலானமட்டும் *எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று வாசிக்கிறோம் (என்னால் வலியுறுத்தப்பட்டது). ஒவ்வொருவருடனும் சமாதானமாக இருத்தல் என்பது சாத்தியமற்றதாகிறது. ஒரு உறவுமுறையின் ஒரு பாதியை - நமது பாதியை - மாத்திரமே நாம் கட்டுப்படுத்த இயலும். இருப்பினும் "எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பதற்கு" நம்மால் முடிந்த எல்லாவற்றையும்* நாம் *செய்வோமாக.*

மற்றவர்களுடன் சமாதானமாக இருத்தல் என்பது பற்றி மேலும் ஒரு கருத்து குறிப்பிடப்பட வேண்டும். சமாதானம் பண்ணுகிறவர் பிறருடன் சமாதானமாக வாழ்வதற்குத் தம்மால் முடிந்த மிகச்சிறப்பானவற்றைச் செய்வது மாத்திரமல்ல, ஆனால் அவர் சண்டையிடும் கோஷ்டிகளுக்கு இடையில் சமாதானத்தை மேம்படுத்துதலையும் செய்கிறார். மோசே, சண்டையிட்டுக் கொண்டிருந்த தமது சக எபிரெயர்களைப் பிரிக்க முயற்சி செய்தது பற்றி (யாத்திராகமம் 2:13, 14), அல்லது பவுல், சபையில் சண்டை போட்டுக் கொண்டிருந்த இரண்டு சகோதரிகள் இசைவிணக்கமாக வாழவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டது பற்றி (பிலிப்பியர் 4:2) நாம் நினைத்துப் பார்க்கலாம். நேரம் அனுமதிக்கும் என்றால், நாம் இல்லத்தில் (காண்க நீதிமொழிகள் 15:17),

சபையில் (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:13), சமூகத்தில் மற்றும் உலகத்தில் சமாதானத்தின் அவசியம் பற்றிக் கலந்துரையாட முடியும்.

சாமர்த்தியம் மற்றும் ஞானம் ஆகியவற்றிற்கான தேவை உட்பட (காண்க நீதிமொழிகள் 25:11; யாக்கோபு 1:5), மற்றவர்கள் மத்தியில் சமாதானத்தை மேம்படுத்துலுக்குத் தேவையான பண்புகளின் கூடுதல் பட்டியல் ஒன்றை நாம் ஏற்படுத்த முடியும். சில சூழ்நிலைகளில் தமது வாய்களை மூடிக்கொண்டு இருத்தல் என்பதே சமாதானம் பண்ணுவதற்கு நாம் செய்யக்கூடிய மாபெரும் பங்களிப்பாக இருக்கிறது.[22] சாலொமோன் "விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள்சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 26:20). பொறுமையும் அவசியமானதாக உள்ளது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:14) மற்றும் பலமும் ஊக்கமும்கூட அவசியமானவையாக உள்ளன (காண்க 2 கொரிந்தியர் 5:7; எபேசியர் 6:10). அமெரிக்க நாட்டின் செனட்டரான ஹியூபர்ட் ஹம்ப்ரீ என்பவர், "முரண்பட்டு நிற்கும் குழுக்களின் இடையில் பேச்சு வார்த்தை நடத்துதல் என்பது வழுக்கும் பாறைமீது நடந்து ஆற்றைக் கடத்தல் போன்றதாக உள்ளது ... அது இடர்ப்பாடு உள்ளதுதான், ஆனால் அது ஒன்றுதான் கடந்து செல்லும் வழியாக இருக்கிறது" என்று ஒருமுறை கூறினார்.[23]

தேவனுடன் சமாதானமாயிருத்தல் அல்லது மனிதருடன் சமாதானமாயிருத்தல் ஆகிய எதைப் பற்றி நாம் பேசினாலும், அவற்றில் எதுவும் கர்த்தரின் உதவியின்றிச் சாத்தியமாவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது. இயல்பாகவே சமாதானம் நிறைந்தவர்களாக இருப்பவர்களுக்கு, பிரச்சனைகளைத் தவிர்க்க முயற்சிப்பதற்குப்பதிலாக அவற்றைக் கையாளக் கற்றுக் கொள்வதில் தேவனுடைய உதவி தேவைப்படுகிறது. இயல்பாகவே சண்டையிடுபவர்களாக இருப்பவர்களுக்கு, சமாதானம் எவ்வளவு முக்கியமானது என்று காண்பதற்குத் தெய்வீக கண்ணோக்கு தேவைப்படுகிறது. முன்பே குறிப்பிட்டபடி, "சமாதானம்" என்பது "ஆவியின் கனிகளில்" ஒரு பகுதியாக உள்ளது (கலாத்தியர் 5:22). நாம் நமது வாழ்வின் மீது அதிகாரம் செலுத்தத் தேவனுடைய ஆவியானவரையும் அவரது வசனத்தையும் எந்த அளவுக்கு அனுமதிக்கிறோமோ (எபேசியர் 6:17) அந்த அளவுக்கே நாம் தேவனுடன் சமாதானம் கொண்டிருக்கிறோம் மற்றும் பிறருடன் சமாதானத்தைக் கண்டறிய முடிகிறது.

> *தேவனே, சமாதானத்தை நேசிப்பவர்களாக மற்றும் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருப்பதில் நாங்கள் தவறியுள்ளதை எங்களுக்கு மன்னியும். சமாதானத்தைத் தடைசெய்த எங்கள் சுயமையங்கொண்ட தன்மைக்காக எங்களை மன்னியும். நாங்கள் மனதிலும் இருதயத்திலும் சமாதானம் கொண்டிருக்கும்படி உமது இரக்கத்தை எங்கள் மீது பொழிந்தருளும். பின்பு நாங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கும்படி தீர்மானிக்க எங்களுக்கு உதவி செய்யும். எல்லா மனிதர்களோடும் சமாதானமாயிருப்பதை நாங்கள் நாடும்படிக்கு எங்களுக்குப் பலத்தையும் பொறுமையையும் தாரும். உமது குமாரனாகிய இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.*

முடிவுரை

"சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்." "கலகம்பண்ணுகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள்; அவர்கள் சாத்தானுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள்" என்பது இதன் எதிர்மறையாக இருக்கும்.[24] நீங்கள் ஒரு சமாதானம் பண்ணுகிறவராக இருக்கிறீர்களா? நீங்கள் தேவனுடைய மகனாக அல்லது மகளாக இருக்கிறீர்களா? நீங்கள் தேவனுடனும் மற்றவர்களுடனும் சமாதானத்தை மகிழ்வுடன் அனுபவிக்கிறீர்களா? இல்லை என்றால் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் இயேசு கிறிஸ்துவிடமாய்த் திரும்புங்கள்.

குறிப்புகள்

[1]Adapted from Don Humphrey, *The Beatitudes* (Burlington, Mass.: Eternity Press, 1969), 60. [2]Adapted from Robert Wells, "Beatitudes - Their Significance and Meaning" (http://members.tripod.com/~robertwells/Beatitudes.html; Internet; accessed 29 April 2008). [3]*"தேவனுடைய மகள்" மற்றும் "தேவனுடைய மகள்கள்" என்ற சொற்றொடர்கள் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. ஒருவேளை பழங்காலத்தில் மகன்கள் மாத்திரமே உடைமைக்கு உரிய வாரிசுகளாக இருந்தனர் என்ற வழக்கத்தினால் "மகன்கள்" மீது வலியுறுத்தம் உள்ளது எனலாம்.* [4]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 51. McCord's quotations are from the KJV. [5]*Teknon, பிள்ளை என்பதன் பன்மைச் சொல்லைப் பயன்படுத்துகிற 1 யோவான் 3:1, 2ஐயும் காணவும்.* [6]*ஒரு கருத்தில் நாம் ஏற்கனவே சுவிகரிக்கப்பட்டு புத்திரர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 8:15), மற்றும் இன்னொரு கருத்தில் நாம் பரலோகத்திற்குச் சென்று அங்கிருக்கும் காலம் வரும் வரையிலும் சுவிகரித்தல் என்பது முழுமையடையாது (வசனம் 23). இதன்மீதான கலந்துரையாடலை, டேவிட் ரோப்பரின் "ரோமர், 3" என்ற புத்தகத்தில் பக்கங்கள் 148-165 வரையுள்ள "நம்பிக்கையினால் வாழுதல்" என்ற பாடத்தில் காணவும்.* [7]*புதிய ஏற்பாட்டில் இந்தக் குறிப்பிட்ட வார்த்தை மத்தேயு 5:9ல் மாத்திரமே காணப்படுகிறது; ஆனால் இவ்வார்த்தையின் வினைவடிவம் கொலோசெயர் 1:20ல் காணப்படுகிறது; மற்றும் "பண்ணுதல்" மற்றும் "சமாதானம்" ஆகியவற்றிற்கான கிரேக்க வார்த்தைகள் யாக்கோபு 3:18ல் பயன்படுத்தப்பட்டுள்ளன.* [8]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 68. [9]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 464. [10]William Barclay, *The Gospel of Matthew*, vol. 1, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1958), 103.

[11]*ஒரு குழந்தைக்கு நோய்த்தடுப்பிற்காக அல்லது நோயைக் குணமாக்குவதற்காக ஊசி போடுதல் என்பது இதேபோன்ற விவரிப்பாக உள்ளது. ஒரு ஊசியைப் போட்டுக்கொள்ள விரும்பும் எந்தக் குழந்தையையும் நான் அறிந்ததில்லை!* [12]Coy D. Roper, e-mail correspondence, 13 September 2006. [13]*இந்தக் கருத்தை நீங்கள் வாழும் சூழ்நிலைக்குத் தக்கதாகத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [14]*"பிரச்சனையின்மீது பேண்டு - எய்டு ஒன்றை இடுதல்" என்பது அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் சொல் வழக்கமாக உள்ளது.* [15]*ஒரு உதாரணம் என்ற வகையில், அப்போஸ்தலரான பவுல், எஜமானரான பிலேமோன் மற்றும் அடிமையான ஒநேசிமு ஆகியோரைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள், இவர்கள் யாவரும் பிரியமான சகோதரர்களாக இருந்தனர்*

(காண்க பிலேமோன் 1, 16; கொலோசெயர் 4:9; 2 பேதுரு 3:15). [16]*இந்த பாடத்தை நீங்கள் ஒரு வகுப்பறையில் பயன்படுத்தினால், இது ஒரு நல்ல கலந்துரையாடலுக்கான கேள்வியாக இருக்கும்.* [17]*லெராய் பிரவுன்லோ என்பவர் எழுதிய "Do's" and "Don'ts" for the Christian* (Fort Worth, Tex.: Leroy Brownlow Publications, 1951), 53-57 *என்ற புத்தகத்தில் "சமாதானத்தை ஏற்படுத்தும் விஷயங்களைப் பின்பற்றுதல்" என்ற தலைப்பில் ஒரு பாடம் உள்ளது.* [18]*இதுவே நம்மை உண்மையிலேயே "தேவனுடைய புத்திரர்களாக்கும்" எண்ணப்போக்காக உள்ளது. மத்தேயு 5:43-45 வசனப்பகுதியானது மத்தேயு 5:9க்கான "மிகச்சிறந்த விளக்கவுரை" என்று அழைக்கப்பட்டுள்ளது. மத்தேயு 5:45ல் உள்ள "புத்திரர்கள்" என்ற வார்த்தை மத்தேயு 5:9ல் உள்ள "புத்திரர்கள்" என்பதற்கான அதே கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது.* [19]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 119, 122. [20]McCord, 47.

[21]*"மனிதர்" என்பது இவ்விடத்தில் பொதுப்பால் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [22]*"உங்கள் நண்பரைப் பற்றி யாரோ ஒருவரால் கூறப்பட்ட இரக்கமற்ற சில விஷயங்களை நீங்கள் உங்கள் நண்பரிடம் கூறினால் நீங்கள் உண்மையான நண்பராக இருப்பதில்லை"* (Lloyd-Jones, 124). *ஆமென்!* [23]Quoted in Robert Schuller, *The Be (Happy) Attitudes* (Waco, Tex.: Word Books, 1985), 169. [24]Adapted from McCord, 46.

8

புறக்கணிக்கப்படுதல், ஆனால் களிகூருதல்

(மத்தேயு 5:10-12)

நான் ஒரு கூட்டத்தில் உரையாற்றி, மகிழ்ச்சியை விரும்பும் யாவரையும் அவர்களின் கைகளை உயர்த்தச் சொல்லிக் கேட்டுக் கொண்டால், அனேகமாக ஒவ்வொருவருடைய கையும் மேலே உயரும். ஒருவேளை நான், "எத்தனைபேர் துன்புறுத்தப்படுதலை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டால், ஒருசில (அதுவும் சந்தேகமே) கைகள் மட்டுமே உயரும். இருந்தபோதிலும் மத்தேயு 5:10ல் இயேசு, மகிழ்ச்சியையும் துன்புறுத்தப்படுதலையும் ஒன்றிணைத்தார்: "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." பிலிப்பியர் என்பவரின் வேதாகம மொழிபெயர்ப்பு இதைப் பின்வருமாறு கூறுகிறது: "துன்பப்படுத்தப்பட்டுள்ளவர்கள் சந்தோஷமானவர்கள் ..." எட்டாவது பாக்கியத்தில் நாம் இயல்பான தூண்டுதல் மற்றும் தேவனுடைய கரங்களில் உள்ள ஆளுமைத்துவத்தின் பதில் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நேர்மாறைக் கொண்டுள்ளோம். ஹியூகோ மெக்கார்டு பின்வருமாறு எழுதினார்:

> *சுய - பாதுகாத்தல் என்பது இயற்கையின் முதலாவது விதி என்று கூறப்பட்டுள்ளது. எட்டாவது பாக்கியம் ஒரு மனிதரைப் பற்றிக்கொள்ளும்போது, அந்த மனிதர் இயற்கைக்கு [இயல்புக்கு] நேர்மாறாக செல்ல மனவிருப்பம் கொண்டுள்ளார். கிறிஸ்தவம் என்பது சுய - பாதுகாத்தலுக்கு எதிரானதாக உள்ளது. இயேசுவின் மீதான பற்றுதல் முழுமையாக மேம்படுத்தப்படும்போது, ஒரு கிறிஸ்தவர் பின்வருமாறு கூறுகிறார்: "ஜீவனாலாகிலும், சாவினாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார்" (பிலிப்பியர் 1:20). அவர் சாட்டையடியைப் பற்றி ... தவறாக நடத்தப்படுதல் என்றல்ல ஆனால் ஒரு விசேஷித்த தயவு என்று நினைக்கிறார்! அவரைப் பொறுத்த மட்டில், "கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் ... அருளப்பட்டிருக்கிறது" (பிலிப்பியர் 1:29).[1]*

கடைசி பாக்கியத்தில் நாம், முதல் பாக்கியத்தில் தரப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தின் முழுவட்டத்திற்கு வருகிறோம்: "பரலோகராஜ்யம் அவர்களுடையது." 5:3ல் ஆவிக்குரிய வகையில் தங்கள் கைவிடப்பட்ட நிலையை ஒப்புக்கொள்பவர்களுக்கு இந்த ஆசீர்வாதம் தரப்பட்டது. இவ்வசனத்தைத் தொடர்ந்து நாம், ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருத்தலின் விளைவாக ஏற்படும் எண்ணப்போக்குகள் மற்றும் செயல்பாடுகளைக் கொண்டிருக்கிறோம்.

கடைசியாக 5:10ல் நாம், ஆவிக்குரிய வகையில் வறியவர்களாக இருத்தலின் இன்னும் அதிகமானதொரு சொல்விளக்கத்தைக் கொண்டிருக்கிறோம்: துன்பப்படுத்தப் படும்போதும்கூட நேர்மறையான எண்ணப்போக்கைப் பராமரித்தல்.

நீங்கள் மத்தேயு 5:3-12ஐக் கண்ணோக்குகையில், எட்டாவது பாக்கியத்தைப் பற்றிய மாறுபாடான விஷயங்கள் சிலவற்றைக் கவனிக்கலாம். மற்ற பாக்கியங்களைப் போன்றே இதுவும் ஒரே ஒரு வாக்கியத்தால் அமைந்துள்ளது மற்றும் இதுவும் படர்க்கைப் பெயர்ச்சொல்லிலேயே உள்ளது;[2] ஆனால் மற்ற பாக்கியங்களைப் போலின்றி, இதைத் தொடர்ந்து முன்னிலைப் பெயர்ச்சொல்லில் இரண்டு கூடுதல் வாக்கியங்கள் வருகின்றன.[3] இயேசு இந்த பாக்கியத்தைத் தமது சீஷர்களுக்கு நேரடியாக நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்தார். இயேசு ஏன் இந்த பாக்கியத்தை விரிவுபடுத்தி மற்றவற்றை அவ்வாறு செய்யாதிருந்தார்? ஒருவேளை அவர், முந்திய பாக்கியங்களில் வரைகுறிப்பிடப்பட்ட பண்பின் வகையை மேம்படுத்திக்கொண்டால் அவர்கள் இந்த உலகத்தில் இருந்து எதை எதிர்பார்க்க முடியும் என்பதை, தம்மைப் பின்பற்றுபவர்கள் அறிய வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். ஒருவேளை அவர், தமது சீஷர்கள் துன்புறுத்தப்படுதலில் எந்த ஆசீர்வாதத்தையும் காண்பது என்பது அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை உணர்ந்து அறிந்ததால் தமது சிந்தனையை விரிவாக்கியிருக்கலாம்.

இந்த பாக்கியம் ஒருவசன நீளத்திற்குப் பதிலாக மூன்று வசனங்கள் நீளம் கொண்டிருப்பதால், மற்றும் இது (நிபந்தனை மற்றும் வாக்குத்தத்தம் என்ற) வழக்கமான இரு சிந்தனைகளுக்குப் பதிலாக சிந்தனைகளின் பலவகையைக் கொண்டிருப்பதால், இந்த பாடத்தின் வடிவமைப்பு, இப்பாடத் தொடரின் மற்ற பாடங்களிலிருந்து சற்றே வேறுபட்டிருக்கும்.

துன்புறுத்தப்படுதல் தவிர்க்க இயலாததாக உள்ளது

நமது வேதவசனப் பகுதியில் இயேசு, குறைந்தபட்சம் இரு செய்திகளைத் தர விரும்பினார். முதலாவது, துன்புறுத்தப்படுதல் என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது என்பதாகும். துன்புறுத்தப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்குத் திகைப்புக்குரிய விஷயமாக இருத்தலை இயேசு விரும்பவில்லை; அவர்கள் அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் தமது மரணத்திற்குச் சற்று முன்பாக, அப்போஸ்தலர்களிடத்தில், “ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள் ...” என்று கூறினார் (யோவான் 15:20).

துன்புறுத்தப்பட்டு இருத்தலைப் பற்றி இயேசு பேசியபோது, அவர் தமது சீஷர்களுக்கு “துன்புறுத்தப்படுதலின் பல கூறுகள் இணைந்த தொகுப்பு ஒன்றை” தர முயற்சி செய்யவில்லை.[4] எல்லாரும் தனக்கு எதிராக உள்ளனர் என்று நினைக்கும், எல்லா வகையான அவமானங்களையும் தவறாகப் பயன்படுத்தப்படுதல்களையும் கற்பனை செய்துகொள்ளும் தனிநபரைக் காட்டிலும் அதிகமாகப் பரிதபிக்கப்படத்தக்க நிலையில் வேறு எவரும் இருப்பதில்லை. இயேசு பின்வரும் உண்மையை மாத்திரமே எடுத்துரைத்தார்:

தேவனுடைய உண்மையான பிள்ளையாக இருப்பவர் துன்புறுத்தப் படுதலைத் தவிர்க்க இயலாது. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை, வரும் தீங்கை உணர்தலினால் நிரப்ப விரும்பவில்லை, ஆனால் அவர்கள் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்.

துன்புறுத்தப் பட்டிருத்தல் என்பது, ஒருவர் தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறார் என்பதற்கு வழுவாத நிரூபணமாக உள்ளது என்றும் இயேசு கருத்துத் தெரிவிக்கவில்லை. துன்புறுத்தப்பட்டிருத்தல் என்பது சீஷத்துவத்தின் *விளைவாக* இருப்பதற்கு உள்ளதைக் காட்டிலும் அதிகமாக சீஷத்துவத்தின் *நிரூபணமாக* இருப்பதில்லை. நான், “தாய்மைத்துவத்தின் நிமித்தமாகத் துன்புற்று இருந்துள்ள தாய்மார்கள் மகிழ்ச்சியானவர்கள், பாக்கியவான்கள்” என்று கூறினால், துன்புற்று இருந்துள்ள எல்லாரும் தாய்மார்களாக உள்ளனர் என்று நான் மறைமுகமாய் உணர்த்துவதில்லை. துன்புறுதல் என்பது தாய்மைத்துவத்தின் *நிரூபணமாக* இருப்பதில்லை, ஆனால் (பிள்ளைகளைப் பெறுதலின் வேதனை உட்பட) தாய்மார்களாக இருப்பதன் *விளைவாக* உள்ளது. சில மதக்குழுக்களின் தலைவர்கள், தாங்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையே தாங்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்பதற்கான நிரூபணமாக உள்ளது என்று வலியுறுத்தி இருப்பதால் நான் இதைக் குறிப்பிடுகிறேன். இயேசு, “துன்புறுத்தப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் வெறுக்கத் தக்கவர்களாக, செருக்குள்ளவர்களாக அல்லது குற்றத்தன்மையுள்ளவர்களாக இருக்கின்றனர்” என்று கூறவில்லை.

இயேசு, “*நீதியினிமித்தம்* துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்” என்றுதான் கூறினார். இந்தப் பாடவரிசையின் முதல் பாடத்தில் “நீதி” என்பதைப் பற்றி நாம் கூறியது என்ன என்பதை உங்கள் மனதில் மறுகண்ணோட்டம் இடுங்கள்: அது தேவனுடைய நீதியான பண்பைக் குறிப்பிடக்கூடும்; அது கர்த்தரால் நீதிமான்கள் என்று எண்ணப்பட்டு இருத்தலைக் குறிப்பிடக்கூடும்; அது நீதியான வாழ்வைக் குறிப்பிடக்கூடும். ஆகவே நாம், பிதாவானவர் கட்டளையிட்டு இருக்கிறபடி வாழ முயற்சி செய்துகொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளையாக இருப்பதற்காக, ஒருவர் துன்புறுத்தப்பட்டு இருத்தலைப் பற்றி இயேசு பேசினார் என்று முடிவுசெய்யலாம். இருப்பினும் இதை இயேசு அதைக் காட்டிலும் அதிகம் எளிமையாக 11ம் வசனத்தில் கூறினார். அங்கு அவர், “என்னிமித்தம் உங்களை ... துன்பப்படுத்தி ... சொல் வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்” என்று கூறினார் (மத்தேயு 5:11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இதற்கு இணைவசனமாக லூக்கா சுவிசேஷத்தில் அவர், “*மனுஷகுமாரன் நிமித்தமாக* ஜனங்கள் உங்களைப் பகைத்து ... விடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்” என்று கூறினார் (6:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசுவைப் பின்பற்றுதல் மற்றும் அவரைப் போன்று இருக்க முயற்சி செய்தல் ஆகியவற்றின் விளைவு என்ற வகையில் வருகிற துன்புறுத்தப் பட்டிருத்தல் பற்றி அவர் [இயேசு] பேசினார். அவர், “அவர்கள் என்னைத் துன்புறுத்தியுள்ளனர் என்றால், உங்களையும் துன்புறுத்துவார்கள்” என்று கூறினார் என்பதை நினைவில் வையுங்கள். பேதுரு, “ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் [கிறிஸ்துவுக்கு உரியவனாக இருப்பதினால்] பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை

மகிமைப்படுத்தக்கடவன்" என்று எழுதினார் (1 பேதுரு 4:16).

நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால் துன்புறுத்தப்படுதலை நாம் முன்னெதிர் நோக்க முடியும் என்று வலியுறுத்தியவர் இயேசு ஒருவர் மாத்திரமல்ல. தீமோத்தேயுவுக்குப் பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று கூறினார் (2 தீமோத்தேயு 3:12; காண்க நடபடிகள் 14:22). காற்றில் நீங்கள் எதையேனும் மேலே தூக்கி எறிந்தால் அது கீழே வருவது எவ்வளவு நிச்சயமோ, அந்த அளவிற்குப் பின்வரும் ஆவிக்குரிய சத்தியமும் நிச்சயமானதாக உள்ளது: கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியான வாழ்வை வாழ விரும்புகிற யாவரும் *துன்புறுத்தப்படுவார்கள்*. இயேசு மற்றும் பவுல் ஆகியோரின் கூற்றுப்படி, துன்புறுத்தப்படுதலின் உடல்ரீதியான அல்லது உணர்வுப்பூர்வமான சவுக்கடியை நாம் உணராது இருப்பதால், சுயபரிசோதனை அத்தியாவசியமானதாக உள்ளது: நாம் *உண்மையிலேயே* "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாக வாழ விரும்புகிறோமா"?

தேவபக்தியாய் வாழ விரும்புகிறவர்களுக்குத் துன்புறுத்தப்படுதல் தவிர்க்க முடியாததாக இருப்பது ஏன்? சரி மற்றும் தவறு, நல்லது மற்றும் பொல்லாங்கு ஆகியவற்றிற்கு இடையில் எப்போதுமே மன இறுக்கம் நிலவுகிறது. இயேசு, "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்" என்று கூறினார் (யோவான் 3:19, 20). பொல்லாங்கின் சக்திகள் நீதியின் சக்திகளுக்கு எதிராகத் தொடர்ந்து யுத்தம் செய்வதால் (காண்க எபேசியர் 6:10-17), நீதிக்காக உண்மையாக நிற்பவர்கள் துன்புறுத்தப்படுதலை எதிர்பார்க்க முடியும். பிசாசுக்கு இணங்கிப்போக மறுக்கிற ஒருவர் அவனது கைகளில் முரட்டுத்தனமாக நடத்தப்படுதலை எதிர்பார்க்க முடியும்.

துன்புறுத்தப்படுதல் [என்பது]: என்ன?

இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் துன்புறுத்தப்படுதலுக்குத் தயாராக இருப்பதற்கு உதவி செய்வதற்காக அவர்களிடத்தில், துன்புறுத்தப்படுதல் நடைபெறும் சில வடிவமைப்புகளைப் பற்றிக் கூறினார்: "என்னிமித்தம் உங்களை *நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால்* பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (மத்தேயு 5:11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இதற்கு இணைக்குறிப்பாக சமவெளியில் செய்யப்பட்ட பிரசங்கத்தில் உள்ள வசனப்பகுதியில் அவர், "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் *பகைத்து*, உங்களைப் *புறம்பாக்கி*, உங்களை *நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது* நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (லூக்கா 6:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்த இரு வசனப் பகுதிகளிலும் இயேசு, குறைந்த பட்சமாக, துன்புறுத்தப்படுதலின் ஐந்து வகைகளைப் பட்டியலிட்டார்.

(1) *பகைத்தல்.* லூக்கா 6ல் இயேசு "ஜனங்கள் உங்களைப் பகைத்து" என்ற நிலைவரும் காலம் பற்றிப் பேசினார். ஜனங்கள் உங்களைப் பகைப்பதற்குக்

காரணமாவது என்ன? அவர்கள் உங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை முற்றிலுமாகப் புரிந்து கொள்ள இயலாததால் உங்களைப் பகைக்கலாம். கல்லூரியில் மிகச்சிறந்த கால்பந்து வீரராக இருந்த ஒரு இளைஞரை நான் ஞானஸ்நானப்படுத்திய வேளையை நோக்கி என் மனம் பின்னாகச் செல்கிறது. அந்த இளைஞர் ஞானஸ்நானத் தண்ணீரில் இருந்து வெளியே வருகையில், அவருக்குள் உற்சாகம் கொப்பளித்துக் கொண்டிருந்தது; அவர் தமது நண்பர்களிடத்தில் [சுவிசேஷத்தைக்] கூறக் காத்திருக்க இயலாதிருந்தார். [ஆனால்] விரைவிலேயே அவர் மிகவும் ஊக்கம் இழந்தவராக என்னிடத்தில் வந்தார். அவரது "நண்பர்கள்," அவரது மனமாற்றம் குறித்து மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக, அவரது முடிவைக் குறித்து அவர்கள் ஏளனம் செய்தனர். நான் அவருக்கு 1 பேதுரு 4:4ஐச் சுட்டிக்காண்பித்தேன்: "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்."

மக்கள், நீங்கள் வாழும் வாழ்வின் மூலமாகத் தாங்கள் மிகவும் கடிந்துகொள்ளப்படுவதாக உணருகின்றனர் என்பது அவர்கள் உங்களைப் பகைப்பதற்கான இன்னொரு காரணமாக உள்ளது. மனந்திரும்பியவர்கள் தங்கள் செயல்களினால், மனந்திரும்பாதவர்கள்மீது நியாயத்தீர்ப்பு உரைப்பது போலவே (காண்க மத்தேயு 12:41), தேவபக்தியுள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையினால், தேவபக்தி இல்லாதவர்களை "நியாயந்தீர்க்கின்றனர்." இந்த உலப்பிரகாரமாக வாழுகின்றவர்கள், தங்கள் தரத்தைக் காட்டிலும் உயர்வான தரத்தைக் கொண்டவர்களை அவமதிக்கின்றனர்.

(2) *புறம்பாக்குதல்.* லூக்கா 6ல் இயேசு அடுத்ததாக, "ஜனங்கள் ... உங்களைப் புறம்பாக்கி" என்ற நிலைவரும் காலத்தைப் பற்றிப் பேசினார். KJV வேதாகமத்தில், "அவர்கள் உங்களைத் தங்கள் தோழமையிலிருந்து பிரித்து வைப்பார்கள்" என்றுள்ளது. பல கிறிஸ்தவர்கள் சமூகத்தில் இருந்து புறம்பாக்கப்பட்டனர். அவர்கள் மனச்சாட்சியின் உணர்வுடன், அந்த நாளின் புறதெய்வ வணக்கம் சார்ந்த பண்டிகைகளில் கலந்துகொள்ள இயலாதிருந்தனர். அவர்களில் பலர் தங்கள் வேலைகளை இழந்தனர். கிறிஸ்தவர்கள் ஆகியிருந்த சிலர் தங்கள் குடும்பங்களில் இருந்து புறம்பாக்கப் பட்டிருந்தனர். மத்தேயு 10ல் இயேசு இருதயம் உடைந்துபோகச் செய்யும் பின்வரும் வார்த்தைகளைப் பேசினார்:

> பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே (வசனங்கள் 34-36).

"பூமியின்மீது சமாதானத்தைக் கொண்டுவருதல்" என்பது கிறிஸ்து இங்கு வருவதற்கன ஒரு நோக்கமாக *இருந்தது,*[5] ஆனால் சுவிசேஷமானது ஒவ்வொரு இல்லத்திலும் சமாதானத்தைக் கொண்டுவராது என்பதை அவர் அறிந்திருந்தார். குறிப்பிட்ட இல்லங்களில் இருப்பவர்களில் சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மற்றவர்கள் அவ்வாறு செய்ய மறுக்கும்போது, அது ஒரு பட்டயத்தைக் கொண்டுவரும். இந்த பாடங்களைப் படிப்பவர்களில் பலர்,

இதை நான் புரிந்து கொள்வதைக் காட்டிலும் சிறப்பாகப் புரிந்துகொள்வர். கிறிஸ்துவைப் பின்பற்ற முடிவு செய்ததால் தங்கள் குடும்பங்களில் இருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளவர்களைப் பற்றி நான் பேசுகிறேன்.

மதரீதியான சுதந்தரத்தை மக்கள் மதிக்கும் அமெரிக்காவிலும்கூட, புறம்பாக்குதல் நடக்கிறது. ஒருவேளை கும்பலுடன் ஒன்றாக இணைந்து செல்ல மறுத்த காரணத்தினால், தங்கள் சமவயதுக் குழுக்களினால் ஏற்றுக்கொள்ளப்படுதலை விரும்பும் கிறிஸ்தவ இளைஞர்கள், தங்களைத் தாங்களே புறம்பாக இருப்பதாக அடிக்கடி கண்டறிதலைக் காட்டிலும் இதை வேறு எவரும் அதிக முனைப்பாக உணர்வதில்லை எனலாம் (காண்க யாத்திராகமம் 23:2அ).

(3) *நிந்தனை.* மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இரு சுவிசேஷங்களிலுமே, "உங்களை நிந்தித்து" என்ற வார்த்தைகள் உள்ளன. இயேசு தாமே நிந்திக்கப்பட்டார். அவரது விரோதிகள் அவரை, "போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன்" என்று அழைத்தனர் (மத்தேயு 11:19) மற்றும் அவர் "பிசாசு பிடித்தவன்" என்றும் கூறினர் (யோவான் 10:20; காண்க 8:48). இயேசு நிந்திக்கப்பட்டார் என்றால், நாம் நிந்திக்கப்பட்டிருத்தல் பற்றித் திகைப்படையக் கூடாது. நாம் நிந்திக்கப்படும்போது அது நமது உள்ளத்தைப் புண்படுத்துகிறது. நாவைக் காட்டிலும் கூர்மையான ஆயுதம் வேறு எதுவும் இல்லை. நாம் சிறு பிள்ளைகளாக இருந்தபோது, நம்மில் சிலர் பின்வரும் பாடலை நம்மில் சிலர் கற்றிருக்கலாம்: "குச்சிகளும் கற்களும் என் எலும்புகளை உடைக்கக்கூடும், ஆனால் வார்த்தைகள் என்னை ஒருக்காலும் காயப்படுத்த முடியாது." முதியவர்களாக வளருதலில் நாம், குச்சிகள் மற்றும் கற்கள் ஆகியவற்றைக் காட்டிலும் வார்த்தைகள் மிக அதிகமாகக் காயப்படுத்துபவையாக இருக்கக்கூடும் என்று கற்றிருக்கிறோம். குச்சிகளும் கற்களும் எலும்புகளைக் காயப்படுத்தி தோலைப் புண்ணாக்குதலை மாத்திரமே செய்ய முடியும், ஆனால் வார்த்தைகள் இருதயத்தை உடைக்கவும் ஆவியைப் பேரழிவுக்கு ஆட்படுத்தவும் முடியும்.

(4) *புறங்கூறப்படுதல் மற்றும் தவறானவை கூறப்படுதல்.* இது நிந்தித்தலுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளது. மத்தேயு சுவிசேஷத்தில், "பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால்" என்றுள்ள வேளையில் லூக்கா சுவிசேஷத்தில், "உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது" என்றுள்ளது. ஒருவர் சரியானதைச் செய்ய முயற்சிக்கும்போது, அவரை மற்றவர்கள் தவறாகக் கூறுதல் என்பது பொதுவானது அல்லாததாக இருப்பதில்லை. யோசேப்பு போத்திபாரின் மனைவியுடன் விபசாரம் செய்ய மறுத்த போது, அவர் அவளைக் களங்கப்படுத்த முயற்சி செய்ததாக அவள் கூறினாள் (காண்க ஆதியாகமம் 39:6ஆ-18). யாக்கோபு தமது கிறிஸ்தவ வாசகர்களிடத்தில், "உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை[6] அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?" என்று கேட்டார் (யாக்கோபு 2:7). நீங்கள் "வேதாகமத்தின் விஷயங்களை வேதாகமத்தின் வழிகளில் செய்தல்" என்பதை வலியுறுத்தினால், நீங்கள் "குறுகிய மனப்பான்மை கொண்டவர்" அல்லது "சட்டம் பேசுபவர்" அல்லது "குளிர்ந்த மற்றும் உணர்வற்றவர்" என்று கூட அழைக்கப்படலாம்.[7] தவறாகக் கூறப் படுதல் என்பது புண்படுத்தக் கூடும், ஆனால் சமவெளியில் செய்த பிரசங்கத்தில் இயேசு பின்வருவதைக் கூடுதலாகக்

கூறினார் என்பதை மறந்து விடாதீர்கள்: "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" (லூக்கா 6:26).

இங்கு நாம், சமானநிலையின் தேவையை ஆழ்ந்து சிந்திக்கச் சற்றே தாமதிக்க வேண்டும். ஒரு சபைக்குழுமம், சமூகத்தில் ஒரு நற்பெயரைப் பெற விரும்புவதில் தவறு எதுவும் இல்லை. இயேசுவும்கூட, "மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக்கா 2:42).இருப்பினும் அப்படிப்பட்ட விருப்பம் சத்தியத்திற்காக நிலைநிற்குதலுக்கு மேலான இடத்தைக் பெறும்போது, நமது வலியுறுத்தம் தவறானதாக உள்ளது. இயேசு, "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ" என்று கூறியதை மறந்துவிட வேண்டாம்.

(5) வரம்பு மீறித் துன்பப்படுத்துதல். மத்தேயு சுவிசேஷ விபரம் "துன்புறுத்துதல்" அல்லது "துன்புறுத்தினர்" என்ற வார்த்தைகளை மூன்று முறை பயன்படுத்துகிறது (வசனங்கள் 10-12). இவ்வார்த்தைகள் "நாடித்தேடுதல்" என்று அர்த்தப்படுகிற (*dioko* என்ற) வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளன.[8] மத்தேயு 5:10ல் இந்தச் சொற்றொடர், "அலைக்கழிக்கப்பட்டு, வேட்டையாடப்பட்டு, பாழாக்கப்பட்டு [அழிக்கப்பட்டு] இருக்கிறவர்கள்" என்பதைக் குறிப்பதாக ஒரு எழுத்தாளர் கூறினார். இந்தச் சொற்றொடர் வேட்டையாடுபவர்களால் தொடரப்படுகிற காட்டுவிலங்கைப் பற்றிப் பேசத் தக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[9] தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்கள் உடைமைகள் அபகரிக்கப்பட்டு, சிறையில் அடைத்துத் துன்புறுத்தப்பட்டு, மற்றும் அவர்களில் பலர் கொலைசெய்யப்பட்ட வேளையில் அடிக்கடி, "வேட்டையாடுபவர்களால் பின் தொடரப்பட்ட மிருகங்களைப்" போன்று உணர்ந்திருக்க வேண்டும்.

துன்புறுத்துதல்: யார்?

இவைபோன்ற துன்புறுத்தப்படுதல்கள் வந்தபோது இயேசு, நீதியினிமித்தம் துன்புறுத்தப்பட்டவர்களில் தாங்களே முதலாவதாக இருக்கவில்லை என்பதைத் தமது சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் துன்புறுத்தப்பட்டபோது, அவர்கள் நல்ல தோழமையில் இருந்தனர், "ஏனெனில் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:12). முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ள துன்புறுத்துதலின் வகைகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள்.

(1) பகைத்தல். தீர்க்கதரிசிகள் பிரபலமான குழுவாக இருக்கவில்லை. இஸ்ரவேலின் அரசராக இருந்த ஆகாப் என்பவர், தீர்க்கதரிசியாகிய மிகாயாவைப் பற்றி, "நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே எப்பொழுதும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன்" என்று கூறினார் (2 நாளாகமம் 18:7).

(2) புறம்பாக்குதல். தீர்க்கதரிசிகளின் பிரபலமற்ற தன்மையினால், அவர்கள் சில வேளைகளில் தனிமையில் வாழ நேர்ந்தது (காண்க 1 இராஜாக்கள் 17:1-7).

(3) நிந்தைகள். ஆகாப் எலியாவை, "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன்" என்று அழைத்தார் (1 இராஜாக்கள் 18:17). தேவனுடைய வசனங்கள் பற்றிய உங்கள் உறுதிப்பாடுகளை நீங்கள் சமரசம் செய்ய மறுத்தால், நீங்கள்

கலங்கப்பண்ணுகிறவர் என்று அழைக்கப்படலாம். இருப்பினும் எலியாவின் பதிலுரையைக் கவனியுங்கள்: "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களை [பிறதெய்வங்களை]ப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாரும் இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்" (வசனம் 18).

(4) புறங்கூறப்படுதல் மற்றும் தவறாகக் கூறப்படுதல். தானியேல் தேவனிடத்தில் ஜெபிக்கத் தொடர்ந்தபோது, மற்ற அரசு ஊழியர்கள் அவரை, பாபிலோனின் அரசருக்கு பற்றுருதி அற்ற வகையில் இருந்தார் என்று குற்றம் சாட்டினர் (காண்க தானியேல் 6:1-15).

(5) உடல்ரீதியான துன்புறுத்துதல்கள். எரேமியா அடிக்கப்பட்டார் (எரேமியா 20:2). அனானி சிறையில் அடைக்கப்பட்டார் (2 நாளாகமம் 16:7, 10). சகரியா கல்லெறியப்பட்டார் (2 நாளாகமம் 24:21). யூதப் பாரம்பரியத்தின்படி, ஏசாயா, குழல் போன்ற மரக்கட்டையினுள் வைக்கப்பட்டு இரண்டாக அறுக்கப்பட்டார் (காண்க எபிரெயர் 11:37).

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை ஒரு விவரிப்பாக இயேசு பயன்படுத்தியபோது, துன்புறுத்தப்படுதல் என்பது தேவனுடைய தயவின்மையின் அடையாளமாக இருப்பதில்லை, ஏனெனில் தேவன்மீது அன்புகூர்ந்தவர்கள் துன்புற வேண்டியிருந்தது மற்றும் இன்னமும் துன்புற்றனர் என்று தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு உறுதிப்படுத்தினார். துன்புறுத்தப்படுதல் என்பது ஒருவரை விசுவாசம் நிறைந்தவர்களின் சகோதரத்துவத்தில் வைக்கிறது. இயேசு தாமே துன்புற்றார். "கிறிஸ்துவும் உங்களுக்குக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1 பேதுரு 2:21). இயேசுவின் அப்போஸ்தலர்களும் துன்புற்றனர். அவர், யாக்கோபுவும் யோவானும் பாடுகளின் பாத்திரத்தில் பானம்பண்ணுவார்கள் என்றும் பாடுகளின் ஞானஸ்நானத்தைப் பெறுவார்கள் என்றும் கூறினார் (காண்க மாற்கு 10:39). யாக்கோபுவே முதலாவதாக மரித்த அப்போஸ்தலராயிருந்தார், அவர் கி.பி. சுமார் 44ல் ஏரோதினால் பட்டயத்தால் கொல்லப்பட்டார் (காண்க நடபடிகள் 12:1, 2). யோவான் பத்முதீவிற்கு நாடுகடத்தப்பட்டார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:9).[10] மற்ற அப்போஸ்தலர்களுக்கு என்ன நடந்தது என்று நாம் நிச்சயமாய்க் கூறமுடிவதில்லை, ஆனால் அவர்களின் மரணத்தைப் பற்றிய மனிதப் பாரம்பரியக்கூற்றுகள் சில பின்வருமாறு:[11]

- பேதுரு - தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டார்.
- அந்திரேயா - எடெஸ்ஸாவில் ஒரு சிலுவையில் வேதசாட்சியாக மரித்தார்.
- பிலிப்பு - சவுக்கடிபட்டு, சிறையில் அடைக்கப்பட்டார் பின்பு ஹெர்ரோபொலிஸ் என்ற இடத்தில் சிலுவையில் அறையப்பட்டார்.
- பர்த்தொலொமேயு - அடிக்கப்பட்டு பின்பு சிலுவையில் அறையப்பட்டார்.
- தோமா - ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார்.
- மத்தேயு - எத்தியோப்பியாவில் பட்டயத்தால் வெட்டப்பட்டார்.
- அல்பேயுவின் குமாரனான யாக்கோபு - எகிப்தில் வேதசாட்சியாக

மரித்தார்.

- ததேயு - சிலுவையில் அறையப்பட்டார்.
- செலோத்தே என்னப்பட்ட சீமோன் - சிலுவையில் அறையப்பட்டார்.
- மத்தியா - கல்லால் எறியப்பட்டு பின்பு தலை வெட்டப்பட்டார்.
- பவுல் - ரோமாபுரியில் தலை வெட்டப்பட்டார்.[12]

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவினிமித்தம் துன்புற்ற இந்த சகோதரத்துவத்தின் பகுதியாக இருந்தனர். ரோமப் பேரரசராக இருந்த நீரோ, கிறிஸ்தவர்களைக் காட்டு மிருகங்களின் தோல்களுக்குள் வைத்துத் தைத்துப் பின்பு அவர்களின் மீது நாய்களை ஏவிவிட்டார். அவர் மெழுகினால் விரைக்கச் செய்யப்பட்ட உடைகளை அவர்களுக்கு அணிவித்து, பின்பு அவர்களை மரத்தூண்களில் கட்டிவைத்து உயிரோடு அவர்களை எரித்தார். எனது குடும்பத்துடன் நான் ரோமாபுரிக்குச் சென்றிருந்தபோது, நீரோ தமது விருந்துக் கொண்டாட்டங்களுக்கு வெளிச்சம் தருவதற்காகக் கிறிஸ்தவர்களைத் தீப்பந்தமாக எரித்துப் பயன்படுத்திய சிறுகுன்றின் மீது நான் நின்றேன். டொமீஷியன் என்பவர், "நீதிபதியின் இருக்கையின் முன்பாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்ட எந்தக் கிறிஸ்தவரும், தமது மார்க்கத்தைத் துறப்பதாகக் கூறாதநிலையில் தண்டனையில் இருந்து விலக்கம் அளிக்கப்படக் கூடாது" என்று உத்தரவு இட்டிருந்தார்.[13] தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த பல்வேறு சித்திரவதைகளும் கொடுமைகளும், அவற்றைப் பட்டியலிட என்னால் கூடாத அளவுக்கு மிகவும் ஏராளமாக இருந்தன. அவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்து விட்டதற்காக மிகநீண்ட காலமாகவும் பயங்கரமாகவும் துன்புற்றனர் என்று கூறுவது போதுமானதாகும்.[14]

இன்றைய நாட்களிலும் துன்புறுத்தப்படுதல் தொடருகிறது. சில நாடுகளில், பிறரைக் கிறிஸ்தவர் ஆகும்படி ஊக்குவித்தல் என்பது சட்டவிரோதமான செயலாக உள்ளது. மதசுதந்தரம் உள்ள நாடுகளில் கூட, வெறுப்புணர்வு, விமர்சனம், நிந்தைகள், புறங்கூறுதல் மற்றும் தவறாகக் கூறுதல் ஆகியவை மறைமுகமாக உள்ளன.[15] இது சிலரை, உடல்ரீதியான துன்புறுத்துதலைக் காட்டிலும் அதிகம் மோசமாகப் பாதிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டும் அல்லது மரிக்க வேண்டும் என்று அறைகூவல் விடப்பட்டிருந்தால், மரணத்தையே அவர்கள் தேர்ந்து கொண்டிருப்பார்கள். இருப்பினும், துன்புறுத்தப்படுதல் என்பது அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக வருகிற வேளையில், அது அவர்களின் விசுவாசத்தையும் நீடியபொறுமையையும் ஒரு புற்றுநோயைப் போன்று பட்சித்து விடுகிறது.

நீங்கள் கர்த்தருக்கு விசுவாசத்துடன் இருந்தால், விசுவாசம் என்பது எந்த வடிவத்தில் இருந்தாலும், துன்புறுத்தப்படுதல் என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது. அதுவே நமது வேதவசனப் பகுதியின் செய்திகளில் ஒன்றாக உள்ளது.

நீங்கள் இன்னமும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்

துன்புறுத்தப்படுதலின் தவிர்க்க இயலாத நிலையிலும் கூட நீங்கள் அகமகிழ்ந்து மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பது இரண்டாவது செய்தியாக உள்ளது. இயேசு, "அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" என்று கூறினார் (லூக்கா 6:23அ). அவர் அவ்வார்த்தைகளை உச்சரித்ததை

நேரில் கேட்ட ஒருவர் பிற்பாடு, "நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து; கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்'' என்று எழுதினார் (1 பேதுரு 3:14, 15அ; காண்க 4:16). நாம் தவறாக நடத்தப்படும்போது மகிழ்ச்சியாக இருப்பது சுலபமாக இருப்பதில்லை, ஆனால் மகிழ்ச்சி என்ற பாடக்கருத்திற்கு இதுவே அடிப்படையாக உள்ளது. நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால், நமக்கு உபத்திரவங்கள் வரும்போதுகூட நாம் மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலர்கள் அடிக்கப்பட்டு பிரசங்கிக்கக் கூடாது என்று கட்டளையிடப்பட்டபோது (நடபடிகள் 5:40), அவர்கள் "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய்'' ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போயினர் (வசனம் 41). சுயபரிதவிப்பினால் அழுது புலம்புவதற்குப் பதிலாக அவர்கள், "இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (வசனம் 42). பவுலும் சீலாவும் பிலிப்பி நகரில் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது, அவர்கள் முறையிடுவதற்குப்பதிலாக, தாங்கள் அடைக்கப்பட்டு இருந்த சிறைச்சாலை அறையை ஜெபங்களினாலும் தேவனை நோக்கிப் பாடிய துதியின் கீதங்களினாலும் நிரப்பினர் (நடபடிகள் 16:25). தொடக்ககாலத்தில் கிறிஸ்தவ வேதசாட்சிகளாக மரித்தவர்கள், கீதங்களைப் பாடிக்கொண்டே மரணம் அடைந்தனர் என்று கூறப்படுகிறது. போலிக்கார்ப்பு என்பவர் இயேசுவின் மீதுள்ள தமது விசுவாசத்தைக் கைவிட வேண்டும் அல்லது மரிக்க வேண்டும் என்று கூறப்பட்டபோது, அவர் "எண்பத்து ஆறு ஆண்டுகளாக நான் அவரைச் சேவித்திருக்கிறேன், அவர் எனக்கு ஒருமுறைகூடத் தவறு இழைத்தது இல்லை; அப்படியிருக்க என்னை இரட்சித்துள்ள எனது அரசருக்கு விரோதமாக நான் எப்படி தேவதூஷணம் கூறுவேன்?" என்று பதில் அளித்தார்.[16]

ஏன் மகிழ்ச்சியடைய வேண்டும்?

துன்புறுத்தப்படுதல் வருகிறபோது "சந்தோஷப்பட்டு, களிகூருதல்'' எவ்வாறு சாத்தியம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் நம்மில் பலருக்குச் சிரமமாக இருக்கிறது. அந்த விஷயத்தைத் தெளிவுபடுத்த என்னை அனுமதியுங்கள்: துன்புறுத்தப்படுதலை நாம் விரும்ப வேண்டும் என்றோ அல்லது நாம் துன்புறுத்தப்படுவதால் மாத்திரம் நாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்றோ இயேசு அர்த்தப்படுத்தவில்லை. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு தாமே, "தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, *அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து*" இருந்தார் என்று கூறினார் (எபிரெயர் 12:2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அப்படியென்றால் நாம் "நீதியினிமித்தம்'' துன்புறுத்தப்படும்போது மகிழ்ச்சியாக இருக்க வேண்டியது ஏன்? நான் ஒருசில கருத்துக்களைத் தர அனுமதியுங்கள்.

துன்புறுத்தப்படுதல் என்பது நமக்கு செய்யக்கூடியவற்றின் நிமித்தம். துன்புறுத்தப்படுதல் என்பது வாய்ப்புக்களைக் கொண்டு வரலாம். துன்புறுத்தப்படுதலின் சில வடிவங்கள், நாம் ஆவிக்குரிய வளர்ச்சி அடைய

நமக்கு வாய்ப்பை அளிக்கின்றன. யாக்கோபு பின்வருமாறு எழுதினார்,

> என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது (யாக்கோபு 1:2-4; காண்க ரோமர் 5:3, 4).

துன்புறுத்தப்படுதல் என்பது ஆவிக்குரிய வளர்ச்சியைத் தூண்டுவது மாத்திரமல்ல, ஆனால் அது தேவன் நமக்குத் தேவை என்பதை நாம் அறியச் செய்து அவரிடத்தில் அடைக்கலம் செல்ல நம்மை தூண்டுகிறது. பவுல் தமது வாழ்வைக் கர்த்தருக்கென்று ஒப்புவித்து இருந்ததால், அவரால் "... நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்று எழுத முடிந்தது (2 கொரிந்தியர் 12:10; காண்க வசனம் 9).

கிறிஸ்துவைப் போன்ற ஆவியைச் செயல்விளக்கப்படுத்துதல் என்பது, துன்புறுத்தப்படுதல் கொண்டுவரக்கூடிய இன்னொரு வாய்ப்பாக உள்ளது. இயேசு வையப்பட்டபோது [வாய்ச்சொற்களால் தாக்கப்பட்டபோது] "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்" இருந்தார் (1 பேதுரு 2:23). அவரது உதாரணத்தைப் பின்பற்றும்படி நமக்கு அறைகூவல் விடப்பட்டுள்ளது: "வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்" (1 கொரிந்தியர் 4:12ஆ).[17]

துன்புறுத்தப்படுதல் காண்பிக்கக் கூடியது என்ன என்பதன் நிமித்தம். துன்புறுத்தப்படுதல் என்பது நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சுட்டிக்காண்பிக்க முடியும்.[18] அப்போஸ்தலர்களைப் போன்று நாமும் "அவருடைய நாமத்துக்காக ... அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால்" மகிழ்ச்சி அடையக் கற்றுக்கொள்ள முடியும் (நடபடிகள் 5:41). தேவன், நமது திராணிக்கு மிஞ்சி நாம் சோதிக்கப்பட அனுமதிக்கமாட்டார் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (1 கொரிந்தியர் 10:13). துன்புறுத்தப்படுதல் என்பது நம்மைப் பற்றிக் கர்த்தரின் உயர்வான கருத்தை வெளிப்படுத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது; அதை நாம் அவரது உதவியுடன் சகிக்க முடியும் என்று நம்மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளார். துன்புறுத்தப்படுதல் என்பது நாம் கிறிஸ்துவின் ஊழியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறோம் என்று சுட்டிக்காண்பிக்கலாம். சாத்தானும் அவனைப் பின்பற்றுபவர்களும். தங்களுக்கு அச்சுறுத்துதலாக இராதவர்களைக் குறித்துக் கவலை கொள்ளக் கொஞ்சமே காரணங் கொண்டுள்ளனர்.

அப்படியென்றால், நாம் துன்புறுத்தப்படுதலில் தேவனுடைய உதவியுடன் உயிர்பிழைத்து இருக்கும்போது, நாம் சோதனையைச் சந்தித்திருக்கிறோம் என்பதால் அகம் மகிழ முடியும். இயேசு, "*நீதியினிமித்தம்* துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள்.[19] ஏற்கனவே துன்புறுத்தப்படுதலின் பெரும்புயலை சகித்திருந்து இன்னமும் உறுதியாக நிலைநிற்பவர்களுக்கு விசேஷித்த வலியுறுத்தம் தரப்பட்டுள்ளது. விசுவாசம் நிறைந்த இவர்கள் அகம் மகிழ நிச்சயமாகவே காரணம் கொண்டுள்ளனர்.

துன்புறுத்தப்படுதல் என்பது நாம் எங்கு நோக்கி முன்செல்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டக் கூடுவதின் நிமித்தம். துன்புறுத்தப்படுதல் வருகிறபோது அகம் மகிழுதலுக்கான முதன்மைக் காரணம், நாம் அதைச் சகித்திருந்தால் தரப்படும் வாக்குத்தத்தமாக உள்ளது: "பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்தேயு 5:10ஆ). முதலாவதாக "ராஜ்யம்" என்ற வார்த்தையை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள்: இது தேவன் ஆளுகை செய்யும் வட்டாரமாக உள்ளது: துன்புறுத்தப்படுதல் என்பது நீங்கள் தேவனை உங்கள் இருதயத்தில் அரியணையேற்றி இருக்கிறீர்கள் என்பதற்குச் சாட்சியமாக இருக்கலாம். நாம் அவரது இராஜ்யத்தில் அங்கம் வகிக்கிறோம் என்று அறிதல் என்பது இந்த வாழ்வில் அவரது வாக்குத்தத்தத்தின் ஒருபகுதி நிறைவேற்றமாக உள்ளது.

இருப்பினும் இந்த பாக்கியத்தில் கவனக்குவிப்பு இனிவரும் வாழ்வின் மீது உள்ளது. 12அ வசனத்தில் இயேசு, "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; *பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்*" என்று கூடுதலாகக் கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க லூக்கா 6:23அ). இந்த வாழ்வில் நமக்குக் கிடைக்கும் பலன் போதுமானதாக உள்ளது மற்றும் நமது தேவைகள் சந்திக்கப்படுகின்றன, ஆனால் பரலோகத்தில் நமது பலன் *மிகுதியாயிருக்கும்.* நீங்கள் துன்புற்று எல்லாவற்றையும் இழந்து போனாலும், தேவன் உங்களுக்கென்று ஒரு பரலோக இராஜ்யத்தை ஆயத்தம் செய்திருக்கிறார் என்று நீங்கள் அறிய முடியும். வாழ்வு எதைக் கொண்டு வந்தாலும், நாம் "நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூர" த்தைக் கொண்டிருக்கிறோம் (எபிரெயர் 6:19; காண்க 5:3, 4).

முடிவுரை

நாம் பாக்கியங்களின் முடிவிற்கு வந்திருக்கிறோம். மாபெரும் இவ்வசனப் பகுதி, தேவன் நமக்குத் தேவை என்பதை உணர்ந்தறியச் செய்து, நமது போதுமற்ற தன்மைகளுக்காகத் துக்கப்படச் செய்து, நம்மைக் கர்த்தரிடத்தில் இணங்கச் செய்து, பட்டினியாயிருக்கும் ஒரு மனிதர் உணவுக்காக ஏங்குவது போன்று தேவனுக்காகவும் அவரது வழிக்காகவும் ஏங்கச் செய்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவர், இரக்கம் நிறைந்தவராக, இருதயத்தில் சுத்தமுள்ளவராக மற்றும் சமாதானம் பண்ணுகிறவராகச் செயல்படுவார் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இப்போது நமக்கு, இவ்விஷயங்களைச் செய்கிறவர்கள், புரிந்துகொள்ளாத, புரிந்துகொள்ள இயலாத உலகத்திலிருந்து துன்புறுத்துதலை எதிர்பார்க்க முடியும் என்றும் நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இயேசு செயல் விளைவில், "ஆனால் தேவன் உங்களுக்கு உதவுவார் என்பதால் எல்லாம் சரியாக உள்ளது. மேலும் நீங்கள் சகித்திருந்தால், நீங்கள் இங்கும் இனிவரும் வாழ்விலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்" என்றார்.

> *தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் எட்டாவது பாக்கியத்தை நேசித்தனர் ... இது அவர்கள் வன்முறையின் மிகக்கசப்பான நிகழ்வில் புன்முறுவல் பூக்கக் காரணமாயிற்று. இது அன்றாட ஆறுதலாக இருந்தது, ஏனெனில் அவர்கள் "இராஜ்யம்" தங்களுடையது மற்றும் "பரலோகத்தில்" தங்கள் பலன் மிகுதியாக இருக்கும் என்று அறிந்திருந்தனர். கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதம் என்ற உள்ளான எழுச்சியுடனும் ஆவிக்குரிய*

பலத்துடனும் அவர்கள் "துன்பங்களின் மாபெரும் போராட்டத்தை சகிக்கப் பலம்பெற்றிருந்தனர் (எபிரெயர் 10:32).[20]

நீண்ட காலத்திற்கு முன் இயேசு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரிடத்தில் கேட்டது போன்றே, இயேசு பானம்பண்ணிய பாடுகளின் பாத்திரத்தில் நாமும் பானம்பண்ண முடியுமா என்றும் பாடுகளின் ஸ்நானத்தை நாமும் பெற முடியுமா என்றும், இன்றைய நாட்களின் அவர் நம்மிடம் இன்னமும் கேட்கிறார். நீங்கள் நீதிக்கான நிலைப்பாட்டை மேற்கொண்டு "நீதிக்காக" வாழ அதாவது இயேசுவுக்காக வாழ உறுதிகொள்ள வேண்டும் என்பதே என் ஜெபமாக உள்ளது. நீங்கள் "அநேக உபத்திரவங்களின் வழியே கடந்து சென்றால்" (நடபடிகள் 14:22) ஒருநாளில் ஆத்துமாவின் இல்லத்திற்குள் பிரவேசிப்பீர்கள்.

குறிப்புகள்

[1]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 54. [2]*ஆங்கிலமொழியில், வேறு யாரைப் பற்றியாவது நீங்கள் பேசுகையில் "படர்க்கைப் பெயர்ச்சொல்" ("அவர்," "அவள்," "அவர்கள்") பயன்படுத்தப்படுகிறது.* [3]*ஆங்கில மொழியில் நீங்கள் யாருடனாவது பேசுகிறபோது "முன்னிலைப் பெயர்ச்சொல்" ("நீங்கள்") பயன்படுத்தப்படுகிறது.* [4]*"தியாக மனப்பான்மை" என்பது இதன் தொடர்புடைய சொற்றொடராக உள்ளது. இது அடிப்படையில் "சித்தபிரமை" கொண்டிருத்தல் போன்றதாகவே உள்ளது.* [5]*"தந்தையைப் போல மகன்" என்ற இதற்கு முந்திய பாடத்தில் காணவும்.* [6]*"நல்ல நாமம்" என்பது கிறிஸ்துவினுடையதாக உள்ளது. நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும்போது, நாம் கிறிஸ்துவின் நாமத்தைக் கனப்படுத்துகிறோம் மற்றும் நாம் அவருக்கு உரியவர்கள் என்று அறிவிக்கிறோம்.* [7]*சரியானவற்றிற்காக நிலைநிற்க முயற்சி செய்பவர்கள் மீது நிந்தைகள் மற்றும் தவறாகக் கூறப்படுதல் ஆகியவை குவிக்கப்படுதல் என்பது இடத்திற்கு இடம் வேறுபடும். நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருந்தும் வகையில் இதைத் தழுவி விரிவாக்கிக் கொள்ளுங்கள்.* [8]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 468. [9]Johann Jakob Wetstein (1693-1754); quoted in A. Lukyn Williams, "St. Matthew," *The Pulpit Commentary,* vol. 15, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 150. [10]*மனிதப் பாரம்பரியத்தின்படி, டொமீஷியனின் மரணத்திற்குப் பின்பு யோவான் எபேசுவுக்குத் திரும்பி வந்து பிற்பாடு அங்கேயே மரித்தார் என்று கூறப்படுகிறது.*

[11]*பாரம்பரியங்கள் வேறுபடுகின்றன. இங்கு பட்டியலிடப் பட்டுள்ள பாரம்பரியக் கூற்றுக்களில் பெரும்பான்மையானவை* John Foxe, *Fox's Book of Martyrs,* ed. William Byron Forbush (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1926) *என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.* [12]*இரண்டு தீமோத்தேயு 4:6ம் வசனம் பவுலின் மரணத்தை முன்னெதிர் நோக்குகிறது.* [13]Foxe, 6. [14]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 75 *என்பது தகவலுக்கான ஆதாரமூலங்களில் ஒன்றாக உள்ளது.* [15]*உங்கள் சமூகத்தில் நடைமுறைக்கு உகந்த வகையிலான விவரிப்புகளை நீங்கள் உட்செருகக் கூடும். அமெரிக்காவில் ஊடகங்கள், "அடிப்படையாளர்கள்" என்று அழைக்கப்படுபவர்களைத் தொடர்ந்து ஏளனம் செய்கின்றன. சமீபத்தில், ஒரு செய்தி*

நிகழ்ச்சி, கிறிஸ்துவின் சபைகளை "பிரிவினைக்கூட்டம்" என்று குறிப்பிட்டது. [16]Foxe, *9.* [17]*1 கொரிந்தியர் 4:12ல் பவுல் தம்மைப் பற்றியே பேசினார், ஆனால் வேறொரு இடத்தில் அவர் தமது வாசகர்களுக்கு, தாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போன்று அவர்கள் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் (1 கொரிந்தியர் 11:1).* [18]*முன்பே குறிப்பிட்டபடி, துன்புறுத்தப்படுதல் என்பது சீஷத்துவத்திற்கு நிரூபணமாக அல்ல, ஆனால் அதன் விளைவாக உள்ளது. அதனால்தான் நான் இந்தப் பகுதியில் பின்வரும் தகுதிப்படுத்தும் சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறேன்: "சுட்டிக்காட்ட முடியும்," "வெளிப்படுத்தலாம்."* [19]KJV *வேதாகமத்தில் "துன்புறுத்தப்பட்டிருப்பவர்கள்" என்றுள்ளது. கிரேக்க வசனம் முற்று வினைச்சொல்லைப் பயன்படுத்துகிறது, இது கடந்த காலத்தில் தொடங்கப்பட்ட ஒரு செயல் நிகழ்காலத்திலும் தொடர்வதைச் சுட்டிக்காண்பிக்கிறது.* [20]McCord, 58.

9

உயிரோடிருந்து வேண்டுதல் செய்கிறவர்

(எபிரெயர் 7:25)

ஒரு நாள் காலை வேளையில் சாமுவேல் கிளெமென்ஸ்[1] என்பவர் செய்தித்தாளைப் பிரித்தபோது, அதில் தமது மரணம் பற்றிய அறிவிப்பு ஒன்றைக் கண்டு திகைத்துப்போனார். சற்று நேரம் கழித்து, திரு கிளெமென்ஸ் ஒரு விரிவுரையைப் பின்வரும் தொடக்க வார்த்தைகளைக் கொண்டு நிகழ்த்தினார். "எனது மரணம் பற்றிய அறிவிப்பு ஒரு மிகையான கூற்றாக உள்ளது."[2] பல ஆண்டுகளுக்கு முன்பு உலகமானது "தேவன் இறந்துவிட்டார்" என்ற இயக்கத்தை அனுபவித்து உணர்ந்தது. வேதாகமம் இறந்துபோன புத்தகம் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். மேலும் கிறிஸ்தவமானது வழக்கற்றதாக உள்ளது எனவே அது விட்டொழிக்கப்பட வேண்டும் என்று அவிசுவாசிகள் உறுதியாகக் கூறுகின்றனர். தேவனுடைய மற்றும் கிறிஸ்தவத்தினுடைய மரணம் என்பது ஒரு மிகையான கூற்றாக உள்ளது!

இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவம் உயிருடன் உள்ளது *மற்றும்* அது நலமாக உள்ளது *என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் ஜீவனுள்ள ஒரு தேவனை (1 தீமோத்தேயு 4:10), ஜீவனுள்ள ஒரு புத்தகத்தை (எபிரெயர் 4:12), ஜீவனுள்ள நம்பிக்கையைக் கொண்டுள்ளோம் (1 பேதுரு 1:4). இந்தத் தலைப்புக்களில் எதைப் பற்றியாவது அல்லது எல்லாவற்றையும் பற்றியாவது நாம் பயன் நிறைந்த வகையில் பேச முடியும்; ஆனால் கிறிஸ்தவம் ஜீவனுள்ளதாக இருக்கிறது மற்றும் நலமாக இருக்கிறது என்பதற்கு நிரூபணம் என்ற வகையில் நாம், மிகக் கொஞ்சமாக அறியப்பட்ட ஒரு உதாரணத்திற்குச் செல்வோம்: நாம்,* உயிரோடிருந்து வேண்டுதல் செய்கிறவரைக் *கொண்டிருக்கிறோம். எபிரெயர் 7:25ம் வசனம் நமது வேதபாடப் பகுதியாக உள்ளது: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில்* சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் (இயேசு) எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் *அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இவ்வசனப் பகுதியின் சத்தியங்களை முழுமையான அளவுக்கு மதித்து உணர்வதற்கு நாம் இதை சந்தர்ப்பப்பொருளில் காண்பது அவசியமாக உள்ளது. முதலாவது நாம் எபிரெயர் 7ம் அதிகாரம் முழுவதையும் ஒரு சிலகணங்கள் எடுத்துக் கொள்வோம்; பின்பு நாம் நமது வசனப்பகுதிக்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களைச் சுருக்கமாகக் கண்ணோக்குவோம். கடைசியாக நாம் 25ம் வசனத்தின் மீது கவனம் குவிப்போம்.*

எபிரெயர் 7

"மேன்மையான" என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. பெயர்குறிப்பிடப்படாத ஒரு சபைக்குழுத்தில் இருந்த யூதக்கிறிஸ்தவர்களில் சிலரோ அல்லது எல்லாருமோ யூதமார்க்கத்திற்குத் திரும்புதலைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தனர் என்பது தெளிவு. கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் மாபெரும் மன எழுச்சி அதன் பண்பாக இருந்தது, ஆனால் [காலப்போக்கில்] அதில் கொஞ்சம் தணிந்து போயிருந்தது. இப்போது இந்த உறுப்பினர்கள் யூதத்துவத்தின் சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்களை இழந்ததால் ஏற்பட்ட வருத்தம் கொண்டிருந்தனர் என்று காணப்படுகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், கிறிஸ்தவத்தில் உள்ள ஒவ்வொன்றும் யூதத்துவத்தில் இருந்ததைக் காட்டிலும் மேன்மையானது என்று காண்பிப்பதன் மூலம் அவர்களை மந்தைக்குத் திரும்பக் கொண்டுவர முயற்சிசெய்தார்.

7ம் அதிகாரத்தை மேம்போக்காகக் கண்ணோக்கி, "மேன்மையான" என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். 7ம் வசனத்தில் "பெரியவன்" என்ற வார்த்தை காணப்படுகிறது. 19ம் வசனம் "அதிக நன்மையான நம்பிக்கை"யைப் பற்றி பேசுகிறது. 22ம் வசனம் "விசேஷித்த உடன்படிக்கை"யைக் குறிப்பிடுகிறது. 7ம் அதிகாரத்தில் கிறிஸ்தவத்தின் *மேன்மையான ஆசாரியத்துவம்* என்பது குறிப்பிடத்தக்க தலைப்பாக உள்ளது. 17ம், வசனத்தில் நாம் "'நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்' என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" என்று வாசிக்கிறோம். மெல்கிசேதேக்கின் முறைமைப்படி ஆசாரியராக இருந்தவர், லேவியின் முறைமைப்படி ஆசாரியர்களாக இருந்தவர்களைக் காட்டிலும் அளவற்ற வகையில் மேன்மையுடையவராக இருந்தார் என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் நிலைநாட்டினார்.

பதட்டப்படாதீர்கள்; நாம் "புதிரான மெல்கிசேதேக்கு" பற்றிக் கலந்துரையாடப் போவதில்லை.[3] 17ம் வசனத்தில் பின்வருபவையே திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன: "நீர் *என்றென்றைக்கும்* ஆசாரியராயிருக்கிறீர்."

எபிரெயர் 7:20-28

இப்போது நாம் நமது வேதவசனப் பகுதியின் உடனடி சந்தர்ப்பப் பொருளின்மீது கவனம் குவிக்கக் கடந்து செல்வோமாக: 20முதல் 28 வரையுள்ள வசனங்கள். இவ்வசனப் பகுதி பின்வருமாறு தொடங்குகிறது:

> அன்றியும், அவர்கள் [லேவியத்துவ ஆசாரியர்கள்] ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ [இயேசுவோ]: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி "'என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்' என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார்" என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார் (வசனம் 20).

இதற்கான மேற்கோள், புதிய ஏற்பாட்டுப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும், மேசியாவின் உயிர்த்தெழுதல், பரத்துக்கேறுதல்

மற்றும் மகிமைப்படுதல் ஆகியவற்றைப் பற்றிய தீர்க்கதரிசனம் என்று கருதிய 110ம் சங்கீதத்தில் இருந்து வருகிறது (நடபடிகள் 2:34, 35; காண்க 1 கொரிந்தியர் 15:25; எபேசியர் 1:20). எபிரெயர் 7:17ம் வசனம் சங்கீதம் 110:4ல் இருந்து மேற்கோள் காண்பிக்கிறது: " 'நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின் படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்' என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்." "கர்த்தர் வெறுமனே சிலவற்றைக் *கூறுகிறபோது* அது *உண்மையாக* உள்ளது. எனவே அதை அவர், ஒரு ஆணையுடன்" கூறும் போது அது "இரட்டிப்பான உண்மை, மும்மடங்கு உண்மை, நான்கு மடங்கு உண்மை" என்ற வகையில் நாம் நினைக்கலாம்! அதைப் பற்றிச் சந்தேகம் *இல்லாதிருக்கிறது?* இயேசு *என்றென்றைக்கும்* ஆசாரியராயிருக்கிறார்.

22ம் வசனம், இயேசு "அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" என்று தொடருகிறது. இயேசு நமது ஆவிக்குரிய "பிணையாளியாக" இருக்கிறார். கடனுக்கான பிணையாளி, கடன் திரும்பச் செலுத்தப்படுவதை உத்தரவாதப்படுத்துகிறார். தேவனுடைய புதிய உடன்படிக்கையின் ஆச்சரியமான வாக்குத்தங்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு இயேசு நமக்கு உத்தரவாதமாக இருக்கிறார்!

23ம் வசனம், "அன்றியும், அவர்கள் [லேவியத்துவ ஆசாரியர்கள்] மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" என்று கூறுகிறது. ஆரோன் முதற்கொண்டு எபிரெயருக்கு நிருபம் எழுதப்பட்ட காலம் வரையிலும் இருந்த எல்லா ஆசாரியர்களைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். லேவியர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் அல்லது ஆயிரக்கணக்கானவர்கள் ஆசாரியர்களாக ஊழியம் செய்திருந்தனர், ஏனென்றால் எப்பொழுதும் ஒரு ஆசாரியர் இருத்தல் முக்கியமானதாக இருந்தது. "ஒரு ஆசாரியர் இருத்தல் அவசியமானது என்றால், எல்லாக் காலத்திற்கும் ஒருவர் இருத்தலுக்கான தேவை இருந்தது; பணிசெய்பவர் மாறினாலும் அந்தபணியானது எவ்வித இடைவேளையின்றி நிரம்பியிருக்க வேண்டும்."[4] ஆசாரியர்கள் ஒருவர் பின் ஒருவராக வாழ்ந்து மரித்தனர். சிலர் நல்லவர்களாக இருந்தனர், சிலர் அவ்வளவு நல்லவர்களாக இல்லை, சிலர் மிக மிக மோசமானவர்களாக இருந்தனர்.

24ம் வசனத்தில் நாம், "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற படியினாலே மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்" என்று வாசிக்கிறோம். பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "இவரோ *என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே.* இயேசு மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டார்." அவர் தேவனிடத்திற்குத் திரும்ப ஏறிப்போனார், தேவனுடைய வலது புறத்தில் அமர்ந்தார், மற்றும் அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார்! ஆகவே அவரது ஆசாரியத்துவத்தில் மாற்றம் எதுவும் இல்லை. அவர் "என்றென்றைக்கும்" நமது ஆசாரியராக இருக்கிறார்!

அது நம்மை நமது வேதபாடப் பகுதிக்குக் கொண்டு வருகிறது. 25ம் வசனம் "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" என்று கூறுகிறது. "முற்றுமுடிய இரட்சிக்க" என்ற சொற்றொடரில் "முற்றுமுடிய" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, "முழுமையான, பூரணமான" என்று அர்த்தப்படுகிறது.[5] KJV வேதாகமத்தில் "save ... to the uttermost" ["முற்றிலுமாக இரட்சிக்க"] என்றுள்ளது;

ஆனால் இது காலத்தையும் குறிக்கக் கூடும், எனவே NASB வேதாகமத்தில் "save forever" ["காலமுழுவதும்"] என்றுள்ளது; ஒருவேளை இதன் எழுந்தாளர் இவ்விரு அர்த்தங்களையும் உள்ளடக்க நோக்கங் கொண்டு இருந்திருக்கலாம்: இயேசு நம்மை எல்லா *வழியிலும் முற்றிலுமாக* இரட்சிக்கக் கூடியவராக இருக்கிறார். 25ம் வசனத்தில் "தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால்" என்றும் கூறப்படுகிறது. அந்த வார்த்தைகளைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்; சற்று நேரத்தில் நாம் அவற்றிற்குத் திரும்புவோம்.

இவ்வசனப்பகுதி பின்வருமாறு முடிகிறது:

> பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் [பரிகரிப்பு நாளில் பிரதான ஆசாரியர் செய்தது போல] நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை [இயேசு] ஒரேதரம் செய்துமுடித்தார். நியாயப்பிரமாணமானது பலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு [சங்கீதமானது மோசேக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நூற்றக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டது] உண்டான [சங்கீதம் 110:4ல் உள்ள] ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணமான குமரனை ஏற்படுத்துகிறது (வசனங்கள் 26-28).

எபிரெயர் 7:25

நாம் நமது வேதப்பாடப் பகுதியை இன்னும் நெருக்கமாக ஆய்வு செய்யத் தயாராக இருக்கவேண்டும்: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (வசனம் 25). நாம் இவ்வசனத்தில் இருந்து இரண்டு திறவுகோல் சிந்தனைகளை இழுத்தெடுப்போம்.

"இயேசு உயிரோடிருக்கிறார் ..."

முதலாவது, "அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்." இயேசு பிரதான கட்டளையைக் கொடுத்த பின்பு, தமது சீஷர்களிடத்தில் "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் *சகல நாட்களிலும்* நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று கூறினார் (மத்தேயு 28:20 ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ரோமருக்குப் பவுல், "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" என்று எழுதினார் (ரோமர் 6:9).[6] எபிரெயருக்கு எழுதிய நிருபம் 7ம் அதிகாரம், இயேசு என்றென்றைக்கும் ஆசாரியராக இருக்கிறார் என்று மீண்டும் மீண்டுமாக உரைக்கிறது.

"... நமக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு"

இயேசு எப்பொழுதும் நம்முடன் இருப்பது ஏன்? "'[தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக'] வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "வேண்டுதல்" என்றால் என்ன? இவ்வார்த்தை, இன்னொருவரின் சார்பாக வேண்டிக்கேட்டுக் கொள்வதைக் குறிக்கிறது.[7]

மேசியா வேண்டுதல் செய்பவராக இருப்பார் என்று அவரைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. பாடுபடும் ஊழியக்காரர் பற்றிய மாபெரும் வசனப்பகுதியான ஏசாயா 53ல் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

> *அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார் (வசனம் 12).*

சிலுவையில் அறையப்படுதல் என்பதே இவ்விடத்தில் காட்சியமைப்பாக உள்ளது, எனவே இயேசு தம்மைச் சித்திரவதை செய்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுதலுக்கு இங்கு குறிப்பு இருக்கலாம்: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லுக்கா 23:34அ). இயேசு சிலுவையில் செய்த இதே செயலை அவர் பூமியில் தமது சொந்த ஊழியத்தின் போதும் செய்தார் மற்றும் இப்போது பரலோகத்தில் அவர் தமது ஆசாரியத்துவ ஊழியத்தின் பகுதி என்ற வகையில் அதைச் செய்துகொண்டிருக்கிறார்.

அவர் பூமிக்குரிய தமது ஊழியத்தின்போது, பேதுருவிடத்தில் "நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்று கூறினார் (லூக்கா 22:32).[8] *இயேசுவின் வேண்டுதல் செய்தலுக்கு, யோவான் 17ல் உள்ள பிரதான - ஆசாரியாத்துவ ஜெபம் இன்னொரு உதாரணமாக உள்ளது. அவர் முதலாவது அப்போஸ்தலர்களுக்காக வேண்டிக் கொண்டார்: "நான் அவர்களுக்காக [அப்போஸ்தலர்களுக்காக] வேண்டிக்கொள்கிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே" (வசனம் 9; காண்க வசனம் 15). பின்பு இயேசு நமக்காக வேண்டுதல் செய்தார். 20ம் வசனத்தைக் கவனியுங்கள்: "நான் இவர்களுக்காக [அப்போஸ்தலர்களுக்காக] வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் [இது புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களின் சாட்சியத்தின் காரணமாக இயேசுவில் விசுவாசம் கொள்ளுகிற நம்மையும் மற்ற எல்லாரையும் குறிக்கிறது] வேண்டிக்கொள்ளுகிறேன்."*[9]

இயேசு பூமியில் செய்ததைப் பரலோகத்திலும் தொடர்ந்து செய்கிறார். எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு நிருபத்தை எழுதியவர் இதை வலியுறுத்தினார். முதலாவதாக நாம் எபிரெயர் 2ல் இருந்து வாசிப்போமாக:

> *அன்றியும், அவர் [இயேசு] ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி*

> செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுக்கிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (வசனங்கள் 17, 18).

இப்போது நாம் இவ்வசனப் பகுதியானது எபிரெயர் 4ல் உள்ள வசனப்பகுதியுடன் எவ்வாறு பிணைக்கப்படுகிறது என்று காண்போமாக:

> வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (வசனங்கள் 14-16).

"நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கும்" ஒரு பிரதான ஆசாரியரை நாம் கொண்டுள்ளோம். KJV வேதாகமத்தில் "நமது பலவீனங்களின் உணர்வுகளால் தொடப்பட்ட" என்றுள்ளது. மாற்கு 7ம் அதிகாரத்தில் இயேசு, செவிடும் ஊமையுமான ஒரு நபரைக் குணமாக்கியபோது, அவர் "வானத்தை அண்ணாந்துபார்த்து, *பெருமூச்சுவிட்டு*" (வசனம் 34; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்றுள்ளது. மரியாளும் லாசருவின் நண்பர்களும் அழுதுகொண்டிருப்பதை இயேசு கண்டபோது, அவர் "*ஆவியிலே கலங்கித் துயரமடைந்து*" (யோவான் 11:33; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்றுள்ளது.

இயேசு "எல்லாவற்றிலும்" நம்மைப் போலாக்கப்பட்டதாலும் அவர் "நம்மைப்போலவே எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டு" இருந்ததாலும், அவர் "நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதவிக்க" முடியும். என்னைப் படைத்தவர் என்னை அறிகிறார் என்று நான் மதிநுட்பமாக (என் தலையில்) அறிகிறேன் (காண்க சங்கீதம் 103:14), ஆனால் இது, இயேசு உண்மையில் என்னைப் போல் ஆனார் மற்றும் மாம்சத்தில் என் போராட்டங்களை உண்மையாகப் புரிந்துகொள்கிறார் என்றும் (என் இருதயத்தில்) அறிவதற்கு உணர்வுப்பூர்வமாக உதவுகிறது.

யாரேனும் ஒருவர் பின்வருமாறு மறுப்புரை தெரிவிக்கலாம்: "ஆனால் நான் கொண்டுள்ள குறிப்பான பிரச்சனையை இயேசு ஒருக்காலும் கையாள வேண்டியிருந்தது இல்லையே!" எடுத்துக்காட்டாக ஒருவர், "இயேசு தம்மைக் கைவிட்ட துணை ஒன்றை ஒருக்காலும் கொண்டிருந்தது இல்லையே!" என்று கூறலாம். சபையே இயேசுவின் மணவாட்டியாக உள்ளது (காண்க எபேசியர் 5:22-32; 2 கொரிந்தியர் 11:2). சபையானது எப்போதுமே இயேசுவுக்கு உண்மையுள்ளதாக நிலைத்திருக்கிறதா? இன்னொருவர், "ஆனால் இயேசு,

உண்மையற்ற மற்றும் கீழ்ப்படிதல் அற்ற பிள்ளைகளை ஒருக்காலும் கையாள வேண்டியிருந்தது இல்லையே!'' என்று கூறி மறுப்புரை தெரிவிக்கலாம் கர்த்தர் தமது பிள்ளைகளைக் கொண்டிருந்தார் (காண்க எபேசியர் 5:8). அவரது பிள்ளைகள் சிலவேளைகளில் அவரது இருதயத்தை உடையச் செய்வதில்லையா?

ஒரு கடைசி மறுப்புரை பின்வருமாறு தெரிவிக்கப்படலாம்: "ஆனால் இயேசு சுமார் முப்பது வயதுடையவராக இருக்கும்போது அவர் மரித்தார். அவர் ஒருக்காலும் முதிய வயதின் உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டதில்லையே!" இருந்தபோதிலும் அவர் (அதைப்) புரிந்துகொள்கிறார். "நான் முதியவனாக உணருகிறேன்'' என்பது பொதுவாகக் கேள்விப்படக் கூடிய சொற்றொடராக உள்ளது, ஆனால் "முதியவராக உணருதல்'' என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? நான் கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கும்போது மாத்திரமே என்னை "முதியவனாக'' உணருகிறேன். அதைத்தவிர, முதியவனாகுதல் என்பதுடன் இணைவுகொண்டுள்ள தனிப்பட்ட உணர்வு எதையும் என்னால் நினைத்துப் பார்க்க முடிவதில்லை. எனது எழுபது வயதுகளில் நான் எவ்வாறு உணருகிறேன்? பொதுவாக நான் களைப்பையும் சக்தி தீர்ந்த நிலையையும் உணருகிறேன்; நான், வலிகளும் வேதனைகளும் கொண்டுள்ளேன். இதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: இயேசு எப்போதாவது களைப்பாக உணர்ந்தாரா? இயேசு எப்போதாவது வேதனையை உணர்ந்தாரா?

ஒரு முறை, G. C. புரூவர் என்பவர் பல துன்பங்களைக் கடந்து சென்றிருந்த ஒரு மனிதரால் அறைகூவல் விடப்பட்டார். அம்மனிதர், "இப்படிப்பட்ட அனுபவத்தை இயேசு ஒருக்காலும் கொண்டிருக்கவில்லை … நான் துன்புறுதல்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது …'' என்று கூறினார். சகோதரர் புரூவர் பின்வருமாறு பதில் அளித்தார்:

> என் சகோதரனே, நமது கர்த்தராகிய கிறிஸ்து உங்கள் உணர்வுகளையும் உங்களுக்கு நேர்ந்த மாபெரும் சோதனையையும் அறிகிறார் மற்றும் அவர் மாத்திரமே உங்களை மேலே கொண்டுவந்து உங்கள் இருதயத்தைக் குணமாக்க முடியும் என்று உங்களுக்குக் கூறுகிறேன். கிறிஸ்து மனிதர்கள் மத்தியில் வாழ்ந்த வேளையில் இதேபோன்ற அனுபவத்தை ஒருக்காலும் கொண்டிருந்தது இல்லை என்பது உண்மையே, ஆனால் ஒரு உணர்வை அறிவதற்கு நாம் அதை அனுபவித்தே ஆக வேண்டும் என்பது அவசியமில்லையே. இதை விளக்கப்படுத்துகிறேன்: நீங்கள் சிரித்திருக்கிறீர்கள் மற்றும் நான் சிரித்திருக்கிறேன். நீங்கள் ஒரு விஷயத்திற்காகச் சிரித்திருப்பீர்கள் மற்றும் நான்வேறு ஒரு விஷயத்திற்காகச் சிரித்திருப்பேன், ஆனால் நாம் இருவரும் *சிரித்தலை* அறிகிறோம். நீங்கள் அழுதிருக்கிறீர்கள் மற்றும் நான் அழுதிருக்கிறேன். நீங்கள் அழ ஒரு விஷயம் காரணமாயிருந்தது மற்றும் நான் அழ இன்னொரு விஷயம் காரணமாயிருந்தது மற்றும், ஆனால் அழுதல் என்றால் என்ன என்பதை நாம் இருவருமே அறிந்திருக்கிறோம். நாம் இருவருமே கோபமாக இருந்திருக்கிறோம். நமது கோப[ங்கள்] ஒரேவிதமான அனுபவத்தினால் தூண்டப்படவில்லை, ஆனால் நாம் இருவருமே கோபப்பட அறிந்திருக்கிறோம்.

> இங்கு ஒரு இசைக்கருவி உள்ளது. இது இசையில் உள்ள தொனிகளின் சுரங்கள் எல்லாவற்றையும் கொண்டுள்ளது மற்றும் ஒவ்வொரு தொனியும் இதனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது: ஒவ்வொரு நாணும் அதிர்ந்திருக்கின்றன, ஆனால் இதுவரை அமைக்கப்பட்டுள்ள இசையின் ஒவ்வொரு துணுக்கும் இந்த இசைக் கருவியில் இசைக்கப்பட்டது இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பல இசையமைப்புகள் இந்தச் சாவிப்பலகைக்கு ஒருக்காலும் தரவழைக்கப்பட்டது இல்லை, ஆனால் அவற்றில் உள்ள ஒவ்வொரு தொனியும் இங்கு ஒலித்துள்ளது.
>
> இப்போது, மனித இருதயம் என்பது ஆயிரம் நரம்புகள் கொண்ட ஒரு சுரமண்டலமாக உள்ளது. இது இசைக் கருவியினுடையது போன்று நரம்புகளைக் கொண்டுள்ளது மற்றும் நமது கர்த்தராகிய கிறிஸ்து அதன் ஒவ்வொரு நாணையும் தொட்டிருக்கிறார். அவர் ஒவ்வொரு உணர்வையும் அறிகிறார்.[10]

எபிரெருக்கு எழுதிய நிருபத்தில் நாம் வாசிக்க விரும்பும் அடுத்த வசனப் பகுதிக்கு கடந்து செல்லுகையில் நாம் நமது முதன்மை வசனப்பகுதியைக் காணுகிறோம்: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவ ராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (7:25). ரெய்மண்ட் பிரவுன் என்பவர், "ரபீக்கள் மக்களின் சார்பாக வேண்டுதல் செய்தல் என்பது தூதர்களுக்கும் மற்றும் குறிப்பாக பிரதான தூதனான மிக்காவேலுக்கும் ஒப்புவிக்கப்பட்ட ஊழியமாகும் என்ற கருத்தைப் பராமரித்தனர்'' என்று எழுதினார். பின்பு அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> [இயேசு] நமக்காக *அர்த்தம் நிறைந்த வகையில்* வேண்டுதல் செய்கிறார், ஏனெனில் தூதர்களைப் போலின்றி அவர் நமக்கு நேரிடும் சோதனைகளைப் பற்றிய நேரடி அனுபவம் கொண்டிருக்கிறார். அவர் *பரிவிரக்கத்துடன்* நமக்காக வேண்டுதல் செய்கிறார், ஏனெனில் தூதர்களைப் போலின்றி, அவர் நமக்கு மிகச்சரியாகத் தேவைப்படுவது என்ன என்பதை அறிந்திருக்கிறார். அவர் நமக்காகச் *செயல்விளைவுடன்* வேண்டுதல் செய்கிறார், ஏனெனில் தூதர்களைப் போலின்றி அவர் நமது தேவைகளைச் சந்திக்க வல்லமை கொண்டிருக்கிறார்.[11]

எபிரெருக்கு எழுதிய நிருபத்தை விட்டு நாம் கடந்து செல்வதற்கு முன்பு, கடைசியாக ஒரு வசனத்தை நாம் கவனிப்போமாக: "அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி, பிரவேசித்திருக்கிறார்" (9:24).

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு நமக்காக வேண்டுதல் செய்ய எப்போதும் உயிருள்ளவராக இருக்கிறார் என்பதை அறிவித்த ஒரே ஒருவராக இருப்பதில்லை. இதே சத்தியத்தைப் பவுல், ரோமர் 8ல் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> *இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே (வசனங்கள் 31-34).*

நமக்கு எதிராகக் குற்றச்சாட்டைக் கொண்டுவரத் தகுதியுள்ளவர்கள் இருவர் மட்டுமே. முதலாமவர் தேவன் - மற்றும் அவர் "நமக்காக" நமது பக்கமாக இருக்கிறார். இரண்டாமவர் இயேசு - மற்றும் அவர் நமக்காக மரித்தார் இப்போது தேவனுடைய வலதுபுறம் இருந்து கொண்டு நமக்காக வேண்டுதல் செய்கிறார்![12]

நமக்காக இயேசு வேண்டுதல் செய்வதை வலியுறுத்திய, ஏவுதல் பெற்ற இன்னொரு எழுத்தாளர் யோவான் ஆவார், ஆனால் அவர் வேறுபட்ட சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தினார்: "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் *பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்*" (1 யோவான் 2:1ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "பரிந்துபேசுகிறவர்" என்பது, உதவியளிப்பதற்காக உங்கள் பக்கமாக அழைக்கப்பட்டுள்ள ஒருவரைக் குறிக்கும் *parakletos* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது.[13] இவ்வசனப் பகுதியில் "பரிந்துபேசுபவர்" என்பது சட்டப்பூர்வமான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது: உங்கள் வழக்கைப் பரிந்துரைக்கும் ஒருவர். நாம் நீதிமன்றத்தில் சென்று வாதாட வேண்டியிருந்தால், நம்மாலானமட்டும் மிகச்சிறப்பான தற்காப்பு வாதத்தை பணத்தைக் கொண்டுவாங்கக் கூடிய சிறந்த சட்டபூர்வமான பிரதிநிதித்துவத்தை - நாம் விரும்புவோம் - நம்மில் பெரும்பான்மையானவர்கள், நம்மால் பெறக்கூடியவற்றைக் கொண்டு வாதம் செய்ய வேண்டியிருக்கும் - இருப்பினும் ஆவிக்குரிய வகையில் நாம் மிகச்சிறந்த - பரலோகத்தினால் அளிக்கப்படக்கூடிய மிகச்சிறந்த - "தற்காப்பு வாதம் செய்யும் வழக்கறிஞரை" கொண்டிருக்கிறோம்: நீதிபரராகிய இயேசு கிறிஸ்து!

ஆண்டுகளினூடே, இயேசு நமக்காக *எவ்வாறு* பரிந்துரைசெய்கிறார் என்பதைப் பற்றி மிகச்சரியாகத் தெரிந்துகொள்ள, ஆண்டுகளினூடே கணிசமான அளவுக்கு நேர்மாறாக கருத்துப் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. சிலர், இயேசு கடின முகங்கொண்ட பிதாவின் முன் நின்று, அவரது பிள்ளைகளை மன்னித்து உதவும்படி கெஞ்சுவதாகச் சித்தரித்துள்ளனர். கிறிஸ்து வேண்டுதல் செய்தல் குறித்து அவ்விதமான கருத்தை நமது மனதில் நாம் கொண்டிருந்தால் அதை உடனடியாக நீக்க வேண்டியது அவசியமாக உள்ளது. "தேவன் *நம்முடைய பட்சத்திலிருந்தால்*" என்று கூறுகிற ரோமர் 8:31ஆம் வசனத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்து நமக்காக எவ்வாறு வேண்டுதல் செய்கிறார் அல்லது அவரது வேண்டுதலில் அடங்கியுள்ளது எது என்பதை அறிதல் நமக்கு அவசியமற்றதாக உள்ளது. அதை அவர் செய்கிறார் என்பதை மாத்திரம் அறிதலே அவசியமாக

உள்ளது. ராபர்ட் மில்லிக்கன் என்பவர் "*வேண்டுதல் செய்கிறார்* என்ற வார்த்தை ... இவ்விடத்தில் மிகவும் புரிந்துகொள்ளக் கூடிய கருத்தில், இயேசு தமது மக்கள் நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தப்படுத்தப்படுதல் மற்றும் மீட்கப்படுதல் ஆகியவற்றிற்காகச் செய்யும் எல்லாவற்றையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது" என்று கூறியது அனேகமாக சரியானதாக இருக்கவேண்டும்.[14] "எவ்வாறு" என்பதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். பின்வரும் சத்தியத்தில் மட்டும் களிகூருங்கள்: அவர் *உங்களுக்காக* வேண்டுதல் செய்ய எப்போதும் உயிருள்ளவராக இருக்கிறார்.

இவ்வசனப் பகுதியானது *நிகழ்கால* வினைச்சொல்லைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள்: அவர் "*உயிருள்ளவராயிருந்தார்*" என்றோ அல்லது "அவர் உயிருள்ள*வராயிருப்பார்*" என்றோ அல்ல, ஆனால் "அவர் உயிருள்*ளவராயிருக்கிறார்*" - "அவர் என்றென்றைக்கும் உயிருள்ளவராயிருக்கிறார்" - என்றே உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு, மாதத்திற்கு மாதம், வாரத்திற்கு வாரம், நாளுக்கு நாள், மணிக்கு மணி, நிமிடத்திற்கு நிமிடம் அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார்! இதைப்பற்றி ஒரு எழுத்தாளர் பின்வருமாறு கூறியதை நான் விரும்புகிறேன்: நாம் இயேசுவைப் பற்றி நினைக்காத போதும்கூட, அவர் நம்மைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்![15]

எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கும் ஒரு உலகத்தில் பின்வருவது நிலையானதாக உள்ளது: இயேசு உயிருள்ளவராக இருக்கிறார் - அவர் எப்போதுமே உயிருள்ளவராக இருக்கிறார்! - மற்றும் அவர் நமக்காக வேண்டுதல் செய்துகொண்டிருக்கிறார். கொந்தளிப்பின் மத்தியில் நாம் எதைப் பற்றிக் கொள்ள முடியும்? சிலர் உலகப் பொருள்களின் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கின்றனர், ஆனால் இவைகள் ஒரு நிமிடத்தில் உங்கள் விரல்களில் இருந்து நழுவிவிட முடியும். சிலர் தங்கள் உடல் பலத்தில் நம்பிக்கை வைக்கின்றனர், ஆனால் அது ஒரு நொடிப்பொழுதில் உங்களைவிட்டுச் சென்று விட முடியும். இங்கு நாம் நமது இருதயங்களில் இறுக்கமாகப் பற்றிக்கொள்ளக் கூடிய நிரந்தரமான சில சத்தியங்கள் உள்ளன: இயேசு நம்மீது அன்புகூருகிறார் ... அவர் நமக்காக மரித்தார், மற்றும் நமக்காக அவர் எழுப்பப்பட்டார் ... மற்றும் இப்போது அவர் உயிருள்ளவராக உங்களுக்காக வேண்டுதல் செய்கிறார்! தேவனுக்கு நன்றி, நாம் உயிருள்ளவரான வேண்டுதல் செய்பவர் ஒருவரைக் கொண்டுள்ளோம்!

முடிவுரை

நமது வேதவசனப் பகுதியின் வாக்குத்தத்தத்தை நீங்கள் கண்ணோக்குகையில், இந்த வாக்குத்தத்தம் நிபந்தனையைக் கொண்டுள்ளது என்ற உண்மையை மறந்துவிட வேண்டாம்: "மேலும், *தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக* வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவன் நம்மீதான தமது அன்பை நூற்றுக்கணக்கான வழிகளில் காண்பித்து இருக்கிறார், ஆனால் விசேஷமாக அவர் தமது குமாரனைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்ததின் மூலம் தமது அன்பைக் காண்பித்திருக்கிறார் (ரோமர் 5:8) மற்றும் இப்போது

நாம் அவரிடம் கிட்டிச் சேருவதன் மூலம் அவருக்குப் பதில்செயல் செய்ய வேண்டும். யாக்கோபு, "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" என்று எழுதினார் (யாக்கோபு 4:8).

நாம் "தேவனிடத்தில் சேருவது" எவ்வாறு? நாம் "*இயேசுவின் மூலமாகவே* அவரிடத்தில் நெருங்கிச் சேருகிறோம்." இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார் (யோவான் 14:6). இயேசுவைப் பற்றிப் பேசும்போது பேதுரு, "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்று கூறினார் (நடபடிகள் 4:12). நாம் *இயேசுவில்* விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவான் 8:24), நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3) மற்றும் *இயேசுவிடம் திரும்ப வேண்டும்,* நாம் *இயேசுவின் மீது* கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9), நாம் பாவமன்னிப்பிற்காக *இயேசுவின் நாமத்திலே* ஞானஸ்நானம் பெற வேண்டும் (நடபடிகள் 2:38), அதன் பின்பு நாம் *இயேசுவிற்குள்* புதிய வாழ்வைத் தொடங்க வேண்டும் (ரோமர் 6:3, 4).

நீங்கள் இயேசுவில் விசுவாசம் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி இருக்கிறீர்களா? நீங்கள் இயேசுவில் கொண்டுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு அவருக்குள் ஞானஸ்நானம் பெறத் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் அவரிடம் திரும்ப வேண்டியது அவசியமாக உள்ளதா? நீங்கள் ஆண்டவரிடம் நெருங்கிச் சேர்ந்தால், அவர் உங்களிடமாய் நெருங்கிச் சேருவார்.

குறிப்புகள்

[1]சாமுவேல் கிளமென்ஸ் (1835-1910) என்பவர் அமெரிக்க நாட்டில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவர் ஆவார். மார்க் ட்வைன் என்பது அவரது புனைபெயராக இருந்தது. [2]"Death" (http://www.twainquotes.com/Death.html; Internet; accessed 30 April 2008) [3]இவ்விடத்தில் நான் சில வேளைகளில் புன்முறுவலுடன், "மெல்கிசேதேக்கு பற்றி நீங்கள் ஏதேனும் கேள்வி கேட்க வேண்டுமானால், கேளுங்கள் ..." என்று கூறி, சபைக்குழுமத்தில் இருக்கும் மனிதர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவேன். உங்கள் சொந்தத் தகவல்களுக்காக நீங்கள் மெல்கிசேதேக் பற்றி மார்ட்டேல் பேஸ் என்பவருடைய கலந்துரையாடலை, "Melchizedok and Christ" in "Hebrews, 4" *Truth for Today* (April 2006): 4-10 என்ற புத்தகத்தில் மறுகண்ணோட்டம் இடமுடியும். [4]Alexander Balmain Bruce, *The Epistle to the Hebrews,* 2d ed. (Edinburgh: T. & T. Clark, 1899; reprint, Eugene, Oreg.: Wipf & Stock Publishers, n.d.), 277. [5]*Panteles* என்ற வார்த்தை "என்றென்றைக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது "முழுமையான, பூரணமான" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது மற்றும் இது "முற்றுமுடிய" அல்லது "நிறைவாக" என்று அர்த்தப்படக் கூடும் (W.

E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 656). [6]இயேசு இனி ஒருக்காலும் மரியாதிருக்கும்படி, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்பதற்கு ஒரு சில நிரூபணங்களைப் பட்டியலிடுவதற்கு நேரம் எடுத்துக் கொள்ள நீங்கள் விரும்பலாம். ஹியூகோ மெக்கார்டு என்பவரின் "The Inspiration & Authority of the Bible," *Truth for Today* (April 2000): 38-39. என்ற புத்தகத்தில் "The Greatest Miracle: Jesus' Resurrection" என்ற பாடம் ஒரு நல்ல ஆதாரமூலமாக உள்ளது. [7]*The American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. "intercede." [8]இயேசு ஒருவேளை தமது முழு இரவு ஜெபவேளைகளின்போது பேதுருவுக்காக ஜெபித்திருக்கலாம் (காண்க லூக்கா 6:12). [9]குறிப்பாக இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்கள் யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று ஜெபித்தார் (காண்க வசனங்கள் 21-23). [10]G. C. Brewer, *Christ Crucified: A Book of Sermons* (N.p.: 1928; reprint, Nashville: B. C. Goodpasture, 1952), 78-79.

[11]Raymond Brown, *Christ Above All: The Message of Hebrews* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1982), 135-36. (Emphasis mine.) [12]1 தீமோத்தேயு 2:5 பவுலிடமிருந்து வந்த இன்னொரு வசனப் பகுதி என்ற வகையில் பயன்படுத்தப்படலாம். [13]Vine, 111. [14]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews,* The New Testament Commentary, vol. 9 (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1954), 213. (Emphasis mine.) [15]Adapted from J. N. Darby, *Notes from Lectures on the Epistle to the Hebrews* (London: G. Morrish, n.d.), 63.

1

பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள்!

(மத்தேயு 5:1-12)

மத்தேயு 5-7 அதிகாரங்கள் "உலக இலக்கியத்தில் மிக உன்னதமான உரை,"[1] "அரசரின் கொள்கை விளக்க அறிவிப்பு," "ஒப்புக்கொடுத்தல் உள்ள வாழ்வு பற்றிய விபரக் கையேடு," "சபையின் மாபெரும் உரிமைப் பத்திரம்" மற்றும் "பரலோக ராஜ்யத்தின் அரசியல் அமைப்புச் சட்டம்" என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் இதை, நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அகஸ்டீன் என்பவரால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் சொற்றொடரைக் கொண்டு அறிகிறோம்: "மலைப் பிரசங்கம்."[2] ஆயிரமாயிரம் புத்தகங்கள், கட்டுரைகள், பிரசங்கங்கள் மற்றும் பாடங்கள் இதன் அடிப்படையில் அமைந்துள்ளன. பலர் இதை, வாழ்வு எவ்வாறு வாழப்பட வேண்டும் என்பதற்கான முற்றான சொல்விளக்கமாகக் கருதுகின்றனர்.

மலைப்பிரசங்கம் என்பது இயேசுவின் போதனைகள் யாவற்றிலும் நன்கு அறியப்பட்ட ஒன்றாக மாத்திரமல்ல, ஆனால் அனேகமாக மிகக்குறைவாகப் புரிந்துகொள்ளப்பட்டதும் மற்றும் ஏறக்குறைய மிகக்குறைவாகக் கீழ்ப்படியப்பட்டதுமான பகுதியாகவும் உள்ளது என்பது கவலைக்குரியது.[3] இந்தப் பிரசங்கம் பற்றிய ஒரு படிப்பை நாம் தொடங்கும் இவ்வேளையில், இந்தப் பாடத்தொடரானது இதை இன்னும் மேன்மையாகப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இதன் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியும்படி இப்பாடங்கள் உங்களைத் தூண்டும் என்றுகூட நான் நம்பிக்கையாயிருக்கிறேன் (காண்க மத்தேயு 7:24-27).

நமது படிப்பிற்காக ஆயத்தப்படுதல்

சில உரிமைத் துறப்புகள்

நாம் மத்தேயு 5:1-12க்குச் செல்வதற்கு முன்னர், பின்னணி விஷயங்கள் சிலவற்றை அளித்தல் எனக்கு அவசியமாக உள்ளது. ஒரு சில உரிமைத் துறப்புகளுடன் தொடங்க என்னை அனுமதியுங்கள். முதலாவதாக நான், *மலைப்பிரசங்கம் என்ற இப்பகுதி இயேசு போதித்த எல்லாவற்றின் மொத்தமாக இருப்பதில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.* மத்தேயு 5-7 அதிகாரங்களில், வலிவார்ந்த பல தலைப்புகள் தொடப்பட்டிருக்கின்றன, ஆனால் அந்த அதிகாரங்களை நாம் தக்கவைத்துக் கொண்டு இயேசுவின் பிற போதனைகளைத் தள்ளிவிட முடியாது.

மலைப்பிரசங்கத்தைப் பற்றி மாத்திரமே எவரொருவரும் அக்கறையாக

இருக்க வேண்டும் என்று சிலர் நினைப்பதாகக் காணப்படுகிறது. அவர்கள், “பிரசங்கியார்கள் ஆரவாரமாகப் பேசவிரும்புகிற அந்த முக்கியத்துவமற்ற விஷயங்களைக் குறித்து நான் கவலைப்படுவதில்லை. மலைப்பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ளவற்றின்படி வாழ்வதை மட்டுமே நான் நம்புகிறேன்” என்று மேலெழுந்தவாரியாகக் கூறுகின்றனர். சிலவேளைகளில் அவர்கள் “மலைப்பிரசங்கத்தின்படி வாழுதல்” என்பது ஒரு எளிய விஷயம் என்ற மனப்பதிவை விட்டுச் செல்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யும்போது நான், அவர்கள் அந்தப் பிரசங்கத்தைத் தீவிரமாக வாசித்தார்களா இல்லையா என்று வியப்படைகிறேன் (எடுத்துக்காட்டாக, 5:39ஐக் காணவும்).

நமது பாவங்களுக்காக இயேசுவின் மரணம் என்ற சுவிசேஷமாகிய நற்செய்தி, இந்தப் பிரசங்கத்தில் கூறாது விடப்பட்டுள்ளது என்பது மிகத்தெளிவு. சார்லஸ் R. எர்டுமேன் என்பவர், மலைப் பிரசங்கத்தைப் பற்றிப் பின்வரும் உட்கண்ணோக்கு நிறைந்த உற்றுநோக்கலை ஏற்படுத்தினார்:

> இது இராஜ்யத்தின் அடிப்படைச் சட்டங்களை முன் அமைக்கிறது, ஆனால் இவையன்றி, கிறிஸ்து என்ற தெய்வீக நபரின் சத்தியம் மற்றும் மீட்பின் ஊழியம் ஆகியவையும் உள்ளன, அது கேட்பவரின் இருதயத்தைத் திகைப்பினாலும் பெரும் வருத்தத்தினாலும் நிரப்பும்.

இந்தப் பிரசங்கம் மாத்திரமே நாம் பெற்றுக்கொண்ட ஒரே வேதவாக்கியமாக இருந்திருக்கும் என்றால், நாம் யாவரும் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டவர்களாக நிற்போம் - ஏனெனில் இது ஒரு தெய்வீக உயர்கொள்கையையும் நடத்தையின் பூரணத்துவமான தர அளவையையும் வெளிப்படுத்துகிறது. தெய்வீக உதவியின்றி எந்த ஒரு நபரும் இந்தத் தர அளவையை அணுகத் தொடங்க இயலாது.[4]

ஆகவே மலைப்பிரசங்கம் என்பது இயேசு போதித்த எல்லாவற்றின் மொத்தமாக இருப்பதில்லை என்பதை நான் மீண்டும் கூறுகிறேன். இது கிறிஸ்துவின் இராஜ்யத்தில் குடிமகனாக இருத்தலில் உள்ளடங்கியிருப்பது என்ன என்பதன் அற்புதமான தொகுப்புரையாக உள்ளது, ஆனால் அவரைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நாம் அறிந்துகொள்ளத் தேவையான எல்லாவற்றையும் இது சுற்றிச் சூழ்ந்திருப்பதில்லை.

இரண்டாவதாக, *இயேசு தமது சக யூதர்களை மோசேயின் அடிப்படைச் சட்டங்களுக்குத் திரும்ப அழைத்தல் என்பது அவரது முதன்மை நோக்கமாக இருக்கவில்லை.* இந்தப் பிரசங்கம், பழைய ஏற்பாட்டின் கட்டளைகளை மீளக்கட்டுவித்தலுக்கு இயேசுவின் முயற்சி என்பதை விட சற்றே அதிகமானதாக மாத்திரம் உள்ளது என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இந்தப் பிரசங்கம், பழைய ஏற்பாட்டை நடப்பில் கொண்டிருந்த யூதர்களுக்குப் பிரசங்கிக்கப் பட்டது என்பது உண்மையாகவே உள்ளது.[5] ஆகவே இதற்குள் பழைய ஏற்பாட்டின் மேற்கோள்களையும் (காண்க 5:21) பலிபீடத்திற்கு ஒரு காணிக்கையைக் கொண்டுவருதல் (வசனங்கள் 23, 24)[6] போன்ற பழைய ஏற்பாட்டின் நடைமுறைகளுக்கான குறிப்புகளையும் கண்டறிவதில் நாம் திகைப்படைவதில்லை. இருப்பினும், இயேசு கடந்தகாலத்தைப் புறக்கணிக்கவில்லை என்றாலும், அவர் எதிர்காலத்திற்கு ஒரு புதிய வழியைத் தொடங்கி வைத்துக் கொண்டிருந்தார் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

5ம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்த்து, அவர் "... என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." என்றோ அல்லது அந்தச் செயல்விளைவை ஏற்படுத்தும் வார்த்தைகளையோ எத்தனை முறை கூறினார் என்பதைக் கவனியுங்கள் (வசனங்கள் 21, 22, 27, 28, 33, 34, 38, 39, 43, 44). இயேசு, மோசேயின் அதிகாரத்துவத்திற்கு அல்ல, ஆனால் தமது சொந்த அதிகாரத்திற்கு வேண்டுகோள் விடுத்தார் (காண்க 7:28, 29).

மூன்றாவதாக (மற்றும் ஒருவேளை மிக முக்கியமாக), மலைப்பிரசங்கம் சாத்தியமற்ற ஒரு இலக்கை முன்வைப்பதில்லை. இந்தப் பிரசங்கத்தின் கருத்துக்களை நடைமுறைப்படுத்த "ஏன் முயற்சி செய்ய வேண்டும்?" என்ற மறைமுகக் கருத்துடன் சிலர் இதை, அடைய இயலாத ஒரு உயர்கொள்கை என்று தள்ளிவிட்டுள்ளனர். மற்றவர்கள், இந்தப் பிரசங்கத்தின் வேண்டுகோள்கள் இருபத்தியோராம் நூற்றாண்டின் மக்களுக்கு நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்று இயேசு ஒருக்காலும் நோக்கங் கொண்டிருந்ததில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அவர்கள், இயேசுவின் அடிப்படைவாத அறிவுறுத்துதல்கள் அவரது நாட்களில் இருந்த சீஷர்களை, அவர் விரைவில் நிலைநாட்டவிருந்த பூமிக்குரிய ஒரு இராஜ்யத்திற்கென்று ஆயத்தப்படுத்தும்படியே முற்றிலுமாக இயக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர். அப்படிப்பட்ட கருத்தானது (கிறிஸ்துவைத் தேவனுடைய திட்டங்கள் பற்றி அறியாதவர் என்று முன்னிறுத்துவதால்) கிறிஸ்துவுக்கும் வசனத்தை ஏவிய பரிசுத்த ஆவிக்கும் அவமானத்தைக் கொண்டுவருவதாக உள்ளது (ஏனெனில் இது அவரது வெளிப்படுத்துதல் எல்லா யுகங்களுக்கும் உரியதல்ல என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறது).

மலைப்பிரசங்கத்தில் காணப்படுகிற பல கொள்கைகள் அன்றாட வாழ்வில் பின்பற்றக் கடினமானவையாக உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்படக் கூடியதாகும். இந்தப் பிரசங்கத்தின் தர அளவையில் நான் குறைவுபடுவதை ஒப்புக்கொள்கிறேன். கிறிஸ்துவின் நிபந்தனைகள் பலவற்றுடன் நான் போராடுகிறேன் மற்றும் பூமியின்மீது எனது வாழ்வின் முடிவு வரையிலும்கூட இவ்வாறு போராடுபவனாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன். இது, இந்தப் பிரசங்கத்தின் நிபந்தனைகள் சாத்தியமற்றவையாக உள்ளன என்றோ அல்லது இதன் தர அளவைகளுக்கு ஏற்றாற்போல் வாழ்வதற்கு நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்படக்கூடாது என்றோ கூறுவது போன்றதாக இராது. மலைப்பிரசங்கத்தின் கொள்கைகளை நாம் "நீர்த்துப்போகச் செய்யும்" போது, நமது உரையைக் கேட்பவர்களுக்கு நாம் அநீதியிழைப்பவர்களாக இருக்கிறோம். மத்தேயு 5-7 அதிகாரங்களைக் குறித்து G. K *செஸ்ட்டர்ட்டன் என்பவர் எழுதிய பின்வரும் குறிப்புரைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

> *... முதன்முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இது எல்லாவற்றையும் தலைகீழாகத் திருப்புகிறது என்று உணருவீர்கள், ஆனால் இரண்டாம் முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இது எல்லாவற்றையும் சரியாகத் திருப்புவதைக் கண்டறிவீர்கள். முதன்முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இது சாத்தியமற்றது என்று உணருவீர்கள், ஆனால் இரண்டாம் முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இதைத் தவிர வேறு எதுவும்*

சாத்தியமானதல்ல என்று உணருவீர்கள்.[7]

இந்தப் பாடங்களின் தொடரில், மலைப்பிரசங்கத்தில் வரைகுறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளைச் சந்திக்க நம்மால் இயன்ற அளவிற்குச் சிறப்பாக நாம் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்பது அறைகூவலாக இருக்கும். அதைச் செய்கையில் நாம், தேவனிடத்தில் நாம் இருக்க வேண்டியபடி இருப்பதற்கும் செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்கும் பலத்தையும் தைரியத்தையும் கேட்க வேண்டும். பின்பு, நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்பட்டுள்ள பின்பும் இன்னும் குறைவுபட்டிருக்கையில், நாம் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

கலந்துரையாடல்

மற்ற முதன்மை விஷயங்கள் கலந்துரையாடப்பட முடியும். எடுத்துக்காட்டாக, மத்தேயு 5-7 அதிகாரங்களில் காணப்படுகிற மலைப்பிரசங்கமும் லூக்கா 6ம் அதிகாரத்தில் உள்ள சமனான இடத்தில் செய்யப்பட்ட பிரசங்கமும் ஒரே பிரசங்கம்தானா என்று சிலர் வியப்படைகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு, பெரும்பான்மையானவர்கள் இவையிரண்டும் தனித்தனியான மற்றும் தனிச்சிறப்பான பிரசங்கங்களாக இருந்தன என்று நம்பினர். இன்றைய நாட்களில் இவை இரண்டும் ஒரே பிரசங்கத்தின் இரு விபரங்கள் என்று கூறக் கேட்பது மிகவும் பொதுவானதாக உள்ளது. இது நாம் தீர்த்து வைக்கக் கூடிய கேள்வியல்ல, மற்றும் இதை நாம் தீர்த்து வைக்க வேண்டும் என்பது முக்கியமானதுமல்ல. இவை இரண்டும் ஒரே பிரசங்கமாக இருந்தாலும் இல்லை என்றாலும், இவை இரண்டையும் பயன்தரும் வகையில் நாம் ஒப்பிடுமளவுக்கு, இரண்டிற்கும் இடையில் ஒற்றுமைகள் உள்ளன. மத்தேயு சுவிசேஷ விபரத்தின் மீது நமது கவனக்குவிப்பு இருக்கும், ஆனால் அவ்வப்போது நான் லூக்கா சுவிசேஷ விபரத்தைக் குறிப்பிடுவேன்.

பின்னணியைப் பற்றிக் குறைந்தது இன்னும் ஒரு விஷயம் கூறப்பட வேண்டும். இந்தப் பாடங்களைத் தயாரிப்பதில் நான், இயேசுவின் வார்த்தைகள் தங்களுக்காகப் பேசுவதை அனுமதிப்பதற்குப் பதிலாக, வசனப்பகுதியை மிகவும் அதிகமாக நுண்ணாய்வு செய்தலின் அபாயத்தை அறிந்திருந்தேன். ஒரு மலரைப் பறித்து அதன் ஒவ்வொரு இதழையும் ஆய்வு செய்தல் என்பது அந்த மலரை அழித்து அதன் அழகைக் சேதப்படுத்துகிறது. வசனப்பகுதியை நான் ஆராய்வேன், ஆனால் எனது குறிப்புரைகள் இயேசுவின் வார்த்தைகளில் இருந்து பாதை விலகாதிருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவைகள் வேத வசனத்தின் அழகும் வல்லமையும் தெளிவாய்த் தெரியும்படி, அவற்றின் மீது வெளிச்சம் காட்டும் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன். இந்த அதிகாரங்களின் மீது கூறப்படக் கூடிய எல்லாவற்றையும் கூற நான் எந்த முயற்சியும் மேற்கொள்ள மாட்டேன். மலைப்பிரசங்கம் பற்றிப் பிறர் எழுதியுள்ளவற்றில் இருந்து நான் வேறு எதையும் கற்றுக்கொள்ளாது இருந்தாலும் பின்வருவதைக் கற்றுக்கொண்டுள்ளேன்: இணையற்ற இந்த உரையைப்பற்றிக் கூறுவதற்கு, அதிகமான சில விஷயங்கள் எப்போதுமே இருக்கின்றன.

இப்போதைக்கு அது போதுமான முதன்மைத் தகவலாக உள்ளது. மத்தேயு 5ன் முதல் சில வசனங்களை நாம் கண்ணோக்குகையில் தொடர்புடைய விஷயங்கள் எடுத்துரைக்கப்படும்.

பிரசங்கத்திற்கு ஆயத்தப்படுதல் (5:1, 2)

காட்சி அமைவு

மத்தேயு 5ம் அதிகாரம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்" (வசனம் 1அ, ஆ). இயேசுவினால் காணப்பட்ட திரளான ஜனங்கள் முந்திய அதிகாரத்தின் கடைசி வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்: "கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்" (4:25).

இயேசு இந்த பூமியில் செய்த ஊழியத்தின் மத்திய பாகத்தில் ஒன்றரை ஆண்டுகாலமாகச் செய்ததும், "மாபெரும் கலிலேய ஊழியம்" என்று அழைக்கப்பட்டுள்ளதுமான ஊழியத்தின் தொடக்கம் பற்றி நாம், மத்தேயு 4ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இயேசு யூதேயா பகுதியில் பிரசங்கித்திருந்தார் (காண்க யோவான் 3:22-24), ஆனால் அவர் "ஏரோது ... யோவான் ஸ்நானனைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்" என்று கேள்விப்பட்டபோது [*காண்க மத்தேயு 14:3*]*, அவர் "கலிலேயாவுக்குப் போய்" அங்கே தங்கியிருந்தார் (மத்தேயு 4:12). இயேசு தமது வாழ்வின் முதல் முப்பது ஆண்டுகளைக் கலிலேயாவில்தான் செலவிட்டிருந்தார். அவர் அந்த மாகாணத்திற்குத் திரும்பி வந்தபின்பு, அவர் முழு நேர சீஷத்துவத்திற்காக மனிதர்களை அழைத்தார் (வசனங்கள் 18-22). அவர் "கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்" (வசனம் 23). "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்பதே (வசனம் 17) அவரது இராஜ்யத்தின் செய்தியினுடைய இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது. விரைவிலேயே "திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்" (வசனம் 25அ). இந்தக் கூட்டத்தைக் கண்ட இயேசு, "மலையின்மேல் ஏறினார்" (5:1ஆ). ஒருவேளை அவர், கூட்டத்தில் இருந்து விலகிச்செல்ல விரும்பி இருக்கலாம், அல்லது ஒருவேளை அவர் தமது உரையைக் கேட்பவர்கள் நன்கு காணக்கூடிய இடத்தை விரும்பியிருக்கலாம்.*

*கர்த்தர் "மேல் ஏறிச்சென்றது" எந்த "மலை" என்று நாம் அறிவதில்லை. ஹேட்டின்னின் ஹார்ன்ஸ் என்பது பாரம்பரியமாகச் சுட்டிக்காண்பிக்கப்படும் இடமாக உள்ளது, ஆனால் இதுவே அந்த இடம் என்று நாம் நிச்சயமாய் கூற இயலாது. "மலை" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*oros*; என்ற) சொல் "குன்று" என்றும் அர்த்தப்படக்கூடும். (இதே கிரேக்க வார்த்தை 5:14லிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது "மலையின்மேல் இருக்கிற பட்டணம்" என்பதைப் பற்றிப் பேசுகிறது.) "மலை" என்பதற்கு முன்னால் உள்ள ("*the*" என்ற) திட்டவட்டமான சுட்டுச்சொல் ஒரு குறிப்பிட்ட அல்லது நன்கு அறியப்பட்ட மலையைக் குறிப்பிட வேண்டும் என்று அவசியமில்லை. ஜோசப்* H. *தாயெர் என்பவரின் அகராதியின்படி, இந்தச் சொல்லாக்கம் "பேசப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள, அருகாமையில் உள்ள மலை" என்பதை மாத்திரம் சுட்டிக்காண்பிப்பதாக உள்ளது.[8] அநேகமாக இந்தப் பிரசங்கம், கலிலேயாக் கடலின் மேற்குப் பகுதியில் கூர்மையாக உயர்ந்த முரடான உயர்ந்த பகுதிகளில்*

ஏதோ ஒரு இடத்தில் பிரசங்கிக்கப்பட்டிருக்கலாம்.

நமது வேதவசனப் பகுதிக்குத் திரும்புகையில் நாம், ‘‘அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்’’ என்று வாசிக்கிறோம் (வசனம் 1இ, ஈ). அமருதல் என்பது, முறைசார்ந்த போதனைக்கு வழக்கமான உடல்அமைவுத் தோற்றமாக இருந்தது (காண்க 13:2; 23:2; 24:3; 26:55). யூதருடைய ஜெப ஆலயங்களில், போதகர் அமர்ந்திருந்தார் (காண்க லூக்கா 4:20). வேதவசனம், “அவருடைய *சீஷர்கள்* அவரிடத்தில் வந்தார்கள்” என்று கூறுவதைக் கவனியுங்கள்.[9] அடுத்த வசனம், அவர் “*அவர்களுக்கு* உபதேசிக்கத் தொடங்கினார்” என்று கூறுகிறது. லூக்கா சுவிசேஷ விபரத்தின்படி, இயேசு இந்தப் பிரசங்கத்திற்குச் சற்று முன்னர்தான் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தேர்ந்துகொண்டார் (காண்க லூக்கா 6:12-16). விஷயம் அப்படி உள்ளது என்றால், இந்தப் பிரசங்கம் “புதிதாக நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களுக்குப் பயிற்றுவிக்கும் பாடவேளையாக” நினைக்கப்படலாம்.[10] இருப்பினும், இந்தப் பன்னிருவர் அல்லாமல் இயேசு மற்ற சீஷர்களையும் கொண்டிருந்தார் (காண்க லூக்கா 10:1). கற்றுக்கொள்வதற்காகப் போதகர் ஒருவரைப் பின்பற்றியவரே ஒரு சீஷராக இருந்தார். மத்தேயு 5:1ன் சீஷர்கள் தங்களை ஓரளவிற்கு இயேசுவுடன் பிணைத்துக் கொண்டவர்களாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் தீவிரமான மாணவர்களாக இருந்தனர்.

ஒரு கருத்தில், மலைப்பிரசங்கம் ஒவ்வொருவருக்குமானதாக உள்ளது, ஏனெனில் எல்லாரும் இயேசுவின் சீஷர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். பிரசங்கத்தின் முடிவில் நாம், இயேசு போதித்தபோது மக்கள் கூட்டம் அங்கு இருந்தது என்று அறிகிறோம் (காண்க 7:28-8:1). இருப்பினும் முழுமையான கருத்தில், இயேசுவின் சீஷர்களாக இருப்பவர்கள் மாத்திரமே இந்தப் பிரசங்கத்தின் கொள்கைகளைப் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு, பின்பற்ற முடியும். வேறொரு இடத்தில் இயேசு, “என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” என்று குறிப்பிட்டார் (யோவான் 15:5).

காட்சி அமைவைச் சிந்தனையில் பெற்றுக்கொள்ளுங்கள்.[11] இயேசு அமர்வதற்கு ஏற்ற இடம் ஒன்றைக் கண்டறிந்தார். பின்பு அவரது சீஷர்கள் (கற்றுக்கொள்ளுதலில் தீவிரமாயிருந்தவர்கள்) அவரைச் சுற்றிலும் அமர்ந்தனர். நிறைவாக, சீஷர்களுக்குப் பின்னால், ஒப்புக்கொடுத்தலைக் காட்டிலும் புதியதைக் தெரிந்துகொள்ளும் ஆர்வம் அதிகமாகக் கொண்ட மக்கள் கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டமானது இயேசு பேசியபோது வளரத் தொடர்ந்தது.

பேசுதல்

பின்பு இவ்வசனப் பகுதி, ‘‘அப்பொழுது அவர் [இயேசு] தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது ...’’ என்று கூறுகிறது (மத்தேயு 5:2). “அவர் தமது வாயைத்திறந்து” என்ற சொற்றொடர் “அவர் பேசக்கூடும்படித் தமது வாயைத்திறந்தார்’’ என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறது. இந்தச் சொற்றொடர் “பேசப்பட்ட வார்த்தைகள் தற்செயலான உச்சரிப்பாக இருக்கவில்லை, ஆனால் அமைவுபெற்ற மனவிருப்பமும் நோக்கமும் கொண்டிருந்தன என்று கூட்டிக் காண்பிக்கும் எபிரெய இயமாக [எபிரெயச் சொல்விளக்கமாக]’’ இருந்தது.[12] இயேசு “பின்வருபவற்றைக் கூறி அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்” - மற்றும்

அவரது நிபுணத்துவம் நிறைந்த உரையானது பெருகி ஓடியது.

இயேசு, விரைவில் நிலைநாட்டப்பட இருந்த தமது இராஜ்யத்தைக் குறித்து இதற்கு முன்பும் போதித்திருந்தார்:

> அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் (4:17).
>
> பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, … (4:23).

இராஜ்யம் பற்றிய தலைப்பு மத்தேயு 5-7 அதிகாரங்களில் இயேசுவினுடைய போதனையின் மையக் கருத்தாகத் தொடர்ந்திருந்தது. இந்தப் பிரசங்கத்தில் "இராஜ்யம்" என்ற வார்த்தை எவ்வளவு அடிக்கடி தோன்றுகிறது என்பதைக் கவனியுங்கள் (5:3, 10, 19, 20; 6:10, 13, 33; 7:21). விசேஷமாக அந்தக் குறிப்புகள் ஒவ்வொன்றின் சந்தர்ப்பப்பொருளைக் கவனியுங்கள். நாம் இந்தப் பிரசங்கத்தைப் படிக்கையில், இராஜ்யத்தின் (உலகப் பிரகாரமானதல்ல, ஆனால் ஆவிக்குரிய) இயல்பையும் அரசர் நிபந்தனை விதிக்கும் ஒப்புக் கொடுத்தலின் வகையையும் (முழுமையானது) கற்றறிவோம். எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உள்ள குடியுரிமைத்துவம் எதை மரபுரிமை ஆக்குகிறது என்பதை நாம் கற்றறிவோம்: பரலோக ராஜ்யத்தின் குடிமகன் யார்? மற்றும் அவர் என்ன செய்கிறார்?

மத்தேயு 5:1, 2ஐத் தொடர்ந்து வருவது ஒரு பிரசங்கம் அல்ல, ஆனால் மத்தேயுவினால் சேகரிக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட, இயேசுவினுடைய போதனைகளின் திரட்டு என்று சில எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மத்தேயு சுவிசேஷ விபரத்தை நாம் ஏற்றுக்கொண்டால், அந்த முடிவை அடைவதற்குக் காரணம் எதுவும் இருப்பதில்லை. "மத்தேயு இந்தப் பிரசங்கத்தை, ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றும் இடத்தில் நடந்த ஒரு குறிப்பிட்ட உரையாக முன்னிறுத்துகிறார்" (காண்க 5:1; 8:1).[13] இருப்பினும் பிரசங்கத்தின் ஒரு சுருக்கமான பதிப்பை நாம் கொண்டிருக்கிறோம் என்பது அனேகமாக உண்மையாயிருக்கலாம். (இதன் இப்போதைய வடிவமைப்பில், இதை உரக்க வாசிப்பதற்கு பத்து முதல் பதினைந்து நிமிடங்களே தேவைப்படுகிறது.) அவ்வப்போது இயேசு சற்றே இடைவெளி எடுத்துக்கொண்டு அவரது போதனை சற்றே விரிவான கால அளவில் தரப்பட்டிருக்கவும் சாத்தியக் கூறு உள்ளது. சிலர் மத்தேயு 5-7 அதிகாரங்களை, "குன்றின் மீது போதனை" என்று அழைப்பதை விரும்பித் தேர்ந்துகொள்கின்றனர்.[14] மத்தேயு சுவிசேஷத்தின் இந்த மூன்று அதிகாரங்களும் இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்த, மக்கள் கூட்டத்தால் கேள்விப்படப்பட்ட மற்றும் நிறைவாக அவருக்குத் தங்கள் வாழ்வை ஒப்புவிக்க மனவிருப்பம் கொண்டுள்ள யாவருக்கும் போதித்தல் என்ற நோக்கம் கொண்ட உண்மையான பிரசங்கமாக உள்ளது என்று நான் நம்புகிறேன்.

குடியுரிமைக்கு ஆயத்தப்படுதல் (5:3-12)

இந்த அறிமுகப் பாடத்தின் எஞ்சிய பகுதியில், இந்தப் பிரசங்கத்தின் முதல்

பகுதியான பாக்கியங்கள் என்பதைக் கண்ணோக்குவதன் மூலம் நாம், நமக்கு இதில் உள்ளது என்ன என்பதைப் பற்றி மாதிரி பார்ப்போம்:[15]

> "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
>
> "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.
>
> "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.
>
> "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.
>
> "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
>
> "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
>
> "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.
>
> "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
>
> "என்னிமித்தம் உங்களை நிந்தித்துக் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல் வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (5:3-12).

எட்டு பாக்கியங்கள் உள்ளன. பயன்படுத்தப்பட்ட சொல்விளக்கத்தின் வடிவம் ("*Blessed are/is*") வேதாகமத்திற்குப் பொதுவானதாகவே உள்ளது,[16] ஆனால் வேதவசனங்களில் வேறு எங்கும் நாம், "இங்கு இருப்பதைப் போன்று மிக நீண்ட மற்றும் கவனத்துடன் கட்டமைக்கப்பட்ட தொடரை" காண்பதில்லை.[17]

எட்டாவது பாக்கியம் விரிவாக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை இப்போதைக்குக் காணாது விடும்போது, ஒவ்வொரு பாக்கியத்திலும் மூன்று பாகங்கள் உள்ளன: ஒரு பண்பு, ஒரு ஆசீர்வாதம் மற்றும் ஒரு பலன். எடுத்துக்காட்டாக, முதல் பாக்கியம், பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் கொண்டிருக்க வேண்டிய ஒரு பண்புடன் தொடங்குகிறது: "ஆவியில் எளிமையுள்ளவர்கள்." பின்பு இது ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டுள்ளது: "பாக்கியவான்கள்"; இது ஒரு பலனுடன் முடிகிறது: "பரலோகராஜ்யம் அவர்களுடையது." சுருக்கமான இந்த மேற்கண்ணோட்டத்தில் நாம், பாக்கியங்களின் மூன்று பாகங்களை வரிசை முறையில் கண்ணோக்கி ஆராய்ச்சி செய்வோம்.

பாக்கியங்கள்

நாம் ஆசீர்வதிக்கப்பட்டும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும் என்றால்

நாம் கொண்டிருக்க வேண்டிய ஆளுமைப் பண்புகள் யாவை?[18]

- நமது ஆவிக்குரிய ஏழ்மைநிலையைப் பற்றி அறிந்தவர்களாக நாம் "ஆவியில் எளிமை உள்ளவர்களாக" இருப்பது அவசியம்.
- நமது ஆவிக்குரிய வகையிலான கைவிடப்பட்ட நிலைபற்றி நாம் "துயரப்படுவது" அவசியம்.
- நாம் தேவன் மற்றும் அவரது வசனத்திற்கு இணங்க மனவிருப்பம் கொண்டவர்களாக தாழ்மையும் "சாந்தமும்" கொண்டிருத்தல் அவசியம்.
- நாம் "நீதியினிமித்தம் பசி தாகமுள்ளவர்களாக" கர்த்தரால் நீதிமான் என்று அழைக்கப்படுவதற்கு மூழ்கடிக்கும் விருப்பம் கொண்டவர்களாக இருப்பது அவசியம்.
- நாம் நம்மைப் பற்றிக் கொண்டுள்ளதை விட மற்றவர்களைப் பற்றி அதிக அக்கறை கொண்டு "இரக்கமுள்ளவர்களாக" இருத்தல் அவசியம்.
- நாம் தூய்மையும் சுத்தமும் தேவனுடைய விஷயங்கள் மீது கவனக்குவிப்பும் கொண்ட இருதயங்களுடன், "இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக" இருத்தல் அவசியம்.
- நாம் மற்றவர்களுடனும் தேவனுடனும் சமாதானமாயிருத்தலைச் செயல் முனைப்புடன் நாடும் "சமாதானம் பண்ணுகிறவர்களாக" இருத்தல் அவசியம்.
- நாம் "நீதியினிமித்தம் துன்புறுத்தப்படும்" போது நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருத்தல் அவசியம்.

மலைப் பிரசங்கத்தின் தொடக்கம் முதல் முடிவு வரையிலும், இயேசுவின் இராஜ்யத்தில் உள்ள குடிமக்கள் சாத்தானின் இராஜ்யத்தில் உள்ளவர்களில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை இயேசு தெளிவாக்கினார். மத்தேயு 6:8ல் இந்தப் பிரசங்கத்தின் திறவுகோல் சிந்தனை இருப்பதாக கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது: "அவர்களைப்போல் நீங்கள் செய்யாதிருங்கள் ...[19]" ஜான் R. W. ஸ்டாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> கிறிஸ்தவர்களின் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்களின் தர அளவைகளுக்கு இடையிலான இந்த நேர்மாறு தரவழைக்கப்படாத ஒரே ஒரு பத்திகூட மலைப்பிரசங்கத்தில் இருப்பதில்லை. ... இங்கு கிறிஸ்தவரின் மதிப்பீட்டு முறைமை, ஒழுக்கத் தரஅளவை, மத ஒப்புக்கொடுத்தல், பணம் பற்றிய எண்ணப்போக்கு, பேராவல், வாழ்வு முறை மற்றும் உறவுகளின் வலைப்பின்னல் - இவையாவும் கிறிஸ்தவரல்லாதவர்கள் உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது.[20]

இந்த நேர்மாறாக கருத்து பாக்கியங்கள் தவிர வேறு எவ்விடத்திலும் அதிக தெளிவாகக் காணப்படுவதில்லை.[21] இயேசு, "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "செல்வமும் மனமேட்டிமையும் கொண்டவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, துயரப்படக் காரணமில்லாதவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு,

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "தங்கள் மனவிருப்பத்தைப் பிறர் மீது திணிக்கும் பலமும் வல்லமையும் நிறைந்தவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "இந்த வாழ்வு தங்களுக்குத் தரக்கூடிய எல்லாவற்றிற்காகவும் கடுமையாகப் போராடுவதில் தங்கள் வாழ்வைச் செலவழிப்பவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "தாங்கள் தவறாக நடத்தப்படுவதாக நினைக்கும்போது பழிவாங்கக் கூடியவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "ஒருவரின் சுயவிருப்பமே எல்லாவற்றிலும் முக்கியமானது, சுத்தமாயிருத்தல் இனியும் பொருட்படுத்தப்பட வேண்டியதில்லை என்று நினைப்பவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "சண்டையிட்டு - வெற்றிபெறுபவர்கள் பாக்கியவான்கள்!" என்று கூறுகிறது. இயேசு, "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "துன்புறுத்தப்படுதலைத் தவிர்ப்பவர்கள் பாக்கியவான்கள், மற்றும் விசேஷமாக துன்புறுத்துபவர்களாக இருக்கப் போதிய அளவு பலம் கொண்டவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது.

பண்புகள்

"பாக்கியவான்கள்" என்ற வார்த்தை, "ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்" அல்லது "மகிழ்ச்சியானவர்கள்" என்று அர்த்தப்படுகிற (*makarios* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது, "பாராட்டப்படக் கூடியவராக இருக்கிற ஒருவரை, வாழ்வில் பொறாமைகொள்ளக் கூடிய நிலையில் உள்ள ஒருவரை அறிமுகப்படுத்துகிறது."[22] சிலர், தேவன் தமது பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருப்பதை விரும்புவதில்லை என்று கூறுகின்றனர். ஆனால் இது சாத்தானுடைய பொய்யாக இருக்கிறது. தேவன் தொடக்ககாலத் தம்பதியரை, எலிகளின் தொந்தரவு உள்ள சேறிப்பகுதியிலோ அல்லது வியாதி சுமந்த சேற்றுப் பகுதியிலோ வைக்கவில்லை, ஆனால் அவர்களை அவர் பரதீசில் வைத்தார். (பாவமே இந்த உலகத்திற்கு வருத்தத்தையும் இருதய வேதனையையும் கொண்டுவந்தது.) *Makarios* என்பதை - இந்த உலகமானது "மகிழ்ச்சி" என்பதை மேலோட்டமாக விவரிக்கும் வகையில் விவரிக்காத வரையில் - நாம் "மகிழ்ச்சி"[23] என்று சட்டபூர்வமாக மொழிபெயர்க்க முடியும். ரால்ஃப் ஸ்வீட் என்பவர், மகிழ்ச்சியைக் கண்டறிய முயற்சிப்பதற்கு இரு வழிகள் உள்ளன என்று குறிப்பிட்டார்.[24] அவற்றில் முதலாவது வழி, ஒருவரின் எல்லா விருப்பங்களையும் திருப்தி செய்யும் ஒரு சூழ்நிலையை மேம்படுத்த முயற்சித்தலாக உள்ளது. அது இந்த உலகத்தின் வழியாக உள்ளது, அது தோல்விக்கென்று அழிவாக நியமிக்கப்பட்ட வழியாக உள்ளது. இரண்டாவது வழி, எந்த சூழ்நிலையிலும் ஒரு தனிநபர் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்றவகையில் அவரது ஆளுமைத்தன்மையின் பண்புகளை மேம்படுத்தும் வழியாக உள்ளது. அதுவே பாக்கியங்களின் அணுகுமுறையாக உள்ளது.

பலன்கள்

பாக்கியங்கள் ஒவ்வொன்றும் முன்னெதிர் நோக்கப்படும் பலன் ஒன்றுடன் முடிகிறது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உண்மையாய் நிலைத்திருக்கும் குடிமகன்கள் பின்வரும் வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளனர்:

- *“பரலோகராஜ்யம் அவர்களுடையது.”*
- *“அவர்கள் ஆறுதலடைவார்கள்.”*
- *“அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.”*
- *“அவர்கள் திருப்தியடைவார்கள்.”*
- *“அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.”*
- *“அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.”*
- *“அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.”*
- *“பரலோகராஜ்யம் அவர்களுடையது”; “பரலோகத்தில் அவர்கள் பலன் மிகுதியாயிருக்கும்.”*

பலன்களில் சில இந்த வாழ்வின் மீது கவனம் குவிப்பவைகளாகக் காணப்படுகையில், மற்றவை இனிவரும் வாழ்வின் மீது அதிகம் இலக்குடையவைகளாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாக்கியமும் இங்கு ஒருபகுதி நிறைவேற்றமும் இனிவரும் வாழ்வில் முழுமையான நிறைவேற்றமும் கொண்டுள்ளது என்று கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். ராபர்ட் H. மௌன்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> *பாக்கியங்கள் ஒவ்வொன்றின் நிறைவான சொல்விளக்கமும் கடைசி நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருந்தாலும், பாக்கியங்கள் தங்களிலேயே, இந்த நிகழ்காலத்தில் அனுபவிக்கப்பட வேண்டியவையாக மற்றும் மகிழ்வுடன் அனுபவிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. 4-9 வசனங்களில் உள்ள எதிர்கால வினைச் சொல்லானது, காத்திருக்கும் அவசியமான காலவேளைக்கு மாறாக நிச்சயத்துவத்தை வலியுறுத்துகிறது.*[25]

இப்போது ஒரு பகுதி நிறைவேற்றம் மற்றும் பிற்பாடு முழுமையான நிறைவேற்றம் என்பவை பரஸ்பரம் தனித்தனியான கருத்துக்கள் என்று நினைக்காதீர்கள், ஆனால் இவைகள் ஒரே ஆசீர்வாதத்தின் இரு பகுதிகளாக உள்ளன. வாழ்நாள் முழுவதிலும் நீங்கள் ஒரு அழகிய இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று ஏங்கியிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் அந்தப் பகுதியின் படங்களைப் பார்த்து, அங்கு செல்ல வேண்டும் என்று கனவு கண்டிருக்கிறீர்கள். கடைசியில் அந்தப் பயணத்தை மேற்கொள்ள நீங்கள் உங்கள் மனதை தயார்செய்கிறீர்கள். நீங்கள் பயணம் செல்லும் வழியில், உங்களைச் சுற்றிலும் உள்ள நாட்டுப்புறப் பகுதிகள் அதிகம் அதிகமாக நேசிக்கப்படக் கூடியதாகிறது, அவைகள் நீங்கள் முன்னெதிர் பார்த்திருந்ததைப் போன்றே அதிகம் அதிகமாக உள்ளது. கடைசியாக நீங்கள் ஒரு மூலைக்குத் திரும்புகிறீர்கள் - அதுவே நீங்கள் விரும்பிய இடமாக உள்ளது! நீங்கள் உங்கள் அடைவிடத்தை அடைந்திருக்கிறீர்கள், மற்றும் அது நீங்கள் கற்பனை செய்யக்கூடியதற்கும் அதிகமான அழகுடையதாக இருக்கிறது! கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உண்மையாக இருக்கும் குடிமக்களுக்கு, வாழ்வு என்பது “பயணமாக” உள்ளது,

மற்றும் மரணம் என்பது “மூலைக்கு திரும்புதலாக” உள்ளது.

பாக்கியங்களின் ஒரு பகுதி மற்றும் நிறைவான நிறைவேற்றம் பற்றிக் கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்:

- “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.'' அவர்கள் இப்போது கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் (சபையின்) குடிமக்களாக முடியும், மற்றும் அவர்கள் பரலோகத்திலேயே நித்தியத்திற்காக முன்னெதிர்நோக்கி இருக்க முடியும்.
- “துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.” அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதன் மூலம் இங்கு ஆறுதல்படுத்தப்படுகின்றனர். இனிவரும் வாழ்வில் அவர்கள் தேவனுடைய சமூகத்தில் ஆறுதல்படுத்தப்படுவார்கள்.
- ‘‘[தாழ்மை மற்றும்] சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.” அவர்கள் இந்த வாழ்வின் உண்மையான ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர், மற்றும் ஒருநாளிலே அவர்கள் “புதிய பூமியில்” (பரலோகத்தில்) குடியமர்வார்கள்.
- ‘‘நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.'' பூமிக்குரிய இந்த வாழ்வில் அவர்கள் தேவனுடைய வசனத்தினாலும் தேவனுடைய அருளிரக்கமான கவனிப்பினாலும் வளமூட்டப் படுவார்கள். அடுத்த வாழ்வில் இவர்களின் ஆத்துமாக்கள் பரலோகத்தில் முற்றிலுமான திருப்தியை அறியும்.
- ‘‘இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.” இரக்கமுள்ளவர்கள் இங்கு தேவனிடத்தில் இருந்து இரக்கம் பெறுவார்கள் மற்றும் அதை சிலவேளைகளில் பிறரிடமிருந்து பெறுவார்கள். பரலோகத்தில் நித்திய இரட்சிப்பு என்பதே தெய்வீக இரக்கத்தின் மாபெரும் செயல்விளக்கமாக இருக்கும்.
- “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.” அவர்கள் விசுவாசக் கண்களால் இப்போது தேவனைத் தரிசிப்பார்கள், ஆனால் பரலோகத்தில் அவர்கள் முகமுகமாக அவரைத் தரிசிப்பார்கள்.
- ‘‘சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.'' அவர்கள் இன்றைய நாட்களில் தேவனுடைய குடும்பமாகிய சபையில், அவரது பிள்ளைகளாக இருக்கின்றனர். ஒருநாளிலே இந்த மகவுரிமையானது பரலோகத்தில் நிறைவுபெற்றிருக்கும்.
- ‘‘நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.” அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் துன்பப்படுத்தப்படுவதால்இப்போது அகமகிழ முடியும். பரலோகத்தில் அவர்களின் பலன் மிகுதியாயிருக்கும் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்துள்ள காரணத்தினால், அவர்கள் விசேஷித்த வகையில் அகமகிழ

முடியும்.

முடிவுரை

E. ஸ்டேன்லி ஜோன்ஸ் என்பவர், "இந்த நவீன நாட்களில் மனிதர்களுக்கு, வாழ்வில் செயல்படும் தத்துவம் தேவைப்படுமளவிற்கு வேறு எதுவும் தேவைப்படுவதில்லை" என்று எழுதினார். பயணம் செய்யும் ஒரு கப்பலின் ஒப்புவமையைப் பயன்படுத்தி, நவீன மனிதன் ஒருகாலத்தில் தன்னைப் பாதுகாத்திருந்த கட்டும் கயிறுகளில் இருந்து தன்னைத் தளர்வாக்கித் துண்டித்துக் கொண்டுள்ளான் என்று ஜோன்ஸ் கருத்துத் தெரிவித்தார். அவன் தனது வரைபடம், தனது திசைகாட்டும் கருவி, தனது திருப்புச் சக்கரம் மற்றும் நிறைவான அடைவிடம் பற்றிய எந்தக் கருத்தையும் தனது வாழ்க்கைக் கப்பலில் இருந்து துக்கி எறிந்து விட்டான். அவன் தன்னையே, "சுதந்தரமானவன்!" என்று அறிவித்துக் கொண்டிருக்கிறான். மக்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதால், அவர்கள் இன்றைய நாட்களில் "எல்லாவற்றிலிருந்தும் விடுதலை - பாறைகள், புயல்கள் மற்றும் வெறும் அர்த்தமற்ற உணர்வினால் ஒரு அலையிலிருந்து இன்னொரு அலைக்கு அலைக்கழிக்கப்படுதலினால் உண்டாகும் துன்புறுதலைக் சகிக்க இயலாத பித்துப்பிடித்த நிலை தவிர மற்ற எல்லாவற்றில் இருந்தும் - விடுதலை பெற்றிருக்கிறான்" என்று ஜோன்ஸ் முடிவு செய்தார்.[26] மலைப்பிரசங்கம், மக்களுக்கு மிகவும் தேவைப்படுகிறதான "செயல்படும் தத்துவத்தை" அளிக்க முடியும். இந்தப் பிரசங்கம் பாராட்டப்படுவதற்கான உயர்கொள்கை உடையதாக மாத்திரமே இருப்பதில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். இது நாம் நமது வாழ்வை அளந்துகொள்ள வேண்டிய தர அளவைகளை உடையதாக மாத்திரம் கூட இருப்பது இல்லை. இது கிறிஸ்து, தமது சீஷர்கள் *கீழ்ப்படிய வேண்டும்* என்று எதிர்பார்க்கும் (காண்க மத்தேயு 7:24-27) அவரது "ஜீவனும் வல்லமையும்" உள்ள வசனமாக இருக்கிறது (எபிரெயர் 4:12).

பிரசங்கத்தின் காட்சி அமைவிற்கு மறுபடியும் திரும்புங்கள். இயேசு அமர்ந்து போதித்துக் கொண்டிருக்கிறார். கற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்த விரும்பும் அவரது சீஷர்கள் அவரைச் சுற்றிலும் இருக்கின்றனர். அவர்களைச் சூழ்ந்து, கவனித்தல், பேரார்வம் மற்றும் ஒருவேளை திகைப்பும்கூடக் கொண்டிருந்த, ஆனால் தங்கள் மீது இந்தக் பிரசங்கம் சிறிதளவே செயல்விளைவை ஏற்படச் செய்த மக்களைக் கொண்ட திரள்கூட்டமும் இருக்கிறது. நீங்கள் இதில் எந்தக் குழுவில் இருக்கிறீர்கள்: சீஷர்களுடனா அல்லது மக்கள் கூட்டத்திலா? நீங்கள் மக்கள் கூட்டத்தில் இருந்தால், இந்தப்பாடத்தொடர் முடிவதற்குள் நீங்கள், இயேசு கிறிஸ்துவின் தேர்ந்தெடுக்கப்பட்ட சீஷர்களின் குழுவில் அங்கம் வகிக்க முடிவு செய்ய வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்!

குறிப்புகள்

[1]Charles R. Erdman, *The Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1966), 53. [2]Jim Bill Mclnteer, "The Place, The People, The Preacher," *20th Century Christian* 23 (August 1961): 3. [3]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1978), 15. [4]Erdman, 53. [5]கிறிஸ்து

சிலுவையின் மீது மரிக்கும் வரையிலும் பழைய உடன்படிக்கை அமலில் இருந்து, மற்றும் இயேசுவின் மரணத்தில் புதிய உடன்படிக்கை அமலுக்கு வந்தது (காண்க கொலோசெயர் 2:14; எபிரெயர் 9:15-17). [6]பழைய ஏற்பாட்டுச் செயல்முறைகள் பற்றிய குறிப்புகளைப் புதிய ஏற்பாட்டு நடைமுறைகளுக்குத் தழுவி அமைத்தல் என்பது நமக்குச் சிரமமானதாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, "பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த" வருதல் (5:23) என்பது "தேவனை ஆராதிக்க வருதல்" என்பதற்குத் தோராயமாகச் சமமானதாக உள்ளது. [7]Quoted in E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 14. [8]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans, and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 454. [9]இது மத்தேயு சுவிசேஷத்தில் "சீஷர்" அல்லது "சீஷர்கள்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் முதல் இடமாக உள்ளது. [10]David Roper,ரின் "கிறிஸ்துவின் வாழ்வு, 1" Truth for Today என்ற புத்தத்தைக் காணவும் (Searcy, Ark.: Resource Publications, 2003), 218.

[11]இந்தக் காட்சி அமைவின் வார்த்தைச் சித்தரிப்பு ஒன்று "David Roper, The Day Jesus Taught on a Mountain," in "Narrative Preaching, 1," *Truth for Today* (February 1997): 26. என்ற புத்தகத்தில் காணப்படுகிறது. [12]A. Lukyn Williams, "St. Matthew," *The Pulpit Commentary,* vol. 15, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 146. [13]Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part 1,* Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 78. [14]Harvey Scott, *The Sermon on the Mount* (Texarkana, Tex.: The Christian Helper, 1947), 3. [15]பாக்கியங்கள் மீதான பாடத்தொடரை நீங்கள் போதித்து இருந்தீர்கள் என்றால், அந்தப் படிப்பை நீங்கள் பின்னோக்கிக் குறிப்பிடலாம். [16]எடுத்துக்காட்டாக சங்கீதம் 1:2ஐக் காணவும். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏழு பாக்கியங்கள் உள்ளன (1:3; 14:13; 16:15; 19:9; 20:6; 22:7, 14). .[17]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 108. [18]பின்வரும் பட்டியல் "பாக்கியங்கள்" என்ற புத்தகத்தில் அடையப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. அந்தப் படிப்பு, ஒவ்வொரு பாக்கியத்தைப் பற்றியும் கூறுபவற்றை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம். [19]Stott, 18. [20]Ibid., 19.

[21]பின்தொடரும் நேர்மாறான கருத்துக்கள், டெக்ஸாஸின் ட்ரெண்ட் நகரில் உள்ள ட்ரெண்ட் கிறிஸ்துவின் சபையில் 2006ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதியன்று, காய் ரோப்பர் பிரசங்கித்த "மகிழ்ச்சியைக் கண்டுபிடிப்பது எப்படி?" என்ற பிரசங்கக் குறிப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. [22]Stoot, 18.[23]NASB வேதாகமத்தில் இவ்வார்த்தையின் ஒரு வடிவம், 1 கொரிந்தியர் 7:40ல் "பாக்கியவதியாயிருப்பாள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [24]Ralph Sweet, *Moments on the Mount,* Living Word series (Austin, Tex.: R. B. Sweet Co., 1963), 17. [25]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 38. [26]Jones, 9.

2

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை . . . மகிமைப்படுத்துங்கள்"

(மத்தேயு 5:13-16)

இந்தப் பாடமானது உங்களின் மதிப்பு மிகுந்த மற்றும் முக்கியமான உடமைகளில் ஒன்றைப் பற்றியதாக உள்ளது. இது ஒவ்வொருவரும் கொண்டுள்ள ஒன்றாக உள்ளது. நான் இதைக் கொண்டிருக்கிறேன், மற்றும் நீங்களும் இதைக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் வேறு எதைக் கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும், இதைக் கொண்டுள்ளனர். நீங்கள் இதை விற்றாலும்கூட, இன்னும் இதைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மரித்த பின்பு இது வாழ்கிறது. நான் உங்கள் *செல்வாக்கைப் பற்றிப்* பேசுகிறேன்.

பல வசனப்பகுதிகள் நேர்மறையான செல்வாக்கிற்கான அவசியம், நல்ல உதாரணமாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன.[1] இயேசுவின் அடிச்சுவட்டில் நாம் நடக்க வேண்டும் என்பதற்காக, அவர் நமக்கு ஒரு உதாரணத்தை விட்டுச் சென்றார் (1 பேதுரு 2:21; காண்க யோவான் 13:5). பவுல் எப்போதுமே ஒரு நல்ல உதாரணமாக இருக்க முயற்சி செய்தார் (காண்க பிலிப்பியர் 3:17), மற்றும் அவர் அதையே செய்யும்படி தீமோத்தேயுவையும் தீத்துவையும் ஊக்குவித்தார் (1 தீமோத்தேயு 4:12; தீத்து 2:7). விசுவாசிகளாக இருக்கும் மனைவியர்கள், அவிசுவாசிகளாக இருக்கும் தங்கள் கணவர்களை, தங்கள் விசுவாசநிறைவின் உதாரணங்களினால் ஆதாயப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (1 பேதுரு 3:1, 2). இருப்பினும் செல்வாக்கின் வல்லமை மற்றும் நோக்கம் ஆகியவற்றைப் பற்றி இந்தப் பாடத்திற்கான வேதவசனப் பகுதியைப் போல வேறு எந்த வசனப்பகுதியும் இவ்வளவு விரிவாகப் பேசுவதில்லை.

முந்திய பாடத்தில் நாம், பாக்கியங்களைப் பற்றிச் சுருக்கமாக ஆய்வுசெய்தோம் (5:3-12). இயேசுவின் அந்தக் கூற்றுகள், பரலோக இராஜ்யத்தினுடைய குடிமக்களின் அடிப்படைப் பண்புகளை நமக்குத் தருகின்றன. நான் ஒரு இளைஞனாக இருந்தபோது, அமெரிக்காவில் உள்ள பாய்ஸ் ஸ்கவுட் என்ற அமைப்பில் நான் ஒரு உறுப்பினனாக இருந்தேன். நாங்கள், ஸ்கவுட்டில் இருக்கும் பையன் நம்பிக்கைக்கு உகந்தவனாக, நாணயமானவனாக, உதவிசெய்பவனாக, நட்புறவு உடையவனாக, நேர்மையாளனாக, இரக்கமுள்ளவனாக, கீழ்ப்படிதல் உள்ளவனாக, நட்புறவு உடையவனாக, சிக்கனமானவனாக, வீரமிக்கவனாக, சுத்தமானவனாக

மற்றும் பயபக்தி உடையவனாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கிற பாய்ஸ் ஸ்கவுட்டின் விதிகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. பாக்கியங்கள் என்பவை "பரலோகக் குடிமகனுக்கான விதி" என்று நினைக்கப்படலாம்: பரலோக ராஜ்யத்தின் குடிமகன் ஆவியில் எளிமையுள்ளவராக, தமது பாவங்கள் பற்றித் துயரப்படுகிறவராக, தேவனுக்கு இணங்குபவராக, தேவனுடன் சரியாக இருக்க விரும்புபவராக, பிறர்மீது இரக்கம் உள்ளவராக, இருதயத்தில் சுத்தமுள்ளவராக, தேவனுடனும் மற்றவர்களுடனும் சமாதானம் கொண்டிருக்க முயற்சிப்பவராக மற்றும் துன்புறுத்தப்படும்போது கூட அகம் மகிழ்பவராக இருக்கிறார்.[2]

கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் குடிமகனுடைய பண்புகளைப் புரிந்து உணர்ந்துகொண்ட பின்பு நாம், "இந்தப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டியதன் கருத்து என்ன?" மற்றும் "இவ்வகையான தனிநபரின் இலக்கு அல்லது சமயப்பணி என்ன?" என்பவற்றைப் போன்ற கேள்விகளைக் கேட்கலாம். அந்தக் கேள்விகளுக்கு நமது தற்போதய வசனப்பகுதி பதில் அளிக்கிறது: பட்டியலிடப்பட்டுள்ள பண்புகளைத் கொண்ட தனிநபர்கள், "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்திற்கு வெளிச்சமாக" இருக்கின்றனர்; மற்றும் அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், பரலோகத்தில் இருக்கிற அவர்களுடைய பிதாவுக்கு மகிமையாக இருக்கும்.

இந்தப் பாடத்தில் நாம், முதலில் மத்தேயு 5:13-16 என்ற நமது வேதபாட வசனப்பகுதியை ஆய்வு செய்வோம். பின்பு நாம் யாவரும் கற்றுக்கொள்வதற்கு அவசியமான பல பாடங்களைப் பட்டியலிடுவோம்.

வேதபாட வசனப்பகுதியை உற்றுநோக்குதல் (5:13-16)

பூமிக்கு உப்பு (வசனம் 13)

இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறித் தொடங்கினார் (வசனம் 13அ). 13 முதல் 16 வரையிலான வசனங்களில் அவர், பழங்கால மற்றும் நவீனகால உலகங்கள் இரண்டிற்கும் பொதுவான இரு பொருட்களைப் பற்றிய கருத்தைப் பயன்படுத்தினார். இவ்விரு பொருட்களும் வாழ்விற்கு அவசியமானவையாக உள்ளன. ரோமர் அரசவையில் இருந்த பிளீனி (கி.பி. 62-இ 115), "உப்பு மற்றும் சூரிய வெளிச்சம் ஆகியவற்றைப் போன்று அதிகம் பயன்நிறைந்தவை வேறெதுவும் இல்லை" என்று எழுதினார்.[3]

இயேசுவின் நாட்களில், உப்பு பல பயன்களைக் கொண்டிருந்தது. அது பணிக்கு ஊதியமாகத் தரப் பயன்படுத்தப்பட்டது. அது சில மருந்துகளில் பகுதிக்கூறாக இருந்தது மற்றும் பனிக்கட்டியை உருக்கப் பயன்படுத்தப்பட்டது. அது லேவியத்துவப் பலிகளில் உள்ளடக்கப்பட்டது (லேவியராகமம் 2:13). "உப்பு 14,000க்கும் அதிகமான பணிகளைக் கொண்டுள்ளது என்று கலைக்களஞ்சியங்கள் கூறுகின்றன."[4] இருப்பினும் இயேசு, உப்பின் பின்வரும் இரண்டு அடிப்படைப் பணிகளையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர்: சுவையூட்டுதல் மற்றும் பாதுகாத்தல்.

நம்மில் பெரும்பான்மையானவர்கள் நமது உணவிற்கு ருசியூட்ட உப்பைப் பயன்படுத்துகிறோம். உப்பு (அல்லது ஒரு உப்புப்பதிலி) இல்லாத நிலையில், சில உணவுகள் சப்பென்று இருக்கின்றன. யோபுவின் புத்தகத்தில் நாம், "ருசியில்லாத

பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ ... ?" என்று வாசிக்கிறோம் (6:6). பவுல் தமது வாசகர்களுக்கு "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" என்று அறைகூவல் விடுக்கையில், உப்பின் சுவையூட்டும் பண்பைப் பற்றிக் குறிப்பிட்டார் (கொலோசெயர் 4:6அ).

கிறிஸ்துவின் சீஷர்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றனர் அவர் கூறியபோது, அவர் தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றிப் பாராட்டுரையையும் பூமியைப் பற்றி மதிப்புக் குறைவான குறிப்பையும் கூறினார். இயேசு இல்லாமல் பூமியின்மீது வாழ்வு மந்தமானதாக, சுவையற்றதாக மற்றும் சலிப்புள்ளதாக இருக்கிறது. கிறிஸ்தவரல்லாத பலர் ஒரு செயலில் இருந்து மற்றொரு செயலுக்குத் துரிதகதியில் சென்று சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்ளாதிருக்கும் நிலையில், தங்கள் வாழ்வின் வெறுமை நிலையைப் பற்றி அறிவதில்லை. ஒருநாளிலே, சுகவீனத்தினால் அல்லது மரணம் அணுகுவதினால் தங்கள் செயல் வேகங்களை மட்டுப்படுத்தும்படிக் கட்டாயப்படுத்தப்படும்போது, அவர்கள் தங்கள் இருப்பின் அர்த்தமற்ற தன்மையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இயேசுவுடனான சரியான உறவுதான், அவர்கள் வாழ்விற்கு உண்மையான மற்றும் நிலையான உற்சாகத்தைக் கொண்டு வர முடியும்.

இருப்பினும் கிறிஸ்து, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறியபோது அவர் அனேகமாக, உப்பின் பாதுகாக்கும் பண்பைத் தமது சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்து இருக்கலாம். குளிர்பதனப் பெட்டிகள் வந்த நாட்களுக்கு முந்திய காலத்தில், இறைச்சி அழுகுதலைத் தாமதப்படுத்த உப்பு பயன்படுத்தப்பட்டது. கலிலேய மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தினர். நான் ஆக்லாஹாமாவில் ஒரு சிறுவனாக இருந்தபோது, இறைச்சியானது புத்தம்புதியதாக உண்ணப்படாதபோது, அது நீண்டநாள் கெடாதிருக்க உப்பு பயன்படுத்தப்பட்டது. அதுபோன்றே, கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு ஒரு காக்கத்தக்க காரணியாக இருக்கின்றனர். நீதிமான்களான பத்து ஆத்துமாக்கள் இருந்திருந்தால் சோதோம் கொமோராவின் அழிவு தவிர்க்கப் பட்டிருக்கும் (காண்க ஆதியாகமம் 18:32). இன்றைய நாட்களில் நீதிமான்களான ஆண்கள் மற்றும் பெண்கள் இருத்தல் என்பது பாவம் நிறைந்த இந்த உலகத்தின் அழிவைத் தாமதப்படுத்தி பூமியானது கடைசியில் அழிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் மனந்திரும்பக் கால அவகாசம் தருகிறது (2 பேதுரு 3:10).

இந்த உலகம் கெட்டுப்போய்க் கொண்டு இருக்கிறது என்பதை இயேசுவின் வார்த்தைகள் மறைமுகமாய் உணர்த்துகின்றன. இறைச்சியானது அப்படியே விடப்பட்டால் அது கெட்டுப்போவது அதனுடைய இயல்பாக உள்ளது மற்றும் இந்த உலகம் அப்படியே விடப்பட்டால் அது அழிவை நோக்கிச் செல்லுதல் என்பது அதனுடைய இயல்பாக உள்ளது. இந்த உலகம் எவ்வளவு மோசமானதாக முடியும்? ரோமர் 1:18-32 மற்றும் 2 தீமோத்தேயு 3:1-5 ஆகிய வசனங்களை வாசியுங்கள் - அல்லது உங்களைச் சுற்றிலும் கண்ணோக்குங்கள். ஒழுக்கத்தின் தாழ்வான தர அளவைகளை, நேர்மையில் பொதுவான ஒரு குறைவை, உழைப்பின்மீது குறைவான கவனத்தை, அதிகமான தேவபக்தி இல்லாமையை நீங்கள் பார்க்கிறீர்களா?[5] உலகத்தின் இயல்பைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அது இவ்வளவு மோசமானதாக இருப்பது திகைப்புக்கு

உரியதாக இருப்பதில்லை என்று யாரோ ஒருவர் கூறினார். மாறாக அதைப்பற்றி நல்ல விஷயம் ஏதேனும் இருந்தால், அதுவே திகைப்புக்கு உரியதாக உள்ளது. இந்த உலகத்தில் "உள்ள சில நல்ல விஷயங்கள்" இயேசுவின் செல்வாக்கினாலும் மற்றும் அவரது பின்பற்றாளர்களின் உதாரணத்தினாலும் தான் இருக்கின்றன.

நமது வேதபாட வசனப்பகுதிக்குத் திரும்புகையில் நாம், "உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?"[6] என்று வாசிக்கிறோம் (மத்தேயு 5:13ஆ). இயேசுவின் இந்தக் கேள்வியைப் புரிந்து கொள்வதற்கு நாம், அவரது நாட்களில் இருந்த உப்பைப் பற்றிய சில விஷயங்களை அறிதல் அவசியமாக உள்ளது. அது நம்மில் பெரும்பான்மையானவர்கள் இன்றைய நாட்களில் பயன்படுத்துகிற, தூய்மையாக்கப்பட்ட சோடியம் குளோரைடு அல்ல. பலஸ்தீனத்திற்கு உப்பானது, "சவக்கடல் தண்ணீர் ஆவியாக்கப்படுகையில் எஞ்சும் எச்சத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட படிகத்தில் இருந்தே முதன்மையாக வந்தது.[7] இந்த உப்பு பலவித வேதிப்பொருட்களையும் அத்துடன் கூடுதலாக அசுத்தங்களையும் உள்ளடக்கி இருந்தது. இது ஈரமாக்கப்பட்டால் சோடியம் குளோரைடு கசியக்கூடும்.[8] எஞ்சியிருப்பது சிறிதளவே சுவையுள்ள மற்றும் பாதுகாக்கும் குணம் எதுவுமற்ற உப்புக்குவியலாக இருக்கும். இதை நாம் "உப்புத்தன்மையற்ற/சாரமில்லாத உப்பு" என்று நினைக்கலாம். சந்தர்ப்பப்பொருளில் கர்த்தர் அனேகமாக, தமது இராஜ்யத்தில் குடிமக்களாக இருந்தும், பாக்கியங்களில் கூறப்பட்ட பண்புகளை இழந்து போயிருப்பவர்களைக் குறிப்பிட்டிருக்கலாம். மனிதர்களுக்கும் உப்பிற்கும் பின்வரும் வேறுபாடு இருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி. "சாரமில்லாத கிறிஸ்தவர்கள்" மனந்திரும்பி, தேவனிடம் திரும்பி மற்றும் தங்கள் "சாரத்தை" மறுபடியும் ஆதாயப்படுத்துக் கொள்ள முடியும்.

"சாரமில்லாத உப்பு" எதற்குப் பயன்படும்? இயேசு, "வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" என்று கூறினார் (வசனம் 13இ). சிலபொருட்கள் தங்கள் முதன்மை நோக்கத்தை இழந்து போகும்போது, அவைகள் இன்னும் சிலவற்றில் பயனுள்ளவையாக இருக்கின்றன. ஒரு மலர் இறக்கிறபோது, அது இனியும் அழகை அளிப்பதில்லை, ஆனால் அது பூமியில் அல்லது ஒரு கம்போஸ்டு உரக்குவியலில் எறியப்படவும் மண்ணை வளப்படுத்தவும் முடியும். "சாரமற்ற உப்பின்" விஷயம் அப்படியாக இருப்பதில்லை. அது வளமான மண்ணில் இடப்பட்டால், அது மண்ணைப் பலன் தராததாக மாற்றுகிறது. இன்னொரு வேளையில் இயேசு, "அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள்" என்று கூறினார் (லூக்கா 14:35அ, ஆ). அதை அவர்கள் எங்கே எறிகிறார்கள்? கிராமப்பகுதிகளில் குறுக்காகச் செல்லும் பாதைகளில் அதை எறிகிறார்கள். அங்கு அது தீங்கு எதையும் விளைவிப்பது இல்லை, மற்றும் அது "மனுஷரால் மிதிக்கப்படுகிறது."

நன்மைக்கான தமது செல்வாக்கை இழந்து நிற்கும் கிறிஸ்தவரை இயேசு எவ்வாறு விவரிக்கிறார்? அவர் ஒன்றுக்கும் பயனற்றவர் என்று இயேசு கூறினார். கோர்ஸன் என்பவர், "சாரமற்றுப் போனால்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். அவற்றில் இருமுறைகள் இது உப்புடன் தொடர்புடையதாக உள்ளது, ஆனால் மற்ற இருமுறைகள் "இது

'மதியீனராக்கப்படுதல் அல்லது மதியீனராகுதல்' என்ற மிகச் சாதாரணமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது." கோர்ஸன், "தங்கள் சாரத்தை இழந்த சீஷர்கள் உண்மையில் தங்களைத் தாங்களே மதியீனராக்கிக் கொள்கின்றனர்" என்று கூறினார்.[9] எவ்வளவு கவலைக்குரிய விஷயம்!

உலகத்துக்கு வெளிச்சம் (வசனங்கள் 14-16)

உப்பின் ஒப்புவமை கிறிஸ்தவ செல்வாக்கின் எதிர்மறை மீது முதன்மையாகக் கவனம் குவிக்கிறது. 14ம் வசனத்தில் கிறிஸ்து நேர்மறைப் பக்கமாகத் திரும்பினார். அவ்வசனத்தில் நாம், "கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறப்பட்டதிலேயே மிகவும் திகைப்பூட்டுவதும் அசாதாரணமானதுமான கூற்றுக்களில் ஒன்றை" கொண்டுள்ளோம்:[10] "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்!" (வசனம் 14அ). தேவன் ஒளியாக இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது: "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5). இயேசு தம்மைப்பற்றி "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று கூறினார் (யோவான் 8:12அ; காண்க 9:5; 12:35, 46; மத்தேயு 4:15). இப்போது, அதே சொல்லாக்கத்தைப் பயன்படுத்தி அவர், தமது சீஷர்களுக்கு "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார். தேவனுடைய பிள்ளைகள் மற்றும் இயேசுவின் சீஷர்கள் என்ற வகையில் நாம், "உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்க" வேண்டியவர்களாக இருக்கிறோம் (பிலிப்பியர் 2:15).[11]

நாம் கொண்டிருக்கும் வெளிச்சம் எதுவாக இருப்பினும், அது நம்மிடத்திலேயே தோன்றியிருப்பதில்லை என்பதை நாம் புரிந்திருக்கிறோம். நமது வல்லமை கர்த்தரிடத்தில் இருந்து வருகிறது. நமது வெளிச்சம் அவரது பிரதிபலிப்பாகவே உள்ளது. எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" என்று எழுதினார் (எபேசியர் 5:8). "கர்த்தருக்குள்" என்ற சொற்றொடரை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்; நாம், "கர்த்தருக்குள்" மாத்திரமே வெளிச்சங்களாக இருக்க முடியும். இயேசு, "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று கூறியபின்பு, "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்றும் கூறினார் (யோவான் 8:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

வெளிச்சம் என்ன செய்கிறது? இருளை அகற்றுதல் என்பது அதன் முதன்மை நோக்கமாக உள்ளது. மத்தேயு 5:14ல் இயேசுவின் கூற்று இந்த உலகத்தைப் பற்றி என்ன கூறுகிறது? இந்த உலகம் இருளில் உள்ளது என்று அது அறிவிக்கிறது. உலகம் இதை ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை; மக்கள் "நாம் ஒளியூட்டப்பட்ட காலங்களில் வாழ்கிறோம்" என்று கூறுவதில் விருப்பம் கொண்டுள்ளனர். இருப்பினும் மனிதகுலம் எங்கிருந்து வந்தது, மனிதகுலம் ஏன் இங்கிருக்கிறது மற்றும் மனிதகுலம் எங்கு செல்கிறது என்பவற்றைப் பற்றி உலகம் கொண்டுள்ள குழப்பங்களைக் கண்ணோக்குங்கள் - இந்தக் கேள்விகளுக்கு வேதாகமம் தெளிவான பதில்களைக் கொண்டுள்ளது. உலகப்பிரகாரமான மனங்கள், இருளின் முக்காட்டை அணிந்துள்ளன. வெளிச்சத்தைப் பற்றிய அறியாமை, விசேஷமாக தேவனுடைய வசனம் என்ற வெளிச்சத்தைப் பற்றிய அறியாமை கொண்டிருத்தலின் விளைவே அந்த இருளில் சில பகுதியாக உள்ளது, மற்றும்

வெளிச்சத்தை மனப்பூர்வமாக மறுதலித்தல் என்பதன் விளைவாக அந்த இருளின் மற்ற சில பகுதி உள்ளது.

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நம்மால் இயன்ற அளவுக்கு இருளை விரட்டுதலே நமக்கு அறைகூவலாக உள்ளது. வெளிச்சமாக உள்ள தேவனுடைய வசனத்தை (சங்கீதம் 119:105) போதித்தல் மற்றும் பிரசங்கித்தல் என்பது அதைச் செய்வதற்கான வழிகளில் ஒன்றாக உள்ளது. இருப்பினும் நமது வேதபாட வசனப்பகுதியில், இது வசனத்தின்படி வாழுதலுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதே வலியுறுத்தமாக உள்ளது. "நல்ல நடையில்லாத நிலையில் நல்ல வசனம் பலன் ஒன்றும் தருவதில்லை."[12]

இருளில் நாம் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும்போது, உலகத்தில் உள்ளவர்கள் நம்மைப் பாராட்டுவார்களா? ஒரு சிலர் பாராட்டுவார்கள் - அந்த ஒருசிலருக்காகத் தேவனுக்கு நன்றி! ஆனால் பலர் பாராட்ட மாட்டார்கள். வெளிப்படுத்துதல் என்பது இருளை அகற்றுவதன் ஒரு விளைவாக உள்ளது; பிரகாசமான வெளிச்சத்தில் நாம் பொருட்களை அவற்றின் உண்மை நிலையில் காணுகிறோம். பவுல் "அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்" என்று எழுதினார் (எபேசியர் 5:13அ). இது பாவத்தின் அழகின்மையை வெளிப்படுத்துவதை உள்ளடக்குகிறது,[13] மற்றும் இதை உலகம் வெறுக்கிறது. இயேசு பின்வருமாறு கூறினார்:

> ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் (யோவான் 3:19, 20).

''வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கும்'' (எபேசியர் 5:8) இருளின் பிள்ளைகளுக்கும் இடையிலான நேர்மாறு தவிர்க்க இயலாததாக உள்ளது, ஏனெனில் தேவனுக்கு உண்மையாக இருக்கும் பிள்ளைகளின் வாழ்வானது தேவபக்தியற்று வாழ்பவர்களை மௌனமாகக் கடிந்துகொள்ளுவதாக உள்ளது. இது துன்புறுத்தப்படுதலை விளைவிக்கக் கூடும் (மத்தேயு 5:10-12).

இருப்பினும் வெளிச்சம் அழகின்மையை வெளிப்படுத்துவதோடு நின்று விடுவதில்லை. அது அந்த அழகின்மையைத் திருத்துவதற்குத் தேவையான ஒளியூட்டுதலை அளிக்கிறது. அது இருளை அகற்றுவதோடு நின்றுவிடுவதில்லை. அது மனிதர்கள் பின்பற்றத் தேவையான பாதை வழியை வெளிப்படுத்துகிறது. ஆகவே கர்த்தர் தம்மைப் பின்பற்றுபவர்களிடத்தில், "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று பலமாக வற்புறுத்தினார் (வசனம் 16ஆ)!

நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்ய அனுமதிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த, இயேசு இரண்டு விவரிப்புகளைப் பயன்படுத்தினார். முதலாவது, "மலையின்மேல் இருக்கிற பட்டணம்" என்பதாகும். அவர், "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" என்று கூறினார் (வசனம் 14ஆ). அந்த நாட்களில் குறைந்தது இரண்டு காரணங்களுக்காக, உயர்ந்த பகுதிகளில்

நகரங்கள் கட்டி எழுப்பப்பட்டன. விவசாயம் என்பது ஒரு காரணமாக இருந்தது: விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை தவிர்ப்பதற்காக அவ்வாறு கட்டி எழுப்பப்பட்டன. பாதுகாப்பு என்பது இன்னொரு காரணமாக இருந்தது: உயர்ந்த இடத்தில் உள்ளவற்றைப் பாதுகாத்தல் என்பது மிகச்சுலபமாக இருந்தது. அப்படிப்பட்ட பல நகரங்கள் பாலஸ்தீன நாட்டில் இருந்தன, எனவே இயேசுவின் உரையைக் கேட்டவர்களின்[14] கண்பார்வையில் அப்படிப்பட்ட நகரம் ஒன்று இருந்திருக்கும் என்பதற்கும், அவர் தமது பிரசங்கத்தின் இந்த இடத்தில் தமது கரத்தை அப்படிப்பட்ட நகரத்தை நோக்கி அசைத்திருப்பார் என்பதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. இந்த விவரிப்பைக் கொண்டு இயேசு கூறவந்த முக்கிய கருத்து எளிமையானதாக உள்ளது: மலையின் மீதுள்ள ஒரு நகரம் மறைந்திருக்க மாட்டாது என்பதைப் போன்றே, நமது கிறிஸ்தவ வெளிச்சமும் மறைக்கப்பட்டிருக்கக் கூடாது, அது பிரகாசித்து இருளை நீக்க வேண்டியதாக உள்ளது.

இயேசுவின் இரண்டாவது விவரிப்பு பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல்" (வசனம் 15அ). அந்த நாட்களில் "விளக்கு" என்பது ஒலிவ எண்ணெயால் நிரப்பப்பட்ட ஒரு கோப்பையாக இருந்தது,[15] பெரும்பாலும் இது ஒரு கைக்குள் அடங்கும் அளவுக்கு சிறியதாக இருந்தது. அந்தக் கோப்பையின் முனையானது பொதுவாக, திரியை ஏந்திப் பிடிக்கும் வகையில் ஒருபுறம் சுருட்டப்பட்டதாக இருக்கும்.

"மரக்கால்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, அந்த நாட்களில் இருந்த ஒரு பெரிய அளக்கும் கூடையைக் குறிக்கிறது,[16] ஆனால் அது மிகச்சரியாக என்ன வகையான கூடை என்பது முக்கியமற்றதாக உள்ளது. இந்த விவரிப்பு, ஒரு விளக்கை மூடக்கூடிய ஏதோ ஒரு பொருளை மாத்திரம் குறிக்கிறது. மற்ற சில வேளைகளில் இயேசு, விளக்கு ஒன்றை, படுக்கையின்கீழ் (காண்க மாற்கு 4:21; லூக்கா 8:16) அல்லது மறைவிடத்தில் (லூக்கா 11:33) ஒளித்து வைக்கும் மதியீனத்தைப் பற்றிப் பேசினார்.[17] 13ம் வசனத்தின் சொல்லாக்கத்தைக் கடனாகப் பெறுவதென்றால், மறைவான விளக்கு என்பது ஒரு பயனும் இல்லாததாக உள்ளது. "சாரமற்ற உப்பு" பயனற்றதாக உள்ளது, அதைப்போன்றே "வெளிச்சமற்ற விளக்கும்" பயனற்றதாக உள்ளது.

மக்கள் ஒரு விளக்கைக் கொளுத்தி மரக்காலின் (அல்லது ஒரு மூடப்பட்ட பாத்திரத்தில் அல்லது ஒரு மறைவிடத்தில்) வைக்காதிருந்தால், அவர்கள் அதைக் கொண்டு என்ன செய்வார்கள்? அவர்கள் அதை, "விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 5:15ஆ). "விளக்குத்தண்டு" என்பது விளக்கு அறைப் பகுதி முழுவதையும் ஒளியூட்டக்கூடும்படி உயர்த்தி வைக்கக்கூடிய ஏதோ ஒரு பொருள் ஆகும். அந்தத் தண்டு உலோகத்தினாலே அல்லது மரத்தினாலோ ஆனதாக இருக்கலாம் அல்லது அது சுவற்றில் உள்ள ஒரு எளிய அலமாரியாக அல்லது மாடமாக இருக்கலாம். அந்த நாட்களில் பெரும்பான்மையான வீடுகள் ஒரே ஒரு அறை மாத்திரமே கொண்டவையாக இருந்தன, எனவே ஒரு சிறிய விளக்குகூட "வீட்டில் உள்ள யாவருக்கும்" வெளிச்சம் கொடுப்பதாக இருந்திருக்கும்.

நமது விளக்கு வெளிச்சம் தர அனுமதிப்பதற்கான அவசியம் பற்றி

வலியுறுத்த இயேசு தயாராக இருந்தார். அவர், "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'' என்று கூறினார் (வசனம் 16). நாம் கர்த்தருக்கு - ஊழியம் செய்வதைக் குறித்து மக்கள் *நம்மை* மகிமைப்படுத்த அல்லது புகழச் செய்யாத வரையிலும் - என்ன செய்கிறோம் என்பதைப் பிறர் அறிய அனுமதிப்பதில் தவறு எதுவும் இல்லை. மத்தேயு சுவிசேஷத்தின் அடுத்த அதிகாரம் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொடங்குகிறது: "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' (6:1). விளக்கை நோக்கி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தல் என்பது விளக்கின் நோக்கமாக இருப்பதில்லை, ஆனால் அது ஒளியூட்டும் பொருளை நோக்கி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தலே விளக்கின் நோக்கமாக உள்ளது. நான் ஒரு இருட்டான அறைக்குள் சென்று விளக்கை எரிய வைக்கும்போது, நான் எனது கண்களை விளக்குப் பொருத்தப்பட்டிருக்கும் இடத்தை நோக்கித் திருப்புவதில்லை. அதற்குப் பதிலாக நான், அந்த அறையில் அவ்விளக்கு எதை வெளிப்படுத்துகிறது என்பதையே கண்ணோக்குகிறேன்.

நமது வெளிச்சம் ஒரு குறிப்பிட்ட வகையில் பிரகாசிக்க வேண்டும் என்று இயேசு கூறினார்: "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்*படுத்தும்படி*" (மத்தேயு 5:16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசு வல்லமையான பல செயல்களைச் செய்தார், ஆனால் அவற்றைக் கண்டவர்கள் தேவனை மகிமைப்படுத்தும் "படியாகவே" அவற்றை அவர் செய்தார் (காண்க மத்தேயு 9:8; 15:31). அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியங்களை மறைக்க முயற்சி எதையும் மேற்கொள்ள வில்லை, ஆனால் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பிதாவை மகிமைப்படுத்தும் "படியாகவே'' அவற்றை அவர்கள் செய்தனர் (காண்க நடபடிகள் 2:43; 5:12). ஃபிராங்க் L. காக்ஸ் என்பவர், "சீஷர்கள் இரு மிகைப்பட்ட செயல்களைத் தவிர்க்க வேண்டும்: பகட்டு ஆரவாரம் (மத்தேயு 6:1) மற்றும் பயங்கொள்ளித்தனம்.[18] வெளிச்சமானது வீண் ஆரவாரம் செய்வதுமில்லை, அது தன்னை மறைத்துக் கொள்ள முயற்சி செய்வதுமில்லை" என்று எழுதினார்.[19]

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் ஒருக்காலும் சுயத்தை மேன்மைப்படுத்துபவர்களாக இருக்கக் கூடாது, ஆனால் அதற்கு மாறாக பரலோகத்தில் இருக்கும் நமது பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். பவுல், "எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்'' என்று கூறினார் (1 கொரிந்தியர் 10:31). தேவன் நமக்குக் கொடுத்துள்ள தாலந்துகளைப் பற்றிப் பேதுரு எழுதியபோது, நாம் அவைகளை உபயோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். "எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' என்று எழுதினார் (1 பேதுரு 4:11இ).

வேதபாட வசனத்தில் இருந்து கற்றுக்கொள்ளுதல்

மத்தேயு 5:13-16 வசனப் பகுதியை நாம் ஆராய்ந்து கடந்து செல்லும்போது, கடந்து செல்லுதலில் நாம் ஒரு சில நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்தினோம்; ஆனால் நமது வேதபாட வசனப்பகுதியில் இருந்து பல பாடங்களைப் பொறுக்கி எடுக்க முடியும். அவற்றில் சிலவற்றைப் பட்டியலிட என்னை அனுமதியுங்கள். இவற்றில் பல ஒன்றின்மீது இன்னொன்று கவிந்துள்ளன, ஆனால் இவையாவையும் முக்கியமானவையாக உள்ளன.

சமூகத்துடன் உறவு

"சமூகத்துடன் நமது உறவு எவ்வாறாக இருக்க வேண்டும்?" என்பது ஆண்டுகளினூடே கிறிஸ்தவர்களை அக்கறை கொள்ளச் செய்துள்ள கேள்வியாக உள்ளது. அதிகம் அதிகமாகத் தேவபக்தி இல்லாத தன்மை வளருகிற ஒரு உலகத்தை நம்மைச் சுற்றிலும் நாம் காணுகிறோம், மற்றும் நாம் என்ன செய்ய வேண்டும் என்று நாம் வியப்படைகிறோம். இந்தக் கேள்விக்கு சிலர் பின்வரும் பதிலைக் கொடுத்துள்ளனர்: "சமூகத்தை விட்டுத் தள்ளுங்கள். உலகத்தில் இருந்து உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள் மற்றும் அதனுடன் ஏதேனும் இருந்தால், கொஞ்சமே செயல்படுங்கள்." அது இயேசுவின் பதிலாக இருக்கவில்லை. செயல்விளைவில் அவர், "சமூகத்தில் நிலைத்திருங்கள், ஆனால் உப்பாக மற்றும் விளக்காக நிலைத்திருங்கள்" என்றே கூறினார்.

சமூகத்தின் மீது செயல்விளைவு

யாரேனும் ஒருவர், "சமூகத்தில் நிலைத்திருப்பதா? ஆனால் இந்த உலகமானது அதிகமாக அழுகிக் கொண்டிருக்கிறது மற்றும் இருளில் அதிகமாக உழன்றுகொண்டிருக்கிறதே. நாம் செய்யும் எதுவும் அந்தச் செயல்முறையைத் திருப்ப இயலாது என்பது நிச்சயம்!" என்று மறுப்புரை கூறலாம். மத்தேயு 5:13-16ல் இயேசுவின் வார்த்தைகள் எதையேனும் அர்த்தப்படுத்தும் என்றால், அவைகள் கிறிஸ்தவர்கள் சமூகத்தின்மீது ஒரு நேர்மறையான செய்விளைவைக் கொண்டிருக்க முடியும் *என்று அர்த்தப்படுவதே ஆகும். உப்பு என்ற வகையில் உண்மை நிறைந்த கிறிஸ்தவர்கள், ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய வகையிலான அழிவைக் குறைக்க முடியும், மற்றும் விளக்கு என்ற வகையில் அவர்கள் ஆவிக்குரிய இருளை அகற்ற முடியும். நாம் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், மற்றும் நாம் துன்புறுத்தப்பட்ட போதிலும் (வசனங்கள் 10-12), நாம் உதவியற்றவர்களாகவோ அல்லது வல்லமையற்றவர்களாகவே இருப்பதில்லை.*

தனித்தன்மை கொண்டிருப்பதற்கான அவசியம்

உலகத்தில் நாம் விரும்பும் செயல்விளைவைக் கொண்டிருக்க, நாம் இந்த உகலத்தில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும். நாம் தனித்தன்மை வாய்ந்தவர்களாக, "உலகத்தால் கறைபடாதபடி" (யாக்கோபு 1:27) இருக்க வேண்டும். உப்பானது இறைச்சியைப் போலவே வேதிப்பொருள்களின் கூட்டமைப்பைக் கொண்டிருக்கும் என்றால், அது இறைச்சியைக் கெட்டுப் போகாதபடி பாதுகாக்க முடியாது. வெளிச்சமானது இருளைப் போன்றே இருக்கும் என்றால், அது இருளை அகற்ற முடியாது. இன்றைய நாட்களில் மிகவும்

அடிக்கடி, கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு இடையிலான பிரிவுக்கோடானது மிகவும் தெளிவற்றதாகி விடுகிறது. பச்சோந்தி என்று அழைக்கப்படும் பல்லி இனத்தைச் சேர்ந்த ஊரும் பிராணி ஒன்றுள்ளது. அது தான் இருக்கும் பின்னணிக்கு ஏற்ப தனது நிறத்தை மாற்றக் கூடியதாக உள்ளது. "பல பச்சோந்திக் கிறிஸ்தவர்களை" நாம் கொண்டிருக்கிறோம், அவர்கள் இந்த உலகத்துடன் கலந்து இருக்க முயற்சி செய்கின்றனர். நாம் "உலகத்தில் இருந்தாலும்" (யோவான் 17:11), நாம் "இந்த உலகத்தைச் சார்ந்தவர்களாக" இருக்கக் கூடாது (வசனங்கள் 14, 16).

தைரியத்திற்கான அவசியம்

ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, நாம் சமூகத்தில் இருந்து நம்மை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் நோக்கங் கொண்டிருக்கவில்லை. இயேசுவின் நாட்களின்போது, தங்களை "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என்று அழைத்துக்கொண்ட எஸ்ஸென்ஸ் என்ற ஒரு பிரிவினர் இருந்தனர்.[20] இருப்பினும் அவர்களில் சிலர் தங்களைச் சமூகத்தில் இருந்து விலக்கிக் கொண்டு சவக்கடலின் மேற்குப் பகுதியில் இருந்த ஒரு ஒதுக்குப்புறமான பகுதியில் வாழ்ந்தனர்.[21] அவர்களின் வெளிச்சம் உலகத்தில் பிரகாசிக்க வாய்ப்பின்றிப் போனது. நீங்களும் நானும் அந்த மிகையளவிற்குச் செல்லாதிருக்கலாம், ஆனால் நமது உப்பு-மற்றும் - வெளிச்சம் என்ற வகையிலான செயல்பாடுகளை சபைக் கட்டிடத்தில் ஆராதனை ஊழியங்களுடன் மாத்திரம் கட்டுப்படுத்திக் கொள்வதற்குச் சாத்தியக் கூறு உள்ளது. இயேசு, "நீங்கள் சபைக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று அல்ல ஆனால் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றே கூறினார். ஒரு பீப்பாயில் உப்பையும் இன்னொரு பீப்பாயில் இறைச்சியையும் வைத்தல் என்பது, இறைச்சியின் மீது கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் செயல்விளைவு எதையும் கொண்டிருக்காது.[22] இறைச்சியைக் கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கு, இறைச்சி இருக்கும் இடத்தில் உப்பு இருக்க வேண்டும்.

சமூகத்தின் மீது செல்வாக்கைக் கொண்டிருக்க, தைரியத்தின் ஒரு கூறு தேவைப்படுகிறது. நாம் எங்கு இருந்த போதிலும், நாம் உப்பாக இருத்தல் அவசியமாயிருக்கிறது:[23] கடைவீதியில், அயலகத்தவர் அல்லது நண்பருடன் பேசிக்கொண்டிருக்கையில், நாம் சந்திக்கும் மக்களுடன் செயல்படுகையில். எல்லா வேளையிலும் மற்றும் எல்லா இடத்திலும் நாம் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்க அனுமதிக்க வேண்டும். குழந்தைகளுக்கான பாடல் ஒன்று, "நீங்கள் இருக்கும் மூலையை வெளிச்சமாக்குங்கள்" என்று கூறுகிறது.[24] உங்கள் இல்லத்தை ஒளியூட்டுங்கள். நீங்கள் போய்வரும் பள்ளியை ஒளியூட்டுங்கள். "நீங்கள் இருக்கும் மூலையை தைரியமாக ஒளியூட்டுங்கள்."

தனிப்பட்ட பொறுப்பு

அடுத்த பாடம் சுயமாகவே தெளிவானதாக இருக்க வேண்டும், ஆனால் இது இன்னும் குறிப்பிடத் தகுதியானதாக உள்ளது: *ஒவ்வொரு கிறிஸ்தவரும் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்று இயேசு நோக்கங்கொண்டார்.* சிலர் தங்களுக்குச் செல்வாக்கு இல்லை என்று நினைக்கின்றனர். அவர்கள், "நான் செய்வது அல்லது கூறுவதை எவரொருவரும் கவனம் செலுத்துவதில்லை" என்று வலியுறுத்துகின்றனர். ஜார்ஜ் பெய்லீ

என்பவர், "மிகச்சிறிய முடியும்கூட ஒரு நிழல் விழச் செய்கிறது. தண்ணீரில் வீசி எறியப்படும் மிகச்சிறிய கூழாங்கல் கூட சிற்றலைகளை உருவாக்குகிறது. அதுபோன்றே நாம் யாவருமே செல்வாக்குக் கொண்டிருக்கிறோம்" என்று கூற விருப்பம் கொண்டுள்ளார்.

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றும் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றும் இயேசு யாருக்குக் கூறினார்? இந்தக் கூற்றுக்களை அவர், கிரேக்கத் தத்துவஞானிகளுக்கோ அல்லது ரோமானியத் தலைவர்களுக்கோ கூறவில்லை. இந்த வார்த்தைகளை அவர் பலஸ்தீனநாட்டின் கல்வியறிவும் கலாச்சார மேம்பாடும் கொண்டவர்களிடத்தில் பேசவில்லை. (கலிலேயர்கள் அறியாமையும் அநாகரிகமும் உடையவர்கள் என்று யூதேயாவில் இருந்த யூதர்கள் நினைத்தனர் [காண்க யோவான் 1:46].) சாதாரண மக்களிடத்தில் இந்தக் கூற்றுக்களை இயேசு கூறிக்கொண்டிருந்தார்: கல்வி அறிவற்ற மீனவர்கள், விவசாயிகள் மற்றும் சிறுநகரவாசிகள். செயல்விளைவில் அவர், *ஒவ்வொரு* கிறிஸ்தவரும் - திரும்பக்கூற என்னை அனுமதியுங்கள், *ஒவ்வொரு* கிறிஸ்தவரும் - பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருப்பதாக அறிவித்தார். கிரேக்க வசனத்தில் 13 மற்றும் 14 ஆகிய இரு வசனங்களிலுமே, "நீங்கள்" என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம் உள்ளது. இது, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை நோக்கி, "*நீங்கள் - நீங்கள் எல்லாரும் மாத்திரம்* - பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள்!" என்று கூறியது போன்றுள்ளது.

"ஒரு எச்சரிக்கைப் பட்டி"

சில உற்பத்திப் பொருள்களில், அவற்றின் குறிப்பிட்ட சில பகுதிப்பொருள்கள் ஒருவரின் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கலாம் என்ற பட்டிகள் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. துன்புறுத்தப்படுதல் பற்றிய அவரது வார்த்தைகளைத் தொடர்ந்து உடனடியாக (5:11, 12), இயேசுவின் சீஷர்கள் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்ற அவரது விவரிப்பு வருகிறது.[25] 11 மற்றும் 12 ஆகிய வசனங்கள் செயல்விளைவில், உப்பாகவும் வெளிச்சமாகவும் இருத்தல் நமது உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கிழைப்பதாகலாம் என்று கூறும் எச்சரிக்கைப் பட்டியாக உள்ளது. முன்பே குறிப்பிடப்பட்டபடி, வெளிச்சம் என்பது தவறுகளையும் குறைகளையும் வெளிப்படுத்துகிறது, மற்றும் அதைக்குறித்து இந்த உலகம் சினங்கொள்கிறது. வெளிச்சம் என்பது அதன் இயல்பினாலேயே, தெளிவாக மற்றும் காணப்படக் கூடியதாக இருப்பதால், இந்த உலகமானது தனது எரிச்சலுக்கான ஆதார மூலத்தை அறிகிறது. உலகமானது, தனது தவறுகளைத் திருத்திக்கொண்டு தனது குறைகளை நிறைவாக்குதலுக்கு மாறாக, வெளிச்சத்தை அணைத்துப்போட முயற்சி செய்வதை மிகச்சுலபமானதாக காண்கிறது. இது, நாம் நமது வெளிச்சத்தை மறைக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை! அபாயத்தைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார், ஆனால் நாம், பின்வரும் அதே நிலையில் நிலைத்திருக்க வேண்டும் என்பது அவர் நமக்கு விடும் அறைகூவலாக உள்ளது: "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது."

முடிவுரை

நீங்களும் நானும், இயேசுவின் பின்வரும் வார்த்தைகளில் கண்டறிவதைக் காட்டிலும் பெரிதான பாராட்டையோ அல்லது பெரிதான அறைகூவலையோ ஒருக்காலும் பெற்றுக்கொள்வதில்லை: "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; ... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13அ, 14அ). இயேசுவைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்கள் யாவரும் இந்தப் பணிகளை நிறைவேற்றினால், அது இந்த உலகத்தின்மீது ஏற்படுத்தும் செயல்வலிவை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஒரு பழங்காலக் கூற்று, "சபையானது ஒரே ஒரு நாள் முழுவதும் தனது அழைப்பிற்கு ஏற்ப உண்மையாகவே வாழ்ந்தால், அந்த நாளின் இரவுப்பொழுது வருவதற்குள் இந்த உலகம் முழுவதும் மனம் மாறிவிடும்" என்று உரிமைகோரியது.[26] நாம் எல்லாரும் "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்திற்கு வெளிச்சமாக" இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக!

குறிப்புகள்:

[1]செல்வாக்கு மற்றும் உதாரணம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் பிற வசனப்பகுதிகளில், நீதிமொழிகள் 22:1; மத்தேயு 13:33; 1 கொரிந்தியர் 10:11 மற்றும் யாக்கோபு 5:10 ஆகியவை உள்ளடங்குகின்றன. [2]இந்தக் கருத்திற்காக நான் எனது சகோதரர் காய் ரோப்பருக்குக் கடன்பட்டுள்ளேன். (Coy Roper, "How to Find Happiness," sermon preached at Trent church of Christ, Trent, Texas, 1 January 2006.) [3]*Natural History* 31.102. Quoted in D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 138. [4]Harold Hazelip, *Discipleship,* The 20th Century Sermons Series (Abilene, Tex.: Biblical Research Press, 1977), 56. [5]இந்த வாக்கியத்தை நீங்கள் வாழும் சமூகத்தில் உள்ள ஒழுக்கம் சார்ந்த பிரச்சனைகளுக்குப் பொருந்திவரும்படி தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [6]இது பதில் அளிக்க வேண்டும் என்று அர்த்தப்படாத சொற்திறம் வாய்ந்த ஒரு கேள்வியாக உள்ளது. உப்பு அல்லாத உப்பு மீண்டும் உப்பாக்கப்பட இயலாது. [7]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo., College Press, 1968), 233. [8]சில வேளைகளில் பெரிய அளவில் உப்பு கட்டிடங்களின் மண்தரைகளில் சேமிக்கப்பட்டு, அங்கு உப்பின் பண்பை ஈரப்பதம் பாதிப்பது உண்டு. [9]Carson, 139. [10]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 159.

[11]கிறிஸ்தவர்கள் வெளிச்சமாக இருப்பதைக் குறித்து, யோவான் 12:36; எபேசியர் 5:6-14; பிலிப்பியர் 2:14-16; 1 தெசலோனிக்கேயர் 5:4-8 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். [12]Rudolf Stier, *The Words of the Lord Jesus,* vol. 1, trans. William B. Pope (Philadelphia: Smith, English, and Co., 1859), 124. [13]1 கொரிந்தியர் 4:5ல் பவுல், கர்த்தர் மறுபடியும் வரும்போது வெளிப்படுத்தப்பட இருக்கும், "இருளில் மறைந்திருக்கிறவைகளை"ப் பற்றிப் பேசினார். [14]மலைப்பிரசங்கம் செய்யப்பட்டதாகப் பாரம்பரியமாகக் கருதப்படும் இடத்திற்கு அருகாமையில் அப்படிப்பட்ட நகரம் ஒன்றின் சிதிலங்கள் இருக்கின்றன. [15]KJV வேதாகமத்தில் மெழுகுவர்த்தி என்று அர்த்தப்படும் "candle" என்ற வார்த்தை உள்ளது, ஆனால் "கிறிஸ்துவின் காலத்திற்குச் சற்றுப் பின்னர் வரையிலும்கூட மெழுகுவர்த்திகள் அறியப்படவில்லை" (J. W. McGarvey, *The New Testament Commentary Vol. 1 - Matthew and Mark* [N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006], 52). NKJV வேதாகமத்தில் விளக்கு என்று அர்த்தப்படும் "lamp" என்ற வார்த்தை உள்ளது. [16]எனது

NASB வேதாகமப்பிரதியில் பின்வரும் குறிப்பு உள்ளது: "பக்கா - அளவை." "பக்கா" என்பது எட்டு குவார்ட்டுகளுக்கு 7.57 லிட்டர்களுக்கு சமமான உலர் அளவையின் அலகு ஆகும். (*The American Heritage Dictionary,* 4th ed. [2001], s.v. "peck.") [17]லூக்கா 11:33ல் உள்ள நேரடி கிரேக்க வார்த்தை "மறைவிடம்" என்பதாக உள்ளது. [18]பயங்கொள்ளித்தனமாக (கோழைத்தனமாக, பயந்த சுபாவமாக) இருத்தல் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 21:8ஐக் காணவும். [19]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 11. [20]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1978), 65.

[21]இது புகழ்பெற்ற சவக்கடல் சுருள்கள் கண்டறியப்பட்ட கும்ரான் சமூகத்தின் வாழ்விடமாகும். [22]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 127. [23]இந்தப் பத்தியை நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [24]"எனது இந்தச் சிறு விளக்கு" என்பது பொருத்தமான இன்னொரு குழந்தைகளுக்கான பாடல் ஆகும். [25]11 மற்றும் 12 ஆகிய வசனங்களிலும் மற்றும் 13முதல் 16வரையிலான வசனங்களிலும் ("நீங்கள்" என்ற) முன்னிலைப் பெயர்ச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் கவனியுங்கள். இவ்விரு பகுதிகளும் இயேசுவின் சீஷர்களுக்கு நேரடியாக உரைக்கப்பட்டன. [26]Hazelip, 53.

மோசேயும் இயேசுவும்:
இரு மலைகளில் இருந்து ஒரு பிரசங்கம்?

மத்தேயு 5:21ல் இயேசு, பத்துக் கட்டளைகளில் ஆறாவது கட்டளையைக் குறிப்பிட்டார்: "கொலை செய்யாதிருப்பாயாக" (காண்க யாத்திராகமம் 20:13). 27ம் வசனத்தில் அவர் ஏழாவது கட்டளையை மேற்கோள் காண்பித்தார்: "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (காண்க யாத்திராகமம் 20:14). இவ்விரு விஷயங்களிலும், பின்பு அவர், "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 5:22, 28). இது எழுத்தாளர்களை, மோசேக்கும் இயேசுவுக்கும் இடையிலும், சீனாய் மலையிலும் பலஸ்தீனத்தில் உள்ள பெயர்குறிப்பிடப் படாத ஒரு மலையிலும் இருந்து அவர்கள் கூறிய வார்த்தைகளுக்கு இடையிலும், இணைக் கருத்துக்களையும் நேரெதிர்க் கருத்துக்களையும் கண்டறியத் தூண்டியுள்ளது.

- இயேசு, மோசேயைப் "போன்ற தீர்க்கதரிசி" என்று அழைக்கப்பட்டார் (உபாகமம் 18:15; காண்க நடபடிகள் 3:20, 22).
- இருவருமே மலையின் மீது ஏறிச் சென்றனர் (காண்க யாத்திராகமம் 19:20, 25; மத்தேயு 5:1).
- மோசே தேவனுக்காகப் பேசி, மக்கள் தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் எவ்வாறு உறவு கொாண்டிருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைக் கொள்கைகளை வரைகுறிப்பிட்டார் (யாத்திராகமம் 20:1-17), மற்றும் இயேசு தமது புதிய உடன்படிக்கைக்காக அதே செயலைச் செய்தார் (மத்தேயு 5; 6; 7).

மற்ற ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. ஃபிராங்க் L.

காக்ஸ் அவர்கள், "பத்துக் கட்டளைகளை அறிவித்த, சீனாய் மலையின் கொடுமுடியிலிருந்து புறப்பட்ட இடிமுழக்கங்கள், கலிலேயாவின் மலையிலிருந்து, பாக்கியங்கள் பெறத்தேவையான தேவபக்தியை அறிவித்த இயேசுவின் மென்மையான வார்த்தைகளுக்கு, மனதில் பதியக்கூடிய நேரெதிர் வடிவத்தைக் கொண்டுள்ளன" என்று எழுதினார்.[1]

இருப்பினும் மத்தேயு 5ஐப் பற்றிய நமது வாசிப்பை நாம் தொடருகிறபோது, பத்துக் கட்டளைகளில் வேறு எதுவும் மேற்கோள் காண்பிக்கப்படுவதை நாம் கண்டறிவதில்லை. மாறாக நாம், பழைய ஏற்பாட்டின் மற்ற மேற்கோள்களையும் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் தொகுப்புரைகளையும் நாம் கண்டறிகிறோம். பழைய ஏற்பாட்டிற்கு முற்றிலும் எதிரான ஒரு கூற்றைக்கூட நாம் கண்டறிகிறோம்: "உன் சத்துருவைப் பகைப்பாயாக" (வசனம் 43).

சீனாய் மலையில் தரப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும் இயேசுவின் மலைப் பிரசங்கத்திற்கும் இடையில் நேரெதிர்க்கருத்து எதுவும் இருப்பதில்லை. அதற்குப்பதிலாக, பழைய ஏற்பாடு போதித்ததைப் பற்றி மக்கள் என்ன *நினைத்தனர்* என்பதற்கும் தேவன் தமது கட்டளைகளைக் கொடுத்ததில் உண்மையில் அவரது நோக்கம் என்னவாக இருந்தது என்பதற்கும் இடையில்தான் நேரெதிர் கருத்து உள்ளது. குறிப்பாக, நியாயப்பிரமாணம் பற்றி வேதபாரகரும் பரிசேயரும் என்ன கூறினர் என்பதற்கும் (வசனம் 20) தேவனுடைய தோற்றக்கால விருப்பநோக்கம் என்னவாக இருந்தது என்பதற்கும் இடையில்தான் நேரெதிர்க் கருத்து இருந்தது.

குறிப்பு

[1]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 9.

3

இயேசு, பழைய ஏற்பாடு மற்றும் நீங்கள்

(மத்தேயு 5:17-20)

மலைப் பிரசங்கத்தின் புதியதொரு பகுதிக்கு நாம் வந்துள்ளோம் (5:17-48). பாக்கியங்களின் பகுதியில் (5:3-12), படர்க்கைப் பெயர்ச்சொல்[1] மேலாதிக்கம் கொண்டிருந்தது: ''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் *அவர்களுடையது*'' (வசனம் 3; என்னால் வலியுறுத்தப்படுகிறது). எட்டாவது பாக்கியத்தை இயேசு விரிவாக்கியபோது, அவர் *முன்னிலைப் பெயர்ச்சொல்லுக்கு* மாறினார்: "என்னிமித்தம் *உங்களை* நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் *உங்கள்பேரில்* பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்*களாயிருப்பீர்கள்*'' (வசனம் 11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). முன்னிலைப் பெயர்ச்சொல், செல்வாக்கின் மீதான பகுதி முழுவதிலும் தொடர்ந்தது (வசனங்கள் 13-16): "*நீங்கள்* பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"; "*நீங்கள்* உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (வசனங்கள் 13அ, 14அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மூன்றாவது பகுதியில் (வசனங்கள் 17-48) முன்னிலைப் பெயர்ச்சொல் ("நீங்கள்") தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது, ஆனால் *தன்மைப் பெயர்ச்சொல்* ("நான்") என்பதன் மீது வலியுறுத்தம் உள்ளது. இதன் திறப்புக்கூறை வாசியுங்கள் (வசனங்கள் 17-20), அதில் "நான்" என்ற வார்த்தை எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது என்பதைக் காணுங்கள்: "வந்தேன்," "அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்," "உங்களுக்குச் சொல்லுகிறேன்," மற்றும் இன்னொரு "உங்களுக்குச் சொல்லுகிறேன்."

மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் இயேசுவுக்குள்ள உறவு (மற்றும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை யூதர்கள் தவறாகப் பயன்படுத்துதல்) என்பதே மத்தேயு 5:17-48 வசனப் பகுதியின் கீழ் மறைந்திருக்கும் ஆய்வுக்கருத்தாக உள்ளது. இந்த வசனப்பகுதி ஒரு அறிமுகக் கூறுடன் தொடங்கி (வசனங்கள் 17-20), அதைத் தொடர்ந்து, அறிமுகத்தில் விளக்கப்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கான, ஐந்து அல்லது ஆறு விவரிப்புகள்[2] அல்லது உதாரணங்களைக் கூறுவதாக உள்ளது. இந்தப் பாடத்தில் நாம், திறவு வார்த்தைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம். தொடர்ந்து வரும் பாடங்களில் நாம், உதாரணங்களைப் படிப்போம்.

தேவனுடைய வசனத்தை இயேசு மதித்தார் (5:17, 18)

வசனம் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது (வசனம் 17)

நமது வேதபாட வசனப் பகுதியானது, "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்" என்று இயேசு கூறியதுடன் தொடங்குகிறது (வசனம் 17அ). "நியாயப்பிரமாணம்" மற்றும் "தீர்க்கதரிசனங்கள்" என்பவை, பழைய ஏற்பாடு என்று நாம் அழைக்கும் யூதத்துவதத்தின் இருபிரிவுகளாக இருந்தன.[3] இவ்விரு சொற்றொடர்களும் சிலவேளைகளில் பழைய ஏற்பாடு முழுவதையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன (பின்வருபவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும்:மத்தேயு 7:12; 11:13; 22:40; யோவான் 1:45; நடபடிகள் 24:14; 28:23), மற்றும் இங்கு இவைகள் இவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. "அழிக்கிறதற்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (kataluo என்ற[4]) வார்த்தை, "நீக்குதல்," "செல்லாததாக்குதல்" மற்றும் "மதிப்பற்றதாக்குதல்" என்பவை உட்படப் பலவகையான சாத்தியக்கூறுள்ள அர்த்தங்களைக் கொண்டுள்ளது. KJV வேதாகமத்தில் "destroy" என்றுள்ளது.[5]

இயேசு நியாயப்பிரமாணத்தையோ அல்லது தீர்க்கதரிசனத்தையோ அழிக்கிறதற்கு வரவில்லை என்று கூறுவது அவசியம் என்று ஏன் நினைத்தார்? அவர் ஒரு *பொதுவான* நோக்கத்தைக் கொண்டிருக்கலாம். இயேசுவைப் பற்றிய விமர்சனம் ஏற்கனவே பரவியிருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இயேசுவுக்கும் யூதத்துவ மதத்தலைவர்களுக்கும் இடையில் முன்பே நடைபெற்றதாக எந்த ஒரு வழக்காடுதல் பற்றியும் மத்தேயு பதிவு செய்யவில்லை, ஆனால் அவர் ஓய்வுநாளின் பாரம்பரியம் பற்றி ஏற்கனவே வாதத்தில் ஈடுபட்டிருந்தார் என்று மற்ற சுவிசேஷ விபரங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன (காண்க மாற்கு 2:24; யோவான் 5:16, 18). அந்த நிகழ்ச்சிகள் இதற்குப் பின்பு நடைபெறுவையாக இருப்பினும், மதத்தலைவர்களுடன் இயேசு போராடி, மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணிக்கும்படி மக்களை ஊக்குவித்தார் என்று விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ அவர் குற்றம் சுமத்தப்படவிருந்தார். ஆகவே இயேசுவின் ஊழியத்தின் தொடக்ககாலத்திலேயே, நியாயப்பிரமாணத்தைப் பற்றிய தமது நிலைப்பாட்டை அவர் தெளிவாக உரைத்தல் அவசியமாக இருந்தது.

இயேசு நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை என்பதை வலியுறுத்துதலில் இயேசுவின் *உடனடியான* நோக்கம் இருந்தது என்பது கூடுதலான கருத்தாகும். திகைக்கச் செய்யும் கூற்றுக்களை, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு இயேசு மதிப்பெதுவும் தரவில்லை என்று அர்த்தப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளக்கூடும் கூற்றுக்களை வரிசையாக அவர் கூறவிருந்தார். அந்தக் கூற்றுக்களைக் கூறும் முன்பு, அவர் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தின் மீது மிக உயர்வான மதிப்பை கொண்டிருந்தார் என்பதை நிலைநாட்ட அவர் விரும்பினார்.

அது இன்னொரு கேள்வியை தூண்டுகிறது: மோசேயின் நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்கு இயேசு வரவில்லை என்று அவரே

கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? சிலர் இதை, மோசேயின் நியாயப்பிரமாணம் தனது நித்தியத்துவமான தன்மையில் இன்றைய நாட்களிலும் அமலில் உள்ளது என்று போதிப்பதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்கின்றனர் - ஆனால் பல வேதவசனங்கள் இதற்கு எதிரான கருத்தையே சுட்டிக்காண்பிக்கின்றன. எடுத்துக்காட்டாக, எபிரெயர் 9ம் அதிகாரம் "*முதலாம்* உடன்படிக்கையைப்" பற்றிப் பேசுகிறது, மற்றும் அதன்பின்பு அந்த அதிகாரம், இயேசு "*புது* உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (வசனங்கள் 1, 15; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறுகிறது. இரு உடன்படிக்கைகள் பற்றி மேலும் குறிப்பிடும் அடுத்த அதிகாரம், "இரண்டாவதை *நிலைநிறுத்துவதற்கு* முதலாவதை *நீக்கிப்போடுகிறார்*" என்று கூறுகிறது (10:9ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுல் பின்வருமாறு எழுதினார்:

> எப்படியெனில், அவரே [இயேசுவே] நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதிகளையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் [மோசேயின் நியாயப்பிரமாணத்தை] தகர்த்து, சட்டதிட்டங்களாகிய *நியாயப்பிரமாணத்தைத்* தம்முடைய மாம்சத்தினாலே [சிலுவையின்மீது] *ஒழித்து*[6], இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதிகளையும்] தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி (எபேசியர் 2:14, 15; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இயேசு நியாயப்பிரமாணத்தை அழிக்கத் தாம் வரவில்லை என்று கூறினார், ஆனால் அவர் நியாயப்பிரமாணத்தை ஒழித்தார் என்று பவுல் கூறினார். இவ்விரு கூற்றுக்களும் எவ்வாறு ஒப்புரவாக்கப்பட முடியும்? நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களைப் பின்வரும் மூன்று வகைகளாகப் பிரிப்பதன் மூலம் முரண்பாடாகத் தோன்றும் இக்கூற்றுகளை ஒப்புரவாக்க முயற்சி செய்கின்றனர்: சடங்காச்சார ரீதியானவை, சட்ட ரீதியானவை[7] மற்றும் ஒழுக்க ரீதியானவை. இந்த அணுகுமுறையை முன்மொழிபவர்கள், சடங்காச்சார ரீதியான பிரமாணங்களும் சட்டரீதியான பிரமாணங்களும் அழிக்கப்பட்டு விட்டன, ஆனால் ஒழுக்க ரீதியான பிரமாணங்கள் அழிக்கப்படவில்லை என்று கூறுகின்றனர். அவர்கள், மத்தேயு 5:17ல் *ஒழுக்க ரீதியான* பிரமாணங்களை அழிக்க வரவில்லை என்று மாத்திரமே இயேசு அர்த்தப்படுத்தினார் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த அணுகுமுறையில் பல பிரச்சனைகள் உள்ளன. மோசேயினுடைய நியாயப் பிரமாணத்தின் மூன்று பகுதிகளாக முன்மொழியப்பட்டவை யூதர்களும் தொடக்க காலக் கிறிஸ்தவர்களும் அறிந்திராத ஒன்றாக இருந்தது என்பது ஒரு பிரச்சனையாகும்.[8] இயேசு, *ஒழுக்க ரீதியான சட்டத்தை* அழித்துப் போடுதல் பற்றி எதுவும் கூறவில்லை என்பது இரண்டாவது பிரச்சனையாக உள்ளது. நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்கு அவர் வரவில்லை என்று அவர் கூறினார். 18ம் வசனத்தில் இயேசு, ஒரு சிறு எழுத்து, ஒரு எழுத்தின் உறுப்பு உட்பட, நியாயப்பிரமாணம் "முழுவதையும்" தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பித்தார்.

மூன்றாவது பிரச்சனை ஒன்று பின்வருவதைப் போன்று விளக்கப்படுத்தப்

படலாம்: நியாயப்பிரமாணத்தில் ஒன்று, சடங்காச்சார ரீதியானதா, சட்ட ரீதியானதா அல்லது ஒழுக்க ரீதியானதா என்று முடிவு செய்யும் உரிமையைக் கொண்டிருப்பது யார்? மூன்று வகைகளை முன்மொழிபவர்களில் பலர், பத்துக் கட்டளைகளே ஒழுக்க ரீதியான சட்டங்களாக பழைய ஏற்பாட்டில் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது என்று பேசுகின்றனர். விஷயம் அவ்வாறு இருந்தால் மற்றும் ஒழுக்கரீதியான அந்தப் பிரமாணங்கள் இன்னமும் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன என்றால், நாம் வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதற்குப் பதிலாக ஏழாம் நாளை ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். ஒரு மதக்குழு பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் ஆசரிப்பைத் தக்க வைக்க உரிமை கொண்டுள்ளது என்றால், பழைய ஏற்பாட்டின் இன்னொரு நடைமுறையை வேறொரு மதக்குழு தக்கவைத்துக் கொள்ளக் கூடாது என்று கூறும் உரிமையைக் கொண்டிருப்பது யார்? மூன்று வகை உள்ளது என்ற அணுகுமுறை, அது தீர்த்து வைப்பதைக் காட்டிலும் அதிகமான பிரச்சனைகளை உருவாக்குகிறது.

முரண்பாடாகத் தோன்றும் இவ்விஷயத்திற்கான தீர்வானது, மத்தேயு 5:17-20ல் இயேசு கூறிய *எல்லாவற்றையும்* கவனமாக ஆழ்ந்து சிந்தித்தலில் காணப்படுகிறது. அவரது திறவு வாக்கியம் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (வசனம் 17ஆ). "நிறைவேற்றுகிறதற்கே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*pleroo* என்பதில் இருந்து வந்துள்ள) கிரேக்க வார்த்தை "நிரப்ப, முழுமையாக்க" என்ற அடிப்படை அர்த்தம் கொண்டுள்ளது.[9] 17ம் வசனத்தில் அர்த்தத்தின் பல சாயல்கள் சாத்தியமாக உள்ளன. இது பின்வருமாறு புரிந்து கொள்ளப்பட முடியும்:

1. "*நிறைவேற்ற* = செய்தல், செயல்படுதல்"
   அல்லது
2. "*முழு விளக்கத்திற்குக் கொண்டுவருதல்* = அதன் உண்மை அர்த்தத்தை முன் காண்பித்தல்"
   அல்லது
3. *நிரப்புதல்* = முழுமையாக்குதல்."[10]

நம்மை நாம் (திறவுக் கூற்றைத் தொடர்ந்து வரும் உதாரணங்கள் என்ற) சந்தர்ப்பப் பொருளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொண்டால், மேலே பட்டியலிடப்பட்டவற்றில் மத்தியில் உள்ளது மாத்திரமே, "நிறைவேற்றுதல்" என்பதன் முதன்மை அர்த்தமாகக் காணப்படும்: [நியாயப்பிரமாணத்தை] "முழு வெளிப்பாட்டிற்குக் கொண்டுவருதல்," "அதன் உண்மையான [அர்த்தத்தில்] அதை காண்பித்தல்." எடுத்துக்காட்டாக, 27 மற்றும் 28ம் வசனங்களில் இயேசு, "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று" என்று கூறினார். பாவத்தை விளக்கப்படுத்துதல், வெளிப்படுத்துதல், கண்டனம் பண்ணுதல் மற்றும் [அதைச்

செய்வதற்கான] உற்சாகத்தை இழக்கச்செய்தல் என்பவை நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தில் உள்ளடங்கியிருந்தன (காண்க கலாத்தியர் 3:19அ).[11] "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" என்ற கட்டளை விபசாரம் செய்வதை ஊக்கம் இழக்கச் செய்வதாக இருந்தது. விபசாரம் செய்தல் என்பது தவறானதாக உள்ளதென்றால், விபசாரத்திற்கு வழிநடத்தும் செயலும் தவறானதாகவே உள்ளது என்பதைப் பலர் உணர்ந்து அறியவில்லை. இதை இயேசு, மத்தேயு 5:27, 28ல் தெளிவாக்கினார். ஆகவே ஒரு கருத்தில், அவர் விபசாரம் பற்றிய கட்டளையை அதன் முழு வெளிப்பாட்டிற்குக் கொண்டுவந்தார்.

எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டியவை (வசனம் 18)

இருப்பினும் "நிறைவேற்றுதல்" என்பதன் ஒரு விளக்கத்துடன் நம்மை நாம் வரையறைப்படுத்திக் கொள்ள இயலாது. 18ம் வசனத்தைக் கண்ணோக்குங்கள்: "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." நான், இந்த வாக்கியத்தின் முடிவில் உள்ள சொற்றொடரின் மீது கவனத்தைக் குவிக்க விரும்புகிறேன், ஆனால் முதலில் இவ்வசனத்தின் மற்ற சொற்றொடராக்கத்தைச் சுருக்கமாக விளக்க என்னை அனுமதியுங்கள்:

- "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும்" என்பது கற்பனைசெய்ய இயலாத சிலவற்றிற்கான மரபுச் சொற்றொடராக இருப்பதைக் காட்டிலும் காலத்திற்கான திட்டவட்டமான ஒரு குறிப்பாக இருத்தல் என்பதில் குறைவுபடுகிறது.[12] இவ்வார்த்தைகளை இதன் இணைவசனப் பகுதியான லூக்கா 16:17ல் உள்ள பின்வரும் சொல்விளக்கத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்: "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்." வானமும் பூமியும் ஒழிந்துபோகும் வரையில் மோசேயின் நியாயப்பிரமாணம் செயல்விளைவில் இருக்கும் என்று இயேசு கூறவில்லை. மாறாக, நியாயப்பிரமாணம் "நிறைவடைந்து" மற்றும் "அதில் உள்ள யாவையும் நிறைவேறும்" *வரையில்* அது ஒழிக்கப்பட *இயலாது* என்றே அவர் வலியுறுத்தினார்.
- "நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம்" என்பது - இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகையில் இச்சொற்றொடர் - முந்திய வசனத்தின் "நியாயப்பிரமாணம்" மற்றும் "தீர்க்கதரிசனம்" என்பதுடன் இணையாக உள்ளது. இது பழைய ஏற்பாடு முழுவதையும் குறிக்கிறது.
- "அதில் ஒரு சிறு எழுத்தாகிலும்" என்பது, கிரேக்க அகரவரிசையில் உள்ள (i, என்ற) மிகச்சிறிய எழுத்தாகிய (iota) என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இங்கு அனேகமாக, எபிரெய அகரவரிசையில் உள்ள yod என்ற மிகச்சிறிய எழுத்திற்கான நோக்கங்கொண்ட குறிப்பு உள்ளது எனலாம்.[13] "ஒரு எழுத்தின் உறுப்பாகிலும்"[14] என்று மொழிபெயர்க்கபட்டுள்ள வார்த்தையானது ("கொம்பு" அல்லது "சுழி" என்று தமிழில் கூறப்படுகிறது) keraia என்பதற்கான வார்த்தையாக உள்ளது. இந்தச் சொற்றொடர், "ஒரு

எபிரெய எழுத்தை இன்னொரு எபிரெய எழுத்தில் இருந்து வேறுபடுத்தும் சிறு சுழி அல்லது கொம்பு என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது."[15] இவ்விரு சொற்றொடர்களும் பழைய ஏற்பாட்டு வெளிப்படுத்துதலில் மிகமிகச் சிறிய பகுதியைக் குறிக்கின்றன. இயேசுவின் வார்த்தைகள் பின்வருமாறு பொழிப்புரை செய்யப்பட்டிருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்: "நியாயப்பிரமாணம் நிறைவேறித் தீரும் வரையில், அதில் உள்ள ஒரு (i) *என்ற எழுத்தின் ஒரு புள்ளியாவது அல்லது ஒரு* (t) *என்ற எழுத்தின் குறுக்குத் கோடாவது ஒழிந்துபோகாது."*

- *"மெய்யாகவே" என்பது (amen, என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது "இயேசுவின் சொந்தக் கையெழுத்தாக உள்ளது: வேறு எந்தப் போதகரும் இதைப் பயன்படுத்தியிருப்பதாக அறியப்படவில்லை. மத்தேயு இதை 31 முறைகள் பதிவு செய்துள்ளார், யோவான் (இரட்டை ஆமென் என்பதுடன்) இதை 25 முறைகள் பதிவுசெய்துள்ளார். இது ... ஒரு கூற்றானது முக்கியமானதாகவும் அதிகாரத்துவம் உடையதாகவும் உள்ளதைக் குறிக்கிறது."[16] "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது 5ம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதிக்கான திறவுகோல் குறிப்பாக உள்ளது (வசனங்கள் 22, 26, 28, 32, 34, 39, 44).*

அது நம்மை ''எல்லாம் நிறைவேறுமளவும்'' என்ற நிபந்தனைச் சொற்றொடருக்குக் கொண்டு வருகிறது. "நிறைவேறுதல்" என்பது பொதுவான கிரேக்க வினைச் சொல்லாகிய *ginomai* ("நான் ஆகிறேன்"[17]) என்பதன் (ஒருமுறை மாத்திரம் நடந்த) கடந்த கால வினைச் சொல்லில் இருந்து வந்துள்ளது. "எல்லா விஷயங்களும் இருக்க வரும் வரையிலும்" என்பதே இதன் கருத்தாக உள்ளது. KJV மற்றும் NKJV வேதாகமங்கள், எல்லாம் "நிறைவேற்றப்பட்டு" ("fulfilled") இருக்கும் விஷயங்களைக் குறிக்கின்றன, அதே வேளையில் மற்ற மொழிபெயர்ப்புகள் ''நிறைவேற்றப்பட்டு'' (''accomplished'') என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன (ASV; NASB; RSV; NIV). "Accomplished" என்ற வார்த்தை, 17ம் வசனத்தின் "நிறைவேறுதல்" என்பதை உள்ளடக்குகிறது, ஆனால் இது இன்னும் அதிகமானவற்றைக் கொண்டுள்ளது. நியாயப்பிரமாணம் குறித்த *எல்லா* விஷயங்களும் ''நிறைவேற்றப்பட்டு'' முடியும் வரையிலும் மோசேயின் நியாயப்பிரமாணம் அமலில் இருக்க வேண்டியதாயிற்று. அது எப்போது மற்றும் எவ்வாறு நடந்தது? பழைய ஏற்பாட்டு வெளிப்படுத்துதலைப் பொறுத்தமட்டில், எல்லா விஷயங்களும் *இயேசுவின்* மூலமாக - ஏற்கனவே கருத்துத் தெரிவிக்கப்பட்டபடி, ஒருபகுதி அவரது போதனையின் மூலமாகவும், ஆனால் முழுமையும் அவரது நபர்த்துவத்தின் மூலமாகவும் - நிறைவேற்றப் பட வேண்டியதாக இருந்தது. நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கங் கொண்டிருந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா விஷயங்களையும் பலன் தருவதாக்குதல் என்பது இயேசு இந்த பூமிக்கு வந்ததற்கான ஒரு காரணமாக இருந்தது.

இயேசு நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்தார் என்ற வகையில் அவர் அதை நிறைவேற்றினார். (அவர் ஒருவரே எல்லாக்காலத்திலும் அதைச் செய்த ஒரே நபராக இருந்தார்.) அவர் "நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்த"

ஒரு யூதராகவும் அதன் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்பட்டவராகவும் இருந்தார் (கலாத்தியர் 4:4). மனிதரால் ஏற்படுத்தப்பட்ட யூதத்துவப் பாரம்பரியங்களுக்கு அவர் சிறிதளவே மதிப்புக் காண்பித்தவராக இருந்தார், ஆனால் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு அவர் [இயேசு] அதிகபட்ச மதிப்பைக் காண்பித்தார். தேவனுடைய சித்தத்தைச் செய்தல் குறித்த அவரது எண்ணப்போக்கானது, அவர் ஞானஸ்நானம் பெற்றபோது அவர் உரைத்த வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "... இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத்தேயு 3:15). நியாயப்பிரமாணம் எவ்வகையான வாழ்வை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கம் கொாண்டிருந்ததோ, அவ்வகையான வாழ்வை அவர் செயல்விளக்கப்படுத்தினார். அவர் விசாரணையில் இருந்தபோது, அவர் கடைப்பிடிக்கத் தவறியதாக எந்த ஒரு கற்பனையையும் எவரொருவரும் சுட்டிக்காண்பிக்க இயலாதிருந்தது (காண்க மாற்கு 14:55-59).

இயேசு நியாயப்பிரமாணத்தில் உள்ள வகைகளின் (நிழல்களின்) எதிர்வகையாக இருந்தார் என்ற வகையில் அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார் (காண்க கொலோசெயர் 2:16, 17; எபிரெயர் 8:4, 5; 10:1) *மற்றும் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகவும் அவர் இருந்தார்* (காண்க லூக்கா 24:27).[18] அவர் "காலம் நிறைவேறிற்று" என்ற செய்தியோடு தமது சொந்த ஊழியத்தைத் தொடங்கினார் (மாற்கு 1:15). பூமியில் அவர் செய்த ஊழியத்தைக் குறித்து, இது அல்லது அது, "தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது" (மத்தேயு 1:22; காண்க 2:23; 3:3; 4:14) என்று நிலையாக உரைக்கப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு, பாவம் மற்றும் அதற்குரிய தண்டனை என்ற பிரச்சனைக்குத் தாமே தீர்வைக் கொண்டுவந்தார் என்ற வகையில், அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார். நியாயப்பிரமாணம் என்பது, பாவத்தின் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுத்தது, ஆனால் அது பாவத்தைக் குறித்து ஏதொன்றையும் செய்ய வல்லமையற்றதாக இருந்தது (காண்க ரோமர் 8:3). இயேசு சிலுவையில் மரித்துபோது, அவர் நமது பாவங்களுக்கான தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்டார் (காண்க 2 கொரிந்தியர் 5:21; கலாத்தியர் 3:13). "முடிந்தது!" என்பதே சிலுவையின் மீது அவரது கடைசிக் கதறலாக இருந்தது (யோவான் 19:30). அவரது வாழ்வு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலத்தின் பாவங்களுக்காகப் பலியாகச் செலுத்தப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 15:3) என்ற அவரது ஊழியமும் அப்போது முடிந்தது.

ஆகவே இயேசு, முன்பு குறிப்பிடப்பட்ட இரு கருத்துக்களில் நியாயப்பிரமாணத்தை "நிறைவேற்றினார்": "*நிறைவேற்ற* = செய்தல், செயல்படுதல்" மற்றும் "*நிரப்புதல்* = முழுமையாக்குதல்." அவர் இந்த மூன்று கருத்துக்களிலும் நியாயப்பிரமாணத்தை "நிறைவேற்றிய" போது, "*எல்லாம் நிறைவேற்றப்பட்டது*." நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் என்ற வகையில், பழைய உடன்படிக்கையானது அப்போது சட்டப்பூர்வமாக விலக்கப்பட்டு அவரது புதிய உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது. பவுல், "நியாயப்பிரமாணம் ... வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு ..." என்று எழுதினார் மற்றும் அந்தச் "சந்ததி" கிறிஸ்துவே என்றும்

அவர் தெளிவாக்கினார் (கலாத்தியர் 3:19, 16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மீண்டுமாகப் பவுல், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" என்று கூறினார் (கலாத்தியர் 3:24, 25). ஹரோல்ட்ஃபவ்லர் என்பவர் நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதினார்:

> ... எல்லா விஷயங்களும் (உண்மையாகவோ அல்லது வலிவார்ந்த வகையிலோ) ஏற்கனவே இயேசுவினால் நிறைவேற்றப்பட்டிருந்தன, ஏனெனில் அவர் தமது வாழ்வு, செய்தி, பாடுகள், மகிமைப்படுதல், சபை அல்லது தமது மகிமையைத் திரும்பப் பெறுதல் என்ற எல்லாவற்றையும், தேவனுடைய [பழைய ஏற்பாட்டு] முன்னறிவித்தல்கள் மற்றும் தர அளவைகள் ஆகியவற்றின் எல்லாக் கொள்கைகளையும் நிறைவேற்றும் வகையில் இயக்கத் தொடங்கியிருந்தார்.[19]

இயேசு பழைய உடன்படிக்கையை "நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்த" போது (கொலோசெயர் 2:14), அதை அவர் "தம்முடைய மாம்சத்தினாலே" ஒழித்தார் (எபேசியர் 2:15) அதே வேளையில் - அவரது மரணத்தில் - அவரது புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தது (காண்க எபிரெயர் 9:15-17).

யாரேனும் ஒருவர், "ஒரு நிமிடம் பொறுங்கள்! இயேசு பழைய ஏற்பாட்டை அழிக்க வரவில்லை, அவர் அதை நிறைவேற்றவே வந்தார் என்று நீங்கள் கூறினீர்கள். ஆனால் இப்போது நீங்கள், இயேசு பழைய ஏற்பாட்டை நிறைவேற்றியபோது அது அழிக்கப்பட்டது என்று கூறுகிறீர்களே. இது எனக்கு அதே விளைவாக இருப்பதைப் போன்றே ஒலிக்கிறது, எனவே இது ஏற்படுத்துகிற வேறுபாடு என்ன?" என்று கூறி மறுதலிக்கலாம். *தேவனுடைய வசனம் குறித்த ஒருவரின் எண்ணப்போக்கே* வேறுபாடாக உள்ளது, அது மிகவும் முக்கியமான வேறுபாடாக உள்ளது.

நீங்களும் நானும் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொள்வதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த ஒப்பந்தத்தில் நான் உங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தித் தீர்க்கப்படும் வரையிலும், ஒவ்வொரு மாதமும் [உங்களால்] "செய்யப்படும் வேலைகளுக்காக" ஒரு தொகை செலுத்த ஒப்புக் கொள்கிறேன். இப்போது பின்வரும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற நான் நோக்கங் கொண்டிருக்கவில்லை என்றும், அந்த ஒப்பந்தத்தை இல்லாமல் போகும்படி செய்வதற்கு என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்வேன் என்றும் நான் அறிவித்தால் என்னவாகும்? ஒருவேளை நான் உங்களிடம் வந்து கண்களுக்கு முன்பாக அந்த ஒப்பந்தப் பத்திரத்தைக் கிழித்துகூடப் போடலாம். இது என்னைப் பற்றிக் கூறுவது என்ன? இது உங்களுக்கும் நாம் ஒப்புக்கொண்ட விஷயத்திற்கும் எவ்வகையான மதிப்பைக் காண்பிக்கும்?

இப்போது இரண்டாவது காட்சியொன்றைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒரு ஒப்பந்தத்தை நான் முறித்துவிட நோக்கங் கொண்டிருப்பதாக வதந்தியொன்று பரவுகிறது, எனவே நான் உங்களிடம் வந்து, நமது ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் நான் எல்லாவகையிலும் விருப்ப

நோக்கம் கொண்டுள்ளேன் என்று உங்களிடம் வாக்களித்திருந்த ஒவ்வொரு பைசாவையும் செலுத்துகிறேன். இந்த இரு காட்சிகளையும் மனதில் வைத்துக் கொண்டு, பின்வருவதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: நான் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிறபோது, அது என்னைக் கட்டுப்படுத்துதலை விட்டொழிக்கிறது. ஆகவே இவ்விரு விஷயத்திலும் முடிவு விளைவு ஒன்றாகவே உள்ளது, அல்லது குறைந்தபட்சம் ஒன்றுபோல உள்ளது. நான் பணம் செலுத்துதலை [கடைசியில்] நிறுத்தி விடுகிறேன். இருப்பினும், எனது எண்ணப்போக்கில் மிகப்பரந்த வேறுபாடு ஒன்றை நீங்கள் காண முடிவதில்லையா? முதல் நிகழ்வில், நான் நமது ஒப்பந்தத்திற்கு மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் இரண்டாவது நிகழ்வில் நான் அதற்கு மிகப்பெரிய மதிப்பைக் கொண்டிருக்கிறேன்.

பழைய ஏற்பாடு, நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கையான பின்பு, அது தேவனுடைய மக்களைக் கட்டுப்படுத்துவதை விட்டொழித்திருக்கும். இருப்பினும் அதே வேளையில், அதன் மீது தாம் [இயேசு] மிகப்பெரும் மதிப்புக் கொண்டிருந்ததை ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார். தேவனுடைய நியாயப்பிரமாணம் என்பது அவரது இயல்பின் விளக்கமாக இருக்கிறது.[20] ஒருவர் தேவனை மதித்துக் கொண்டே அவரது நியாயப்பிரமாணத்தை மதிக்காது இருக்க இயலாது. ஆகவே இயேசு அதன் [நியாயப்பிரமாணத்தின்] நிபந்தனைகளை நிறைவேற்றத் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார்.

தேவனுடைய வசனத்தை நாம் மதிக்க வேண்டும் (5:19, 20)

மோசமான மற்றும் நல்ல உதாரணங்கள் (வசனம் 19)

இயேசு, தமது உரையைக் கேட்டவர்கள் யாவரும் தம்மைப் போன்றே தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மதிக்க வேண்டும் என்று ஊக்குவித்தார். நமது வேதபாட வசனப்பகுதியின் 19ம் வசனத்தில் அவர் பின்வருமாறு தொடர்ந்து கூறினார்,

> ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.

''மீறி'' என்பது 17ம் வசனத்தில் ''அழிக்கிறதற்கு'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையின் வேர்வார்த்தையில்[21] இருந்து வந்துள்ளது. KJV வேதாகமத்தில் 19ம் வசனத்தில் "break" என்றுள்ளது. ஒருவர் நியாயப்பிரமாணத்தை வேண்டுமென்றே மீறுவதன் மூலம் அதற்கு மதிப்பின்மையைக் காண்பிக்கும்போது, அவர் தமக்கு நியாயப்பிரமாணம் முக்கியமற்றது என்று செயல் விளக்கப்படுத்துகிறார். அவரது செயல்களினால் அவர் அதை "அழித்துள்ளார்."

"இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும்"

என்ற சொற்றொடருக்குச் சில விளக்கங்கள் தேவைப்படலாம். மோசேயின் நியாயப்பிரமாணத்தில், யூத ரபீக்கள் 613 சட்டங்களை எண்ணிக் கணக்கிட்டு இருந்தனர். அந்த 613 சட்டங்களையும் நினைவில் வைத்துக்கொள்வதே கடினமாக இருந்தது, அவற்றைக் கடைப்பிடித்தல் என்பது இன்னும் அதிக கடினமாக இருந்தது, எனவே அவர்கள் அந்த சட்டங்களை, "கனத்த" ("கனமான," "பெரிய") மற்றும் "இலேசான" ("குறைவான") சட்டங்கள் என்று பிரித்திருந்தனர். அவர்கள் "கனத்தவை," "கனமானவை" அல்லது "பெரியவை" என்று அழைத்த சட்டங்களை வலியுறுத்தினர். சொற்றொடராக்கத்தின் அவ்வகையை இயேசு, பரிசேயர்களிடத்தில், "நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" என்று கூறியபோது பயன்படுத்தினார் (மத்தேயு 23:23). இது, "போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது" என்று கேட்ட நியாயசாஸ்திரியின் சிந்தனைக்குப் பின்னால் உள்ள வகையாக இருந்தது (மத்தேயு 22:35; காண்க 35-40). இயேசு, "இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றை" பற்றிப் பேசியபோது அவர், தமது உரையைக் கேட்டவர்கள் "இலேசானது" அல்லது "குறைவானது" என்று பண்புபடுத்தி இருக்கக் கூடிய எந்த ஒரு கட்டளையையும் குறிப்பிட்டார். செயல்விளைவில் அவர், தேவனுடைய எல்லா கட்டளைகளும் முக்கியமானவையாக உள்ளன மற்றும் அவற்றில் எதையும் நாம் தெரிந்தே மீறக்கூடாது என்று கூறினார்.

ஒரு சில ஆண்டுகளில் மோசேயின் நியாயப்பிரமாணம் இயேசுவின் சொந்த போதனையினால் மேற்கொள்ளப்படுவதாக இருந்தபோது அவர், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் பற்றி ஏன் இவ்வளவு வலியுறுத்தினார் என்று சிலர் வியப்படைகின்றனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தை மதிக்காதவர்கள் இயேசுவின் கட்டளைகளையும் மதிக்க மாட்டார்கள் என்பது ஒரு காரணமாக இருந்தது.[22] கீழ்ப்படியாமை என்ற பழக்கமானது புதிய உடன்படிக்கைக்கும் எடுத்துச் செல்லப்படுவதாக இருக்கும்.

இயேசு, "இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும்" தங்கள் செயல்களால் மீறுபவர்களை மாத்திரமல்ல, ஆனால் "மற்றவர்களும் அவ்வாறே செய்யும்படி" போதித்தவர்களையும் கண்டனம் பண்ணினார். ஒருவர் நியாயப்பிரமாணத்தின் சட்டம் ஒன்றைத் தெரிந்தே மீறுகிறபோது, அவர் பொதுவாகத் தமது செயல்களை நியாயப்படுத்த முயற்சி செய்கிறார். அவர், "அந்தச் சட்டம் எந்தக் கருத்தையும் ஏற்படுத்துவதில்லை, எனவே நாம் அதற்குக் கீழ்ப்படிகிறோமா இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல" என்று கூறலாம். அவர், உதாரணத்தினாலும் வார்த்தையினாலும், மற்றவர்களும் அந்தச் சட்டத்தை மீறும்படி போதிக்கிறார். இவ்வகையான தனிநபர் "பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்" என்று இயேசு கூறினார்.

அந்த உதாரணத்திற்கு நேர்மாறாக, கட்டளைகள் "பெரிதோ" அல்லது "சிறிதோ" அவற்றை "கடைப்பிடித்து போதிக்கிறவர்" இருக்கிறார். இவ்வகையான நபர், "பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" என்று இயேசு கூறினார். "பரலோக இராஜ்யம்" என்பது இயேசு, "சமீபித்திருக்கிறது" (4:17) என்று கூறிய இராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது - வேறு வார்த்தைகளில்

கூறுவதென்றால், "அவர் நிலைநாட்ட இருந்த சபையை" குறிப்பிடுகிறது.[23]

இராஜ்யத்தில் சிலர் "சிறியவர்கள்" என்றும் சிலர் "பெரியவர்கள்" என்றும் அழைக்கப்படுவர் என்பதாக இயேசு கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? R. T. ஃபிரான்ஸ் என்பவர், "நிறைவான பலன் அல்ல, சீஷத்துவத்தின் பண்பே இங்கு சிந்தனையாகும்" என்று கருத்துத் தெரிவித்தார்.[24] ஆச்சரியப்படத்தக்க நேரெதிர்க் கருத்திற்காக இந்தக் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன: *மிகச்சிறிய* கட்டளையை மீறுபவர் *சிறியவர்* என்று அழைக்கப்படுவார், ஆனால் அதற்கு நேரெதிராகச் செய்பவர் நேரெதிராக அழைக்கப்படுவார்: *பெரியவர்*. நாம் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், மற்றவர்களும் அதற்குக் கீழ்ப்படியக் கூடாது என்று போதிக்கும் ஒருவர் போதகர்களிலேயே "சிறியவராக" [மோசமானவராக] உள்ளார். அவ்வகையான நபரை சபையில் போதிக்கும்படி நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது. தேவனுடைய கட்டளையை கடைப்பிடித்து அதை மக்களும் கடைப்பிடிக்கும்படி போதிப்பவரே, தேவனுடைய பார்வையில் "பெரியவராக" இருக்கிறார். கர்த்தருடைய சபையில் நமக்கு இவ்வகைப்பட்ட போதகரே தேவை.

மிக மோசமான உதாரணங்கள் (வசனம் 20)

கட்டளைகளை மீறி, அதையே செய்யும்படி மற்றவர்களுக்குப் போதித்தவர்களைப் பற்றி இயேசு குறிப்பிட்டபோது அவர், போதகர்கள் என்று யூதர்கள் உயர்வாக மதித்திருந்த சிலரை நினைவூட்டப் பட்டார். கிறிஸ்துவின் அடுத்த வார்த்தைகள் அவர் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்குத் திகைப்பூட்டுவதாகவும் அதிர்ச்சியூட்டுவதாகவும்கூட இருந்திருக்கும்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி[25] அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20). "வேதபாரகர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*grammateus* என்ற) வார்த்தை அடிப்படையாக, "எழுதுகிற ஒருவர்" என்று அர்த்தப்படுகிறது (இது "எழுதப்பட்டுள்ள" என்பதற்கான *gramma* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது).[26] இயேசுவின் நாட்களில், வேதபாரகர்கள் என்போர் நியாயப்பிரமாணத்தைத் தொழில் முறையாகக் கற்ற மாணவர்களும் போதகர்களுமாக இருந்தனர்.[27] "பரிசேயர்" என்பது "பிரிக்கப்பட்டு" இருப்பவர் என்று சுட்டிக்காண்பிக்கும் கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.[28] பரிசேயர்கள் தங்களையே "பிரித்துக் கொண்டு," மோசேயின் நியாயப்பிரமாணத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சட்டரீதியான விதிகள் மற்றும் முறைமைகளையும் அதன் தொடர்பான பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பதற்குத் தங்களையே அர்ப்பணித்திருந்தனர். "வேதபாரகர், பரிசேயர்" ஆகியோரைப் பற்றி இயேசு குறிப்பிட்டபோது அவர், இஸ்ரவேல் மக்களினத்தில் மிகவும் கற்றறிந்த மற்றும் மிகவும் வைராக்கியம் கொண்டிருந்த தனிநபர்களைப் பற்றிப்பேசினார். அவர்கள், "தங்கள் சொந்த மதிப்பீட்டிலும் மக்களின் மதிப்பீட்டிலும், நீதியின் மாதிரிகளாக இருந்தனர்."[29] இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், "நமது நீதியானது அவர்களின் நீதியை விஞ்சி நிற்குதல் எவ்வாறு சாத்தியமாகும்?" என்று

ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

ஜான் R. W. ஸ்டாட் என்பவரின் கருத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். நமது நீதியானது வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் நீதியைக் காட்டிலும் அதிகமாக இருத்தல் என்பது "அளவு என்பதைக் காட்டிலும் வகையைப் பற்றியே அதிகமானதாக" உள்ளது. வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் 230 கட்டளைகளைக் கடைப்பிடித்தனர், எனவே நாம் 231 கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இயேசு கூறவில்லை. மாறாக "ஆழமானதாக, இருதயத்தின் நீதியில் உள்ளதாக" இருக்க வேண்டும் என்பதே நமது நீதிக்கான அவரது விருப்பமாக இருக்கிறது.[30]

இயேசு, வேதபாரகர் பரிசேயர் ஆகியோரின் நீதி என்று அழைக்கப்பட்ட விஷயத்தினுடைய வெறுமைத்தன்மையைப் பல வேளைகளில் வெளிப்படுத்தினார். லூக்கா 18:9-14ல் பரிசேயன் ஆயக்காரன் ஆகியோரைப் பற்றிய உவமையை நீங்கள் கண்ணோக்க முடியும், அல்லது மத்தேயு 23ல் இயேசுவின் புண்படுத்தும் கடிந்து கொள்ளுதலை நீங்கள் வாசிக்க முடியும். இருப்பினும் நீங்கள் மலைப்பிரசங்கத்தை விட்டு இன்னும் தூரமாகச் செல்வது அவசியமில்லை. அடுத்த அதிகாரத்தில் நீங்கள் "மாயக்காரரே" என்று வாசிக்கும் ஒவ்வொரு முறையும் (6:2, 5, 16), நீங்கள் "வேதபாரகர் பரிசேயர்" என்ற வார்த்தைகளைப் பதிலியாக அங்கு இடமுடியும் (மத்தேயு 23:13, 14, 15 ஆகிய வசனங்களை ஒப்பிடவும்).

மேலே கொடுக்கப்பட்ட மற்றும் பிற குறிப்புகளில் இருந்து நாம், வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் பகுதியில் பல தவறுகளை நாம் பட்டியலிட முடியும். அவர்கள் ஒழுக்கரீதியாக நேராக இருத்தலைக் காட்டிலும் சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்கள் பற்றி அதிக அக்கறை கொண்டிருந்தனர். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலைக் காட்டிலும் மனிதரால் ஏற்படுத்தப்பட்டிருந்த பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர் (காண்க மத்தேயு 15:3-6). அவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்கு மாறாகத் தங்களையே மகிமைப்படுத்தினர். அவர்கள் சுய திருப்தி உள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் மற்றவர்களைக் குறித்துச் சிறிதளவே அக்கறை உள்ளவர்களாக இருந்தனர்.

இருப்பினும், வேதபாரகரும் பரிசேயரும், உள்ளானவற்றைப் புறக்கணிக்கப் புறம்பானவற்றை வலியுறுத்தினர் என்பதே அவர்களின் இறுதியான தவறாக இருந்தது (காண்க மத்தேயு 23:25-28). லூக்கா 16:15ல் இயேசு அவர்களிடத்தில், "நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என்று கூறினார். மத்தேயு 5ன் கடைசிப் பகுதியில் உள்ள உதாரணங்களில், பாவத்தின் புறம்பான வெளிப்பாடு கண்டனம் பண்ணப்படுவதாக இருப்பது மாத்திரமின்றி, அந்த வெளிப்பாட்டிற்குப் பின்புலத்தில் உள்ள இருதயத்தின் எண்ணப்போக்கும் கண்டனம்பண்ணப்படுகிறது. இயேசு, கொலையை மாத்திரம் அல்ல, ஆனால் அதற்கு முன்னால் வருகிற கோபத்தையும் பழித்துரைத்தார் (மத்தேயு 5:21, 22). அவர், விபசாரம் தவறானதாக இருக்கிறது என்று மாத்திரம் கூறவில்லை, ஆனால் இச்சையே பாவம் நிறைந்ததாக உள்ளது என்றும் அறிவித்தார் (வசனங்கள் 27, 28).

மத்தேயு 5:20ஐப் பற்றிய இரு நிறைவுக் குறிப்புகள் முறையானவையாக உள்ளன. முதலாவது, 19ம் வசனத்தில் இயேசு, ஏற்கனவே இராஜ்*யத்தில் இருப்பவர்களைப்* பற்றிப் பேசினார் ("சிறியவர்" மற்றும் "பெரியவர்"), அதே வேளையில் 20ம் வசனத்தில் அவர், இராஜ்யத்தில் *பிரவேசித்தல்* பற்றிக் குறிப்பிட்டார். இராஜ்யத்தில் (சபையில்) பிரவேசிப்பதற்கு, நீங்கள் குறிப்பிட்ட சில புறம்பான வடிவமைப்புகளைக் கடைப்பிடித்தல் (நீங்கள் இயேசுவை விசுவாசிப்பதாக அறிக்கையிட்டு முழுக்காட்டப்படுதல்) மாத்திரம் போதுமானதல்ல. நீங்கள் "உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் *மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிய*" வேண்டும் (ரோமர் 6:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இரண்டாவதாக, யூதத்துவத்தில் மிகவும் செல்வாக்குள்ள மதக்குழுக்கள் - வேதபாரகர் பரிசேயர் - பற்றிய இயேசுவின் பாராட்டுதலுக்குக் குறைவான குறிப்புரையானது அந்த வல்லமை நிறைந்த தலைவர்களுடன் அவரது போராட்டங்களுக்கான மேடையை அமைத்தது. நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்காகவும், இயேசு அந்தக் கூற்றை ஏற்படுத்தியபோது தமது மரண சாசனத்தில் கையெழுத்து இட்டார். மேம்போக்கான தேவபக்திக்கு எதிராக நம்மை இயேசு எச்சரிப்பதற்காகத் தமது உயிரையே இயேசு பணயமாக வைத்தார்.

முடிவுரை

நமது படிப்பில் நாம், தேவனுடைய வசனத்தின் மீது இயேசு மிக உயர்வான மதிப்பைக் கொண்டிருந்தார் என்று கண்டிருக்கிறோம் மற்றும் நாமும்கூட, தேவன் வெளிப்படுத்தியுள்ள யாவற்றின் மீதும் மிகவும் ஆழ்ந்த மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும். இதை நான் முடிக்கையில், பொதுவாகப் பழைய ஏற்பாட்டைக் குறித்த நமது எண்ணப்போக்கு பற்றி ஒருசில கூடுதல் வார்த்தைகள் முறையானவையாக இருக்கலாம். சிலுவையில் இயேசு மரித்தபோது, பழைய ஏற்பாடு "நிறைவேற்றப்பட்ட" மற்றும் "முழுமை பெற்ற" உடன்படிக்கையாக ஆனதைக் கற்றறியும் சிலர், அது இனி தங்களுக்குத் தேவையில்லை என்று முடிவு செய்கின்றனர். அவர்கள் அதை வாசிப்பதோ அல்லது படிப்பதோ இல்லை. இருப்பினும் இயேசு, நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் நிறைவேற்றப்படுவதற்குச் சற்றுக்காலம் முன்னதாகத் தான் மலைப்பிரசங்கத்தைப் பிரசங்கித்தார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். விஷயம் இப்படித்தான் இருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது நிச்சயம், ஆனால் அவர் பழைய ஏற்பாட்டின் மீதான தமது மதிப்பையோ அல்லது அன்பையோ குறைத்து விடவில்லை.

இரண்டு மிகைமுனைக் கருத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு மிகைமுனைக் கருத்து, "பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் வேறுபாடு எதுவும் இல்லை. அவை இரண்டுமே சம அளவில் இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகின்றன" என்று கூறுகிறது. இன்னொரு மிகைமுனைக் கருத்து, "பழைய ஏற்பாடு இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்குக் கூற ஒன்றும் கொண்டிருப்பதில்லை. நாம் அதை ஒழித்து விடலாம்" என்று கூறுகிறது. பழைய ஏற்பாடு என்பது, தேவனுக்கும் யூதர்களுக்கும் இடையிலான பழைய உடன்படிக்கையின் இருதயம் போன்ற

மையப்பகுதியாக இருந்தது என்பது உண்மையே, ஆனால் அது அந்தப் பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கு மதிப்பு எதையும் உடையதாக இருப்பதில்லை என்று அர்த்தப்படுவதில்லை (காண்க ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11). மத்தேயு 5ஐ நாம் தொடர்ந்து படிக்கையில், இயேசு கூறியவற்றிற்கும் பழைய உடன்படிக்கைக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு இருப்பதைக் காண்போம். இயேசுவின் போதனைகளில் பல, பழைய ஏற்பாட்டுப் பின்னணியைக் கொண்டுள்ளன. அந்தப் பின்னணியைப் புரிந்துகொள்வதில் இருந்தே இயேசு கூறியவற்றை முழுமையாக மதிப்பதற்கான ஒரு திறவுகோலைக் கொண்டிருத்தல் அடிக்கடி வருகிறது.

முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள், இன்றைய நாட்களில் உள்ள சிலரைப் போன்று பழைய ஏற்பாட்டின் மீது வெறுப்புக் கொண்டிருக்கவில்லை. புதிய ஏற்பாடு வடிவமைக்கப்படும் வரையிலும் பல ஆண்டுகளாக, அவர்கள் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களையே தங்கள் ஒரே "வேதாகமமாக" கொண்டிருந்தனர். நீங்கள் புதிய ஏற்பாட்டை வாசித்திருந்தால், அதில் பழைய ஏற்பாடு எவ்வளவு அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படுகிறது என்பதைக் குறித்து நீங்கள் நிச்சயமாகவே மனம் ஈர்க்கப்படுவீர்கள். யாரோ ஒருவர், "பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்துள்ளது, புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு வெளிப்படுத்தப்படுகிறது" என்று கூறியுள்ளார். புதிய ஏற்பாடு கர்த்தருடனான நமது உடன்படிக்கையின் நிபந்தனைகளை வெளிப்படுத்துவதால் அது பெரிதளவு வலியுறுத்தம் பெறவேண்டும். அதே வேளையில், பழைய ஏற்பாட்டை நாம் புறக்கணிக்காதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

குறிப்புகள்

[1]ஆங்கில இலக்கணத்தில் யாரேனும் ஒருவரைப் பற்றிப் பேசும்போது "படர்க்கைப் பெயர்ச்சொல்" பயன்படுத்தப்படுகிறது. யாரேனும் ஒருவரிடத்தில் பேசும்போது, "முன்னிலைப் பெயர்ச்சொல்" பயன்படுத்தப்படுகிறது. பேசுபவர் தம்மைத்தாமே குறிப்பிடும்போது "தன்மைப் பெயர்ச்சொல்" பயன்படுத்தப்படுகிறது. [2]"பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் ... நான் உங்களுக்குச் சொல் லுகிறேன்" என்ற (அல்லது அவற்றிற்கு இணையான) வார்த்தைகளை ஆறு முறைகள் இயேசு பயன்படுத்தினார். இருப்பினும், விவாகரத்து மீதான போதனை (வசனங்கள் 31, 32) விபசாரம் மீதான கலந்துரையாடலின் (வசனங்கள் 27-30) ஒரு பகுதியாக இருக்க நோக்கங்கொண்டிருந்தது, எனவே ஐந்து விவரிப்புகள் மாத்திரமே உள்ளன எனலாம். [3]"எழுத்துக்கள்" என்று அழைக்கப்பட்ட மூன்றாவது பிரிவு ஒன்றிருந்தது. சங்கீதங்களின் புத்தகம் என்பது எழுத்துக்கள் என்ற பிரிவில் மேலாதிக்கம் பெற்றிருந்ததால், இம்மூன்று பிரிவுகளும் சிலவேளைகளில், நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் மற்றும் சங்கீதங்கள் என்று குறிப்பிடப்பட்டன (காண்க லூக்கா 24:44). [4]இவ்வார்த்தை *luo* ("to loose" அதாவது, "தளர்த்துதல்") என்பதைக் கொண்டு உருவாக்கப் பட்டு *kata* (அதாவது "அதன்படி") என்ற முன்னிடைச் சொல்லைக் கொண்டு பலப்படுத்தப்பட்டுள்ளது. [5]Walter Bauer, "A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature," fourth rev. and aug. ed. by William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: The University of Chicago Press, 1952), 415. [6]"அழித்து" என்பது *kataluo* என்ற வார்த்தையின் அர்த்தம் போன்ற அர்த்தம் போன்ற அர்த்தம் தருகிற *katargeo* என்ற வார்த்தையில் இருந்து

வருகிறது. [7]*"சட்டரீதியான நியாயப்பிரமாணங்கள் என்பது இஸ்ரவேல் மக்களை ஒரு நாட்டினம் என்ற வகையில் ஆளுவதற்காகத் தரப்பட்ட சட்டங்களைக் குறிக்கிறது.* [8]*மூன்று வகையான பிரிவு என்பது "அனேகமாக அக்வினாஸ் என்பவருக்கு முந்திய காலம் வரையில் இருப்பதில்லை"* (D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 [Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984], 143). *தாமஸ் அக்வினாஸ் என்பவர் கி.பி. 1225-1274 வரையில் வாழ்ந்த ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஒரு கல்வியாளராக இருந்தார்.* [9]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* abr., ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, Abridged in One Volume (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 867. [10]Bauer, 677.

[11]*ரோமர் 7 மற்றும் பிற இடங்களில் பவுல், நியாயப்பிரமாணம் அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்பதைச் சுட்டிக்காண்பித்தார். நியாயப்பிரமாணம் அல்ல, ஆனால் மனிதகுலத்தில் நெறிபிறழ்ந்த தன்மையும் மாம்சத்தின் பெலவீனமுமே பிரச்சனையாக இருந்தன.* [12]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 115. [13]Ibid., 115 [14]KJV *வேதாகமத்தில் இது* "jot" *என்றுள்ளது.* [15]KJV *வேதாகமத்தில் இது* "tittle" *என்றுள்ளது.* "Tittle" *என்பது ஒரு இலத்தீன் சொற்றொடரில் இருந்து வந்துள்ளது. எழுத்தின் மிகச்சிறிய குறியை இயேசு குறிப்பிட்டார்.* [16]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 635. *இது ஒரு* "e" *என்ற எழுத்தை ஒரு* "c" *என்ற எழுத்தில் இருந்து வேறுபடுத்தும் ஒரு சிறிய கோட்டுடன் ஒப்பிடலாம்.* [17]D. F. Hudson, *Teach Yourself New Testament Greek* (London: English Universities Press, 1967), 166. [18]*இயேசு நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிக்க வந்திருந்தார் என்றால் அவர், தாமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக இருந்தார் என்பதற்கான மிகப்பலமான சாட்சியங்கள் சிலவற்றையும் அழித்திருப்பாரே.* [19]Harold Fowler, *Matthew 1,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 247. [20]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 44.

[21]*"மீறி" மற்றும் "அழிக்கிறதற்கு" என்ற இரண்டு வார்த்தைகளுமே* *luo* *("தளர்த்த") என்பதில் இருந்து வந்துள்ளது.* [22]*இயேசுவின் கட்டளை கீழ்ப்படியப்பட வேண்டும் என்று அவர் நோக்கங் கொண்டிருந்தார் (காண்க மத்தேயு 7:26, 27).* [23]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 51. [24]France, 116. [25]*இவ்விடத்தில் "நீதி" என்பது "சரியானதைச் செய்தல்" என்று அர்த்தப்படுகிறது. குறிப்பாக இவ்வார்த்தை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலைக் குறிப்பிடுகிறது.* [26]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 82. [27]*இவர்கள் முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீன நாட்டின் "வழக்கறிஞர்களாக" இருந்தனர் (மத்தேயு 22:35ஐ மாற்கு 12:28 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).* [28]Vine, 470. [29]McGarvey, 53. [30]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 75.

4

கோபமான சிந்தனைகள், வெறுப்பு நிறைந்த வார்த்தைகள் மற்றும் கொலை

(மத்தேயு 5:21-26)

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, ஆக்லஹாமாவின் ஹோமினி என்ற இடத்திற்கு அருகில் உள்ள கோன்னெர்ஸ் திருத்தும் மையத்தில் நான் பிரசங்கித்தேன். எனது உரையைக் கேட்டவர்களில் பலர், கொலைக்குற்றம் செய்து தண்டனை பெற்றவர்களாக இருந்தனர். அது ஒரு ஆர்வமிக்க அனுபவமாக இருந்தது; ஆனால் பல ஞாயிற்றுக்கிழமைகளில் நான், டஜன் கணக்கிலான கொலைகாரர்களுக்குப் பிரசங்கித்தேன். கோன்னெர்ஸில் எனது உரையைக் கேட்டவர்களில் சிலர் தங்கள் கைகளினால் கொலை செய்தவர்களாக இருந்தனர்; மற்ற குழுக்களில் பலர் தங்கள் இருதயங்களிலும் தங்கள் வார்த்தைகளைக் கொண்டும் கொலை செய்தவர்களாக இருந்தனர். இயேசுவைப் பொறுத்த மட்டில், இந்த இரண்டாவது குழுவில் உள்ளவர்கள் முதலாவது குழுவில் உள்ளவர்களைப் போன்றே குற்றம் செய்தவர்களாக இருக்கின்றனர்:

> கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. எதிராளி உன்னை நியாயாதிபதினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும்

அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:21-26).

நமது முந்திய பாடத்தில் நாம், "புதிய ஏற்பாடு முழுவதிலும் மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்று"[1] என வில்லியம் பார்க்களே குறிப்பிட்ட முன்னுரையைப் படித்தோம்: மத்தேயு 5:21-48. அந்தப் படிப்பில், இயேசு நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்கு அல்ல ஆனால் அதை நிறைவேற்றவே தாம் வந்ததாகக் கூறினார் என்று நாம் குறிப்பிட்டோம். அவர் நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்த போது அதை முற்றிலுமாக அவர் நிறைவேற்றி அதைப் புறம்பே எடுத்துப் போட்டார். இருப்பினும் மலைப்பிரசங்கத்தில் அவர் அதை விரிவாக்கி அதற்கு மிக ஆழமான அர்த்தத்தைக் கொடுத்தார். அவர் தமது திறவு வார்த்தைகளுக்குப் பின்பு, அந்த நிறைவேற்றத்திற்கு ஐந்து அல்லது ஆறு விவரிப்புகளைக் கொடுத்தார். இந்த எடுத்துரைப்பில் நாம் 21முதல் 24வரையிலான வசனங்களில் முதலாவது விவரிப்பைப் பற்றிப் படிப்போம். இவ்வசனப் பகுதியில் இயேசு, கோபம் கொள்ளுதல் பற்றியும் நாம் கூறக்கூடாத வார்த்தைகளைப் பற்றியும் பேசினார்.

நமது வேதபாட வசனப் பகுதி, நாம் மற்றவர்களுடன் இசைவிணக்கமாக இல்லாதபோது, குறிப்பாக நாம் நமது வார்த்தைகளினாலும் செயல்களினாலும் மற்றவர்களைக் குற்றப்படுத்தி இருக்கும் போது செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றியும் கலந்துரையாடுகிறது. உலகமானது, கருத்து ஒருமைப்பாடு இல்லாத நிலையைக் கையாளுவதற்குத் தனது சொந்த வழிகளைக் கொண்டுள்ளது, ஆனால் அவைகள் இயேசுவைப் பின்பற்றுபவர்களின் வழிகள் அல்ல. மற்ற மக்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவரல்லாதவர்களாக இருந்தாலும், விசுவாசிகளாக இருந்தாலும் அல்லது அவிசுவாசிகளாக இருந்தாலும் நண்பர்களாக இருந்தாலும் அல்லது எதிராளிகளாக இருந்தாலும், ஒரு கிறிஸ்தவர் எல்லா மக்களுடனும் இசைவிணக்கமாக இருக்க முயற்சி செய்கிறார்.

கோபத்தின் அபாயம் (5:21, 22)

உணரப்பட்ட கோபம் (வசனங்கள் 21, 22அ)

இவ்வசனப்பகுதி, "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு[2] உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்." என்ற இயேசுவின் கூற்றுடன் தொடங்குகிறது (வசனம் 21). "பூர்வத்தார்" என்பவர்கள் இயேசுவின் உரையைக் கேட்டவர்களின் முன்னோர்களாக இருந்தனர்.

"கொலை செய்யாதிருப்பாயாக" என்பது கிறிஸ்துவின் உரையைக் கேட்டவர்கள் கேள்விப்பட்டிருந்த விஷயங்களில் ஒன்றாக இருந்தது. இது பத்துக் கட்டளைகளில் ஆறாவது கட்டளையாக இருந்தது (யாத்திராகமம் 20:13; உபாகமம் 5:17). ஆறாவது கட்டளை, மரண தண்டனையையோ (காண்க யாத்திராகமம் 21:12) அல்லது கர்த்தரின் விரோதிகளுக்கு எதிராக யுத்தத்திற்குச் செல்லுவதையோ கூட (காண்க உபாகமம் 7) தடைசெய்யவில்லை. "கொலை செய்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (NASB வேதாகமம்

சுட்டிகாண்பிக்கிறபடி) "கொலை செய்ய" என்று அர்த்தப்படுகிற (*phoneuo* என்ற) வார்த்தையில் இருந்து வருகிறது.[3] "கொலை" என்பது, "ஒரு மனிதன் மற்றொரு மனிதனால் [குறிப்பாக] முன்பே எண்ணப்பட்ட விரோதத்துடன் சட்டவிரோதமாகக் கொல்லப்படுதல்" என்பதாக உள்ளது.[4]

"கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்றும் மக்கள் கேள்விப்பட்டு இருந்தனர். ["நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்பது "shall be liable to the court" என்று NKJV வேதாகமத்தில் உள்ளது.] "Court" என்பது "முடிவு நியாயத்தீர்ப்பு"[5] என்று அர்த்தப்படுகிற (*krisis* என்ற) வார்த்தையில் இருந்து வந்துள்ளது (KJV வேதாகமத்தில் காண்க). இயேசு, ஒரு கொலைகாரரை ஒரு யூதத்துவ நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து தீர்ப்புச் செய்து தண்டணை அளித்தலைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார்.[6] பழைய ஏற்பாட்டின் எந்த வசனமும், "கொலை செய்கிறவர் நீதிமன்றத்திற்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருப்பார்" என்று கூறுவதில்லை; இந்தக் கூற்றானது அனேகமாக, பழைய ஏற்பாட்டின் பல வசனப்பகுதிகளில் போதிக்கப்பட்ட ஒரு கொள்கையில் அடிப்படையில் அமைந்திருக்கலாம். கொலைசெய்தவர்கள் மரணத்திற்கு உள்ளாக்கப்படவேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது (காண்க லேவியராகமம் 24:17; எண்ணாகமம் 35:16-34) மற்றும் இஸ்ரவேல் மக்கள் இதையும் இது தொடர்பான மற்ற விஷயங்களையும் கையாள்வதற்கு ஒரு நீதிமன்ற முறைமையை ஒருங்கமைக்க வேண்டும் என்று அது சுட்டிக்காண்பித்தது (காண்க உபாகமம் 16:18; 17:8, 9). இயேசுவின் நாட்களில், பலஸ்தீனத்தில் இருந்த ஒவ்வொரு சிறு நகரிலும் மற்றும் நகரத்திலும், கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க ஒரு நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. யூதத்துவ போதகர்கள், உண்மையில் கொலை செய்தவர்கள் மாத்திரமே குற்றப்பட்டு இருந்தனர் என்று போதித்தனர்.

"ஆனால்" (இங்கு ஒரு திறவுகோல் சொற்றொடர் வருகிறது) "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." என்று இயேசு கூடுதலாகக் கூறினார் (மத்தேயு 5:22அ). கிரேக்க வசனத்தில் "நான்" என்ற வார்த்தைக்கு வலியுறுத்தம் உள்ளது. வேதபாரகர்களும் பரிசேயர்களும் தாங்கள் போதிக்கையில் - சில வேளைகளில் மோசேயை, ஆனால் அடிக்கடி கடந்த காலத்தில் இருந்த பல அதிகாரிகளை - மேற்கோள் காண்பித்தனர். இருப்பினும் இயேசு தமது சொந்த அதிகாரத்தின் மீது பேசினார். அவரது பிரசங்கத்தின் முடிவில், "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (7:28, 29; காண்க மாற்கு 1:22).

இயேசு தமது சொந்த அதிகாரத்தின் மீதான அடிப்படையில் ஏற்படுத்திய அறிவிப்பு என்ன? முதலில் அவர், "தன் சகோதரனை[7] நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்று கூறினார் (மத்தேயு 5:22ஆ). இயேசு "சகோதரனை" (*adelphos*) என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியபோது, அவரது உரையைக் கேட்டவர்கள் சக யூதர்களைப் பற்றி நினைத்திருப்பார்கள் என்பது உறுதி. இன்றைய நாட்களில் நாம், அனேகமாக முதலில் சக கிறிஸ்தவர்களைப் பற்றி நினைக்கலாம். இருப்பினும் இதன் நடைமுறைப் பயன்பாடு இன்னும் விரிவானதாக உள்ளது

என்பது உறுதி. 24ம் வசனத்தில் இயேசு, எதிராளிகளை உள்ளடக்கினார், எனவே நாம் தொடர்புகொள்ளும் எவரொருவரையும் மற்றும் ஒவ்வொருவரையும் பற்றி நினைக்க வேண்டும்.

"கோபித்துக்கொள்பவன்" என்பது orge என்ற சொல்லின் வினை வடிவத்தில் இருந்து வந்துள்ளது. "கோபம்" என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன: orge மற்றும் thumos என்பவை. Thumos என்பது "விரைவில் பற்றி எரிதலாகவும் விரைவில் அடங்கிப்போவதாகவும்" இருக்கையில், orge என்பது "மிக அதிகமாக நிலைநிற்கும் மனநிலையையும் அடிக்கடி பழிவாங்குதலைக் கண்ணோக்கும் நிலையையும்" குறிப்பதாக உள்ளது.[8] Orge என்பதைப் பற்றி பார்க்ளே என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> *இது நீண்ட நாள் நிலைத்திருக்கும் கோபமாக உள்ளது; இது தனது கோபத்தைச் சூடாகக் காத்திருக்க அதைப் போஷிக்கும் மனிதரின் கோபமாக உள்ளது; இது ஒரு நபர் தொடர்ந்து நினைத்துக் கொண்டே இருந்து அதை இறந்த போக அவர் அனுமதிக்காத கோபமாக உள்ளது ... [இது] மறக்காத கோபமாக, ஆற்றுப்படுத்த மறுக்கிற கோபமாக, பழிவாங்குதலை நாடுகிற கோபமாக உள்ளது.[9]*

வேதாகமம் எல்லாக் கோபத்தையும் கண்டனம் பண்ணுவதில்லை. தேவன் துன்மார்க்கர் மீது கோபமாக இருக்கிறார் (காண்க சங்கீதம் 7:11). இயேசு, மாய்மாலமான பரிசேயர்களைக் கோபத்துடன் கண்ணோக்கினார் (மாற்கு 3:5). நீதியான கோபம் - தேவபக்திக்கேற்ற கோபம் - பாவம், அடக்குமுறை மற்றும் பொல்லாங்கு ஆகியவற்றிற்கு எதிரான கோபம் உள்ளது. நல்ல நோக்கத்திற்காகவே தேவன் நமக்குள் கோபம் கொள்வதற்கான திறனை வைத்திருக்கிறார். வில்லியம் இவான்ஸ் என்பவர், "பாவத்தின் மீது கோபம் கொள்ள இயலாதிருக்கிற ஒரு மனிதர் ... நீதியின் மீது உண்மையான அன்புகூரவும் இயலாதவராக இருக்கிறார்" என்று எழுதினார்.[10] இருப்பினும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் கோபம் கொள்ளும்போது, அது நீதியான கோபமாக இருப்பதில்லை. மாறாக அது, உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட தனிப்பட்ட வகையிலான முக்கியத்துவமற்ற அல்லது புண்படுத்துதல் சிலவற்றின் மீதான சுயநலமான கோபமாக உள்ளது. விஷயம் இப்படி இருப்பதால், வேதாகமம் பொதுவாகக் கோபத்தைப் பழித்துரைக்கிறது (காண்க எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; யாக்கோபு 1:19, 20).

நமது வேதபாட வசனப்பகுதியில் KJV வேதாகமம் சற்றே மாறுபாடு கொண்டுள்ளது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். வேதாகமத்தில் "angry ... without a cause" என்றுள்ளது. [இதுவே தமிழ் வேதாமத்தில் ''நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] ''நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை பழங்காலப் பதிவுகள் பலவற்றில் உள்ளது, ஆனால் இது தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுவதில்லை.[11] நான் இளைஞனாக இருந்தபோது, ''நியாயமில்லாமல்'' என்பதைச் சிலர் தங்கள் கோபத்தை நியாயப்படுத்துவதற்காகப் பயன்படுத்தியதைக் கேள்விப்பட்டதால் இதைக் குறிப்பிடுகிறேன். "அது 'நியாயமில்லமாமல்' என்று கூறுகிறது, ஆனால் நான்

ஒரு நியாயத்தைக் கொண்டிருந்தேன்! அவர் எனக்கு என்ன செய்தார் என்பதை உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள்!" நம்மை நாமே நியாயப்படுத்தவும் நாம் செய்கிறவற்றிற்கு (நமது சொந்த மனங்களில்) போதுமான "நியாயத்தை" கண்டறியவும் நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம். இயேசு பொதுவாகக் கோபத்திற்கு எதிராக ஒரு எச்சரிக்கையை வெளியிட்டார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இயேசு, "தன் சகோதரனை ... கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்று கூறினார். இவ்விடத்தில் "நியாயத்தீர்ப்புக்கு" என்ற வார்த்தை *krisis* ("நியாயத்தீர்ப்பு") என்பதில் இருந்து வந்துள்ளது, இதுவே முந்திய வசனத்திலும் வந்துள்ள வார்த்தையாக உள்ளது. இருப்பினும் கிறிஸ்து உலகப்பிரகாரமான நியாயத்தீர்ப்பில் இருந்து ஆவிக்குரிய நியாயத்தீர்ப்புக்குக் கடந்து சென்றார் என்பது தெளிவு, ஏனென்றால் உலகப்பிரகாரமான நீதிமன்றம் எதுவும், ஒருவர் கோபம் கொண்டதாலேயே அவரை விசாரிக்க இயலாது அல்லது விசாரிக்காது. *பரலோக* நீதிமன்றத்தில், ஒருவர் தமது சகோதரரைக் *கொலை செய்தால்* மாத்திரமல்ல, ஆனால் அவர் தமது சகோதரரிடம் *கோபம் கொண்டாலே* குற்றம் உள்ளவராக இருப்பார் என்று இயேசு கூறினார்.

இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருசிலராவது, யாராவது ஒருவரை உடல்ரீதியாகக் கொலைசெய்திருப்பார் என்று நாம் யூகிக்கலாம்; சிலர் அனேகமாக, வெறுப்புணர்வைத் தங்கள் இருதயங்களில் தேக்கி வைத்திருக்கலாம். அவர்கள் அந்த வெறுப்புணர்வுக்குரியவர்கள் மீது பேரழிவு விழுந்தால் அதைப்பற்றிக் கண்ணீர் எதுவும் சிந்த மாட்டார்கள்: அவர்களைக் காட்டு மிருகங்கள் கொன்றால், அவர்களை விஷமுள்ள பாம்புகள் கடித்தால், அவர்களை மின்னல் தாக்கினால்.[12] அவர்கள் அனேகமாகத் தங்களின் கைகள் இரத்தத்தால் சிவக்காதிருந்தால், அவர்கள் ஆறாவது கட்டளையை மீறவில்லை என்று நம்பியிருக்கலாம்; ஆனால் இயேசு அது அப்படியல்ல என்று கூறினார். இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர், பின்னாளில் "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷகொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்" என்று எழுதினார் (1 யோவான் 3:15). இது "சிந்தனையில் கொலைசெய்தல்" என்று அழைக்கப்பட்டுள்ளது.[13]

இயேசு, கொலையின் பாவத்திற்குப் பின்னால் கொலையை விளைவிக்கக் கூடிய இருதயத்தின் எண்ணப்போக்கிற்குச் சென்றார். நம்மால் அநீதியான கோபத்தையும் வெறுப்புணர்வையும் நீக்கிப்போட முடியும் என்றால், நம்மால் கொலையையும் நீக்கிப்போட முடியும். மலைப்பிரசங்கத்தில் இருந்து நாம் பின்வரும் அடிப்படைக் கொள்கையை எடுக்க முடியும்: பாவத்திற்கு வழிநடத்தும் விஷயமும் பாவம் நிறைந்ததாக உள்ளது.

வெளிப்படுத்தப்பட்ட கோபம் (வசனம் 22ஆ)

22ம் வசனத்தின் மத்தியில் இயேசு, *உணரப்பட்ட* கோபத்தில் இருந்து *வெளிப்படுத்தப்பட்ட* கோபத்திற்குக் கடந்த சென்றார்: "தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநகரத்துக்கு ஏதுவாயிருப்பான்." *Raca* என்பது, "வீணண்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையாக

உள்ளது. W. E. வைன் என்பவர், *raca* என்பது "[எபிரெய] வார்த்தையின் உறவுள்ள அரமேயிக் வார்த்தையாக உள்ளது. ... இது முற்றிலுமான விரோதத்திற்கு உரிய வார்த்தையாக உள்ளது, இது ஒழுக்கரீதியான 'வெறுமை' என்பதற்கு மாறாக புத்திக்கூர்மையில் 'வெறுமை' என்பதைக் குறிக்கிறது" என்று கூறினார்.[14] சில மொழிபெயர்ப்புகள் இவ்வார்த்தைக்குப் பொதுவானதொரு அணுகுமுறையை மேற்கொள்கின்றன. RSV வேதாகமத்தில் "தனது சகோதரனை அவமதிக்கிறவன்" என்றுள்ளது. NCV வேதாகமத்தில் "மோசமான விஷயங்களைக் [சகோதரனிடம்] கூறுகிறவன்'' என்றுள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகள் தனிவகையான அர்த்தங்களைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன. மெக்கார்டு மொழிபெயர்ப்பில் "வெறுமையான தலையுடைய" என்று இருக்கையில் NLT மொழிபெயர்ப்பில் "மதியீனன்" என்றுள்ளது.

Raca என்ற வார்த்தை அவமானப்படுத்துதல் என்பதாக மாத்திரமல்ல, ஆனால் அது பேசப்படுகிற வகையையும் குறிப்பதாக இருக்கச் சாத்தியமுள்ளது. அந்த அளவுக்கு மதிப்புக் குலைவற்றதாக உள்ள பல சொற்றொடர்கள் பகை உணர்வுடன் பயன்படுத்தப்படும்போது ஆழமாகப் புண்படுத்தக் கூடும். *Raca* என்பதை, அந்த நாட்களில் திட்டுதலுக்குப் பயன்படுத்தப்பட்ட பொதுவான, குரலில் ஒரு விரோதமான தொனியுடன் பேசப்பட்ட சொற்றொடர் என்ற வகையில் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் வாழும் இடம் எதுவாக இருந்தாலும் அங்கு, மற்றவர்களை அவமதிக்கவும் மதிப்புக் குறைவாக்கவும் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் உள்ளன. (அவைகள் எவை என்று உங்களுக்குத் தெரியும், இல்லையா?) மனச்சாட்சியுள்ள ஒரு கிறிஸ்தவர் இதைப்போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது இல்லை, ஆனால் உலகப்பிரகாரமான சிந்தையுள்ளவர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர்.

இயேசுவைப் பொறுத்தமட்டில், தனது சகோதரனை *raca* என்று அழைக்கிறவன் ''ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்.'' "ஆலோசனைச் சங்கம்" என்பது பொதுவாக "சனதெரீன்" என்று நாம் உச்சரிக்கும் (*sunedrion* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இவ்வார்த்தை அவ்வப்போது பொதுவான வகையில் பயன்படுத்தப்பட்டது (காண்க மத்தேயு 10:17), ஆனால் இது வழக்கமாக "71 உறுப்பினர்களைக் கொண்டிருந்த, எருசலேமின் மகா சபையாக இருந்தது ... இந்தத் தீர்ப்பாயத்திற்கு முன்பாகத்தான் மிகவும் முக்கியமான வழக்குகள் [விசாரணைக்கு] வந்தன."[15] பல நாடுகள், உள்ளூர் நீதிமன்றங்களையும் தேசீய நீதிமன்றத்தையும் கொண்டுள்ளன. இவற்றில் பிந்திக் குறிப்பிடப்பட்டது, அமெரிக்காவில் உயர்நீதிமன்றம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு சகோதரனை அவமதித்தமைக்காக எருசலேமில் எவரொருவரும் உயர்நீதிமன்றத்திற்கு [சனதெரீனுக்கு] முன்பாக [விசாரணைக்கு] கொண்டுவரப்படவில்லை என்பது உண்மையே. பின்பு இயேசு, சகோதரர் மீது ஒருவர் கோபமாயிருத்தலின் தீவிரக்கருத்தை மனதில் பதியச் செய்வதற்காக, நன்கு பழக்கமான சொற்றொடர்களை ஒரு உருவகமான வகையில் பயன்படுத்தத் தொடர்ந்தார். வேதவசனப் பகுதியில் வலிவார்ந்த தன்மை வளர்நிலையில் உள்ளது, இது ஒரு உள்ளூர் நீதிமன்றத்தில் இருந்து சனதெரீன் என்ற நீதிமன்றத்திற்குக் கடந்து செல்கிறது. <u>வெளிப்படுத்தப்பட்ட</u> கோபமானது <u>உணரப்பட்ட</u> கோபத்தைக் காட்டிலும் அதிகம் தீவிரமான விளைவுகளைக் கொண்டுள்ளது என்பதே மறைமுகமாக உணர்த்தப்பட்ட

கருத்தாக இருக்கிறது.

ஒருவேளை நான் எதிர்கொண்டுள்ள விசித்திரக் கவர்ச்சி கொண்ட விவாதத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். யாரேனும் ஒருவர், "ஒரு சகோதரரை வெறுத்தல் என்பது அவரைக் கொலை செய்வது போன்றே மோசமானதாக இருக்கிறது என்றால், நான் என் சகோதரரை வெறுத்தால், நான் அவரைக் கொலை செய்வதற்கும் முன்செல்வேன். எனது பாவம் தேவனுடைய பார்வையில் பெரிதாயிராது" என்று கூறுகிறார். வாசகர் எவரும் இவ்வகையான சிறுபிள்ளைத்தனமான நியாயம் கற்பித்தலில் ஈடுபட மாட்டார், ஆனால் ஒரு சில வார்த்தைகள் இங்கு முறையானவையாக இருக்கலாம். நடைமுறைக் கருத்தில், கோபத்தை (அவமதிக்கும் வார்த்தைகளில் மற்றும்/அல்லது கொலையில்) வெளிப்படுத்துதல் என்பது, இருதயத்தில் கோபம் கொண்டிருத்தலைவிட, பல காரணங்களுக்காக மிகவும் மோசமானதாக உள்ளது. அவற்றில் இரண்டு காரணங்களை நான் இங்கு குறிப்பிடுவேன். (1) நீங்கள் ஒரு சகோதரரிடம் கோபமாக இருந்தாலும், அவரை அவமதித்தல் அல்லது அவரைக் கொலை செய்தல் என்பவற்றைச் செய்யக்கூடாது, ஏனெனில் இந்த நடவடிக்கைகள் மனந்திரும்புதலை (மீளத்திருப்புதல் உட்பட மனந்திரும்புதல் என்பதை) மிகவும் கடினமாக்கி விடுகின்றன. இன்னொருவரைப் பற்றி நீங்கள் மோசமான சில விஷயங்களைக் கூறினால், அவரிடம் சென்று நீங்கள் அவருடன் ஒப்புரவாக வேண்டும் (காண்க வசனங்கள் 23, 24). நீங்கள் யாரேனும் ஒருவரைக் கொலை செய்து விட்டால், அவரது உயிரை ஒருக்காலும் நீங்கள் திரும்பத் தர இயலாது. (2) நீங்கள் ஒரு சகோதரரிடம் கோபமாக இருந்தாலும், நீங்கள் அவரைக் கொலை செய்துவிடக்கூடாது, ஏனெனில் அதன் விளைவுகள் பெரிதாக உள்ளன. நீங்கள் உங்கள் இருதயத்தில் வெறுப்புணர்வு அல்லது கோபம் கொண்டிருந்தால், நீங்கள் தேவனுக்குப் பதில்சொல்லியாக வேண்டும். நீங்கள் கொலை செய்தால், தேவனுக்குப் பதில் சொல்லியாக வேண்டுவதோடு, மனிதரீதியான நீதிமன்றத்திற்கும் நீங்கள் பதில்சொல்லியாக வேண்டும். இயேசுவின் கூற்றில் உள்ள வளர்நிலை வலிவார்ந்த தன்மையானது, சட்டரீதியான "விடுவிக்கும் ஓட்டைகளை" அளிப்பதற்கானவை அல்ல, ஆனால் அவைகள், நாம் ஒரு சகோதரர் மீது கோபம் கொண்டிருந்தால் அல்லது அவரை வெறுத்தால், அந்த எதிர்மறைச் சிந்தனைகளை நமது மனங்கள் மற்றும் இருதயங்களில் இருந்து எடுத்துப் போட வேண்டும் என்பதைக் கட்டளையாக உணர்த்துகின்றன.

வெளிப்படுத்தப்பட்ட கோபத்திற்கு இயேசு இன்னொரு உதாரணம் கொடுத்தார். தொடர்ந்து அவர், "மூடனே என்று சொல்லுகிறவன் எரிநகரத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்று கூறினார். மீண்டுமாக நாம், குற்றம் மற்றும் தண்டணை ஆகிய இரண்டிலுமே வலிவார்ந்த தன்மையைக் காணுகிறோம். "மூடன்" என்பது, *moros* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இதிலிருந்தே நாம் "moron" ("முட்டாள்") என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இவ்வார்த்தை, "அடிப்படையாக, 'மந்தமான, உணர்ச்சியற்ற' ஆகவே 'மதியற்ற, முட்டாளான' என்பதைக் குறிக்கிறது ... ; இவ்விடத்தில் இவ்வார்த்தை, ஒழுக்கரீதியாகத் தகுதியற்ற, மூடர் ஒருவரை அர்த்தப்படுத்துகிறது." இது "*raca* என்பதை விட மிகத்தீவிரமான அணுகுமுறையாக உள்ளது; பிந்திய இவ்வார்த்தை ஒரு மனிதரின் மனதைத் திட்டி அவரை மூடன் என்று அழைக்கிறது; *moros* என்பது அவரது இருதயத்தையும் பண்பையும் அவமதிக்கிறது."[16] இயேசு

moros என்ற வார்த்தையை, மாய்மாலக்காரர்களான வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் சபிக்கவும் (மத்தேயு 23:17, 19), கன்னிகைகளின் மதியீனத்தை விவரிக்கவும் (மத்தேயு 25:3) பயன்படுத்தினார். இவ்வார்த்தை ஒரு தனிநபரின் ஆவிக்குரிய நிலையைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான தீர்ப்பைக் கூற இயேசு தகுதியானவராக இருந்தார்,[17] ஆனால் நீங்களும் நானும் அவ்வாறு தகுதி கொண்டிருப்பதில்லை.

நான் இருதயத்தில் கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தால், அது "சிந்தனையில் செய்யும் கொலையாக" உள்ளது, இன்னொருவரிடம் அவமதிக்கும் வகையில் பேசுதல் என்பது "நாவினால் செய்யும் கொலையாக" உள்ளது.[18] நாம் நமது நாவுகளைக் கொண்டு, இன்னொருவரின் தன்னம்பிக்கையைக் கொலை செய்யக்கூடும். நாவைக் கொண்டு நாம் இன்னொருவரின் நற்பெயரைக் கொலை செய்யக்கூடும்.

கிறிஸ்தவர், மற்றவர்களை மரியாதையுடன் நடத்துகிறார் என்பது கிறிஸ்தவரின் ஒரு பண்பாக உள்ளது. அவர், மதிக்க அருகதையற்றவர்களைக்கூட மதிப்புடன் நடத்துகிறார். இது எங்கு கற்றறியப்படுகிறது? நம்மில் பலர் இதை ஒரு கிறிஸ்தவ இல்லத்தில் கற்றிருக்கிறோம். நீங்கள் ஒரு தந்தையாக அல்லது ஒரு தாயாக, ஒரு தாத்தாவாக அல்லது ஒரு பாட்டியாக இருந்தால், உங்கள் இல்லத்தில் உள்ள யாவரும் அங்குள்ள மற்றவர்களை மதிப்புடன் நடத்தும்படி வலியுறுத்துங்கள். ஒரு கிறிஸ்தவ இல்லத்தில், அற்பமான, வெறுப்பு நிறைந்த வார்த்தைகளுக்கு இடமில்லை.

மற்றவரை "மூடன் என்று அழைப்பவர் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பார்" என்று இயேசு கூறினார். "நரகம்" என்பது "ஹின்னோம் பள்ளத்தாக்கு" என்று அர்த்தப்படுகிற *gehenna* என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[19] இந்தப் பள்ளத்தாக்கில், ஆகாஸ் என்ற அரசரும் மற்றவர்களும், தங்கள் பிள்ளைகளைப் பொய்த்தேவர்களுக்குப் பலிசெலுத்தியிருந்தனர் (2 இராஜாக்கள் 16:3; 2 நாளாகமம் 28:3).[20] யோசியா அரசரானபோது, அவர் இந்தப் பள்ளத்தாக்கைத் தீட்டாக்கினார் (2 இராஜாக்கள் 23:10). அது குப்பைகளையும் குற்றவாளிகளின் பிணங்களையும் கொட்டும் இடமாக்கப்பட்டது (காண்க எரேமியா 7:31-33). பாரம்பரியத்தின்படி, முதல் நூற்றாண்டில் இது குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது, இதில் ஒருக்காலும் அணையாத புகையும் நெருப்பு கனன்று கொண்டிருந்தது.[21] இயேசுவின் உருவகத்தில், மற்றொருவரை "மூடன்" என்று அழைக்கும் வரையில், கோபமும் வெறுப்பும் தமது இருதயத்தில் புகைந்து எரிய அனுமதிக்கிறவர், என்றென்றும் எரிகிற அக்கினியின் புகை மற்றும் நெடிக்குள் தூக்கி எறியப்பட மாத்திரம் தகுதியானவராக இருந்தார்.

உடல்ரீதியான தண்டனையை விட அதிகம் தீவிரமான சிலவற்றை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதை அவர் தமது உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அவரது நாட்களில், கெகன்னா என்பது, துன்மார்க்கர்களின் நித்திய இடத்திற்கான பொதுவான விவரிப்பாக இருந்தது, அதை நாம் "நரகம்" என்று அழைக்கிறோம் (மத்தேயு 10:28; 23:33). வெளிப்படுத்தின விசேஷம் 21:8ல் தேவன், கொலைகாரர்கள் "இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று கூறினார் - மற்றும் இயேசு, உணரப்பட்ட

மற்றும் வெளிப்படுத்தப்பட்ட கோபமானது உடல்ரீதியான கொலையைப் போன்றதாகவே இருக்கிறது என்று கூறினார்.

சிலர், "நான் எவரொருவரையும் 'வீணன்' என்றோ அல்லது 'மூடன்' என்றோ ஒருக்காலும் அழைக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பேன், எனவே நான் சரியானவனாக இருப்பேன்" என்று கூறியுள்ளனர். இவ்வாறு நியாயப்படுத்துபவர்கள் இயேசு கூறியது என்ன என்பதை இன்னமும் புரிந்து கொள்ளாதவர்களாக உள்ளனர். "வீணன்" மற்றும் "மூடன்" என்பவை அவரது நாட்களில் மதிப்பற்ற வார்த்தைகளின் உதாரணங்களாக மாத்திரமே இருந்தன. மத்தேயு 5:21, 22ன் செய்தியானது நமது இருதயங்களில் இருந்து கோபமான சிந்தனைகளையும் நமது உதடுகளில் இருந்து கோபமான வார்த்தைகளையும் - *எவ்விதமான* கோபமான வார்த்தைகளையும் - நமது சக்தியால் புறம்பே எடுத்துப் போடுதலைப் பற்றிய எல்லாமுகமாக உள்ளது.

விரைவாக ஒப்புரவாகுதலின் அவசியம் (5:23-26)

நாம் மிகச்சிறந்த நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், அடிக்கடி நமது சிந்தனைகளை அல்லது நமது நாவுகளைக் கட்டுப்படுத்துவது இல்லை என்பதை இயேசு உணர்ந்தறிந்தார் (காண்க யாக்கோபு 3:8). விஷயம் அப்படியாக இருக்கும் போது, நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனுடனும் மனிதருடனும் விஷயங்களை நேர்ப்படுத்திக் கொள்ளத்தாமதிப்பதில் நாம் நேரத்தைச் சிறிதும் இழக்கக் கூடாது என்பதே அவரது பதிலாக உள்ளது. நமது வேதபாட வசனப் பகுதியின் கடைசி இரு வசனங்கள், விரைவாக ஒப்புரவாகுதலின் அவசியத்தை அடிக்கோடிடுகின்றன.

ஒரு சகோதரருடன் (வசனங்கள் 23, 24)

23ம் வசனத்தில் நாம், "ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், ..." என்று வாசிக்கிறோம். முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டபடி, பழைய ஏற்பாடு இன்னமும் கட்டுப்படுத்தும் நிலையில் இருந்த வேளையில் மலைப்பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்டது; அது பழைய ஏற்பாட்டின் நடைமுறைகளுக்கு நன்கு பழக்கமான மக்களுக்கு உரைக்கப்பட்டது. ஆகவே இயேசு கூறியதைக் கவனித்துக் கேட்ட ஒரு யூதராக உங்களைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். பின்வரும் நிகழ்வு வரிசையை உங்கள் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேவாலயத்திற்குக் காணிக்கை ஒன்றை, ஒருவேளை பலிசெலுத்துவதற்கு ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் அந்த ஆட்டுக்குட்டியை எடுத்துக்கொண்டு, புறஜாதியாரின் முற்றத்தின் வழியாக, பெண்களின் முற்றத்தின் வழியாக, இஸ்ரவேல் மக்களின் முற்றத்தின் வழியாகக் கடந்து செல்கிறீர்கள். நீங்கள் கிராதிக்கு எதிராகச் சாய்ந்து, ஆசாரியர் அந்த ஆட்டுக்குட்டியை எடுத்துக் கொள்ளும்படி முன்னதாக நீட்டிப் பிடிக்கிறீர்கள். மிருகத்தின் தலையின் மீது கைகளை வைத்து ஒருவரின் பாவங்களை உச்சரித்து அவற்றைப் பலிசெலுத்தப்பட உள்ள ஆட்டுக் குட்டியின் மீது அடையாளத்துவமாக மாற்றுதல் என்பது ஒரு பொதுவான காட்சியாக இருந்தது. நீங்கள் அதைச் செய்கையில், உங்களால் கூறப்பட்ட சில வார்த்தைகளினால் (அல்லது நீங்கள் கூறியதாக அவர்

நினைத்ததால்[22]) மனம் புண்படுத்தப்பட்ட ஒரு சகோதரரைப் பற்றி நீங்கள் கேள்விப்படுகிறீர்கள்.

விஷயம் அப்படி இருக்கும்போது, "அங்கேதானே பலிபீடத்தின் முன் [ஆசாரியர் அல்லது லேவியரின் கண்காணிப்பில்] உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி," என்று இயேசு கூறினார் (வசனம் 24அ). "ஒப்புரவாகி இருக்க வேண்டுமா"? ஒப்புரவாகுதலைக் கொண்டுவர நாம் என்ன செய்ய வேண்டும்? ஆல்பர்ட் பேர்னஸ் என்பவர் பல கருத்துக்களைக் கொடுத்தார்:

> நீங்கள் அவருக்குத் தவறு இழைத்திருந்தால், இழப்பீடு செய்யுங்கள். நீங்கள் அவருக்குச் செலுத்த வேண்டிய கடன் ஒன்று இருந்தால், அதைச் செலுத்துங்கள். நீங்கள் அவரது பண்பைச் சிதைத்திருந்தால், அதை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேளுங்கள். உங்களைப் பற்றி அவர் ஒரு தவறான மனக்கருத்தில் இருந்தால், உங்கள் நடக்கையானது அவர் மனதைக் காயப்படுத்தியதாக அவர் சந்தேகிக்கும்படி வழிநடத்தியிருந்தால், ஒரு விளக்கம் கூறுங்கள். விஷயத்தை நேராக்குவதற்கு *உங்கள் சக்தியில் முடிந்த யாவற்றையும்*, நீங்கள் *செய்ய வேண்டிய யாவற்றையும்* செய்யுங்கள்.[23]

நமது வேதபாட வசனப் பகுதியில் இயேசு, *மனதைப் புண்படுத்தியவருக்கு* (உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட) அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார். பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில் அவர் *மனம் புண்பட்டவருக்கு* அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார்: "உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்" (18:15). மனதைப் *புண்படுத்தியவர்* தமது சகோதரரிடத்தில் செல்ல வேண்டும் மற்றும் மனம் *புண்படுத்தப்பட்டவர்* தமது சகோதரரிடத்தில் செல்ல வேண்டும். அவர்கள் இருவருமே தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்தால், அவ்விருவருக்கும் இடையில் ஒரு மகிழ்ச்சியான சந்திப்பு ஏற்படும் - இதை லேரி கால்வின் என்பவர், "அன்பின் மோதல்" என்று முன்வைத்தார்.[24] இவ்விருவரில் யாரேனும் ஒருவர், தாம் செய்ய வேண்டியதைச் செய்யாது இருந்தால் என்னவாகும்? அது மற்றவருக்கு ஒரு சாக்குப்போக்காக இராது. நீங்கள், "நல்லது, அவர் *என்னிடத்தில்* வந்திருக்க வேண்டும்" என்று கூற முடியாது. *நீங்கள்* உங்கள் சகோதரர் அல்லது சகோதரியிடம் "செல்வது" மற்றும் "ஒப்புரவாகுதலுக்கு" அவசியமான *உங்களால்* இயன்ற எல்லாவற்றையும் செய்வது அவசியம் என்று இயேசு கூறினார்.

நீங்கள் அதைச் செய்த பிற்பாடு, "*பின்பு* வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்று இயேசு கூறினார் (5:24ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இவ்வார்த்தைகளைப் புதிய ஏற்பாட்டின் செயல்முறைகளுக்கு நடைமுறைப்படுத்துதல் கடினமானதல்ல. நீங்கள் ஆராதனைக்கு வந்து பாவங்களை மன்னிக்கும்படி தேவனிடத்தில் கேட்பதற்காக உங்கள் தலையை வணங்கும்போது, உங்கள் சகோதரர் அல்லது சகோதரி உங்களுக்கு எதிராகச் சிலவிஷயங்களைக் கொண்டிருப்பது உங்கள் நினைவுக்கு வந்தால், ஜெபிப்பதை நிறுத்துங்கள். "போய், முதலில் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியுடன் ஒப்புரவாகுங்கள்." பின்பு திரும்பி வந்து உங்கள் ஜெபத்தை

முடியுங்கள். கர்த்தருடைய பந்தியின்போது - உங்கள் பாவங்களுக்காக இயேசு மரணம் அடைந்ததை நீங்கள் நினைக்கையில் - நீங்கள் உங்கள் சகோதரர் அல்லது சகோதரிக்கு எதிராகப் பாவம் செய்திருக்கிறீர்கள் என்று நீங்கள் நினைவுகூர்ந்தால், அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியேறி அந்த சகோதரர் அல்லது சகோதரியுடன் ஒப்புரவாகுங்கள். பின்பு திரும்பி வந்து கர்த்தருடனும் மற்ற கிறிஸ்தவர்களுடனும் உங்கள் ஐக்கிய விருந்தில் கலந்து கொள்வதைச் செய்து முடியுங்கள்.

ஆண்டுகளினூடே நான், பல்வேறு காரணங்களுக்காக ஆராதனை கூட்டங்களை விட்டு வெளியேறும் மக்களைக் கண்டிருக்கிறேன், அவற்றில் சில காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக உள்ளன மற்றும் சில காரணங்கள் கேள்விக்குரியவையாக உள்ளன: மருந்து எடுத்துக் கொள்வதற்காக, அடங்காத பிள்ளைகளை வெளியே இட்டுச் செல்வதற்காக, அவர்கள் சுகவீனமாக இருப்பதினால், அவர்கள் கட்டாயமான வேலை ஒன்றைக் கொண்டிருப்பதினால், அல்லது சிலர் பிரசங்கத்தை விரும்பாது இருப்பதினால். நான் அறிந்த வரையில், ஒரு சகோதரர் அல்லது சகோதரியுடன் ஒப்புரவு ஆவதற்காக எவரொருவரும் வெளியேறிச் சென்றதை நான் ஒருக்காலும் கண்டதில்லை. J. W. மெக்கார்வீ என்பவர் இதை, “அடிக்கடி முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படும் ஒரு கடமை” என்று அழைத்துள்ளார்.[25]

மனம் புண்படுத்தப்பட்ட ஒரு சகோதரருடன் ஒப்புரவாகுதலின் அவசரத் தேவை என்பதே 23 மற்றும் 24ம் வசனங்களின் தெளிவான செய்தியாக உள்ளது. மற்ற செய்திகளும் நமது கவனத்தைக் கூவி அழைக்கின்றன. எடுத்துக்காட்டாக, சபைக்குச் செல்லுதல் என்பது தேவன் கட்டளையிட்டுள்ளவற்றை செய்தலுக்குப் பதிலியாக இருக்க முடியாது (1 சாமுவேல் 15:22ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்). ஒரு சகோதரருடன் நமக்குள்ள உறவானது தேவனுடன் நமக்குள்ள உறவின்மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது இன்னொரு வலிவான பாடமாக உள்ளது. யோவான், “தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?” என்று எழுதினார் (1 யோவான் 4:20).

எதிராளியுடன் (வசனங்கள் 25, 26)

நமது வேதபாட வசனப் பகுதியில் 25 மற்றும் 26ம் வசனங்களில் இயேசு, உடனடியான ஒப்புரவாகுதலின் தேவையைக் குறித்து இரண்டாவது உதாரணத்தைப் பயன்படுத்தினார். இவ்வசனங்களில் அவர், 22ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்ட சட்டரீதியான உருவகத்தைத் திருப்பினார். அவர், “எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும்” என்று தொடங்கினார் (வசனம் 25அ). “நியாயாதிபதியினிடத்தில்” என்பது antidikos என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இந்த சந்தர்ப்பப் பொருளில், இது “வழக்குத் தொடர்ந்திருக்கும் ஒரு எதிராளி” என்பதைக் குறிக்கிறது.[26] இந்த விவரிப்பில் வழக்கானது, அடைக்கப்பட வேண்டிய கடன் அல்லது குறைந்த பட்சம் அடைக்கப்பட வேண்டிய கடன் என்று எதிராளி நினைக்கும் கடனைப் பற்றியதாக உள்ளது (காண்க வசனம் 26).

இயேசு, “நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய்

அவனுடனே நல்மனம் பொருந்து" என்று கூறினார் (வசனம் 25இ). கிரேக்க வசனத்தில் இது நேரடியாக, "எதிராளியுடன் வழக்கைத் தீர்த்துக்கொள்" என்றுள்ளது.[27] நீங்கள் நல்மனதை அவரிடம் நீட்டிப்பதன் மூலம் அவரது நல்மனதை நாட வேண்டும் என்பதே மறைமுகமான கருத்தாக உள்ளது.[28] இவ்வார்த்தைகள் அவருடன் விஷயத்தைத் தீர்த்துக்கொள்ளுதல் என்பதையே அடிப்படையில் குறிப்பிடுகின்றன (NIV வேதாகமத்தில் காணவும்), ஆனால் ஒரு எதிராளியை ஒரு நண்பராக்கிக் கொள்ளுதல் என்பது நாம் கொண்டிருக்க வேண்டிய நல்லதொரு இலக்காக உள்ளது (காண்க வசனம் 44).[29] உங்கள் எதிராளி ஒருக்காலும் உங்கள் மிகச்சிறந்த நண்பராக இராதுபோகலாம், ஆனால் அப்போதும் நீங்கள் அவருடன் சமாதானம் செய்து கொள்ள முயற்சி செய்வது அவசியமாக உள்ளது.

"வழியில் இருக்கும்போதே" என்பது "நீதிமன்றத்திற்குச் செல்லும்-வழியில் இருக்கும்போதே" என்று அர்த்தப்படுகிறது. ஒரு சிறு நகரத்தில் இது நேரடியாகவே நடைபெற முடியும். இருசாராரும் நீதிமன்ற விசாரணைக்கு நடந்து செல்லுகையில், அவர்கள் ஒரே தெருவில் சந்திக்க முடியும். இது நேரடியான விஷயமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், விசாரணைக்கான நேரம் நெருங்கி வருகையில், குற்றம் சாட்டப்பட்டவர் இவ்விஷயத்தை நீதிமன்றத்திற்கு வெளியிலேயே தீர்த்து வைக்கத் தமது முயற்சிகளை வலுப்படுத்துதல் அவசியமானது.

"சீக்கிரமாய்" என்பது இவ்வசனத்தில் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. (சகோதரராக இருந்தாலும் அல்லது எதிராளியாக இருந்தாலும்) இன்னொருவருடன் எதிர்க்கருத்துக்கள் உள்ளபோது, காத்திருக்காதீர்கள். தயங்காதீர்கள்; உடனடியாக ஒப்புரவாகுங்கள். உங்களுக்கும் வேறு ஒருவருக்கும் இடையில் மோசமான உணர்வுகள் நிலவுகிறபோது, இயன்றவரையில் விரைவாக அவரை "நண்பராக்கிக் கொள்ளுங்கள்."

"எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக" நீங்கள் விஷயத்தை விரைவாகத் தீர்த்துக் கொள்ளுதல் அவசியம் என்று இயேசு கூறினார் (வசனம் 25அ, ஆ). "சேவகன்" என்பது நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற நியமிக்கப்பட்டவரைக் குறிக்கிறது. அந்த நாட்களில் மக்கள் தாங்கள் பட்ட கடனைச் செலுத்தத் தவறும்போது அவர்கள் சிறையில் அடைக்கப்பட முடிந்திருந்தது.

"நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்கும்மட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய்" என்று "மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என இயேசு கூறினார் (வசனம் 26). "ஒரு காசும் குறைவின்றி" என்பது ரோம நாணயத்தின் மிகசிறு மதிப்பான *குவாட்ரன்* என்பதாக இருந்தது.[30] செலுத்தப்படாத கடனுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் - அவர்களின் குடும்பத்தார், நண்பர்கள் அல்லது வேறு யாராலாவது - அந்தக் கடன் செலுத்தப்படும் வரையிலும் சிறையில் இருக்க வேண்டியிருந்தது.[31]

25 மற்றும் 26ம் வசனங்களில் இருந்து ஒருவேளை நாம், சாத்தியப்பட்டால் நீதிமன்றத்திற்குச் செல்லாது இருத்தலுக்கான நடைமுறைப் பயன்பாடு ஒன்றை எடுக்க முடியும். மற்றொரு சந்தர்ப்பத்தில் இயேசு இதே வார்த்தைகளை,

இன்னும் அதிக நேரடி நடைமுறைக்குப் பயன்படுத்தினார் (காண்க லூக்கா 12:57-59). 25 மற்றும் 26ம் வசனங்களில் ஒரு சிலர், உருவகம் ஒன்றைக் கூட கண்டிருக்கின்றனர். நாம் யாவரும் வாழ்வின் சாலையில் நியாயத்தீர்ப்பு தரப்படும் நீதிமன்றம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். அதே சாலையில், நாம் கருத்து வேறுபாடு கொண்டுள்ள மற்றவர்களும் நம்முடன் வந்துகொண்டிருக்கின்றனர். நமது வாழ்வு முடியுமுன்னர் (காண்க யாக்கோபு 4:14) மற்றும் வாய்ப்பு கடந்து செல்லும் முன்னர், நாம் அந்த வேறுபாடுகளை உடனடியாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இருப்பினும், இந்த விவரிப்பின் நாடகத்துவமான கருத்துக்களினால் வழிவிலக்கப்படாது இருங்கள். இயேசுவின் கருத்து, பற்றிக்கொள்ள சுலபமானதாக உள்ளது: சூழ்நிலை எதுவாக இருந்தாலும், நீங்கள் மற்றவர்களுடன் இணக்கமாக இராதபோது, "சீக்கிரமாக" ஒப்புரவாகுங்கள். அதை என்னால் முடிந்த அளவு பலமாகக் கூற என்னை அனுமதியுங்கள்: சீக்கிரமாக ஒப்புரவாகுங்கள். நம்மில் பலர், இன்னொருவருடன் கருத்து வேறுபாடு உள்ளபோது அவரிடத்தில் செல்லத் தாமதப்படச் சாய்கிறோம் என்பது உண்மையல்லவா? மகிழ்ச்சியற்ற தன்மையின் சாத்தியக்கூறு ஏதேனும் இருந்தால், நாம் செல்லாது இருந்து விடுகிறோம். இதன் விளைவாக, விஷயமானது சீழ்வைத்துப் போகிறது, மற்றும் அடிக்கடி அது ஏறக்குறைய பழுதுநீக்க இயலாத பிளவாகி விடுகிறது. இது உண்மை என்பதை நீங்கள் அறிகிறீர்கள். இருப்பினும் *சீக்கிரமாய்* நாம் அதுபற்றிச் செயல்பட்டால், விஷயமானது வழக்கமாகத் தீர்க்கப்படுவதாக உள்ளது.[32]

ஒரு ஓக் மரத்தைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த மரத்திலிருந்து கொட்டைகள் விழுகின்றன, அவற்றில் சில முளைக்கின்றன. அந்த மரக்கன்றுகள் சிறியவையாக இருக்கும்போது, அவற்றை மண்ணிலிருந்து சுலபமாக பரித்தெடுக்க முடிகிறது; ஆனால் அவைகள் அவ்வாறு பரித்து எடுக்கப்படவில்லை என்றால், கடைசியில் அவைகள் பெரிய ஓக் மரங்களாக வளர்ந்து விடும். அவ்வாறு நடைபெற்றபின்பு அவற்றை பறித்தெடுத்தல் சாத்தியமற்றதாக உள்ளது. அவற்றை வெட்டி எடுக்க மாத்திரமே முடியும், அவைகள் அப்போது மண்ணில் ஊறுஉண்டாக்கும் வகையில் கனத்த வேர்களைக் கொண்ட ஒரு அடிக்கட்டையை விட்டுச் செல்லும். கருத்து வேற்றுமை எழுகிற போது, கசப்புணர்வு வேரூன்ற வாய்ப்புக் கொடுத்து விடாதீர்கள். மாறாக, எதிராளியிடம் சீக்கிரமாகச் சென்று, எல்லாக் கருத்து வேற்றுமைகளையும் விரோதத்தையும் சாத்தியமானால் உடனடியாக நீக்கிப் போடுங்கள். "உங்கள் எதிராளியை *சீக்கிரமாக* நண்பராக்கிக் கொள்ளுங்கள்."

முடிவுரை

ஆறாவது கட்டளை, "கொலை செய்யாதிருப்பாயாக" என்று கூறிற்று; ஆனால் நீங்கள் மற்றவர்களைக் குறித்து பொல்லாத உணர்வுகளைக்கூடத் தேக்கி வைக்கக் கூடாது என்று இயேசு கூறினார். நீங்கள் உங்கள் இருதயத்தில் இருந்து கோபத்தையும் வெறுப்புணர்வையும், உங்கள் உதடுகளில் இருந்து இரக்கமற்ற வார்த்தைகளையும் நீக்கிப்போட வேண்டும். மேலும் நீங்கள் யாருடனாவது மனமுறிவு கொண்டிருந்தால், உங்களால் இயன்ற மட்டும் விரைவில் அவருடன் ஒப்புரவாக வேண்டும். நமது படிப்பின் போது நீங்கள் உங்கள் இருதயத்தையும் செயல்களையும் பரிசோதித்தீர்களா? நம்மில்

எவராவது, மோசமான உணர்வுகளை நமது இருதயங்களில் ஒருக்காலும் தேக்கிவைத்ததில்லை, அற்பமான அசுத்தமான விஷயங்களை ஒருக்காலும் கூறியதில்லை, நாம் மனம்புண்படுத்திய நபர்களிடம் எப்போதுமே விரைவாகச் சென்றிருக்கிறோம் என்று கூறமுடியுமா?

நமது வேதபாட வசனப்பகுதியில் இயேசு, உங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுடன் நீங்கள் கொண்டுள்ள உறவானது, தேவனுடன் நீங்கள் கொண்டுள்ள உறவின் மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெளிவாக்கினார். தேவனுடன் உங்கள் உறவு எப்படிப்பட்டதாக உள்ளது? உங்களுக்கும் அவருக்கும் இடையில் ஒரு தடை இருப்பதாகக் காணப்படுகிறதா? அது ஒருவேளை, உங்களுக்கும் கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரர் அல்லது சகோதரிக்கும் இடையில் ... அல்லது உங்களுக்கும் ஒரு குடும்ப உறுப்பினருக்கும் இடையில் ... அல்லது உங்களுக்கும் ஒரு அயலகத்தவருக்கும் இடையில் ... அல்லது உங்களுக்கும் நீங்கள் பணியாற்றும் அல்லது படிக்கும் இடத்தில் உள்ள யாரேனும் ஒருவருக்கும் இடையில் ... உள்ள தடையின் காரணமானதாக இருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், போய் ஒப்புரவாகுங்கள். பின்பு வந்து உங்கள் வாழ்வைப் பரலோகத்தில் உள்ள பிதாவுக்குப் பலியாகச் செலுத்துங்கள்.

குறிப்புகள்

[1]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 130. [2]KJV *வேதாகமத்தில் "பழங்காலத்தில் உள்ளவர்களால் கூறப்பட்டது" என்றுள்ளது. "பழங்காலத்தில்" அல்லது "பூர்வ காலத்தில் உள்ளவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர் ஒரு முன்னிடைச் சொல் தேவைப்படுகிற நான்காம் வேற்றுமைத் தொகையாக உள்ளது. கிரேக்க வசனத்தில் முன்னிடைச் சொல் எதுவும் இல்லை, எனவே ஒரு முன்னிடைச் சொல் தரப்படவேண்டியதாக உள்ளது, வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் "ஆல்" என்ற முன்னிடைச் சொல்லை கொடுத்தனர், அதே வேளையில் மற்ற பல மொழிபெயர்ப்புகள் "க்கு" அல்லது அதற்கு இணையான ஒரு முன்னிடைச் சொல்லை உட்செருகி இருக்கின்றனர். இவற்றில் எந்த மொழிபெயர்ப்பும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகவே உள்ளது. "ஆல்" பயன்படுத்தப்பட்டால், "பூர்வத்தார்" என்பவர்கள் கடந்த காலத்தில் வாழ்ந்த யூதப் போதகர்களாக இருந்தனர்.* [3]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 342. [4]*The American Heritage Dictionary*, 4th ed. (2001), s.v. "murder." [5]Vine, 337. [6]*ரோமர் சட்டத்தின்படி, ஒரு யூத நீதிமன்றம் மரண தண்டனையைச் செயல்படுத்த இயலாததாக இருந்தது. ரோமர்கள் அந்த உரிமையைத் தங்களுக்கென்று வைத்துக் கொண்டிருந்தனர். இருப்பினும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க யூத நீதிமன்றங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன.* [7]*இந்த சந்தர்ப்பப் பொருளில், "சகோதரன்" என்பது ஆண் மற்றும் பெண் என்ற இருவரையும் குறிக்க பொதுவான கருத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.* [8]Vine, 26-27. [9]Barclay, 135-36. [10]William Evans, "Wrath," *The International Standard Bible Encyclopedia,* ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 5:3113.

[11]*சிலர், "இவ்வார்த்தை, கொள்கையின் இறுக்கத்தை மென்மைப் படுத்துவதற்காக,*

பிரதியெடுத்தவர்களால் கூட்டப்பட்டது" என்று நினைக்கின்றனர் (Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament* [New York: United Bible Societies, 2001], 13). [12]Adapted from Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 61. [13]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 13. *மத்தேயு 15:19ல் இயேசு, "பொல்லாத சிந்தனைகள்" மற்றும் "கொலைகள்" ஆகியவற்றை ஒன்றாகப் பிணைத்தார்.* [14]Vine, 504. [15]Ibid., 132. [16]Ibid., 246. [17]*இயேசு மக்களின் இருதயங்களை அறிந்திருந்தார் (காண்க யோவான் 2:25), மற்றும் அவர் மாம்சத்தில் வந்த தேவனாக இருந்தார் (மத்தேயு 1:23; யோவான் 1:14).* [18]Cox, 13. [19]*இந்த பள்ளத்தாக்கு - "ஹின்னோனின் மகனுடைய பள்ளத்தாக்கு" என்று அர்த்தப்படும் வகையில், "பென் - ஹின்னோம் பள்ளத்தாக்கு" என்றும் அழைக்கப்படுகிறது - யோசுவா 15:8; 18:16; நெகேமியா 11:30 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.* [20]*"தீக்கடக்கப் பண்ணுதல்" என்பது, பலியாக நெருப்பில் இடுதல் என்று அர்த்தப்படுகிறது. அதிர்ச்சியூட்டும் இந்த நடைமுறை பற்றிய வரைவளவான ஒரு விவரிப்பு* Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 53 *என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.*

[21]Adapted from D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 149. [22]*பலிசெலுத்துபவர் தவறியுள்ளார் என்று இவ்வசனப்பகுதி மறைமுகமாய் உணர்த்துகிறது, ஆனால் இதை உரைப்பதில்லை. ஒருவர் தவறியிரா விட்டாலும், மனம் புண்பட்டுள்ள சகோதரருடன் ஒப்புரவாகுவதற்கு அவர் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதால் இது முக்கியமற்ற கருத்தாக உள்ளது.* [23]Barnes, 54. [24]Adapted from Larry Calvin**,** *The Power Zone* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 64-66. [25]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 55. [26]Vine, 15. *"நியாயப்பிரமாணத்திற்கு விரோதியாக" என்பதற்கு பதிலாக* KJV*ல் "எதிரி" என்றுள்ளது.* [27]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament,* 2nd ed. (London: Samuel Bagster & Sons, 1958), 12. [28]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1976), 137. [29]*"ஒரு எதிராளியை அழிப்பதற்கு அவரை நண்பராக்கிக் கொள்ளுதலே மிகச்சிறந்த வழியாக உள்ளது" என்று ஆபிரகாம் லிங்கன் கூறினார்* (http://www.quoteworld.org/quotes/8335; Internet; accessed 30 May 2008). [30]*ஒரு குவாட்ரன் என்பது தினேரியஸ் என்பதின்* 1/64 *பகுதியாக இருந்தது. இந்த குவாட்ரன் என்பது தேவாலயக் காணிக்கைப் பெட்டியில் ஏழை விதவை இட்ட தொகைக்குச் சமமானதாக இருந்தது (மாற்கு 12:42).* (Vine, 227.)

[31]*26ம் வசனம், "எடுத்துரைப்பு வலைப் பின்னலின் பகுதியாக உள்ளது என்பதையும் அது உத்தரிப்பு ஸ்தலம் என்பதற்கான நியாயப்படுத்துதலைத் தருவதில்லை என்பதையும்" கவனியுங்கள்* (Carson, 150). [32]*நாம் சீக்கிரமாகச் சென்றாலும், எப்போதுமே தீர்வு ஒன்று இருப்பதில்லை; ஆனால் நம்மால் இயன்றதைச் செய்தோம் என்று நாம் அறிவது அவசியமாக உள்ளது (காண்க ரோமர் 12:18).*

5

விபசாரத்தைத் தவிர்ப்பது எப்படி

(மத்தேயு 5:27-32)

யூத மக்களுக்குக் கூறப்பட்டு இருந்தவற்றிற்கும் அவர்கள் வாழ வேண்டிய முறைக்கும் இடையிலான நேர்மாறுகளின் வரிசை ஒன்றை இயேசு எடுத்துரைத்தார். அவர்கள் - "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற - ஆறாவது கட்டளையை அறிந்திருந்தனர் (மத்தேயு 5:21; காண்க யாத்திராகமம் 20:13) - ஆனால் கொலையை விளைவிக்கக்கூடிய கோபமான ஒரு சிந்தனையும் தவறனதாக உள்ளது என்று இயேசு வலியுறுத்தினார். பாவம் நிறைந்த செயலுக்குப் பின்னால் உள்ள பாவம் நிறைந்த சிந்தனை ஒன்றின் பின்சென்ற இன்னொரு நேர்மாறுடன் அந்த உதாரணத்தை இயேசு பின்தொடர்ந்ததை நாம் இந்தப் பாடத்தில் காண்போம்.

நமது வேதபாட வசனப்பகுதி ஏழாவது கட்டளையுடன் தொடங்குகிறது: "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:14; மத்தேயு 5:27). தேவன் உடல்ரீதியான விபசாரத்தை கண்டனம் செய்தார் என்று யூதர்கள் புரிந்துகொண்டிருந்தனர், ஆனால் மனரீதியான விபசாரமும் சட்டப்பூர்வமான விபசாரமும் கூட பாவம் நிறைந்தவையே என்று இயேசு அவர்களுக்குக் கூறினார். இந்தப்பாடத்தை நான், "விபசாரத்தைத் தவிர்ப்பது எப்படி" என்று அழைக்கிறேன்.

உங்கள் இருதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (5:27-30)

உங்கள் சிந்தனைகளைக் கவனியுங்கள் (வசனங்கள் 27, 28)!

விபசாரத்தைத் தவிர்ப்பதற்கு உங்கள் இருதயத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நமது வேதபாட வசனப்பகுதி "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்று இயேசு கூறுதலுடன் தொடங்குகிறது (வசனம் 27). அவர் ஏழாவது கட்டளையைக் குறிப்பிட்டார். "விபசாரம் செய்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, "வேறொருவரின் துணைவருடன்/துணைவியுடன் சட்ட விரோதமான உடல் உறவு கொண்டிருக்கும்" ஒருவரைப் பொதுவாகக் குறிப்பிடும் (*moichos* என்ற) வார்த்தையின் வினைச் சொல் வடிவமாக உள்ளது.[1] இருப்பினும் நாம் காணப்போகிறபடி, இவ்வசனப் பகுதியானது பிற்பாடு, பாலுறவு தொடர்பான பாவத்திற்கான இன்னும் அதிகக் கருத்துக்களை உள்ளடக்கிய (*porneia* என்ற

வார்த்தையின் ஒரு வடிவத்தை) ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறது. அனேகமாக நாம், ஏழாவது கட்டளையானது பாலியல் பாவம் எல்லாவற்றையும் கண்டனம் செய்கிறது என்று நினைக்க வேண்டும்,[2] தேவன் அங்கீகரித்துள்ள திருமணத்திற்குப் புறம்பே இருவருக்கு இடையிலான பாலுறவு தொடர்பான உடல் உறவு எதையும் இது கண்டனம் செய்கிறது.

திருமண உறவைப் பாதுகாக்கவே ஏழாவது கட்டளை முதன்மையாகத் தரப்பட்டது, மற்றும் அதற்குக் கீழ்ப்படியாதிருத்தலுக்கான தண்டனை கடுமையானதாக இருந்த (காண்க லேவியராகமம் 20:10; உபாகமம் 22:22-27). விபசாரத்தின் உண்மையான செயல் மாத்திரமே தவறானது என்று யூத போதகர்கள் போதித்தனர் என்பதே பிரச்சனையாக இருந்தது. பத்தாவது கட்டளை, அயலகத்தவரின் மனைவியைக் கவர்ந்து கொள்ளுதலைக் கண்டனம் செய்தது (யாத்திராகமம் 20:17), இது விபசாரத்திற்கு முன்பு ஏற்படும் விருப்பமும் தவறானது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது; ஆனால் யூத போதகர்கள், சட்டவிரோதமான விருப்பத்தின்மீது சிறிதளவே வலியுறுத்தம் வைத்தனர் என்பது தெளிவு.

விபசாரம் செய்தலைப் போன்றே விபசாரத்தை உண்டாக்கும் சிந்தனையும் பாவம் நிறைந்ததாக உள்ளது என்று இயேசு கூறினார்:[3] “நான்[4] உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று” (மத்தேயு 5:28). 28ம் வசனத்தைப் பொறுத்தமட்டில், ஆணுக்கு உண்மையாக உள்ளது எதுவோ, அது பெண்ணுக்கும் உண்மையாக உள்ளது[5]. ஒரு ஆணை இச்சையோடு பார்க்கிற எந்தப் பெண்ணும், தன் இருதயத்தில் அவனோடே ஏற்கனவே விபசாரம் செய்திருக்கிறாள். சிந்தனைகளில் இருந்தே செயல்கள் வருகின்றன என்பது இதன் கீழ் உள்ள கொள்கையாக இருக்கிறது (காண்க மத்தேயு 15:19). அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படும் ஒரு பழமொழி பின்வருமாறு கூறுகிறது,

> சிந்தனை ஒன்றை விதைத்தால் செயல் ஒன்றை அறுக்கிறீர்கள்,
> செயல் ஒன்றை விதைத்தால் பழக்கம் ஒன்றை அறுக்கிறீர்கள்,
> பழக்கம் ஒன்றை விதைத்தால் பண்பு ஒன்றை அறுக்கிறீர்கள்,
> பண்பு ஒன்றை விதைத்தால் அடைவிடம் ஒன்றை அறுக்கிறீர்கள்.[6]

உங்கள் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் முதலில் உங்கள் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நான் இரண்டு உரிமைத் துறப்புகளைக் கூடுதலாகக் கூறுதல் அவசியமாகிறது. முதலாவது, எதிர்ப்பாலினத்தவர் ஒருவரை வெறுமனே கண்ணோக்குதல் பற்றி இயேசு பேசவில்லை. பரிசேயர்களில் மிகவும் கண்டிப்பானவர்கள் “இரத்தம் சிந்தும் பரிசேயர்கள்” என்று அழைக்கப்பட்டனர்.[7] அவர்கள் ஒரு பெண்ணைக் கண்ணால் பார்த்தலைத் தவிர்ப்பதற்காகத் தரையையே பார்த்துக்கொண்டு நடந்ததால் இவ்வாறு அழைக்கப்பட்டனர். இவ்வாறு அவர்கள் தொடர்ந்து, மரங்கள், தூண்கள் மற்றும் சுவர்கள் ஆகியவற்றின்மீது மோதிக்கொண்டனர் - இதன் விளைவாக அவர்கள் நெற்றிகளில் இரத்தம் வழிந்தது. இரத்தம் சிந்தும் முன்னந்தலைகளை இயேசு பரிந்துரைக்கவில்லை. அவர் “ஒரு ஸ்திரீயை *பார்க்கிற* எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று” என்று

கூறவில்லை. மாறாக அவர், "ஒரு ஸ்திரீயை *இச்சையோடு*[8] பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்றே கூறினார். ஒரு பேச்சாளர், "அழகான மலர் ஒன்றைக் கண்ணோக்குதல் அல்லது அதைப் பாராட்டுதல் கூட தவறு இல்லை. ஆனால் அந்த மலர் உங்களைப் படபடக்கச் செய்யத் துவங்கினால் அதைவிட்டு - விரைவாக - நீங்கிச் சென்று விடுங்கள்!" என்று கூறியதை நான் ஒருமுறை கேள்விப்பட்டேன். ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "பார்த்தல் மற்றும் இச்சித்தல் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்" என்று எழுதினார்,[9] மற்றும் அவர் அனேகமாகச் சரியானதையே கூறியிருக்கிறார்.

ஒருவர் தமது சொந்த மனைவி அல்லது கணவர் மீது கொண்டுள்ள விருப்பத்தை இயேசு மனதில் கொண்டிருக்கவில்லை என்பது இரண்டாவது உரிமைத்துறப்பாக உள்ளது. அந்த விருப்பம் தேவனால் தரப்பட்டதாகவும் திருமணத்தைப் பலப்படுத்தும் நோக்கங் கொண்டதாகவும் (காண்க ஆதியாகமம் 2:24; மத்தேயு 19:6) மனித இனத்தைப் பெருகச் செய்வதை உறுதிப்படுத்துவதாகவும் (காண்க ஆதியாகமம் 1:27. 28அ) உள்ளது. நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள "இச்சை" என்ற வார்த்தை, "பலத்த விருப்பம்" என்று அர்த்தப்படுகிற (*epithumia* என்ற) வார்த்தையில் இருந்து வருகிறது. இவ்வார்த்தை ஒரு நல்ல விருப்பத்தைக் குறிப்பிடக்கூடும், ஆனால் வழக்கமாக - இது இவ்விடத்தில் கொண்டுள்ளபடி - "இது ஒரு மோசமான கருத்தையே" கொண்டுள்ளது.[10] ஒரு தனிநபர், தமது மனைவி அல்லாத, அல்லது ஒருத்தி தமது கணவர் அல்லாத யாரேனும் ஒருவரை இச்சையுடன் பார்த்தலை இவ்விடத்தில் இயேசு குறிப்பிட்டார்.

சிலர், "ஆனால் அது மிகவும் கடினமானதாக உள்ளது. இச்சை நிறைந்த எண்ணங்கள் எனது தலைக்குள் வந்து தாமாகவே வெடிக்கின்றனவே. அதன் மீது நான் உண்மையான கட்டுப்பாடு எதையும் கொண்டிருக்கவில்லையே" என்று கூறி மறுப்புரை தெரிவிக்கிறார். இது ஒரு அறைகூவலாக உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது இயேசுவின் நாட்களில் இருந்ததைக் காட்டிலும் அதிகம் கடினமாக உள்ளதா என்று நான் அறிவதில்லை, ஆனால் அது நிச்சயமாகவே கடினமாக உள்ளது. நம்மில், மேற்கத்திய உலகத்தில் வாழ்கிறவர்கள், ஒழுக்கவீனமாக "பொழுதுபோக்கினால்" மற்றும் கெடுக்கும் விளம்பரங்களினால் சூழப்பட்டு இருக்கிறோம்.[11] ஊடகம், கிறிஸ்தவ மதிப்பீடுகள் மீது சிறிதளவே அனுதாபம் கொண்டுள்ளது, மற்றும் இணைய வலைத்தளம் ஆபாச இலக்கியத்தால் நிறைந்துள்ளது. ஒருவர் தமது இருதயத்தைச் சுத்தமாகக் காத்துக்கொள்ள முயற்சி தேவைப்படுகிறது - ஆனால் இயேசுவைப் பின்பற்றுதல் குறித்து தனிநபர் ஒருவர் தீவிரமாக இருந்தார் என்றால் அது (இருதயத்தைச் சுத்தமாகக் காத்துக்கொள்ளுதல் என்பது) செய்யப்பட முடியும். தேவபக்தியற்ற சிந்தனைகள் தடைசெய்யப்பட இயலாத வகையில் மனதிற்கு வரும்போது, அவற்றில் தங்கியிராதீர்கள். உங்கள் மனதை ஆரோக்கியமான தலைப்புகளை நோக்கித் திருப்புங்கள் (காண்க பிலிப்பியர் 4:8) மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளில் தீவிரமாய் ஈடுபடுங்கள்.

தீவிரமான அறுவைச் சிகிச்சை தேவைப்படும் போது (வசனங்கள் 29, 30)

மற்ற ஆலோசனைகள் தரப்படலாம், ஆனால் நாம் இயேசுவின் சிகிச்சையை

நோக்கித் திரும்புவோமாக. 29 மற்றும் 30ம் வசனங்களில் அவரது வார்த்தைகள், அவற்றை முதன்முறை கேள்விப்படும்போது, அதிர்ச்சியூட்டுபவையாக உள்ளன:

> உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும், உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்.

இது இயேசுவுக்குப் பிரியமான கூற்றாக இருந்தது என்பது உறுதி. இதேபோன்ற மொழிநடையை நீங்கள் மத்தேயு 18:8, 9ல் காண்பீர்கள். கண் என்பது இச்சை என்ற விஷயத்துடன் அடிக்கடி இணைவு கொண்டிருப்பதால் இயேசு தமது விவரிப்பில் கண்ணைப் பயன்படுத்தி இருக்கலாம். யோவான், "கண்களின் இச்சை" பற்றி எழுதினார் (1 யோவான் 2:16). காணுதலுக்கு அப்பால் செயல்படச் செல்லுதலைச் சுட்டிக்காண்பிப்பதற்காக கை என்பது உள்ளடக்கப்பட்டிருக்கலாம்.

"இடறலுண்டாக்கினால்" என்பது "தொடக்கத்தில், வலையில் இரை இணைக்கப்பட்டுள்ள பகுதியின் பெயராக இருந்த" *skandalon* என்ற வேட்டைத் தொழில் தொடர்பான வார்த்தையின் வினைச்சொல் வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [பிற்பாடு] இது வலையையே குறிப்பிட வந்தது.[12] உங்கள் வலது கண்ணோ அல்லது உங்கள் வலது கையோ, மனரீதியான விபசாரத்தில் நீங்கள் அகப்படக் காரணமாக உள்ளது என்றால் அதை நீங்கள் நீக்கிப் போட வேண்டும் என்று இயேசு கூறினார்.

இது பல கேள்விகளைத் தூண்டுகிறது. "இயேசு *வலது* கையையும் *வலது* கண்ணையும் குறிப்பிட்டது ஏன்?" என்பது முக்கியத்துவம் குறைவான ஒரு கேள்வியாக உள்ளது. பெரும்பான்மையான மக்கள் வலது கைப் பழக்கம் உள்ளவர்களாக இருப்பதால், அவர் வலது கையைக் குறிப்பிட்டிருக்கலாம். நம்மில் பெரும்பான்மையானவர்களுக்கு, வலது கை என்பது அதிகம் திறன் உடையதாக உள்ளது மற்றும் அது இல்லையென்றால் நாம் அதிகமானவற்றைத் தவறவிடுவோம். (நான் இவ்வளவு எழுதுகிறவனாக இருக்கையில், எனது வலதுகையை இழந்து எனது இடது கையால் எழுதக் கற்றுக்கொள்ளுதல் என்பது மிகவும் வசதிக்குறைவானதாக இருக்கும்!) மேலும், வேதவசனங்களில் "வலது கரத்தின் பக்கம்" என்பது கனத்திற்குரிய இடமாக உள்ளது (காண்க மாற்கு 16:19; நடபடிகள் 2:33; கொலோசெயர் 3:1).[13] வலது கண்ணைப் பற்றிய விஷயம் என்ன? அது வலது கையுடன் செல்கிறது. உங்கள் வலது கண்ணை மூடிக்கொள்ளுங்கள், அப்போது வலது கையானது அதன் செயல்பாட்டுப் பரப்பில் மட்டுப்படுத்தப் பட்டதாகி விடும். வலது கண்ணையும் வலது கையையும் நீக்கிப்போடுதல் என்பது ஒருவர் செய்ய முடிந்தவற்றைக் கடுமையாகப் பாதிக்கும்.

அது நம்மை மிகவும் முக்கியமான கேள்விக்குக் கொண்டுவருகிறது: "வலது கண்ணைப் பிடுங்கி எறிந்து போடும்படி அல்லது வலது கையைத் தறித்து எறிந்து போடும்படி இயேசு கூறியபோது, அவர் எதை *அர்த்தப்படுத்தினார்?*"

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் சிலர், இயேசுவின் இந்த வார்த்தைகளை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொண்டு, தங்கள் கண்களைத் தோண்டி எடுத்தனர், தங்கள் கைகளை வெட்டிக் கொண்டனர் அல்லது இச்சையைத் தவிர்க்கும் முயற்சியாக மற்ற அறுவைச் சிகிச்சைகளைச் செய்துகொண்டனர் என்று வரலாறு பதிவு செய்துள்ளது. நாம் இயேசுவின் போதனையைப் பலவீனமாக்கும் குற்றம் செய்தவர்களாக இருக்க விரும்புவதில்லை, ஆனால் - குறைந்த பட்சம், பின்வரும் மூன்று காரணங்களினால் - அவரது கூற்று நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்று நாம் முடிவு செய்கிறோம்:

- ஒரு நேரடியான பொருள்விளக்கம் *செயல்விளைவற்றதாக* இருக்கும்.[14] ஒரு கண்ணை அல்லது ஒரு கையை நீக்கிப்போடுதல் என்பது இருதயத்தில் இருந்து இச்சையை நீக்கிப் போடாது.
- ஒரு நேரடியான பொருள்விளக்கம் *தர்க்கரீதியற்றதாக* இருக்கும். ஒருவர் தமது வலது கண்ணையும் வலது கையையும் நீக்கிப்போட்டால், அவர் இன்னமும் தமது இடது கண்ணையும் தமது இடது கையையும் கொண்டிருப்பார். அவர் இன்னமும் இச்சை நிறைந்த பார்வை மற்றும் இச்சை நிறைந்த செயல் ஆகியவற்றைச் செய்யக்கூடியவராகவே இருப்பார்.
- ஒரு நேரடியான பொருள்விளக்கம் *சீர்பொருத்தம் அற்றதாக* இருக்கும். இது, சரீரமானது பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாக உள்ளது மற்றும் அது தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்ற புதிய ஏற்பாட்டின் போதனைக்குச் சீர்பொருத்தம் அற்றதாக இருக்கும் (1 கொரிந்தியர் 3:16, 17; 6:19, 20).

ஆகவே இயேசுவின் வார்த்தைகள் நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப் படக்கூடாது - ஆனால் அது அவைகள் *தீவிரமானவையாக* எடுத்துக்கொள்ளப் படக்கூடாது என்று அர்த்தப்படுவதில்லை. அவரது உருவகம், நன்கு அறியப்பட்ட பின்வரும் மருத்துவக் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது: உடல் முழுவதையும் காப்பதற்காக உடலில் பழுதடைந்த பாகத்தை நீக்குதல். இந்த நடைமுறை இன்றைய நாட்களில் பொதுவானதாக உள்ளது. நீண்ட நாட்களுக்கு முன்பும்கூட, தசை அழுகுதல் ஏற்படத் தொடங்கினால், உயிரைப் பாதுகாப்பதற்கு சிதைவடைந்த உறுப்பு நீக்கப்பட வேண்டும் என்பது பொதுவாக உய்த்துணரப்பட்டது.[15] சிதைவடைந்த உறுப்பு நீக்கப்படாவிட்டால், தசை அழுகல் முழு உடலுக்கு பரவி மரணத்தை விளைவிக்கும். செயல்விளைவில் இயேசு, உங்கள் வாழ்வில் மனரீதியான விபசாரத்திற்கு உங்களை ஒப்புக்கொடுக்கும் உங்கள் வாழ்வின் பங்களிப்பு *எதுவும்* இருந்தால், உங்களுக்கு ஆவிக்குரிய வகையில் தீவிரமான அறுவைச் சிகிச்சை தேவை என்று கூறினார்: அதை உங்கள் வாழ்வில் இருந்து நீக்கிப்போடுங்கள்! ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> இடர்ப்பாடு ஏற்படுத்தும் கண்களை [அல்லது] கைகளை நீக்குதலுக்கான கட்டளையானது ... பேச்சின் நாடகத்துவமான உருவகங்களை நமது கர்த்தர் பயன்படுத்தியதன் உதாரணமாக உள்ளது. நேர்ப்பொருளில்

உடல்ரீதியாக ஒருவர் தம்மைத்தாமே முடமாக்கிக் கொள்ளுதல் என்பதை அவர் பரிந்துரைக்கவில்லை. ஊனமாக்குதல் அல்ல ஆனால் ஒறுத்து அடக்குதல் என்பதே பரிசுத்தத்தின் பாதையாக உள்ளது என்று அவர் போதித்தார் ...[16]

"ஒறுத்து அடக்குதல்" என்பது "மரணத்தை ஏற்படுத்துதல்" என்பதைக் குறிக்கிறது. வேதாகமத்தின்படி, பவுல் "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை *அழித்தால்* பிழைப்பீர்கள்" என்று கூறினார் (ரோமர் 8:13; என்னால் வலியுறுத்தப்படுகிறது). NASB வேதாகமத்தில் இவ்வசனப் பகுதியில் "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை *மரணம் அடையச் செய்தால்* நீங்கள் பிழைப்பீர்கள்" என்று வாசிக்கிறோம் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).[17] அசுத்தமான சிந்தனை கொண்டிருக்கக் காரணமான எந்த விஷயத்தையும் நாம் "மரணம் அடையச்" செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாம், "ஆனால் அந்த விஷயம் எனக்கு மதிப்பு மிக்கதாக இருந்தால் என்ன செய்வது?" என்று கேட்கலாம். வலது கை மற்றும் வலது கண் ஆகியவை இயேசுவின் நாட்களில் மிகவும் முக்கியமானவைகளாக இருந்தாகக் கருதப்பட்டன - இன்றைய நாட்களிலும் அவை இன்றியமையாதவைகளாகவே உள்ளன. உங்கள் வலது கண் அல்லது வலது கை போன்று ஏதேனும் ஒரு விஷயம் மதிப்பு மிக்கதாக இருந்தாலும், அது நீங்கள் அசுத்தமான சிந்தனைகளைக் கொண்டிருக்க ஊக்குவிக்கும் என்றால், அதை நீக்கிப்போடுங்கள் அல்லது அதைத் தவிர்த்து விடுங்கள்.

அது இன்னொரு கேள்வியைத் தூண்டுகிறது: "குறிப்பாக நீங்கள் எந்த விஷயத்தை அல்லது விஷயங்களைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" நான் பொதுவான ஆலோசனைகளை ஏற்படுத்துகையில், அந்தக் கேள்விக்கு என்னால் உங்களுக்குப் பதில் அளிக்க இயலாது. இயேசு, "உன் வலது கண் *உனக்கு*; ... உன் வலது கை *உனக்கு* இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு," இடறலுண்டாக்கினால், அதைப்பிடுங்கி எறிந்துபோடு என்று கூறினார். உங்களுக்கு இடறல் உண்டாக்குவது எது? *நீங்கள்* அசுத்தமான சிந்தனைகளைக் கொண்டிருக்கக் காரணமாவது எது? அது குறிப்பிட்ட சில புத்தகங்களாக அல்லது இதழ்களாக அல்லது மற்ற வெளியீடுகளாக இருக்கலாம்.[18] அது குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாக அல்லது திரைப்படங்களாக இருக்கலாம். அது இணைய வலைத்தளமாக இருக்கலாம். அது ஒரு குறிப்பிட்ட தனிநபருடன் அல்லது தனிநபர்களின் குழு ஒன்றுடனான உங்கள் இணைவாக இருக்கலாம் (காண்க 1 கொரிந்தியர் 15:33). அது என்னவாக இருந்தாலும் அதை உங்கள் வாழ்வில் இருந்து நீக்கிப்போட்டு அதைத் தூர எறிந்து விடும்படி இயேசு கூறினார்.

இயேசுவைப் பின்பற்றி இருந்தவர்களில் சிலர், குறிப்பிட்ட சில போதனைகளைப் பற்றி, ஒரு சந்தர்ப்பத்தில் "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" என்று கூறினர் (யோவான் 6:60). சிலருக்கு, இச்சை நிறைந்த சிந்தனைகளைத் தூண்டுகிற எந்த விஷயத்தையும் மற்றும் ஒவ்வொரு விஷயத்தையும் அவர்கள் வாழ்வில் இருந்து நீக்கிப்போட வேண்டும் என்ற கருத்து "கடினமான உபதேசமாக" உள்ளது. மத்தேயு 5:29ல் இயேசு, செயல்

விளைவில், உங்களுக்கு மிகவும் முக்கியமானது எது: "உங்கள் கண்ணும் கையுமா அல்லது பரலோகத்திற்குச் செல்லுதலா?" என்றே கேட்டார். இயேசு, "உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" என்று கூறினார். இதை நாம் தவறவிட்டு விடாதபடிக்கு அவர் இதை இருமுறை கூறினார். நான் நரகத்திற்குச் செல்ல விரும்பவில்லை; நான் அங்கு செல்வதைக் தவிர்ப்பதற்காக நான் எதைவேண்டுமானாலும் செய்வேன்! நீங்களும் அவ்வாறே உணருவதில்லையா? நீங்கள் நகரத்திற்குச் *செல்வதில்லை* மற்றும் நீங்கள் பரலோகத்திற்குச் *செல்லுகிறீர்கள்* என்பதை உறுதிப்படுத்துவதற்கு, தேவையென்றால் எந்த தியாகத்தையும் செய்தல் தகுதியானதாக இருப்பதில்லையா?

நமது சிந்தனைகளைத் தூய்மையாகக் காத்துக்கொள்ளுதல் குறித்து, *நம்மால் முடிந்தவற்றை* நாம் முதலில் செய்வோமாக. நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும் என்று பவுல் அறைகூவல் விடுத்தார் (பிலிப்பியர் 2:2; காண்க 4:8). இருப்பினும் நமக்குக் *கர்த்தரிடமிருந்தும்* உதவி தேவைப்படுகிறது. "ஆவியினாலே" நாம் சரீரத்தின் கிரியைகளை அழிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:13). தேவனுடைய உதவியுடன் நாம் பாவத்தைக் குறித்து உடனடியாகவும் தீர்மானமாகவும் செயல்பட வேண்டியுள்ளது. அதை *கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கும்படி* இயேசு கூறவில்லை; அதை *வெட்டி எறியும்படி* அவர் கூறினார்![19]

உங்கள் திருமணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (5:31, 32)

உங்கள் திருமணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்பது விபசாரத்தைத் தவிர்க்கும் இன்னொரு வழியாக உள்ளது. இயேசு, மனரீதியான விபசாரத்தைப் பற்றிக் கலந்துரையாடிய பின்பு, 31 மற்றும் 32 ஆகிய வசனங்களில் அவர், "சட்டப்பூர்வமான விபசாரம்" என்று நாம் அழைக்கும் விஷயத்திற்குத் திரும்பினார். இந்த வசனங்கள் தனிப்பட்ட நேர்மாறாக இருப்பதாகச் சிலர் நினைக்கின்றனர்; ஆனால் அவைகள், விபசாரம் பற்றிய இயேசுவின் போதனைகளைத் தொடருவதால், அவற்றை இப்போது நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.[20]

இவ்வசனப் பகுதியை நான், சற்றே அச்சத்துடன் அணுகுகிறேன். முதலாவதாக இவ்வசனங்கள், மிகமிக நேரெதிரானவையாக உள்ளன. இரண்டாவதாக, இங்கு கலந்துரையாடப்படும் பாடப்பொருள் மிகவும் உணர்ச்சியுள்ளவையாக உள்ளது. நான் எவரொருவரின் வேதனையையும் கூட்ட விரும்புவதில்லை, ஆனால் நான் "தேவனுடைய ஆலோசனை முழுவதையும் உங்களுக்கு அறிவிப்பதில் இருந்து சுருங்கினால்" தேவனுடைய பேச்சாளர்களில் ஒருவனாக இருத்தல் என்ற எனது பணிப்பொறுப்பிற்கு நான் உண்மையுள்ளவனாக இருக்க இயலாது (நடபடிகள் 20:27).

கூறப்பட்டுள்ளது என்ன (வசனம் 31)

இயேசு முதலில், கடந்த காலத்தில் போதிக்கப் பட்டு இருந்தது

என்ன என்பதைப் பற்றிய குறிப்பை ஏற்படுத்தினார்: "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது" (மத்தேயு 5:31). இது பழைய ஏற்பாட்டில் இருந்து வந்த மிகச் சரியான மேற்கோளாக இருப்பதில்லை, ஆனால் இது பழைய ஏற்பாட்டின் பின்வரும் வசனப் பகுதியின் அடிப்படையில் அமைந்துள்ளது: உபாகமம் 24:1-4. இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள் இந்த வசனப்பகுதியைத் தவறாகப் பயன்படுத்தினர். ஒருவன் தன் மனைவியைத் தள்ளி விட விரும்பினால், அவன் செய்ய வேண்டியதெல்லாம், அவளுக்கு தள்ளுதல் சீட்டைக் கொடுத்து அனுப்பிவிடுதல் என்பதே. ஆனால் உபாகமம் 24:1-4ன் நோக்கம் அதுவாக இருந்ததில்லை. இவ்வசனப் பகுதியை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> "ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம்.[21] அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்துபோனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; ..."

இந்த நான்கு வசனங்களும் நீளமான ஒரே வாக்கியமாக உள்ளன என்பதைக் கவனியுங்கள். தள்ளுதலின் சீட்டு என்பது இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இது முதன்மை நோக்கத்திற்குத் தற்செயலானதாக உள்ளது. 4ம் வசனம் வரையிலும் பிரதான உட்பிரிவு வாக்கியம் அடையப்பட்டு இருப்பதில்லை. ஒரு கணவர் தமது மனைவியைத் தள்ளிவிட்டால், அவர் மீண்டும் அவளைத் திருமணம் செய்துகொள்ளுதல் என்பது ஒருக்காலும் முடியாதிருந்தது என்பதே இவ்வசனப் பகுதியின் வலியுறுத்தமாக உள்ளது.

உபாகமம் 24:1-4 வசனப்பகுதி, விவாகரத்தை ஊக்குவிப்பதற்காகத் தரப்பட்டதா? அது ஒரு மனிதர் விவாகரத்தைப் பெறுவதைச் சுலபமாக்கும் நோக்கம் கொண்டிருந்ததா? இல்லை. வேறொரு இடத்தில் இயேசு, இந்தச் சட்டம் யூதர்களின் பாவம் நிறைந்த தன்மையின் காரணமாகத் தேவனால் அனுமதிக்கப்பட்ட தற்காலிகச் சலுகையாக மாத்திரமே இருந்தது என்று சுட்டிக் காண்பித்தார் (மத்தேயு 19:8). லேரி கால்வின் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> பழைய ஏற்பாட்டின் காலங்களில், யூத ஆண்கள் பெண்களைத் திருமணம் செய்து, அவர்களின் சீதனங்களைச் செலவழித்துவிட்டு, அந்தப் பெண்கள் தங்களைத் தாங்களே ஆதரித்துக் கொள்ளும்படி அவர்களைத் தெருக்களில் அலைய விட்டனர். அதன்பின்பு யூத ஆண்கள் தங்களுக்கு இன்னொரு சீதனத்துடன் இன்னொரு பெண்ணைப் பார்க்கச் சென்றனர்.[22]

பெண்களுக்கு சட்டப் பூர்வமான பாதுகாப்பு சிலவற்றை அளிப்பதற்காகவும் விவாகரத்துச் செய்வதை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவுமே உபாகமத்தின் இவ்வசனப் பகுதி தரப்பட்டது. இந்தச் சட்டத்தின் குறைந்தது இரண்டு அம்சங்கள் விவாகரத்தை ஊக்கம் இழக்கச் செய்வதாக இருந்திருக்க வேண்டும். (1) தள்ளுதல் சீட்டு எதிர்பார்க்கப்பட்டது. ஒரு கணவர் தமது வீட்டில் இருந்து தமது மனைவியை வெறுமனே எறிந்து விட முடியாதிருந்தது. சட்டரீதியான செயல்பாடு அவசியமாக இருந்தது. (2) ஒரு மனிதர் தமது மனைவியை விவாகரத்துச் செய்து, அவள் மறுதிருமணம் செய்துகொண்டால், அவள் மீண்டும் ஒருக்காலும் அவரது மனைவியாக முடியாது.[23] இவை யாவும், ஒரு கணவர் தமது மனைவியை அவசரமாக விவாகரத்துச் செய்யாதபடிக்கு, இருமுறை யோசிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருந்தன என்பது தெளிவு.

இயேசு கூறியது என்ன (வசனம் 32)

இயேசுவின் உரையைக் கேட்டவர்களுக்குக் கூறப்பட்டிருந்தது என்ன என்பதில் இருந்து இயேசு, தாம் போதித்தது என்ன என்பதற்குக் கடந்து சென்றார். அவரது அடுத்த வார்த்தைகள், அவர் பேசிய யாவற்றிலும் நேர்மாறு அதிகம் கொண்டவையாக மிளிர்ந்தன: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன்,[24] அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்" (மத்தேயு 5:32).

இவ்விடத்தில் இயேசுவின் போதனைக்குள் உட்கண்ணோக்கை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு, மத்தேயு 19:3-9ல் உள்ள இதே போதனையின் மீதான மிகநீண்ட பதிப்பைக் கண்ணோக்குதல் உதவலாம். அவ்வசனப்பகுதி, மத்தேயு 5ல் இயேசுவின் வார்த்தைகளைத் தூண்டிய சூழ்நிலைக்குள் ஒரு உட்கண்ணோக்கத் தருகிறது.[25]

பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, "புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா?" என்று கேட்டனர் (மத்தேயு 19:3). உபாகமம் 24ம் அதிகாரம், கணவர் தமது மனைவியைத் தள்ளி வைக்க, மனைவியிடம் உள்ள "சில இலச்சையான காரியத்தைக்" குறிப்பிட்டது (வசனம் 1). முதலாம் நூற்றாண்டில் யூத போதகர்களின் ஒரு குழுவினர், அந்த "இலச்சையான காரியம்" பாலுறவில் உண்மையற்ற தன்மையைக் குறித்தது என்று வலியுறுத்தினர். இன்னொரு குழுவினர், இது அப்பம் சுடும்போது கருகிப்போகுதலில் இருந்து வயது முதிர்ந்தவளாக உடல் சுருக்கம் கொண்டவளாகுதல் வரையிலான, கணவரை மகிழ்ச்சியில்லாதவராக்கும் எந்த விஷயத்தையும் இது குறிக்கிறது என்று போதித்தனர். ஆகவே பரிசேயர்கள் இயேசுவினிடத்தில், "புருஷனானவன் தன் மனைவியை *எந்த முகாந்தரத்தினாலாகிலும்* தள்ளிவிடுவது நியாயமா?" என்று கேட்டனர்.

இயேசு, ஆதியாகமம் 1 மற்றும் 2ம் அதிகாரங்களில் இருந்து மேற்கோள் காண்பித்து (மத்தேயு 19:4, 5), தேவன் திருமணத்தைத் தொடக்கத்தில் எவ்வாறு ஏற்படுத்தினார் என்ற விஷயத்திற்குப் பின்னோக்கிச் சென்றதன் மூலம் இதற்குப் பதில் உரைத்தார். அவர் "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்று கூறி முடித்தார் (வசனம் 6). பரிசேயர்கள்,

"அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் *கட்டளையிட்டார்?*" என்று கேட்டனர் (வசனம் 7; என்னால் வலியுறுத்தப்படுகிறது). விவாகரத்து என்பது ஒரு கட்டளையல்ல, ஆனால் ஒரு *சலுகையாகவே இருந்தது* என்று இயேசு பதில் அளித்தார்: "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு *இடங்கொடுத்தார்*; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" (வசனம் 8; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பின்பு இயேசு, நமது வேதபாட வசனப் பகுதியில் நாம் காணுகிறதைப் போன்ற வார்த்தைகளை உரைத்தார் (வசனம் 9).

அந்தப் பின்னணியைச் சிந்தையில் கொண்டவர்களாக நாம், மத்தேயு 5:31, 32ஐக் கண்ணோக்குவோமாக. விதிவிலக்கைச் சற்றுநேரம் காணாத நிலையில் இயேசு, "... தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்;[26] அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்" என்று கூறினார். இவ்வசனப் பகுதியானது, விவாகரத்துப் பெற்ற மனைவி திருமணம் செய்து கொள்வாள் என்று யூகிக்கிறது. அந்த நாட்களில், ஒரு பெண் தனக்குத் தானே ஆதரவு அளிக்க வழிவகை எதுவும் இல்லாதவளாக இருந்தாள். விவாகரத்துப் பெற்ற ஒரு பெண் மறுதிருமணம் செய்துகொண்டால், அவள் விபசாரம் செய்த குற்றமுள்ளவளாக இருப்பாள் மற்றும் அவளை மறுதிருமணம் செய்து கொள்ளும் நபரும் குற்றமுள்ளவராக இருப்பார் என்று இயேசு கூறினார். ஏன்? ஏனென்றால், தள்ளுதலின் சீட்டு கொடுக்கப்பட்டு இருந்தாலும், தேவனுடைய பார்வையில் அவள் இன்னமும் தனது முதல் கணவரின் மனைவியாகவே இருந்தாள்.

மத்தேயு 5ல் இயேசு, விவாகரத்துப் பெற்று மறுதிருமணம் செய்துகொள்ளும் மனைவியைப் பற்றி மாத்திரம் பேசினார். மத்தேயு 19ல் அவர், விவாகரத்துச் செய்துவிட்டு மறுதிருமணம் செய்துகொள்ளும் கணவரைப் பற்றியும் பேசினார். இரு விஷயங்களிலும் அவர்கள் விபசாரம் செய்த குற்றம் உள்ளவர்களாக இருப்பதாக அவர் கூறினார். ஏன்? ஏனெனில் மீண்டுமாக, தேவனுடைய பார்வையில் அவர்கள் இன்னமும் கணவனும் மனைவியுமாகவே இருந்தனர். இயேசுவின் பின்வரும் வார்த்தைகளை நினைவில் வையுங்கள்: "ஆகையால், *தேவன்* இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (19:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இப்போது நாம், இயேசு கொடுத்த விதிவிலக்கை ஆழ்ந்து சிந்திப்போம். திருமணம் செய்து கொண்ட ஒரு நபர் விவாகரத்து செய்து மறுதிருமணம் செய்துகொண்டால் அவர் அல்லது அவள் விபசாரக் குற்றம் செய்தவராக இருப்பார். மனிதரீதியான நீதிமன்றங்கள் அந்தச் சட்டத்திற்கு நூற்றுக்கணக்கான விதிவிலக்குகளைக் கொடுத்துள்ளன, ஆனால் இயேசு ஒரே ஒரு விதிவிலக்கை மாத்திரம் கொடுத்தார். NASB வேதாகமம் இதைப் பின்வருவது போன்று சொல்விளக்கப்படுத்துகிறது: "கற்புநெறி தவறுதல் என்ற காரணத்தைத் தவிர." "கற்பு நெறி தவறுதல்" என்பது "வேசித்தனம்" என்பதற்கான வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: *porneia* (KJV வேதாகமத்தில் காணவும்). *Porneia* என்பது பொதுவாக "சட்டவிரோதமான பாலுறவு" என்பதைக் குறிக்கிறது.[27] இது பல கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு சொற்றொடராக

இருக்கிறது, ஆனால் *pornea* என்பது, பாலுறவு என்ற அடிப்படை ஒன்றைக் கொண்டிருக்க, தெளிவற்ற கருத்தில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு மற்றும் ஒவ்வொரு குற்றத்தையும் கொண்டுள்ளது என்று ... விவாதிக்க நாம் சுயாதீனம் கொண்டிருப்பதில்லை."[28] அது உடல்ரீதியான செயல்பாடாக உள்ளது.

அப்படியென்றால் சட்டம் பின்வருமாறு உள்ளது: திருமணம் செய்துகொண்ட ஒரு நபர் விவாகரத்துச் செய்து மறுதிருமணம் செய்துகொண்டால், அவர் அல்லது அவள் விபசாரக் குற்றம் செய்தவராக இருப்பார். திருமணத் துணைவர், இன்னொரு தனிநபருடன் பாலுறவு கொள்ளுதல் என்ற வேசித்தனக் குற்றம் கொண்டிருத்தல் என்பது மாத்திரமே அந்த விதிக்கு ஒரே விதிவிலக்காக உள்ளது.[29]

ஒரு தனிநபர், அவரது அல்லது அவளது திருமணத்துணைவர் உண்மையற்றவராகும் போது அவரை அல்லது அவளை விவாகரத்துச் செய்துவிட வேண்டும் என்று தேவன் *கட்டளையிடுகிறாரா?* பரிசேயர்கள் செய்த அந்தத் தவறைச் செய்து, நாம் குற்றமுள்ளவர்கள் ஆகாதிருப்போமாக. விவாகரத்து பற்றிய போதனை ஒரு கட்டளையல்ல ஆனால் சலுகையாகவே உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் விவாகரத்துச் செய்துகொள்ள *வேண்டும்* என்றல்ல ஆனால் விவாகரத்துச் செய்துகொள்ள *முடியும்* என்றே இயேசு கூறினார். மிகச்சிறப்பான சூழ்நிலைகளில், விவாகரத்து என்பது ஒரு குடும்பத்திற்குப் பேரழிவாக உள்ளது.[30] ஒருவர் விவாகரத்துச் செய்துகொள்ள "வசனரீதியான உரிமை" கொண்டிருந்தாலும், திருமணத்தை மறுபடியும் கட்டி எழுப்ப நல்ல காரணங்கள் இருக்கலாம். விவாகரத்து மீதான எந்த போதனையும், மன்னிப்பு மற்றும் மறு ஒப்புரவாகுதல் ஆகியவற்றின் மீதான போதனையுடன் சமன் செய்யப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றையும் கூறியுள்ள நிலையில், நமது வேதபாட வசனத்தில், விதிவிலக்கின் மீதல்ல ஆனால் விதியின் மீதே வலியுறுத்தம் உள்ளது என்பதைக் கூறத் துரிதப்படுவதற்கு என்னை அனுமதியுங்கள். திருமணம் *நிரந்தரமானதாக* இருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். *வாழ்நாள் முழுவதும்* ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதே திருமணத்திற்குத் தேவனுடைய அடிப்படைத் திட்டமாக உள்ளது.

மத்தேயு 5:31, 32ல் இயேசுவின் வார்த்தைகள் புரிந்துகொள்ளக் கூடாத அளவுக்கு மிகவும் கடினமானவைகளாக இருப்பதில்லை, ஆனால் அவ்வாறு இருந்த போதிலும் அவைகள் கருத்து மாறுபாட்டைத் தூண்டுகின்றன. மக்கள் இவற்றைக் கேள்விப்பட்ட உடனே, "ஆனால் இந்த அல்லது அந்த சூழ்நிலையைப் பற்றிய விஷயம் என்ன?" என்று கேள்வி கேட்கின்றனர். இந்த எடுத்துரைப்பில் நான், கேட்கப்படக் கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்க முயற்சி செய்யமாட்டேன். மத்தேயு 19:3-9ஐப் பற்றி நான் எழுதியிருக்கிறேன் மற்றும் மக்களைப் பற்றிய விஷயத்தில் ஒரு சில காட்சி அமைவுகளைப் பற்றி நான் கலந்துரையாடியிருக்கிறேன். இருப்பினும் நீண்ட காலத்திற்கு முன்பே நான், திருமண சூழ்நிலையின் ஒவ்வொரு சிக்கலையும் சிக்கறுத்துப் போட எனக்கு வழியொன்றும் இருப்பதில்லை என்பதை அறிந்தேன். ஆண்டுகளினூடே நான், திருமணம், விவாகரத்து மற்றும் மறுதிருமணம் என்பவற்றைப் பற்றிய ஏராளமான சிக்கலான பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளேன். நான் சாலொமோனின் ஞானத்தைக் கொண்டிருந்தாலும், அவை எல்லாவற்றையும் என்னால் திருத்தி

விட முடிந்திருக்காது. நான் எல்லாம் அறிந்தவன் அல்ல என்பது ஒரு காரணமாக உள்ளது. என்ன நடந்தது என்பதை என்னால் துல்லியமாக அறிய இயலாது, மற்றும் மக்களின் மனங்களையும் இருதயங்களையும் நான் வாசித்துப் பார்க்க வழியெதுவும் இல்லை.

ஆகவே நான் [இதைக்குறித்து] எதுவும் செய்யக் கூடாது என்று இது அர்த்தப்படுத்துகிறதா?[31] இல்லை, வசனத்தின் போதகர் மற்றும் பிரசங்கியார் என்ற வகையில் நான், தேவனுடைய வசனம் எல்லாவற்றையும் பிரசங்கிக்கும் கடமையினால் கட்டப்பட்டிருக்கிறேன் - அது மத்தேயு 5:31, 32; 19:3-9 ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. நாம் எச்சரிக்கையாக இராவிட்டால், சூழ்ச்சிச் சுழல் ஒன்றில் நாம் பிடிக்கப்படக்கூடும். பாடக்கருத்துக்களைப் பற்றி நாம் போதிக்க வேண்டிய வகையில் போதிக்கத் தவறுகிறோம், இதன் விளைவாக நமது மாணவர்களில் சிலர் விவாகரத்து செய்து மறுதிருமணம் செய்துகொள்கின்றனர். பின்பு நாம், விவாகரத்துச் செய்யப்பட்டவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தி விட்டோமோ என்று பயம் நிறைந்தவர்களாகிறோம், எனவே நாம் இந்தத் தலைப்பு பற்றி இன்னும் குறைவாகப் போதிக்கிறோம். இதன் விளைவாக இன்னும் அதிகமானவர் வசனரீதியில் இல்லாத விவாகரத்துக்களைப் பெறுகின்றனர். இந்தச் சுழற்சி இன்னும் செல்லச் செல்ல, இன்னும் கீழாக அமிழ்த்துவதாகி விடுகிறது. திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானதாக இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டார் என்பதை நமது இளைஞர்கள் அறிந்து கொள்ளாமலேயே வளருகின்றனர் என்பது இதன் விளைவுகளில் ஒன்றாக உள்ளது. சபையின் எல்லா நடத்துனர்களுக்கும் நான் பின்வருவதை வற்புறுத்திக் கூறுகிறேன்: மத்தேயு 5:31, 32; 19:3-9ல் வரைகுறிப்பிட்டுள்ளபடி திருமணத்திற்கான தேவனுடைய அடிப்படைத் திட்டத்தை உங்கள் பிரசங்கியார்களும் போதகர்களும் முன்வைக்கும்படி வலியுறுத்துங்கள்.

திருமணத்தின் நிலைப்புத் தன்மையின் மீதான போதனையுடன் கூடுதலாக, தேவபக்தியுள்ள மற்றும் அன்பு நிறைந்துள்ள கிறிஸ்தவ இல்லத்தைக் கொண்டிருத்தல் எவ்வாறு என்பது பற்றிய அறிவுறுத்துதல்களையும் நாம் தருவது அவசியமாக உள்ளது. மற்றும் நாம், திருமணத்தில் பிரச்சனைகள் கொண்டுள்ள தம்பதியருடன் ஊழியம் செய்வதும் அவசியமாக உள்ளது. மேலும் நாம், விவாகரத்தினால் வீணாக அழிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆறுதலையும் அளிக்க வேண்டும். பவுல், "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:2). மீண்டும் அவர், "திடனற்றவர்களைத் தேற்றுங்கள்" என்றும் கூறினார் (1 தெசலோனிக்கேயர் 5:14).

சபை நடத்துனர்கள் அவ்வப்போது, திருமணத்திற்கான தேவனுடைய வடிவமைப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது தெளிவாக உள்ள திருமண சூழ்நிலைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. கொரிந்து நகரில் இருந்த சபையில் ஒரு மனிதர் தமது தந்தையின் மனைவியை[32] வைத்துக் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 5:1). அந்த விஷயத்தில் பவுல், அம்மனிதரை ஐக்கியத்திலிருந்து நீக்க வேண்டும் என்று சபைக்குழுமத்தை ஊக்குவித்தார் (வசனங்கள் 3-5, 7, 11). இருப்பினும் பல சூழ்நிலைகளில், ஏற்புடைய நடவடிக்கை என்பது அவ்வளவு தெளிவானதாக இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிகழ்வுகளில், நடத்துனர்கள்

ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு 1:5) மற்றும் அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பானவற்றைச் செய்ய வேண்டும். நிறைவான பொறுப்பு அந்தத் தனிநபர் மீது உள்ளது. நாம் போதிக்கவும் பிரசங்கிக்கவும், ஆற்றுப்படுத்தவும் ஆலோசனை கூறவும் முடியும், ஆனால் தேவனுடைய வசனத்தைத் தத்தமது சொந்த வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் பொறுப்புக் கொண்டிருக்கிறோம். ரோமர் 14:12, "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" என்று கூறுகிறது.

திருமணத்தின் நிலைப்புத்தன்மை பற்றியும் வேதவசனரீதியற்ற விவாகரத்து விபசாரத்தில் முடிகிறது என்ற உண்மை பற்றியும் இயேசு பலமாகப் போதித்தார். இருப்பினும் அவர், எழக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலையையும் சட்டப்பூர்வமாக்க முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. அவர் அடிப்படைக் கொள்கைகளைக் கொடுத்து அந்தக் கொள்கைகளை நமது வாழ்விலும் நாம் கண்டறியும் பல்வேறு திருமணச் சூழ்நிலைகளிலும் நடைமுறைப்படுத்துதலை நம்மிடத்தில் விட்டுவிட்டார். இது என்ன ஒரு பயங்கரமான பொறுப்பாக உள்ளது! தேவனுடைய சித்தத்தை அறியவும் அதன்படி செய்யவும், நம்மில் ஒவ்வொருவருக்கும் புரிந்துகொள்ளுதலையும், உட்கண்ணோக்கையும் மற்றும் தைரியத்தையும் தேவன் அருளுவாராக!

மத்தேயு 5:31, 32ஐப் பற்றிய நமது கலந்துரையாடலை நான் ஒரு எதிர்மறைக் குறிப்புடன் முடிக்க விரும்பவில்லை. விவாகரத்து மற்றும் மறுதிருமணம் பற்றிப் பதில் அளிக்கப்படாத கேள்விகளுடன் நாம் இந்த வசனப் பகுதியைக் கடந்து சென்றால், நாம் இதன் உண்மையான அர்த்தத்தையும் தனிச்சிறப்பையும் உணரத் தவறிவிடுகிறோம் என்று கூறப்பட்டுள்ளது. விவாகரத்துச் செய்தலை ஊக்கம் இழக்கவைத்து திருமணத்தைப் பாதுகாத்தல் என்பதே இயேசுவின் நோக்கமாக இருந்தது. ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதே, திருமணத்திற்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. இது பெறத் தகுதியுள்ள வலியுறுத்தத்தை ஏதேனும் ஒரு வகையில் தர அறிதலை நான் விரும்புகிறேன். நான் ஒரு நாற்காலியில் நின்றுகொண்டு பின்வருமாறு உரக்கச் சொல்வதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்: *"வாழ்நாள் முழுவதற்கும் ஒரு ஆணுக்கு ஒரு பெண் - அதுவே திருமணத்திற்கான தேவனுடைய திட்டம்!"* இந்தத் திட்டத்திற்கு நாம் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோமோ அவ்வளவு அதிகமாகத் தேவன் கனப்படுத்தப்படுவார் மற்றும் நமது வாழ்வும் அவ்வளவு அதிகமாக ஆசீர்வதிக்கப்படும்.

முடிவுரை

நமது பாடமானது பின்வரும் சுவையற்ற தலைப்பின் மீது மையங்கொண்டு இருந்துள்ளது: விபசாரம், பாலுறவுரீதியான பாவம். இந்தப் பாவத்தைப் பொறுத்த மட்டில், இதைத் தவிர்த்தல் என்பதே இதைக் கையாளும் மிகச்சிறந்த வழியாக உள்ளது. இதைத் தவிர்ப்பதற்கு, நமது வேதபாட வசனப் பகுதி இரு வழிகளை ஆலோசனையாகத் தெரிவிக்கிறது. முதலாவது உங்கள் இருதயங்களில் இருந்து அசுத்தம் நிறைந்த சிந்தனைகளை நீக்கிப்போடுவதன் மூலம் உங்கள் இருதயங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது, உங்கள் திருமணத் துணைவருக்கு/துணைவிக்கு உண்மையாயிருந்து திருமணத்தின் நிலைப்புக்

தன்மைக்கு உங்களை ஒப்புக்கொடுத்தலின் மூலம் உங்கள் திருமணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உடல்ரீதியான விபசாரத்தைப் பற்றி மாத்திரமல்ல, ஆனால் மனரீதியான விபசாரம் மற்றும் சட்டப்பூர்வமான விபசாரம் ஆகியவற்றைப் பற்றியும் நாம் கவலையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு போதித்தார். உலகப் பிரகாரமான சிந்தை கொண்டவர்கள், விபசாரத்தின் எந்த வடிவத்தைப் பற்றியும் கவலை கொள்வதில்லை, ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள் அதைப் பற்றிக் கலவை கொண்டுள்ளனர். பவுலைப் பொறுத்த மட்டில், பாலுறவு ரீதியான பாவம் என்பது, தேவனுடைய பார்வையில் குறிப்பாக மிகவும் வெறுக்கத் தக்கதாக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 6:18). இருப்பினும் - விபசாரம் என்ற பாவம் எவ்வளவு மோசமானதாக இருப்பினும் - மற்ற எந்தப் பாவத்தையும் போன்றே, ஒருவர் அதிலிருந்து மனந்திரும்பினால், அது அவருக்கு மன்னிக்கப்படும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். 1 கொரிந்தியர் 6ல் பவுல், "வேசிமார்க்கத்தார்" மற்றும் "விபசாரக்காரர்" ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்ட பின்பு (வசனம் 9), "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்*களாயிருந்தீர்கள்;* ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று கூறினார் (வசனம் 11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நீங்கள் விபசாரம் என்ற பாவத்தின் எந்த வடிவத்துடனாவது - அல்லது வேறு எந்த பாவத்துடனாவது - போராடிக் கொண்டிருந்தால், நாங்கள் உங்களுக்கு உதவ முடியும், அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 14. [2]சிலர், பத்துக் கட்டளைகளுக்குப் பின்னால் மோசேயினால் கொடுக்கப்பட்ட பல பிரமாணங்கள், அந்த அடிப்படைக் கட்டளைகளின் விரிவாக்கமாக உள்ளன என்று நம்புகின்றனர். விஷயம் அப்படி இருந்தால், "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" என்பது திருமணமான நபர் ஈடுபடும் பாலுறவு தொடர்பான பாவத்தைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது, ஏனென்றால் பின்தொடரும் பிரமாணங்களில், பாலுறவு தொடர்பான பாவங்களில் பல வகைகள் உள்ளடங்குகின்றன (காண்க யாத்திராகமம் 22:16, 17, 19). [3]தமது இருதயத்தில் காமம் கொண்டுள்ள ஒருவர் சற்று முன்சென்று விபசாரம் செய்யலாம் என்ற தவறான கருத்தை மறுபடியும் கையாள நீங்கள் விரும்பலாம். [4]கிரேக்க வசனத்தில், "நான்" என்ற வார்த்தையின் மீது வலியுறுத்தம் உள்ளது. [5]தேவன் பாரபட்சம் காண்பிப்பதில்லை (காண்க நடபடிகள் 10:34). [6]Samuel Smiles, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 781. [7]E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 148. [8]கிரேக்க வசனமானது, "விருப்பம் [இச்சை] கொண்ட கண்ணோக்குடன்" என்ற நேரடி அர்த்தம் தருகிறது. (Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament,* 2d ed. [London: Samuel Bagster & Sons, 1958], 12). [9]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 87. [10]Vine, 384.

[11]இந்தப் பத்தியை, நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில்

தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [12]Vine, 441. [13]*"அவர் எனக்கு வலதுகையாக இருக்கிறார்" என்ற சொல் விளக்கம், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானதாக இருந்தால், நீங்கள் அதைப் பயன்படுத்த முடியும்.* [14]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 157 [15]*"தசை அழுகல்" என்பது நோய்த்தொற்று அல்லது இரத்த ஓட்டத்தில் குறைபாடு என்பதினால் ஏற்படக்கூடிய தசை இறப்பு (அது அடிக்கடி கறுப்பாக மாறுகிறது) என்ற நிலையைக் குறிக்கிறது. கடந்த காலத்தில், அழுகிய பகுதியை நீக்குவதற்கு, பாதிக்கப்பட்ட உறுப்பை அறுவைச் சிகிச்சை செய்து நீக்குதல் உட்பட, பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டன.* [16]Stott, 89. [17]*கொலோசெயர் 3:5, "ஒறுத்து அடக்குதல்" அல்லது "மரணம் அடையச் செய்தல்" என்பதைக் குறிப்பிடும் இன்னொரு வசனமாக உள்ளது (*KJV; NASB *ஆகிய வேதாகமங்களில் காணவும்).* [18]*இந்தப் பத்தியை நீங்கள் வாழ்ந்து ஊழியம் செய்யும் சூழ்நிலைக்கு ஏற்பத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [19]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 24. [20]*இந்தப் பகுதியானது, முந்திய வசனத்தின் ஆய்வுக் கருத்தினுடைய தொடர்ச்சியாக இருக்கலாம் என்பதைப் பல் வேறு காரணிகள் சுட்டிக்காண்பிக்கின்றன: (1) 31ம் வசனம் மற்ற பகுதிகளில் தொடக்க வார்த்தைகளைப் போன்று தொடங்குவதில்லை; (2)* KJV *வேதாகமத்தில் 27 முதல் 32 வரையுள்ள வசனங்கள் தனிப் பத்தியாக உள்ளன; (3) குறிப்பிட்டபடி அவைகள் விபசாரம் பற்றிய இயேசுவின் போதனைகளைத் தொடருகின்றன.*

[21]*உபாகமம் 24:2ல், அவள் மறுபடியும் திருமணம் செய்துகொள்வாள் என்று யூகிக்கப்பட்டது, ஏனெனில் திருமணம் இல்லாது இருக்கிற ஒரு பெண் தன்னை ஆதரிக்க வேறு வழியற்றவளாக இருப்பாள்.* [22]Larry Calvin, *The Power Zone* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 85. [23]*இந்த அளிப்பு இன்றும் நடைமுறையில் இருப்பதாகச் சிலர் நம்புகின்றனர். இந்த விலக்கு பழைய ஏற்பாட்டில் உள்ளது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.* [24]*இதற்கு இணை வசனமாக மாற்கு சுவிசேஷத்தில் உள்ள வசனப் பகுதியானது ஒரு மனைவி தனது கணவரை விவாகரத்துச் செய்தலை உள்ளடக்குகிறது (மாற்கு 10:12). இந்தப் பாடத்தில் முன்பு குறிப்பிடப்பட்டபடி, இந்தக் கொள்கைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நடைமுறைப்படுகின்றன.* [25]*நாம், மத்தேயு 19:3-9ஐ விபரமாகப் படிக்க மாட்டோம். மத்தேயு 5:31, 32ஐப் பற்றிய மிகச்சிறந்த புரிந்து கொள்ளுதலுக்கான பின்னணியை அளித்தல் என்பதே எனது நோக்கமாக உள்ளது.* [26]*மத்தேயு 5:31, 32ல் இயேசு, இவ்விஷயத்தில் கணவரின் குற்றமுள்ள தன்மையை வலியுறுத்தினார். விவாகரத்து பெற்ற மனைவி மறுதிருமணம் செய்தால் அவள் விபசாரம் செய்த குற்றமுள்ளவளாக இருந்தாள், ஆனால் அவளை விவாகரத்துச் செய்த கணவர், அவள் மறுதிருமணம் செய்தால் ஒழிய ஆதரவற்ற நிலையில் இருக்கும் கடினமான நிலைக்குத் தள்ளும்படி அவளை விவாகரத்துச் செய்ததனால் குற்றம் உள்ளவராக இருப்பார். ஆக, இவ்விருவருமே தேவனுடைய பார்வையில் குற்றம் உள்ளவர்களாக இருந்தனர்.* [27]Vine, 252. [28]Stott, 97. [29]*மாற்கு 10:11, 12 மற்றும் லூக்கா 16:18 ஆகிய வசனங்கள், அந்த விதிவிலக்கைக் குறிப்பிடுவது இல்லை என்பதால், விவாகரத்திற்குச் சட்டப்பூர்வமான காரணம் எதுவும் இல்லை என்று சிலர் நினைக்கின்றனர். ஒரு பாடக்கருத்தின்மீது தேவன் கூறிய எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுதல் என்பதே வேதாகம வசன விளக்கத்திற்கு அடிப்படைக் கொள்கையாக உள்ளது. மத்தேயு 5:32 மற்றும் 19:9 ஆகிய இருவசனங்களுமே அந்த விதிவிலக்கைத் தருகின்றன.* [30]*இது, தேவன் விவாகரத்தை வெறுப்பதாகக் கூறியுள்ளதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது நிச்சயம் (மல்கியா 2:16).* [31]*இந்தக் குறிப்புகள் பொதுவானவையாக*

இருந்தாலும், ஒருசில விவாகரத்துக்களைக் காட்டிலும், விவாகரத்து சாதாரணமானதாக உள்ள ஒரு சமூகத்திற்கு மிகவும் பொருத்தமானவையாக உள்ளன. நீங்கள் ஊழியம் செய்யும் பகுதியில் உள்ள சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் பாடத்தின் இந்தப் பகுதியை விரிவாக்கிக் கொள்ளுங்கள். [32]இங்கு விவாதிக்கப்படும் பெண் அம்மனிதரின் சிற்றன்னையாக இருந்தார் என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது.